சிவபரத்துவ மாட்சிமை

அல்லது

தக்ஷ காண்டம்



சிவபக்திப் பிரசாரமணி

ஆங்கீரஸ சர்மா

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

சிவபரத்துவ மாட்சிமை

அல்லது

தக்ஷகாண்டம்

(ஸ்காந்தமஹாபுராணம், சங்கர ஸம்ஹிதை, சிவரஹஸ்ய கண்டத்தில் அடங்கியது).

ஆசிரியர்:

சிவபக்திப் பிரசாரமணி, சிவபுராணச் சக்கரவர்த்தி, சிவபுராண ஞானபூஜகர், சிவபுராணக் காவலர், சாஸ்த்ரப் பிரசார பூஷணம்,

ஆங்கீரஸ சர்மா

(சங்கரனடிமை)



பிரசுரம் :

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,

மேற்குமாம்பலம், சென்னை-600 033

உரிமை பதிவு] 14-1-1990 [விலை ரூ. 15-00

சிவபரத்துவ மாட்சிமை
அல்லது
தக்ஷ காண்டம்

முதல் பதிப்பு - ஜனவரி, 1990
பிரதிகள் - 1000

ஸமர்ப்பணம்

பாரதப் புண்ணியத் திருநாட்டிலும் அதற்கு அப்பாலும் உள்ள எல்லா நாடுகளிலும் உள்ள சிவ பக்தர்களுக்கு இந்த நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

—ஆசிரியர் ஆங்கீரஸ சர்மா.

ஒரு சொற்கேளீர் !

சுருதி, ஸ்ம்ருதி, புராண, இதிஹாஸங்கள் அனைத்திலும் பரம்பொருள் எனப் போற்றப்படும் உமாகாந்தனை பரமேசுவரனது பரத்துவ மாட்சிமை கூறும் இந்த நூலுக்கு இன்றைய நிலவரப்படி ரூ. 25-00 வரை விலை வைக்கலாமாயினும், அனைவரும் வாங்கிப்படித்துப் பயன் பெற வேண்டும் என்ற நன்கொடையாளரின் நல்லெண்ணத்தை அனுசரித்து ரூ. 15-00 மட்டுமே விலை வைத்துள்ளோம். சிவ நேயர்கள் ரூ. 15-00 அனுப்பிப் பெற்றுப் படித்து மேலும் இத்தகைய சிவபரத்துவ நூல்கள் வெளியிட எமக்கு ஆதரவு நல்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

Printed at :—

Elango Achukoodam,
166, R. H. Road, Mylapore, Madras-4.
Phone : 7 4 1 2 1

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம:

ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்ஸம்ஸ்தானம்

காஞ்சீபுரம் - 631502.

யாத்ராஸ்தானம் : காஞ்சீபுரம் தேதி : 1-8-89



சிவபக்தியைத் தழைக்கவைக்க அயராது பாடுபட்டு வருபவர் ஸ்ரீ ஆங்கீரஸ வெங்கடேச சர்மா. இது விஷயமாக பலப்பல க்ரந்தங்கள் வெளியிட்டிருக்கும் இவர் இப்போது "சிவபரத்துவ மாட்சிமை (அல்லது) தக்ஷகாண்டம்" என்னும் நூலை வெளியிடவிருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

இவரது இப்புண்ணிய முயற்சி எளிதில் கை கூடிப் பலருக்கும் சிவ பக்தியைப் பெருக்கிட ஸ்ரீ சந்த்ர மௌளீஸ்வரர் அருள்வாராக என ஆசீர்வதிக்கிறோம்.

—நாராயணஸ்ம்ருதி:

சிவம்.

பொருளடக்கம்

சிவம்.

உ

குருபாதம்

திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமையாதீனம்
26-வது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609001
21-8-1989

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

ஆசியுரை

வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் ஆகியன நமது இந்து சமயங்களின் தத்துவங்களையும் பெருமைகளையும் அறியத் துணை புரிவன. அவற்றுள் புராணம் எனப்படுவன பதினெண் வகைப்படும். புராணங்கள் பலதத்துவங்களை நமக்கு உணர்த்தும் வகையில் கதைப்போக்கில் அருளிச் செய்யப் பெற்றவை.

புராணம் என்ற சொல்லுக்குப் பழமையானது என்பது பொருளாகும். சிவபெருமான் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் விளங்கலின் அப்பெருமானைப் புராணன் என்ற சொல்லால் தேவாரம் குறிப்பிடுவதைக் காணலாம்.

புராணங்கள் பதினெட்டில் பத்துப் புராணங்கள் சிவ பெருமானைப் பற்றியனவாக உள்ளவை.

அவற்றுள் ஸ்காந்த புராணம் முருகப் பெருமான் அருள் வரலாற்றை உள்ளடக்கியதாய் விளங்குவது. இதனைத் தமிழில் கச்சியப்ப முனிவர் கந்தபுராணமாக இயற்றியளித் துள்ளார். அதனுள் தக்ஷகாண்டம் சிவபெருமானை இகழ்ந்த தக்கன் படும் துன்பங்களை விவரிக்கின்றது. சிவனே பரம் பொருள் என்பதை உணர்த்துகிறது.

சென்னை பிரமஸ்ரீ ஆங்கிரஸ வேங்கடேச சர்மா அவர்கள் இத்தக்ஷகாண்டத்தை வடமொழி ஸ்காந்தத்தையும் தமிழ்க் கச்சியப்பரின் கந்தபுராணத் தக்ஷகாண்டத்தையும் தழுவி உரைநடை வடிவில் "சிவமே பரம்பொருள்" என்னும் பரத்துவ தத்துவத்தைத் தமிழில் எழுதியுள்ளார்.

சமயப் பண்பும், சமய நூற்பயிற்சியும் சொற்பெருக்காற் றும் திறனும், தொண்டுள்ளமும் கொண்ட இவரது நூல் சிவபரத்துவ மாட்சியை சிறந்த முறையில் விளக்குவதாய் அமைந்துள்ளது

சைவ மெய்யன்பர்கள் இந்நூலை வாங்கி ஓதியுணர்ந்து பயன் பெறவும் பிரமஸ்ரீ ஆங்கிரஸ வேங்கடேச சர்மா அவர்களின் தொண்டு சிறக்கவும் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

திருச்சிற்றம்பலம்

—திருமந்திரம், பாயிரம், 5.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறை ஆதீனம்,

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமகாசந்நிதானம்

திருவாவடுதுறை

(தஞ்சாவூர் மாவட்டம்)

தேதி : 17-7-89

ஆசியுரை

'சிவபக்திப் பிரசாரமணி', 'சிவபுராணக் காவலர்' திரு. ஆங்கீரச எஸ். வேங்கடேச சர்மா அவர்கள் கந்தபுராணத்துத் தக்ஷகாண்ட்ப் பகுதியின் அரிய உண்மைகளை யாவரும் தெளிய அறிந்து நலம் பெறும் வண்ணம் "சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்" எனும் பெயரிய நூலாக இயற்றி வெளியிடுவது மகிழ்ச்சி தருகிறது.

ஆசிரியர், சைவபுராணப் பிரசாரத்தையே தம் இன்ப நல்வாழ்வாகக் கொண்டவர்கள். மக்களை வாழ்வாங்கு வாழ்விக்கும் சைவப் பேருண்மைகளை யாவரும் எளிதில் உணர்ந்து உயர்நலம் பெறும் பொருட்டு இவர்கள் ஆற்றி வரும் பணிகள் போற்றற்குரியன.

இவ்வகையில் இதுபொழுது வெளிவரும் 'சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்' எனும் நூலால் கருதிய சிறந்த பயனைப் பெற்று உலகு இன்புறவும், ஆசிரியரது சிவப்பணி நாளும் சிறந்து விளங்கவும் நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீஞானமா நடராஜப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருமூலர் திருமந்திரம் பாயிரப்பகுதி - சில பொறுக்கு மணிகள்

திருச்சிற்றம்பலம்

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
புக்கநின் றூர்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான் தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்கும் கடந்து நின்றானே.

திருச்சிற்றம்பலம்

உ
சிவ சிவ
கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அதிபர், ஸ்ரீகாசிமடம்

திருப்பனந்தாள்—612504
(தஞ்சை மாவட்டம்)

கடித எண். 426/99

தேதி: 27-7-1989



வாழ்த்துரை

சிவனை என்றும் மறவாத சிந்தையராய்ச் சிவஞான வேள்வி இயற்றி வரும் 'சிவபக்திப் பிரசாரமணி' ஆங்கீரஸ வேங்கடேச சர்மா 'சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷ காண்டம்' என்ற நூலைச் சிறப்பான வகையில் எழுதி வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி.

'உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே' எனும் மணிவாசகத்தை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் அன்பர் விருதுநகர் அன்பர் திரு. தெட்சிணாமூர்த்தியின் பொருட்கொடை இத்தகு சிவப்பணிக்குக் கிட்டியுள்ளது பொருந்தியதாகும்.

வடநூற் கடலை நிலை கண்டுணர்தல் எளிதான காரியமன்று. அதனுள் திளைத்து, ருசித்துத் தாம் இன்புற்றதைப் பிறர் இன்பமுற அளிக்கும் இவ் அன்பரின் முயற்சி இனிதே விளைந்திடவும், அன்பரின் பணிகள் மேன்மேலும் பல்கிடவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம். — சிவ சிவ —

இந்த நூலையும் பிற்சேர்க்கைப் பகுதியையும் தொகுத்து இயற்ற உதவிய நூல்கள்

1. வடமொழி ஸ்காந்தபுராணம் தக்ஷகாண்டம் மூலமும் உரையும், பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் பதிப்பு.

2. ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய ஸ்வாமிகள் இயற்றியருளிய கந்தபுராணம், 3-ம் பாகம், தக்ஷகாண்டம் மூலம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் பதிப்பு.

3. ஸ்ரீ சம்பந்த சரணாலயஸ்வாமிகள் அருளிய கந்த புராணச் சுருக்கம், தருமையாதீனப் பதிப்பு.

4. தேவாரத் திருவாசகத் திருமுறைகள், மூலம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பதிப்பு.

5. தேவாரம் வேதசாரம், சைவ வேதாந்தம் ஆகிய காசிவாசி செந்திநாதய்யர் அவர்கள் இயற்றியருளிய இரு நூல்கள்.

6. ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இயற்றியருளிய சைவ சமய சரபம்.

7. திருக்குற்றாலத் தலபுராணம், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களது பொழிப்புரையுடன் கூடியது, திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு.

8. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றியருளிய தக்கயாகப்பரணி, பழைய உரையுடன் கூடியது, தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களது பதிப்பு.

9. நக்கீரன் வழியடிமை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் இயற்றிப் பதிப்பித்தருளிய "சிவம்—பரப்பிரமம்".

(இதன் தொடர்ச்சி xiv-ம் பக்கம் பார்க்கவும்).

உ

ஹம்ஸ: ஸோஹம் ஸோஹம் ஹம்ஸ:

புதுக்கோட்டை ஸ்ரீ புவனேச்வரீ பீடாதிபதி, யோகிவர, அவதூதகுல திலகம், ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்தேந்த்ராவ தூதஸ்வாமி அவர்கள் அருளாசியுடன் அளித்தருளிய

ஸ்ரீமுகம்

பதினெண் புராணங்களையும் உலகத்திற்கு வகுத்தளித்தவர் பகவான் ஸ்ரீவ்யாஸ மஹர்ஷி. இந்தப் பதினெண் புராணங்களும் சிவன் நந்தி தேவருக்குக் கூற, நந்தி தேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் வ்யாஸமஹர்ஷிக்கும் கூற, வியாஸரிடமிருந்து பெற்ற சூதபுராணிகர் அதை உலகத்தினருக்கு உதவினர் என்பர்.

நாதனருள் பெறு நந்திதந்திடக்
கோதிலா துணர் சனற்குமரன் கூறிட
வாதராயண முனிவகுப்ப வோர்ந்துணர்
சூதனோதியது மூவாறு தொல்கதை.

(ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியாரின் கந்தபுராணம்)

இதில் ஸ்காந்த புராணம் ஆறு ஸம்ஹிதைகளையும் ஐம்பது கண்டங்களையும் கொண்டதாகும். அதில் சங்கர ஸம்ஹிதை என்பது (12) பன்னிரண்டு கண்டங்கள் கொண்டதாகும். அந்தப் பன்னிரண்டு கண்டங்களில் சிவரஹஸ்ய கண்டம் என்பது பதிமூவாயிரம் சுலோகங்கள் கொண்டு மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. ஏழு காண்டங்கள் கொண்ட அந்த சிவரஹஸ்ய கண்டத்தில் ஆருவது காண்டமாய் விளங்குவதே தக்ஷகாண்டமாகும்.

இந்த தக்ஷகாண்டத்தில் தான் தக்ஷனுக்கும் ததீசி முனிவருக்கும் நிகழ்ந்த ஸம்வாதம் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றது. இதில் சிவநிந்தை புரியும் தக்ஷனின் கேள்விகளுக்கு சிவபிரானின் பெருமைகளை உணர்த்தும் பல அத்புதமான ஆராய்ச்சியாளர்கள் வியக்கத்தக்க பல பதில்களைக் கூறியிருக்

கின்றூர் சிவபக்த சிகாமணியும் வள்ளலுமான ததீசி மஹர்ஷி. இதில் முழுக்க முழுக்க சிவபிரானின் மஹிமை முதலிய பல சிவ தத்துவ ரஹஸ்யங்கள் விரிவாய் பேசப்படுகின்றன. சிவ தத்துவத்தைப் புரிந்துகொள்ள புண்ணியம் செய்த பாக்ய வான்களே இப்பகுதியைப் படிக்கும் பாக்யம் பெறுவர்.

இவ்வாறன இந்த தக்ஷகாண்டத்தை ஸ்ரீவ்யாஸன்மூ சுலோகங்களோடு, ஸ்ரீ கச்சியப்ப சிவாசார்ய ஸ்வாமிகளின் கந்தபுராணச் செய்யுட்கள், உபநிஷத்துக்கள், திருமுறைகள் இவற்றையும் உசிதமான இடங்களில் மேற்கோள் காட்டி, ஆராய்ச்சித் திறமையும் வடமொழி தென்மொழிகளில் பழுத்த புலமையும், முக்கணெந்தையாம் பகவான் பரமேச்வரனிடம் பல ஜன்மாக்களில் செய்த தவத்தின் காரணமாக அசஞ்சல மான பக்தியும் கொண்ட "சைவக்கடல்" ஆங்கீரஸ ஸ்ரீ வேங்கடேச சர்மா அவர்கள் விரிவாகத் திறம்பட எழுதி யுள்ளார்கள்.

ஸ்ரீ ஆங்கீரஸ வேங்கடேச சர்மா அவர்கள் பயனுள்ள சிறந்த பல நூல்கள் எழுதியவர். அப்படி எழுதுவதற்காகவே பிறந்தவர். சைவக்கடலில் மூழ்கி சிவதத்துவ முத்துக்களைக் குவித்த பேரருளாளர். ஸ்ரீ ஆங்கீரஸ சர்மா அவர்களுக்கு பாண்டித்யம் சொல்வன்மைபோல் சிவ பக்தியும் பிறவி யிலேயே கிடைத்த பாக்யமாகும். இவர் இயற்றும் சிவ சரிதப் பேருரைகளைக் கேட்டவர்களே இதையுணர்வர்.

இவ்வாறன அழகிய நூலை நமக்கு நல்கி நற்றெண்டு புரிந்து, தனக்கு நிகரின்றி நிலைத்து நிற்கும் ஸ்ரீ ஆங்கீரஸ சர்மா அவர்களுக்கு நலமெல்லாம் பரிபூர்ணமாய் நல்க ஸ்ரீ புவனேச்வரீ ஜகன்மாதாவை ஸ்மரிக்கின்றோம்.

இந்நூலைப் பொருளீந்து அச்சிட்டு உதவிய சிவநேசச் செல்வர் விருதுநகர் T. M. M. தக்ஷிணாமூர்த்தி அவர்களும் நலமெல்லாம் பெற்று பல்லாண்டு வாழ ஸ்ரீஸ்கந்த மாதாவை யும் ஸ்மரிக்கின்றனம்.

ஸ்ரீசாந்தானந்தேந்த்ராவதூத் ஸ்வாமிகள்

உ

குமார ஜெயம்

திருச்சிற்றம்பலம்

பழநி சாது தங்கவேல் சுவாமிகள் வழங்கியருளிய

வாழ்த்து

முதல்வன் புராணமாகிய கந்தபுராணம் சிவபரத்துவம் காட்டும் உயரிய சிவநூல். மூவா முதலா முதல்வனையும் சாவார் பிறப்பார்கள் தங்களையும் சமமெனக் கொண்டு நிற்பவர்கட்கு பரம்பொருளை நிச்சயித்துக் காட்டி நிறுத்தும் பெருமையுடையது. இவ்வரிய நூலினை சைவ உலகிற்குத் தமிழாக்கம் செய்துதவிய ஸ்ரீமத் - கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளை "இனிய வடமொழியமுதம் உண்டு தென் தமிழ் வாரம் என்ற கடலைக் குடித்து ஓரிணையிலாவுன் சரிதை கூறும் வலி கொண்டன்பில் ஏறுமொரு கச்சியப்பர்" என்று பாராட்டு கிறார் அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்.

கந்தபுராணம் 6 காண்டங்களையுடையது. 6வது காண்டம் தக்ஷகாண்டம். இக்காண்டச் செய்திகளை "சிவ பரத்துவ மாட்சிமை" எனும் பெயரில் நூலாக முதன் முதலாகப் பதிப்பிக்க முன்வந்த சென்னைப் பேரன்பர் சிவஸ்ரீ ஆங்கீரஸ வேங்கடேச சர்மா அவர்களை எவ்வளவு பாராட்டினு லும் தகும். விண் போல் அறிவும் சிவனடியே சிந்திக்கும் உள்ளமுமுடைய இவர்கள் மூவர் தேவாரத் திருமுறைகளுக்கு உரையெழுதி "மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ் மாலை"கள் பதிப்பித்தும், ஆண்டுதோறும் சிவஞான பூஜா மலர்கள் வெளியிட்டும் நாளும் தொண்டியற்றும் அரிய தவப் பயன் வாய்த்த சைவப் பெரியாராவர்.

இந்நூல் பதிப்பிக்கப் பொருட் கொடை அளித்த சிவஸ்ரீ T. M. M. தட்சிணாமூர்த்தி (விருதுநகர்) அவர்கள் சிவபெரு

மான் திருவடிக்கே மனம் வைத்த சிவநெறி மாண்பினராவர். உலகனைத்தும் புகழ் திருப்பழனிமலை மேவும் ஓங்கார குரு நாதன் ஸ்ரீ ஞான தண்டாயுதபாணிப் பெருமான் இவர்கட்கு இம்மையில் சகல செல்வ யோகமிக்க வாழ்வும் அம்மையில் பேரின்பச் செல்வமும் அருளிப் புரக்க அவனிரு திருவடிப் போதுகளை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

சிவ சுப்பிரமணியோம்.

விக்கிரமசிங்கபுரம்
2-8-89

குகேசனடிமை,
பழனி சாது தங்கவேலு சாமி

---

10. கடோபநிஷத், சுவேதாசுவதர உபநிஷத், ஜாபால்யுப நிஷத், அதர்வசிரோபநிஷத், அதர்வசிகோபநிஷத், முதலிய உபநிஷத்துக்கள், வடமொழி மூலம்—பம்பாய் "நிர்ணய ஸாகர் பிரஸ்" பதிப்பு.

11. ஸ்ரீ ஹரதத்தாசாரிய ஸ்வாமிகள் இயற்றியருளிய சுருதி ஸூக்திமாலை என்னும் சதுர்வேத தாத்பர்ய ஸங்க்ரஹம் திருவாவடுதுறை ஆதீன மஹா வித்வான் சபாபதி நாவலர் அவர்களது தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியது திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு. (1925-ம் ஆண்டு)

12. ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அருளிய ஆத்மார்ப் பண ஸ்துதி. ஸ்ரீ Y. மஹாலிங்க சாஸ்திரிகளது தமிழ் உரையுடன் கூடியது. காமகோடி கோசஸ்தான வெளியீடு.

13. ஸ்ரீமத் ஆதிசங்கரர் அருளிய சிவானந்தலஹரீ, 'அண்ணு அவர்களின் தமிழுரையுடன் கூடியது. சென்னை இராம கிருஷ்ண மடம் பதிப்பு.

14. மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்மாலை, மற்றும் சிவஞான பூஜாமலர்கள், சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீ ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா பதிப்பு.

சிவம்

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

எனையாளும் ஈசன் செயல்

ஆசிரியர் பதிப்புரை

உமாகாந்தனை பரமேசுவனே முழுமுதற் கடவுளாவார் என்பது வேதம், புராணம், இதிஹாஸம் மற்றும் உள்ள பிரமாண நூல்கள் அனைத்திலும் கூறப்பட்ட முடிந்த முடிபாகும். சிற்சில இடங்களில் வேறு கடவுளர்களை உயர்த்திக் கூறியிருப்பினும் அவை அவ்விடத்துக்கேற்பக் கூறப்பட்ட உபசார மொழிகளேயாகுமன்றிப் பொருள் சேர் மொழிகளாக மாட்டா. பரமேசுவரனைக் கூறிய உயர் மொழிகள் அங்ஙனம் உபசாரமாகாது பொருள் சேர் புகழ் மொழிகளே யாவதை அறிஞர் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

பரமேசுவரனது பொருள் சேர் புகழ்களைக் கூறும் நூல்கள் பலவுள. அவற்றில் பத்து புராணங்கள் மூன்று லக்ஷம் சுலோகங்கள் உடையனவாய்ப் பெருமானின் புகழைக் குன்றின் மேலிட்ட விளக்கென நிறுவுகின்றன. அப்பத்துப் புராணங்களுள்ளும் ஸ்காந்த மஹா புராணம் சிவ பரத்துவத்தைப் போதிப்பதில் தலையாயதாகும். இப்புராணம் பற்றிய வரலாறுகளை நூலினுள் தோற்றுவாய் என்னும் பகுதியில் விரித்துக் கூறியுள்ளேன். எனவே மீண்டும் இங்குக் குறிப்பிடவில்லை. மஹா புராணங்களுள் ஒன்றான ஸ்காந்த புராணத்துச் சங்கர ஸம்ஹிதையில் சிவ ரஹஸ்ய கண்டத்து ஆறுவது பகுதியான தக்ஷகாண்டமே நமது இந்த சிவ பரத்துவ மாட்சிமை என்ற நூலுக்கு ஆதாரமாயமைந்ததாகும்.

இலிங்கபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம் ஸௌரபுராணம், வைணவர்பாகவதம், இன்னும் வேறு பல நூல்களிலும் தக்ஷகாண்டச் செய்திகள் அடங்கியிருப்பினும் ஸ்காந்த புராணத்து தக்ஷகாண்டமே தலை சிறந்து விளங்குகிறது. எனவே தக்ஷகாண்டத்தைப் பின் பற்றியே இந்த நூல் அமைக்கப்பட்டுள்ளது. சிவபிரானே பரம்பொருள்

என்பதை மிக்த் தெளிவாக விளக்கும் இந்த நூல் சிவ பெருமானைப் பற்றிய பல செய்திகளையும் கூறுகிறது. சிவபெருமான் மான் மழு ஏந்துதல், புலித்தோல் தரித்தல், யானைத் தோலைப் போர்த்திக் கொள்ளுதல், உடுக்கை ஏந்துதல், பிச்சையெடுத்தல் போன்ற பற்பலவற்றுக்குத்தக்க விளக்கங்களைத் தெளிவாகத் தருகின்றது. இவ்விளக்கங்களே சிவமே பரம்பொருள் என்பதை நிலை நாட்டுகின்றன.

இவ்வரிய நூலை அடியவன் முன் ஒரு முறை சுமார் 80 பக்கங்களில் சுருக்கமாக ஆண்டு மலரில் பிரசுரித்தேன். அந்த மலர்கள் பிரதிகள் தீர்ந்து விட்டமையால் மீண்டும் விரிவாகப் பிரசுரிக்க எண்ணியும், தேவையான பொருள் இன்மையால் பிரசுரிக்க இயலாதிருந்தேன். இறைவர் திருவுள்ளம் விருதுநகர் சிவநேசச் செல்வர் திரு T.M.M. தட்சிணாமூர்த்தி என்னும் மெய்யன்பரைத் தூண்டிவிட, அவர் இதனை வெளியிடத் தேவையான பணத்தைத் தாமாகவே வலிய வந்து உதவினர். அதன் பயன் இப்பொழுது 250 பக்கங்கட்கும் மேலாகப் பெரியதான இந்த நூல் வாசகர்களின் கரங்களை அலங்கரிக்கின்றது. சைவ மெய்யன்பர் திரு. தட்சிணாமூர்த்தி அவர்களைப் பற்றிய விரிவான வாழ்க்கைக் குறிப்பும் அவரது உருவப் படமும் பிரசுரிக்கப் பெரிதும் விரும்பியும், மெய்யன்பர் அவற்றை விரும்பாது "நான் மானிடனாகப் பிறந்ததன் பயன் என் தந்தையாகிய பரமசிவனைப் பற்றிய பரத்துவ நூலை வெளியிடும் பேறு பெற்றேன். இதுவே போதும்" என்று எழுதி விட்டதால் அவரது விருப்பத்துக்கு மாருக அவரை விளம்பரப்படுத்த இயலவில்லை. விளம்பரம் வேண்டாத வித்தகர் திரு தட்சிணாமூர்த்தி அவர்கள் "நீலமணி மிடற்று ஒருவற்போல மன்னுக", அவர் புகழ் சிறக்க, வாழ்வு வளம் பெறுக, மேலும் மேலும் சிவ புண்ணியங்களை ஈட்டுக என வாழ்த்துகின்றேன். இறைவனது அருள் என்றும் அவர்க்குத் தோனாத் துணையாயிருந்து தண்ணளி புரிக எனப் பிரார்த்திககின்றேன.

சென்னை, 8-1-1980

இங்ஙனம்,

சங்கரனடிமை ஆங்கீரஸ சர்மா

உ

சிவமயம்.

பாலருவாயர் துணை.

அணிந்துரை

சைவ சித்தாந்த சரபம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்

தேவகோட்டை

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் படைப்புக் காலத்தில், உயிர்களின் உய்தி கருதிச் சொற்கூறு (சப்தப் பிரபஞ்சம்), பொருட்கூறு (அர்த்தப் பிரபஞ்சம்) ஆகிய இரு வகைப் பிரபஞ்சங்களையும், தம்முடைய வைப்புச் சத்தியாகிய மாயையிலிருந்து தோற்றுவித்து அருளினர். இவற்றில் சொற்கூறு, ஒலிமயமாய் வெளிப்பட்டும், பொருட்கூறு ஒளி மயமாய் வெளிப்பட்டும் உயிர்களுக்கு உதவி செய்து வருகின்றன. சொற்கூறு, முதலில் மந்திரங்களாகிய வேத, சிவாகம முதல் நூல்களாகவும், அவற்றின் கருத்துக்களை உள்ளடக்கிய புராண இதிகாசம் முதலிய வழி நூல்கள், சார்பு நூல்களாகவும் இருந்து பயன் தருகின்றன. இம்மூவகை நூல்களும் ''சிவபெருமான் ஒருவரே பரம்பொருள்'' என்பதைத் தெள்ளத் தெளிய விளக்குகின்ற சிறப்பை உடையன; வேதங்களின் முடிவை ''வேதாந்தம்'' என்னும் உபநிடதங்களும், அவற்றின் முடிவைச் ''சித்தாந்தம்'' என்னும் சிவாகமங்களும் உறுதி செய்கின்றன.

கடவுள் உண்மை பற்றிக் கலக்கமுற்றுழலும் பலவேறு சமயவாதிகள் நிலவுலகத்தில் உள்ளனர். எவராலும் மறுக்க முடியாத அடிப்படையில், ''சிவபெருமானைப் பரம்பொருள்'' என்று சிவாகமங்கள் வலியுறுத்தும். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களினலும் முடித்து

வழங்கப் பெற்றிருக்கும் பொருளுண்மையை, அதர்வசிகோப நிடதம் "சிவ ஏகோத்யேய: சிவங்கர: ஸர்வம் அந்யத் பரித் யஜ்ய ஸமாப்தா அதர்வசிகா:" என்று விளக்குகிறது. இந்த மந்திரத்தின் பொருள், "சிவபெருமான் ஒருவரே தியானிக் கற்பாலர். சிவபெருமானே நன்மையை வழங்குபவர். மற்ற அனைத்தையும் விட்டு விடுக. அதர்வசிகை முற்றிற்று" என்பதாகும். பரவெளியாகிய சிதம்பரத்தில் பஞ்சகிருத்திய தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானைப் "பரப்ருஹ்மம்" என்றும், "பரமான்மா" என்றும் சாந்தோக்கிய உபநிடதம், "ஆகாசோவைநாம நாமரூபயோர் நிர்வகிதாதே யதந்த ராதத் ந்ருஹ்ம ததம்ருதம் ச ஆத்மா" என்னும் மந்திரத்தில் கூறுகின்றது.

பிரமம் என்ற சொல்லால் குறிக்கப் பெறுபவர் சிவபெருமானே என்பதை, அஜிதாகமம், "ஸச்சிதானந்த ரூப்ய: ஸத ஸத் வ்யக்தி: வர்ஜித: ஸ: சிவ: ஸர்வகஸ் ஸர்பிர் பிரும்ம சப் தேன சப்தித:" என்னும் மந்திரத்தால் புலப்படுத்துகிறது. சித்தாந்தம் என்னும் சிவாகமங்களுக்கு வேறான எல்லா நூல்களும் பூர்வபட்ச நிலையில் இருந்து, சிவாகமக் கருத்துக்களை உறுதிப்படுத்துவன என்பது உணரத்தக்க ஒன்று. சித்தாந்தப் பொருளுண்மையை அருணந்தி சிவாசாரிய சுவாமிகள், "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்று குறிப்பிடுகிறார்கள்.

இதிகாச புராணங்களை "வேதம்" என்றே, சாந்தோக்கிய உபநிடதம் கூறுகிறது. பரமான்மா அல்லாத ஜீவான்மாவைப் பரமான்மா என்று மயங்கி உரைக்கும் ஏகான்மவாத பரமாயுள்ள உபநிடதபாடியம், பிரம்ம சூத்திர பாடியம், கீதா பாடியம் என்னும் பிரஸ்தானத் திரயங்களையும், அவற்றை ஒட்டித் தமிழில் வந்த கைவல்ய நவநீதம் விசாரசாகரம் முதலிய நூல்களையும் ஞானசாஸ்திரம் என்றும், பிரும்ம உபாசனைக்கு உரியவை என்றும், அருள் நூல்களாகிய வேத சிவாகமங்களுக்கும் அவற்றின் வழி வந்த நூல்களுக்கும்

மாருக, வேதத்தை உடன்படுகின்றவர்களாகக் கூறிக்கொள்ளும் சமயவாதிகள் கூறிவருகிருர்கள். இவர்களது கூற்று தத்துவ உணர்வுடைய உண்மையறிஞர்கள் முன்னர் சுழல் காற்றில்பட்ட பஞ்சாகப் பிதிர்ந்து குலேந்து விடும்.

சிவபரத்துவத்தை நிலே நாட்டும் உண்மை நூல்களில், புராணங்கள் வரலாறு கூறும் வாயிலாக அனேவரையும் தெளிவுபடுத்துபவை. முதல் நூல்களாகிய வேத சிவாகமங்களின் வழியாகச் சிவபரத்துவத்தை நிலே நாட்டுவதை விடப் புராண இதிகாசங்களின் வழியாக அந்தச் சிறந்த செயலேச் செய்வது எல்லோருக்கும் எளிதில் பயன் தருவதாகும். இவ் வுண்மையைக் கருத்தில் கொண்டு நம் ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா அவர்கள், "சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்" என்னும் உயர்ந்த நூலே அச்சிட்டு வெளியிட்டு உள்ளார்கள். "தக்ஷகாண்டம்" என்பது கந்த புராணத்தில் ஒரு பகுதியாக இருப்பது. வியாச முனிவர் இயற்றிய பதினெண் புராணங்களுள் சிவபெருமானது பரத்துவத்தைச் சிறப்பாக விளக்கும் புராணங்கள் பத்து. அவற்றில் சிவரகஸ்ய கண்டத்தின் உட்பிரிவில் ஒன்று தக்ஷகாண்டம்.

"நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பவை யாவை? அவை எல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தல் இல்லாதது யாது? அது பதி" என்னும் இது ஒன்றே எளிதில் அவ்விரண்டிற்கும் தம்முள் வேற்றுமை அறியும் வண்ணம் நிற்பது என்று சீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் குறிப்பிடுகிருர்கள். சிவபெருமான் ஒருவரைத் தவிர மற்றைத் தேவர்கள் அனேவரும் பிறப்பு, இறப்பின் பால் படுபவர்கள் என்பதும், சிவபெருமானுக்கு அவை ஒரு போதும் இல்லே என்பதும் வேத சிவாகமங்களால் அறியப் படுபவை. வேதத்தைப் பிரமாண நூலாகக் கொள்ளும் சமய வாதிகள் இந்த உண்மையை உணராமல் மயங்குவது அவர்களே மேலும் பல பிறப்பிறப்புக்களின்பால் செலுத்துமேயன்றி உய்தியை ஒரு போதும் வழங்க மாட்டாது. வியாச முனிவர்

இயற்றிய பதினெட்டுப் புராணங்களுள், சைவ புராணம், பவிடிய புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்க புராணம், காந்த புராணம், வராக புராணம், வாமன புராணம், மச்ச புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம் ஆகிய சிவபுராணம் பத்தும். சுகத்திற்கும் ஞானத்திற்கும் இட மாகிய சத்துவ குணம் உடையதாய், ஞானத்தை உபதேசிக் கும் தெளிபளிங்கு வடிவினராகிய சிவபெருமானது சிறப்பை உணர்த்துவன. காருட புராணம், நாரதீய புராணம், வைணவ புராணம், பாகவத புராணம் ஆகிய நான்கு புராணங் களும், கருநிறமுடைய உதாசீனரூபம் உள்ள தாமச குணம் உடையதாய், பக்தர்களை மோகம் செய்து கவரும் திருமாலி னது தன்மையை உணர்த்துவன. பிரம புராணம், பதும புராணம் என்னும் இரண்டும், செந்நிறமுடைய துக்க ரூபம் உள்ள ரசோ குணம் உடையதாய்ச், சஞ்சல ரூபியாயிருக்கும் நான்முகனது தன்மையை உணர்த்துவன. அக்னி புராண மும், சூரிய புராணமும், முக்குண வடிவினரான அவ்விருவரது தன்மையை உரைப்பனவாகும். ஆதலால் பதினெண் புராணங்களுள், பத்துச் சிவபுராணங்களே உயர்ந்தனவாய் உள்ளன என்பது தெளியப் பெறும்.

பத்துச் சிவபுராணங்களுள் காந்த புராணம் என்பது சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என ஆறு சங்கிதை களாய் அமைந்தது. இவற்றுள் சங்கர சங்கிதையின் முதற் கண் உள்ள சிவரகஸ்ய கண்டம், சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்னும் ஏழு காண்டங்களை உடையது. இதில் இறுதியாக உள்ள தக்ஷ உபதேச காண்டங்கள் சிவபரத்துவத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்க உணர்த்துவனவாகலின், இந்நூலாசிரியர் அவர்கள் "சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்" என்று, இந்த நூலுக்குப் பெயர் சூட்டியிருப் பது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்நூலில் கந்தபுராணத் தக்ஷகாண்ட வரலாறு கூறப் பெறுகிறது என்ருலும், தனி வரலாற்று நூலாக மட்டும் இதை ஆசிரியர் எழுதவில்லை. தக்ஷகாண்டத்தில் உள்ள சிவ பரத்துவ உண்மையைத் தென்மொழி, வடமொழிக் கந்த புராணப் பாடல்கள்—சுலோகங்களை எடுத்துக் காட்டி, அவற் றின் உண்மைப்பொருள் விளக்கத்துடன் தந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. மேலும், புராணக்கருத்துக்களை உறுதிப்படுத்தும் உபநிடதங்கள் - திருமுறைகள் - மெய் கண்ட சாத்திரங்கள் ஆகியவற்றின் மேற்கோள்களையும், ஆங்காங்கே எடுத்துக்காட்டியிருப்பது பல நூல்களைப் படிப்ப தால் வரும் சிவபரத்துவத்துத் தெளிவு இந்த நூல் ஒன்றி ஞலேயே அமைவதற்கு வாய்ப்பாக இருக்கிறது.

நான்முகன், தட்சனுக்குச் செய்த உபதேசத்தில், ''சிவ பெருமான் எள்ளில் எண்ணெய் போலவும், மணியில் ஒலி போலவும், மலரில் மணம் போலவும், உலகமெங்கும் உள்ளும் புறமுமாகி, ஒருமையாய் இருப்பார்'' என்று கூறியதாகக் கந்த புராணம் சொல்லுகிறது. இதை, சிவஞான சங்கிரகத் திலுள்ள ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டி, இந்த நூல் விளக்குகிறது.

சிவபெருமானைப் பரம்பொருள் என்று உணராமல், உயிர்க் கூட்டங்களை அடுத்து, வீடு பேற்றை அடைவோம் என்று கூறுவது ''ஆகாயத்தை ஆடையாக அணிவதற்கு முயலுவது போன்றது'' என்று கந்தபுராணம் கூறுவதை, சுவேதாசுவதர உபநிடத சுலோகத்தைக் காட்டி இந்த நூல் விள்க்குகிறது. இங்ஙனமே பல அரிய மேற்கோள்களுடன் ஆசிரியர் இந்த நூலை நமக்கு வழங்கி உள்ளார்கள்.

சென்ற பல ஆண்டுகளாகச் சிவபரத்துவ நிருபணம் செய்வதையே தமது குறிக்கோளாகக கொண்டு, ஆசிரியர் சர்மா அவர்கள் பல நூல்களை வெளியிட்டு உதவி இருக் கிருர்கள். இவர்கள் தாமே எழுதி வெளியிட்டனவும்

தொல்லாசிரியர்கள் எழுதியவற்றை வெளியிட்டனவுமாகப் பல நூல்கள் சைவ உலகத்திற்குப் பெரிதும் பயன் தந்து கொண்டிருக்கின்றன. இவர்களது அரிய பெரிய சிவத் தொண்டினைப் பாராட்டிச் சான்றோர்கள் இவர்களுக்குத் தந்துள்ள சிறப்புப் பெயர்களாகிய "சிவபக்திப் பிரசாரமணி, சிவபுராண ஞான பூஜகர், சாஸ்திரப் பிரசார பூஷணம், சிவ புராணச் சக்கரவர்த்தி, சிவபுராணக் காவலர்" முதலியவை, இவர்களது பெருஞ் சிறப்பைப் புலப்படுத்திக் கொண்டு இருக் கின்றன. இடையீடுன்றிச் சிவத்தையே சிந்தித்தும் எழுதியும் பேசியும் வருகின்ற இந்நூலாசிரியர் சர்மா அவர்கள், காலகாலராகிய கண்ணுதற் பெருமான் திருவருளால் பல்லாண்டுகள் வாழ்ந்து பயன் தருகின்ற பல நூல்களைத் தந்து உதவ நம் ஆன்ம நாயகராகிய மீனாட்சி அம்மையார் ஸமேத சொக்கலிங்கப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

நலமே தழைக.

திருச்சிற்றம்பலம்

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்டிருப் புருவம்
நெறித்தரு ளியஉருத் திரனே
அக்கணி புலித்தோ லாடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே.

—9-ம் திருமுறை, 1-9.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

ஈருய்முத லொன்ருயிரு பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழ லையே.

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், 1-ம் திருமுறை.

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசக சுவாமிகன், திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

உலகனைத்தையும் தாயும் தந்தையுமாகிக் காத்தருளும் கருணைக் கடலான உமாகாந்தனது முழுமுதற்றன்மையை விளக்கும் இந்நூலைப் பற்றிய சில செய்திகளை முன்னர் பதிப்புரை என்றவிடத்து உரைத்தேன். மேலும் சிலவற்றை இம்முன்னுரைப் பகுதியில் உரைப்பேன்.

வடமொழிக் காந்த புராணம், தமிழ்க் கந்த புராணம் எதுவாயினும் பெரும்பான்மைக் கந்தர் ஷஷ்டி விழாக் காலங் களில் மட்டுமே, அதுவும் ஆறு நாட்களே சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. மற்றைய நாட்களில் விரிவாகக் கந்த புராணம் முழுமையும் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் காண இயலவில்லை. கந்த புராணம் முழுமையையும் எங்ஙனம் ஆறே நாட்களில் விரித்துக் கூற இயலும்? எனவே பெரும்

பான்மையான பகுதிகள் விடப்படுகின்றன. அம்மாதிரி விட்டு விடப்படும் பகுதிகளில் தக்ஷகாண்டமும் அடங்கும். தக்ஷ காண்டம் புராணத்துள் ஆறுவது காண்டமாக அமைந்திருப் பினும் அக்காண்ட நிகழ்ச்சிகளே முற்பட நிகழ்ந்து பார்வதி அம்மையார் திருமணம், குமரக்கடவுள் தோற்றம் இவற்றுக் கெல்லாம் காரணமாக அமைந்தவையாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தக்ஷகாண்டத்தில் உள்ள சிவபரத்துவச் செய்திகளைச் சைவப் பெருமக்கள் அறிய வாய்ப்பில்லாமலேயே போய் விடுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் ஸ்காந்த மஹாபுராணத்து தக்ஷ காண்டச் செய்திகளை அனைவரும் அறியவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த நூலைத் தொகுத்து அடியவன் வெளி யிட்டுள்ளேன். தேவையான இடங்களில் ஆங்காங்கே மேற் கோள்களைக் காட்டியுள்ளது தவிர, பிற்சேர்க்கையாகப் பல பிரமாணங்களையும் கொடுத்துள்ளேன். சிவ நேயர்கள் இந்த நூலைப் பெற்றுப் பேரார்வத்துடன் பயின்று பிறரும் பயிலு மாறு செய்து முதல்வன் பரமேசுவரனே என்பதை உணர்ந்து உய்தி பெறுமாறு வேண்டுகின்றேன்.

கடல் நீர் முழுமையையும் நம்மால் முகந்து கொள்ள இயலாதாயினும், நாம் கொண்டு செல்லும் குடம் போன்ற பாத்திரம் நிறையக் கொள்ள இயலுமல்லவா? அதே போன்று சிவபெருமானது பெருமை பெருங்கடல் போன்றதே யாயினும் நம்முடைய அறிவாற்றல்கள் இடங்கொடுக்கும் அளவு அப்பெருமானின் பெருமைகளை உரைக்கலாம் அல்லவா? அந்த முயற்சியே இந்த நூல் என்று கூறி அமை கின்றேன். அடியேனையும் பொருட்படுத்தி இந்த நூலுக்கு ஸ்ரீமுகம், வாழ்த்துரை, ஆசிச்செய்திகள், அணிந்துரை முதலியன வழங்கியருளிய குரு மஹா சந்நிதானங்களுக்கும், அருளாளர்கட்கும் அடியேனது வணக்கத்தையும் நன்றியை யும் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாம் சிவன் செயல்.

சென்னை-600033
14—1—1990

அடியவன்
சங்கரனடிமை ஆங்கீரஸ சர்மா.

சிவம்

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



சிவபரத்துவ மாட்சிமை

அல்லது

தக்ஷகாண்டம்

(ஸ்காந்த மஹாபுராணம் சிவரஹஸ்ய
கண்டத்தில் அடங்கியது.)

தோற்றுவாய்

மௌர்வீ மூர்த்நிரதச்சராசன சிரஸ்சஞ்சாரி சக்ரத்வயம்
சக்ராந்தர் நிஹிதச்சரஸ்ததுதரே ஸூதஸ்ததாஸ்யேஹயா: ।
தேஷாமேவ சிர! பதேஷு வஸதிஸ்ஸ்வஸ்யேதி யஸ்யச்ருதம்
தேவஸ்சித்ர பரிச்சதஸ்ஸ பகவான் குர்யாத் ஸதாமங்களம் ॥

உமாகாந்தனை சிவபெருமானின் பரத்துவத்தைத் தெளிவாக விளக்கும் சிறப்பமைந்த சிவபுராணங்கள் பத்திலும் தலை சிறந்தது ஸ்காந்த மஹாபுராணமாகும். இதில் சிவரஹஸ்ய கண்டம் என்னும் பெரும்பகுதியில் ஆறுவது உட்பிரிவான தக்ஷகாண்டத்தில் மங்களச்லோகமாக மேலேயுள்ள சுலோகம் அமைந்துள்ளது. இதன் பொருள்.

நாண்கயிற்றின் தலைமீது ரதம், மேருவாகிய வில்லினுடைய தலைமீது ஸஞ்சரிக்கின்றவை ரதத்தின் இரண்டு சக்கரங்கள், சக்கரத்தின் உள்ளே இருக்கின்ற அம்பு, அந்த அம்பின் வயிற்றிலிருக்கும் சாரதி (தேரோட்டுபவன்), அந்த தேரோட்டியின் வாயில் இருக்கும் குதிரைகள், அக்குதிரைகளின் தலைகளில் வசித்தல் ஆகிய இத்தகைய விசித்ரமான யுத்தஸன்னகத்தைக் கொண்ட பகவானான பரமேசுவரன் நமக்கு எப்பொழுதும் மங்களத்தைச் செய்யட்டும்.

இதன் கருத்து: – சிவபெருமான் முப்புரம் எரிக்கச் சென்ற போது ஆதிசேஷனை வில்லின் நாண்கயிருகவும், அந்த ஆதி சேஷனின் தலைமீதிருக்கும் பூமியைத் தேராகவும், மஹாமேரு மலையை வில்லாகவும், அந்த மஹாமேரு மலையின்மீது ஸஞ் சாரம் செய்யும் சூரியன் சந்திரன் ஆகிய இருசுடர்களையும் சக்கரங்களாகவும், சூரியமண்டலத்தின் நடுவே உள்ள திருமாலை அம்பாகவும், அவரது தொப்புளிலிருந்து தோன்றிய நான்முகனைத் தேரோட்டியாகவும், தேரோட்டியான நான்முகனின் வாயில் விளங்கும் வேதங்களைக் குதிரைகளாகவும் அந்த குதிரைகளாகிய வேதங்களின் உச்சியான உபநிஷத்துக்களைத் தமது வாசஸ்தலமாகவும் கொண்ட அறுகுணபரிபூரணனான பரமேசுவரன் நமக்கு எப்பொழுதும் நன்மையையே செய்யட்டும் என்பதாம்,

நூல்வரலாறு

ஒரு சமயம் நைமிசாரண்யம் என்ற காட்டில் சௌனகாதி ரிஷிகள் எனப்படுவோர் பரமேசுவரனைக் குறித்துச் செய்யப்

படுவதான ஸத்ரயாகம் எனப்படும் பெரியதொரு யாகத்தைச் செய்ய முற்பட்டனர். இது ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து செய்யப்படுவதும், முழு முதற்கடவுளான சிவபெருமானுக்குப் பிரீதி அளிப்பதுமான ஒரு சிறந்த யாகமாகும். இத்தகைய தொரு யாகத்தை சௌனகர் மற்றும் முனிவர்களும் செய்ய முற்படுவதைக் கேள்விப்பட்ட சூதபுராணிகர் அங்கு வந்து சேர்ந்தார். அந்த சூதபுராணிகரைக் கண்ட முனிவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்து அவரைப் பணிந்து வரவேற்று "அனைத்தை யும் அறிந்தவரான சூதமுனிவரே! முருகப்பெருமானுடைய திவ்யமான சரித்திரத்தை அறிய ஆவல் கொண்டுள்ளோம். எங்களுக்கு அச்சரிதத்தைத் தாங்கள் கூறியருளவேண்டும்" என்று வேண்டினார்கள். முனிவர்களது வேண்டுகோளை ஏற்றருளிய சூதபுராணிகர் மிக்க மகிழ்ச்சியுடன் கூறலானார்.

சௌனகாதி முனிவர்களே! நீங்கள் அறிய விரும்பிய முருகப்பெருமானின் சரித்திரம் ஸகல மங்களங்களையும் ஒருங்கே அளிக்கவல்லது. இந்த புராணத்தைத் தக்க நியமத் துடன் ஒருமைப்பட்ட மனத்துடன் கேட்பார்களேயானால் கோரிய பலன்கள் அனைத்தையும் அடைவார்கள். குழந்தைப் பேறு இல்லாத தம்பதிகளும் நிச்சயமாக புத்திரப்பேறு பெறு வார்கள். இது முக்காலும் உண்மை எனக்கூறி முருகப்பெரு மானுடன் கூடிய பார்வதி பதியான சிவபிரானையும் பதி னெட்டு புராணங்களையும் இயற்றி அவற்றைத் தமக்கு உப தேசித்தருளிய தமது குருவான வேதவியாஸரையும் தியானித் துக் கொண்டு சூதபுராணிகர் மங்களகரமான வார்த்தைகளால் அந்த முனிவர்கள் கேட்க விரும்பிய முருகனின் பெருமை யைக் கூறியருளினார்.

சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குப் பதினெட்டு மஹாபுராணங்களையும் வியாஸமுனிவர் இயற்றிய வரலாற் றைக் கூறி அவற்றுள் பத்து புராணங்கள் சிவபெருமானைப் பற்றியவை என்றும், எங்ஙனம் வேதங்களும், வேதாந்தங் களும் சாஸ்திரங்களும் பரமேச்வரனைப் பதி என்றும், பரமபுருஷ னென்றும், பாசவிமோசகர் என்றும், மற்றும் பரப்பிரம்மம்,

பரந்தாமன், பரஞ்சோதி, அம்பாளுடன் கூடியவர், மங்கள விக்ரஹர், அழிவற்றவர் என்றும் கூறுகின்றனவோ அங்ஙனமே புராணங்களும் அந்த முக்கண்ணனே ஸ்வதந்திரன், இரண்டற்ற ஒரே பரம்பொருள் என்று சிறிதும் தடையின்றிக் கூறுகின்றன. அத்தகைய பதினெண் புராணங்களில் பதின்மூன்ருவதான ஸ்காந்த புராணத்தை சூதர் உபதேசித்தருளினார். (புராண வரலாற்றின் விரிவை ஸ்காந்த புராணம், சிவ ரஹஸ்யகண்டம், முதல்காண்டமான ஸம்பவகாண்டத்திலும், கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் தமிழில் பாடியருளிய கந்த புராணம் உற்பத்திக் காண்டத்திலும் காண்க, இந்த நூலுக்குத் தேவையான அளவே ஈண்டுக் கொடுத்துள்ளோம்).

இந்த ஸ்காந்த புராணம் ஆறு ஸம்ஹிதைகளாகவும், ஐம்பது கண்டங்களாகவும். அமைந்துள்ளது. இவற்றுள் ஐந்தாவது ஸம்ஹிதையான சங்கர ஸம்ஹிதையில் முதலாவது கண்டம் சிவரஹஸ்ய கண்டம் எனப்படும். இது ஏழு காண்டங்களாக 13, 000 சுலோகங்கள் கொண்ட ஒரு பகுதியாகும். முதலாவது ஸம்பவகாண்டம், இரண்டாவது ஆஸுர காண்டம், மூன்ருவது வீரமாஹேந்திர காண்டம், நான்காவது யுத்தகாண்டம், ஐந்தாவது தேவகாண்டம், ஆருவது தக்ஷகாண்டம், ஏழாவது உபதேசகாண்டம் ஆகும். இவற்றுள் முதல் ஆறுகாண்டங்களையே தமிழில் கந்தபுராணம் என்ற நூலாகக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் பாடியருளினார்கள். முருகப் பெருமானுடைய வரலாறு கூறும் முகத்தால் இவை ஏழுமே சிவபரத்துவத்தைக் கூறுவதாயினும், தக்ஷகாண்டமும் உபதேசகாண்டமும் முழுவதும் சிவபரம்பொருளையே பேசுகின்றன. இவ்விரண்டனுள் தக்ஷகாண்டம் கூறும் செய்திகளே, வடமொழி ஸ்காந்த புராணத்தையும், தெய்வத்தமிழ்க் கந்தபுராணத்தையும் தழுவி இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

தக்ஷகாண்ட அமைப்பு

ஸ்காந்த புராணம் சிவரஹஸ்ய கண்டத்தின் முதல் காண்டமான ஸம்பவகாண்ட நிகழ்ச்சிகளுக்கு முன்பே

நடந்தவை தக்ஷகாண்ட நிகழ்ச்சிகளாயினும் வைப்புமுறையில் இது ஆருவது காண்டமாக அமைந்துள்ளது. ஸம்பவ காண்டம் அல்லது உற்பத்திக் காண்டம் முதல் யுத்தகாண்டம் ஈருக அமைந்த நான்கு காண்டங்களில் பார்வதியம்மையார் திருமணம் முதல் சூரஸம்ஹாரம் வரையிலுமுள்ள செய்திகளைக் கூறி, திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையம்மையார் திருமணத்திலிருந்து ஐந்தாவதான தேவகாண்டம் ஆரம்பமாகின்றது.

தெய்வயானையம்மையார் திருமணத்துக்குப் பின்னர் குமரக்கடவுள் அசுரர்களால் அழிக்கப்பட்ட விண்ணுலகத்தைத் தேவதச்சனைக் கொண்டு மீண்டும் புதுப்பித்துப் பிரமதேவனைக் கொண்டு இந்திரனுக்குத் தேவராஜனுகப் பட்டாபிஷேகம் செய்து வைத்து, பகைவர் பயமின்றி இனிதே அரசு புரிக என அருள்செய்து தமது இருப்பிடமான ஸ்கந்தகிரிக்குத் தெய்வயானை அம்மையாருடனும் மற்றும் நவவீரர்கள் பரிவாரங்களுடனும் எழுந்தருளினுர்.

வேற்படை விமலனுன குமரக் கடவுளின் பெருங்கருணையால் மீண்டும் விண்ணுலக ஆட்சியைப் பெற்றுத் தேவர்கள் முனிவர்கள் போற்ற ஆண்டு வந்த தேவேந்திரன், அவ்வப்பொழுது சூரபத்மனுல் தனக்கு நேர்ந்த துன்பத்தினை நினைந்து நினைந்து வருந்துவானுயினுன். இவ்வாறு வருந்திய இந்திரன் இந்திராணியின் போகத்தையும் விண்ணுலக அரசாட்சியையும் வெறுத்தவனுய் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து முத்தியடைவேனென்று துறவறம் பூணக் கருதினுன். இந்திரனது இந்த எண்ணத்தையறிந்த தேவகுருவும், அந்தணரும், பிரஹஸ்பதி எனப்பெயர் பெற்றவருமான வியாழப்புத்தேளானவர் அவனுக்கு அந்தரங்கமாக காமநூலினைப் போதித்தார். ஆசிரியன் போதித்த காமநூலினைச் செவிமடுத்த தேவேந்திரன், தனது வைராக்கியத்தையெல்லாம் கைவிட்டுக் காமவிகாரம் மேலிட்டவனுகி, விண்ணுல ஆட்சியைத் தன் மைந்தன் ஜயந்தன் என்பானிடம் ஒப்புவித்து, எப்பொழுதும்

இந்திராணியுடன் சேர்ந்து இருக்கும் இன்பத்தினையே பெரிதும் விரும்பி, அந்தப்புரத்தை விட்டு நீங்காதவனாக இருந்தான்.

இந்திரனுடைய ஆணைப்படி தேவருலகத்தை ஆண்டு வந்த இந்திர குமாரனாகிய ஜயந்தன், ஒருநாள் தனது குருவாகிய வியாழனிடம், "எந்தையே, பிரமன் திருமால் முதலியவர்களாகக் கூறப்படும் தேவர்கள் அனைவரும், மற்றும் அழிவற்ற முனிவர்களும் மிக்க வலிமையும் கொடுமையுமுடைய சூரபத்மனால் கொடிய துன்பமனுபவித்துப் பழைய மேன்மைகளையெல்லாம் இழந்து, இழிவுற்று நின்றார்களே, அதன் காரணம் யாதோ?" என வினவினான். காரணம் இன்றிக் காரியம் இல்லையாகலின் இங்ஙனம் வினவினான்.

தேவகுரு விடை கூறினர், "ஜயந்தனே! கேட்பாயாக முப்புரம் எரிசெய்தவரும், யாகங்களுக்கு அரசருமாகிய சிவபிரானை விலக்கி பிரமதேவனின் மகனான *தக்ஷன் என்பவன் செய்த ஒரு யாகத்தில் உன் தந்தையும் மற்றும் அரிபிரமாதி தேவர்களும் கலந்து கொண்ட பாவத்தால் இத்தகைய துன்பம் ஏற்பட்டது. யாககாலத்திலேயே அப்பாவத்தின் பலனை வீரபத்திரரால் எல்லாத் தேவர்களும் அனுபவித்தார்கள். அப்பாவத்தின் எஞ்சிய பலன் சூரபத்மன் என்ற முகாந்தரத்தால் இப்பொழுது அனுபவிக்கப்பட்டது."

இதனைக் கேட்ட ஜயந்தன், குருவே! எங்கள் துன்பத்துக்கு இதுவே காரணமாகில் அந்த தட்சன் என்பவனுடைய வரலாறு முழுமையும் அடியேனுக்குக் கூறியருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டபடி, தேவகுரு ஜயந்தனுக்குச் செருக்கு மிகுதியால் சிவபிரானை இகழ்ந்த தட்சனது சரிதம் முழுமையையும் கூறியருளினர்.

இவ்வாறு ஐந்தாவது காண்டமான தேவகாண்டத்தின் இறுதியில் ஆறுவதான தக்ஷகாண்டத்துக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

சிவம்.

---

*தக்ஷன் என்ற வட மொழிப்பெயர் தமிழில் தக்கன் எனவும் தட்சன் எனவும் வழங்கும். தட்சன் என்ற பெயரே இந்நூலில் இனி வருமிடங்களில் எல்லாம் கொள்ளப்பட்டுள்ளது

1. நான்முகன் நவின்ற நல்லுபதேசம்

முன் ஒரு காலத்தில் பிரமதேவன் ஸத்யலோகத்தில் எல்லாத் தேவர்களுடனும் முனிவர்களுடனும், உபபிரம்மர்கள் எனப்படும் தனது பத்து புத்திரர்களோடும் வீற்றிருந்தார். அச்சமயம் அந்த உபபிரம்மர்களில் மூத்தவனும் சிறந்த அறிவாளியுமான தட்சன் என்பான் தன் தந்தையான பிரமதேவரை நோக்கி, ''தந்தையே ! அனைத்துத் தேவர்களுக்கும் தலைவரும், ஞானகுணத்தின் தலைவரும், மும்மூர்த்திகளுள் தலைவரும், அழிவற்றவரும், உலகங்களுக்கெல்லாம் பிரபுவும் மேலான ஜோதியும், உயிர்கள்தோறும் உயிராய் இருப்பவரும், எங்கும் வியாபித்திருப்பவரும், பரமாத்மாவும், படைத்தல் - காத்தல் - அழித்தல் ஆகிய மூன்று காரியங்களையும் செய்பவருமாகிய முழுமுதற்கடவுள் யாவர் என்பதை அடியனேன் அறியும் வண்ணம் கூறியருள வேண்டும்'' என்று வேண்டினன்.

தட்சனுடைய இந்த வார்த்தைகளைப் பிரமதேவன் கேட்டார். உடனே அவருடைய கண்களில் ஆனந்தக்கண்ணீர் நிரம்பியது. சிவபிரானை, அந்த உமாகாந்தனை மங்கள விக்ரஹத்தை, மனதிலே தியானித்துச் சிறிதுநேரம் தழதழத்த வாக்கையுடையவராகித் தட்சனை நோக்கிக் கூறலானார்.

'ஓ மைந்தா ! நல்ல கேள்வி கேட்டாய். நானும் திருமாலும் மிகுந்த மோகத்தினால் கோபமடைந்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டபோது, எங்கள் இருவருக்குமிடையே எவர் அக்கினிச் சுவாலைகளால் சூழப்பட்டுத் தோன்றினாரோ, எவர் எல்லா உயிர்களின் இதயகுகையிலே ஈசனாய் விளங்குகிறாரோ, எவர் அனைத்து உலகங்களையும் படைத்துக்காத்து ஸம்ஹரித்து, மறைத்து, மீண்டும் அருள் செய்கின்றாரோ, எங்கள் இருவருக்கும் எவர் தலைவரோ

அவரே சம்பு என்றும் சங்கரன் என்றும் வேதங்களிற் கூறப் படும் ஸர்வேச்வாள். அவரே முழு முதற் கடவுளாவார்''

இதனைக் கேட்டதட்சன் மீண்டும் தந்தையை வினவினன். ''தந்தையே ! படைப்புத் தொழிலைச்செய்கின்ற தங்களுக்கும், காத்தல் தொழிலைச் செய்கின்ற திருமாலுக்கும் சிவபெருமான் எவ்விதம் கர்த்தாவாகின்றார் ? அவர் ஸம்ஹாரமென்னும் அழித்தல் தொழிலைச் செய்பவரன்றோ ? இதனை என்மனம் தெளிவுறும் வண்ணம் விளக்கியருளவேண்டும்.''

இங்ஙனம் தட்சன் கூறுதலும் சிவபெருமானது திருவருளால் அப்பரமனது இயல்புகளை உணர்ந்த நான்முகன் தட்சனைப் பார்த்து ''ஓ தட்சனே! நீமுன்னர் வேதங்களைக்குற்ற மறக் கற்று அவற்றின் பொருளை ஆராய்ந்தறிந்த தன்மை மிகவும் நன்று'' எனக்கூறி நகைத்தனன். பின்னர், 'தட்சனே' கவனமாய்க்கேள். தேவர்களையும், பிரமவிஷ்ணுக்களாகிய எங்கள் இருவரையும் மற்றும் பிறவுயிர்களையும் முடிவில் அழிப்பவன் அப்பரமனேயென்றால் முதலில் அனைவரையும் படைத்ததும் அப்பிரானேயன்றோ ? இறுதிக்காலத்தில் அவர் ஒருவராய் இருந்துகொண்டு உயிர்களையெல்லாம் முன்பு தோன்றியவாறே ஒடுங்கச்செய்து அவற்றுக்குத்தாயும் தந்தையுமாக இருந்து அவைகளுக்குத்தனு - கரண - புவன-போகங்களை அளித்துக் காத்துவருகின்ற அப்பெருமானின் செய்கைகளை இன்னபடித்தென்று எடுத்துக்கூற நம்மால் இயலுமோ ?

சிவபிரான் என்னைத் தமது வலத்தோளினின்றும், திருமாலைத் தமது இடது தோளினின்றும் படைத்து எங்களுக்கு முறையே படைத்தல் காத்தல் என்னும் தொழில்களை நல்கி. எம் உயிருக்கு உயிராய் நின்று அவரே எல்லாத்தொழில்களையும் செய்து வருகின்றார். அவரன்றி நாங்கள் செய்யும் காரியம் ஒன்றில்லை. எமது உயிருள் உயிராய் நின்று படைத்தல் முதலிய செய்தலையன்றியும் எமது சிந்தையிலும் இயல்

பான முறைப்படி இருந்து தவருது காப்பவன். எமது இரு விழியுமாகி, நாங்கள் மயக்கமுறும் காலத்தில் எம்மிடத்தில் வந்து அருள் புரிவான். தான் சங்காரமாகிய ஒரு தொழிலைச் செய்வானையொப்ப எங்களோடு பொருந்தி நிற்பான்.

மேலும், அந்தப்பரமேசுவரன் எள்ளினுள் எண்ணெய் போலவும், மணிக்குள் நாதம் போலவும், மலரில் மணம் போல வும், இரத்தினத்தில் ஒளிவிடும் அரியசோதி போன்றும் உலக மெங்கும் உள்ளும் புறம்புமாகி நிறைந்து நிற்பார்.

*எள்ளுறும் எண்ணெய் என்ன எறிமணி அரவம் என்னக்
கள்ளுறு போது கான்ற கடியெனச் சலாகை தன்னில்
தள்ளுற அரிய சோதி தானென உலக மெங்கும்
உள்ளொடு புறமு மாகி ஒருமையாற் பரவும் அன்றே.

(கந்தபுராணம், தக்ஷகாண்டம், உபதேசப்படலம், 12.)

[1]அப்பரமசிவனே வேதம் முதலிய அனைத்துக் கலைகளையும் எங்களுக்கு உபதேசித்தவர். இவ்வுண்மையை நீ அவ்வேதங்

---

*ஸர்பி: க்ஷீரே யதாவ்யாப்தம் திலதைலமிவஸ்தித: ।
அனலச்ச யதாகாஷ்டே ததாஸர்வகதச்சிவ: ॥

—சிவஞான ஸங்க்ரஹம்.

(இதன் பொருள்) நெய் எங்ஙனம் பாலில் வியாபித்துள் ளதோ, தீயானது விறகில் எங்ஙனம் வியாபித்துள்ளதோ, அங்ஙனம் எள்ளினுள் எண்ணெய் போல ஸர்வ வியாபகரா கிய சிவபெருமான் நிலைபெற்றிருக்கிருர்.

[1]யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை
வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை ।
தம்ஹ தேவமாத்மபுத்திப்ரகாசம்
முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ॥

என்ற ச்வேதாச்வதர உபநிஷத் (6-18) மந்திரம் இங்கு கருதற்குரியது இதன் பொருள்: எவர் பிரம்மதேவனை முதலில்

களிலேயே காணக் கடவை. அனைவரையுமொன்ருகக் கருதுகிற நீ மிகவும் பேதையே'' என்று கூறினர்.

பிரமதேவன் இங்ஙனம் உரைத்தும், தக்ஷன் ஐயம் நீங்காதவனுய், மேலும் அவரைப்பார்த்து, ''எந்தையே! சிவபிரானுல் அருளிச் செய்யப்பட்ட வேதமானது எல்லோரையும் பிரமம் என்றே ஏன் உரைக்கின்றது? இதனை விளக்கவேண்டும்'' என்று கேட்டான்.

பிரமதேவன், 'தக்ஷனே! *ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம' என்ற உபநிஷத் வாக்கியம் எல்லாப் பொருளும் பிரம்மத்தன்மை வாய்ந்ததென்று உபசாரமாய்ச் சொல்லியதேயன்றி வேறில்லை. எப்படியெனில் உலகிலுள்ள வேதமுணர்ந்த பிராம்மணர்கள் என்னிலும் வேறல்லர் என்று எப்படி சொல்லப்படுகிருர்களோ அதேபோல எல்லா உலகங்களும் பிரம்மத்தன்மை உள்ளன என்று சொல்லப்பட்டதாக அறிந்து கொள்வாய். மேலும் என்றும் அழிவில்லாத அந்த வேதமானது அந்தப் பரமேசுவரன் எங்கும் நிறைந்து விளங்கியிருப்பதைக் கண்டே எல்லாம் மஹாதேவஸ்வரூபம் உள்ளவையென்று சொல்லியிருப்பது நிச்சயம். ஆனுல் ஸ்வபாவத்தில் அந்த வேதமானது காலகாலனும், உமாபதியும் எல்லா உலகங்களுக்கும் மேற்பட்டவருமான அந்த மஹாதேவனையே சாஸ்வதமான பரப்பிரம்மமென மிகுந்த பயத்தோடு கூறுகின்றது.

படைத்தாரோ எவர் அந்த பிரம்மதேவனுக்கு வேதங்களைக் கொடுத்தாரோ அப்பரமனை, அறிவை ஆத்மஞானத்தில் பிரகாசிக்கச் செய்பவனுகிய அந்த இறைவரையே மோக்ஷ இச்சை கொண்ட நான் சரணமடைகின்றேன்.

*ஸர்வம் கல்விதம் பிரஹ்ம (ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம) என்பது இந்த உபநிஷத் வாக்யம். இது சாந்தோக்கிய உபநிஷத்தில் உள்ளது. இந்த அனைத்தும் பிரமமாகிய சிவம் என்பது இதன் பொருள்.

எந்தப் பொருளை எவர் வணங்கினாலும் அவ்வணக்கம் சென்று முக்கண்ணனான பரமசிவனையே அடையும். அது போல் பழம் மறைகள் உரைக்க நின்ற புகழனைத்தும் அனைத்து நதிகளும் கடலையடைந்தாலொப்ப பரம்பொருளாகிய சிவபிரானையே சென்றடையும்.

[1]யாதொரு பொருளை யாவர் இறைஞ்சினும் அதுபோய் முக்கண்
ஆதியை அடையும் அம்மா அங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புகழ் அனைத்தும் மேலாம்
நாதனை அணுகும் எல்லா நதிகளும் கடல்சென் றென்ன,

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், உபதேசப்படலம், 17.

மகனே! மேலும் கேட்பாயாக, பலகிளைகளாகப் பிரிந்துள்ள வேதங்கள் உரைக்கின்ற ஆணைமொழி சிவபிரானே உலகனைத்தையும் படைத்துக் காத்து அழித்துப் பின்னரும் படைப்பவர், உயிர்க் கூட்டத்துக்கு அருளையளித்து ஆட்கொள்ளும் முதல்வர், தோற்றக்கேடற்றவர், தந்தை, கடவுள், அருவமும் உருவமும் ஆகும் புனிதன், இன்னதன்மையன் என்று அறிதற்கரிய பேரொளிப் பிழம்பு, எங்கும் பொருந்திய அறிவானவர், அனாதி, தேவர்கட்கெல்லாம் பெருந்தேவன், நித்தன், நிருத்தன், முக்கண்ணன், எல்லோருக்கும் சாட்சியாய் நிற்பவன், ஸ்தாணு, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தற்பரன், ஸகலமான கலியாண குணங்களுக்கும் இருப்பிடமானவன், மாலயனறியாத சோதி, ஆணல்லன், பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன், வேண்டுவார் வேண்டுவதே ஈயும் வள்ளல், பிரமதேவன் முதல் பீபிலிகை எனப்படும் நுண்ணிய உயிர் ஈருக உள்ள அனைத்து உயிர்க்கூட்டங்களுக்கும் பதியாகவுள்ள பசுபதி, அரி பிரமன் முதலியருக்கு உயர்ந்

---

1. இப்பாடலின் பொருளோடு "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" எனவரும் சிவஞான சித்தியார் பாடற்பகுதி ஒப்பிடுதற்குரியது.

தோன் என்று எவரும் தெளிந்துய்யுமாறு அவ்வரி பிரமாதியர் இறக்க அவர்களது உடலேச்சுட்ட சாம்பலும் எலும்பும் தரிப்பவன் என்று இவ்வாறெல்லாம் கூறும். அல்லாமலும் அரி பிரமாதி தேவர்கள் அனைவரையும் நீக்கிச் சிவனென நின்ற ஏகமுதல்வனாகிய அப்பரமனே வீடுபேறடைய விரும்புவார்க்கு அப்பேரின்பப் பேற்றை அளிப்பார் என்றும் அவ்வேதம் தெளிவாகக் கூறுமேயானால், அவரையன்றி மற்றெவரோ முழுமுதற்கடவுளாவர் ?

சிவபிரானே பரம்பொருள் என்னும் உணர்ச்சியில்லாமல் பலவகையான உயிர்க்கூட்டங்களும் பிறப்பிறப்பாகிய துன்பத்தின் முடிவையடைந்து வீடுபேற்றை அடைவோம் என்று கூறுதல், உருவமற்ற ஆகாயத்தைத் தோல்போல் உரித்து உடுத்தற்கு ஒப்பெனப் பெருமையுடைய வேதம் உரைத்ததானல் வேறொரு சாட்சியும் வேண்டுமோ ?

*பரசிவன் உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீறு எய்தி வீடுபே றடைதும் என்றல்
உருவமில் விசும்பின் தோலே உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில் பின்னுமோர் சான்றும் உண்டோ.

(கந்தபுராணம், தக்ஷகண்டம், உபதேசப்படலம், 25.)

இவையேயன்றி அச்சிவபரஞ்சுடரின் மஹிமையைக் கூறும் வேதவசனங்கள் பலவுளவேனும், அவைகளைப் பல காலம் எடுத்துரைத்தாலும் முழுமையாக உரைக்க ஒண்ணாது.

---

*இப்பாடல்,

யதா சர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மானவா: ।
ததா சிவமவிக்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி ॥

என்ற ச்வேதாச்வதர உபநிஷத் (6-20) மந்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. இதன் பொருள்: எப்பொழுது மனிதர்கள் தோலேப்போல ஆகாசத்தைப் போர்த்திக் கொள்கிறார்களோ அப்பொழுது சிவஞானமில்லாமல் (பிறப்பிறப்பென்னும்) துக்கத்தின் முடிவான மோக்ஷத்தை அடைவார்கள்.

முன்னரே இச்சிவஞானத்தினை என்னிடமிருந்து அறிந்திருந்தும் மயக்கமடைந்தனையோ?

நான்கு வேதங்களுள்ளும் ஒரு பாதி கங்காதரனான சிவபெருமானின் பரத்துவ நிலையைக் கூறும். (இதன் காரணமாகவே பதினெட்டு புராணங்களுள் பத்து சிவபரமாய் அமைந்துள்ளன.) மற்றைய பாதி பாகம் எம்மையும் பிறதேவர்களையும் மற்றைய பூதங்களையும் பல்வேறு பொருள்களையும் உரைக்கும். இதனை நீயே வேதத்துள் உற்றுப் பார்த்து அறியலாம். எவர்கள் தலைவனாகிற சிவபெருமானைப் போல எம்மையும் நினைத்துச் சிறப்புச் செய்கிறார்களோ அவர்கள் கொடுமை வாய்ந்த மனத்தினையுடையவராவர். நீங்காத துன்பம் தருகின்ற கொடிய நரகத்தில் விழுகின்ற அவர்களை அந்நரகம் ஒரு நாளும் கரையேற்றாது. சிவபிரானோடு எங்களையும் சமமென்று கூறுவோர் எங்களையும் துன்பமென்னும் பெருங்கடலுள் தள்ளுவோராவர். புலித்தோலை ஆடையாக அணிந்தவரும் முக்கண்ணருமான சிவபரஞ்சுடருக்கு நாங்கள் அன்பர்கள் எனவும், அவர்க்குத் தொண்டு செய்து வாழுந்தேவர்கள் எனவும் எம்மைத் துதித்தார்க்கு நாங்கள் அருள் செய்வோம். இதற்கு மாறாக நினைப்பவர்களை எங்கட்குப் பகைவர் என்றே கருதுவோம். பரமசிவனே பதி, நாமனைவரும் பாசத்திற் கட்டுண்டு உழலுகின்ற பசுக்கள் என வேதங்கள் கூறுகின்ற உண்மையைத் தெளிந்து கொள்ள வேண்டுமானால், நாங்கள் இந்த பதவிகளைப் பெறுவதற்கு வீரக்கழலணிந்த அப்பெருமானுடைய திருவடிகளை அருச்சித்துத் துதித்த ஆலயங்களைக் காண்பாயாக.

அச்சிவபிரானுடைய அருளைப் பெறாது வீடுபேறடைந்தவர்கள் யாருமில்லை. அவர் அருளின்றி வாழுகின்ற தேவர்களும் பிறரும் யாருமில்லை. அவருடைய அருள் கிடைத்துவிட்டால் பின்னர் கிடைக்காத அரியபொருள் ஏதுமில்லை. இது சத்தியம். மைந்தனே! நீ அப்பெருமானையே சரணடைந்து அவரது திருவருளைப் பெறுவாயாக.'' சிவம்.

2. தட்சன் தவமும் தேவேசன் திருவருளும்

தந்தையான பிரமதேவனின் நல்லுபதேசத்தைக்கேட்ட தட்சன் முக்கண்ணனுகிய எம்பெருமானுல் பிரமாதி தேவர்களிலும் யான் தவஞ்செய்து அளவற்றவரத்தினை அடைவேன் எனத் தன்மனத்துள் நினைத்தவனுய்த் தந்தையை வணங்கி, "தங்கள் உபதேசத்தினுல் சிவபிரானே பரம்பொருள் என அறிந்துகொண்டேன். அப்பெருமானைத் தவத்தினுல் மகிழ்வித்துச் சிறந்த வரங்களைப்பெற விருப்பமுள்ளவனுய் இருப்பதால் தவத்திற்குச் சிறந்த இடம் ஒன்றினைக் காட்டுவீராக" எனக்கேட்டான். பிரமதேவனும் மானஸஸரோவரம் என்ற அழகிய தடாகத்துக்குச் செல்லென விடையளித்தார்.

பிரமதேவனின் இந்த வார்த்தையைக் கேட்ட தட்சன் ஈசனது கருணையை ஒப்பதான மானஸம் என்ற தடாகத்துக்குச் சென்று அதன்கரையில் அமர்ந்து சிவபிரானின்மங்கள விக்ரஹத்தைத் தியானித்துக் கடுந்தவம் செய்தான். காற்று மழை, வெயில், கடும்பனி ஆகியவற்றுக் கெல்லாம் அஞ்சாது, பிராணவாயுவை நேராக ஒட்டி மூலாக்கினியை எழுப்பி உலக போகங்களை வெறுத்துத் தவஞ் செய்தான். சிவபிரானுக்கு அன்புடன் அபிஷேகம் செய்து மலர் சூட்டி மானஸபூஜை செய்தான். இவ்வண்ணம் தட்சன் மன ஒருமைப்பாடுடன் பெருமானுக்கு அருச்சனை செய்து அப்பெருமானது திருநாமங்களையும் உள்ளத்தில் வைத்து, விதிப்படியுச்சரித்து ஆயிரம் ஆண்டுகள் அரியதவத்தினைச் செய்தனன்.

தட்சனது இத்தகைய அரியதவத்திற்கு மகிழ்ந்த மஹாதேவன் அவனுக்கு அருள்புரியும் நிமித்தம் பொன்மலை வெள்ளிமலை மீது வந்தது போல விடைமீது உமாதேவியாருடன் எழுந்தருளினுர். பெருமான் தன் முன்னே காட்சி

யளிப்பதை அறிந்த தட்சன் அவரை முறையாக வணங்கிப் பல சிறந்த தோத்திரங்களால் துதித்து நின்ருன். நம்மையெல்லாம் ஆளுடைய பெருமான் "தட்சனே, நின் தவத்துக்குப் பெரிதும் மகிழ்ந்தனம். உனக்கு வேண்டிய வரங்களை விரைவில் கேட்பாயாக" எனத் திருவாய்மலர்ந்தருளுதலும், தட்சன் பிறவியை ஒழிக்கும் முத்தியை விரும்பாது துன்பத்துக்குள் ஆழ்த்தும் போகங்களையே விரும்பி அதற்குரியபடி பின்வருமாறு வரங்களை வேண்டினன்.

"தேவாதிதேவனே! மஹாதேவனே! சரணுகத வத்ஸலனே! ஸர்வைச்வர்ய சம்பன்னனை சம்புவே! உயிர்களின் இதயகுகையில் வசிப்பவரே! இந்த நிலவுலகம், விண்ணுலகம், பாதாள உலகம், பிரம விஷ்ணுவாதியருடைய உலகங்கள், அஷ்டதிசைகள் இவைகள் எல்லாவற்றிலும் எனது ஆணை செல்லுமாறு அவைகளின் ஆதிபத்தியத்தை அடியனேற்கு அருளவேண்டும்.

ஸர்வேசுவரனே! தங்களை வணங்கும் உயிரனைத்தும் என்னை வந்து வணங்கவேண்டும். ஆனல் அறுகுண பரிபூர்ணனும், மஹாதேவனுமாகிய தங்களைத் தவிர வேறு எவரையும் மனதினுலும் நான் வணங்காத தன்மையை அளிக்கவேண்டும். பிரமவிஷ்ணுவாதி தேவர்களும், மற்ற அசுரர்கள் உள்ளிட்ட அனைவரும் என்னை வணங்கி நானிட்ட கட்டளைகளை நிறைவேற்றுமாறு அருள்புரியவேண்டும்.

தேவர்களைக் காக்கும் சிவபெருமானே! எனக்கு நல்ல பிள்ளைகளும் அழகிய பெண்களும் அனேகர் பிறக்கவேண்டும். மேலும், எம்பெருமானே, தேவரீரது பாதியுருவான சதிதேவியானவள் எனக்கு மகளாகி, தேவரீர் மறையவனுகி வந்து அவளைக் கடிமணஞ் செய்து கொண்டு எனக்கு மருகனுக வேண்டும்."

இவ்வாறு வரங்களைக் கேட்ட தட்சனுக்குப் பரமசிவனர் அவன் வேண்டிய வரங்களை வேண்டியவாறே அளித்து இவையனைத்தும் நீ நன்னெறியில் ஒழுகும்வரையில் நிலைத்து நிற்கும்

என்று கூறியருளி திருவுருக்கரந்தருளினார். பரமசிவனிடமிருந்து பெறற்கரிய வரங்களைப் பெற்ற தட்சன் மிக்க மகிழ்ச்சியடைந்தவனாய்த் தனது தந்தையான பிரமதேவனை நினைத்தான்.

இவ்வாறு தட்சன் தன்னை நினைத்ததையும், உமாநாதனான பரமசிவனுடைய கருணையால் பலவரங்களைப் பெற்ற தன்மையையும் அறிந்து பிரமதேவன், தன் மனதிற்குள் தன் மகன் முத்திப் பேற்றினை வேண்டாது உலக இன்பங்களை வேண்டிப் பெற்றதற்கு வருந்தினவனாகித் தட்சன் முன்வந்து தோன்றினான். தந்தையைக் கண்ட தட்சன், "ஐயனே! நானிருந்து அரசாட்சி நடத்துதற்குரிய ஒரு நகரத்தை இப்பொழுதே இவ்விடத்து உண்டாக்குவாயாக'! எனக் கூறினான். அவ்வாறே இமைப்பொழுதில் பொன்னகரமும் வெட்கமுறும் வண்ணம் தட்சமாபுரி எனப்பெயரியதொரு நகரத்தை மண்ணுலகில் அமைத்தான். அந்தத் தட்சமாபுரி என்னுமழகிய நகரத்தில் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மற்றும் அனைவர்க்கும் தலைவனாகி, பிரம விஷ்ணுக்கள் உள்பட அனைவரிடமும் தன்னுடைய ஆக்ஞாசக்கரம் செல்லுமாறு சிறப்புடன் அரசாட்சி செய்து வரலாயினான்.



சிவம்.

3. தட்சன் மக்களைப் பெறுதல்

பிரமதேவனுடைய காலடியிற் பிறந்தவளும், அழகிற் சிறந்தவளுமான வேதவல்லி என்பாளை தட்சன் திருமணஞ் செய்துகொண்டு ஆயிரம் புதல்வர்களைப் பெற்முன். அவர்களுக்கு அந்ததட்சன் முறைப்படி நாமகரண முதலியவைகளைச் செய்து, பின்னர் முப்புரிநூலணிவித்து வேதங்களை ஓதும்படிப் பணித்தான். அப்பிள்ளைகளும் வேதங்களை நன்கு ஓதித் தேர்ச்சியடைந்த பின்னர் அவர்களைப் பார்த்து "ஓ புத்திரர்களே! நீவிர் அனைவரும் மானஸஸரோவரம் என்னும் தடாகத்துக்குச் சென்று பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து எல்லா உலகங்களையும் படைத்தலைச் செய்யும் தன்மையை வரமாகப் பெற்று வாருங்கள்" எனக்கூறி அனுப்பினுன்.

தட்சனுடைய புத்திரர்களாகிய அவர்கள் யாவரும் மானஸஸரோவரத்தையடைந்து விதிப்படி அதில் நீராடி பரிசுத்தமான மனதுடையவர்களாகி ஐம்புலன்களையுமடக்கி, எவராலும் செய்தற்கரிய கடுந்தவத்தினைச் செய்தார்கள். அப்பொழுது நாரத முனிவர் அங்கு வந்து, தட்சகுமாரர்கள் தவம் செய்யும் கருத்தையறிந்து, படைப்புத் தொழில் மிக்க துக்ககரமானது என்று அறிவுறுத்தி அத்தொழிலைப் பெறுவதில் உள்ள விருப்பத்தை அகற்றி ஈடற்றதும் பேரின்பமயமானதுமான மோக்ஷத்தையே மஹேச்வரனிடமிருந்து வரமாகப் பெறுமாறு நல்லுபதேசம் செய்து அவர்களை ஆசீர்வதித்துத் தன்னிருப்பிடம் சென்றடைந்தார். நாரதருடைய நல்லுபதேசப்படியே அவர்கள் பரமேசுவரருடைய அனுக்கிரஹத்தால் மறுபிறப்பற்ற வீடு பேற்றையே விரும்பியடைந்தார்கள்.

பிறகு தட்சன் இந்த செய்தியையறிந்து மனத்துயரங் கொண்டு, மறுபடியும் ஆயிரம் புத்திரர்களை உண்டுபண்ணி முன்போலவே அவர்களுக்கு நாமகரணம், உபநயனம், வேதமோதுவித்தல் முதலியவைகளை முறையே செய்வித்துப் பிறகு

படைக்கும் தொழிலே வரமாகப் பெற்றுவருமாறு அவர்களைத் தவத்திற்கனுப்பினன். அவ்விதமே அவர்களனைவரும் தவத்தைச் செய்யத் தொடங்கிய பொழுது நாரதர் அவர்கள் முன் வந்து, படைப்புத் தொழிலே நிந்தித்து, மோக்ஷ இச்சை உண்டாகுமாறு உபதேசம் செய்து சென்ருர். அவர்களும் அங்ஙனமே தேவர்களுக்கெல்லாம் ஈசனுன பரமேச்வரனைத் தவத்தினுல் மகிழ்வித்து மீண்டும் தாயின் கருப்பத்தில் சேராத மோக்ஷத்தையடைந்தார்கள்.

இச்செய்தியை தட்சன் அறிந்து மிக்க சீற்றங்கொண்டவனுய்த் தன்மைந்தர்களைத் தன்பால் இராது செய்த நாரதனை உலகமெங்கும் நாளும் உழன்று திரிவானுக எனச் சபித்தான். பின்னர் புத்திரர்களைப் பெறும் எண்ணத்தைக் கைவிட்டு, அழகிய பெண்கள் இருபத்துமூவரைப்பெற்று அவர்களுக்கு சுபுத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை, வபுவை, கியாதி, ஸம்பூதி, சன்னதி, மிருதி, பிருதி, ஊர்ச்சை, அனசூயை, சுவாகா, க்ஷமை, சுவதை எனப்பெயரிட்டான். இப்பெண்களுக்குத் திருமணப்பருவம் வந்தவுடன் முதல் பதின்மூன்று பெண்களைத் தருமனுக்கு மணம்செய்து கொடுத்தான். மற்றைய பத்து பெண்களையும் முறையே பிருகு, மரீசி, புலஸ்தியர், அங்கிரஸ், புலகன், வசிட்டன், அத்திரி, அக்கினி, கிரது, பிதரா என்பவர்கட்கு விதிப்படி மணஞ் செய்து கொடுத்தான். அந்தப் பெண்களும் மிக அழகுவாய்ந்த பலபுத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்ருர்கள். அந்தப் புத்திரர் புத்திரிகளும் பல மக்களைப் பெற்றெடுக்க இங்ஙனம் தட்சனுக்குப் பெண்கள் மூலம் சந்ததியானது வளரலாயிற்று.



சிவம்:

4. சந்திரசாபமும் சங்கரன் அருளும்

இவ்விதமாகத் தனது குலம் விளங்க நின்ற தட்சன், மீண்டும் அசுவினி முதல் ரேவதி ஈருக உள்ள மின்னும் நக்ஷத்திரக் கூட்டத்து இருபத்தியேழு பெண்களைப் பெற்ருன். அவர்கள் அனைவரையும் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அங்ஙனம் கொடுத்த பின்னர், சந்திரனைப் பார்த்து "அனைவரிடமும் ஒரு தன்மையாகப் பொருந்திய ஆசையுடன் இருப்பாயாக. சிலரிடை அன்பும் சிலரிடை அன்பின்மையுமாக இராதே" என்றிவ்வாறு அறிவுரைகளைக் கூறி சந்திரனுடன் அப்பெண்களை அனுப்பி வைத்தான். சில காலம் சென்றபின் சந்திரன், அவ்விருபத்தேழு பெண்களில் கார்த்திகையும், உரோஹிணியும் பேரழகோடு பொலிய, அவ்விருவரிடையும் பெருங்காதல் பூண்டு, மற்ற மனைவியரை வெறுத்துத் திரிவானுயினன். அதனுல் மற்ற பெண்கள் மனம் வருந்தித் தங்களது தந்தையான தட்சனிடஞ்சென்று முறையிட்டார்கள். இச்செய்தியைக் கேட்ட தட்சன் எரியும் உள்ளத்தினனுகிப் பெரிதும் கோபித்துச் சந்திரனுடைய கலைகளனைத்தும் தேய்ந்து இல்லாது போகட்டும் எனச்சாபமிட்டனன்.

சிவபெருமான் அருளிய பெருஞ்செல்வத்தால் அகந்தையுற்ற தட்சன் இட்ட சாபத்தால் சந்திரனுடைய ஒப்பற்ற கலைகள் நாளொன்றுக்கு ஒவ்வொரு கலையாகக் குறைந்து பொய்யனுடைய புகழ் குறையுமாறு குறைந்தன. பதினைந்து நாட்கள் சென்றவுடன் சந்திரனுடைய பதினைந்து கலைகளும் கெடுதலும் ஒரே ஒரு நுண்ணிய கலையுடன் மயங்கி மெலிந்து வெட்கத்துடன் தேவராஜனுகிய இந்திரனையடைந்து தனது நிலையினை விளக்கிக் கூறி இதற்குத் தீர்வு காணும் வழியை வேண்டினுன். இங்ஙனம் துக்கத்துடன் தன்முன் நின்ற சந்திரனைப் பார்த்து இந்திரன் "தோழனே! அஞ்சாதே" எனவுரைத்து மேலும் கூறுவானுயினுன்.

"ஒரு சமயம் திருக்கயிலேயில் விநாயகப்பெருமானுடைய பெரிய வயிற்றினேயும், அவரது திருக்கரத்தில் இருந்த மோதகத்தையும் பார்த்துச் சிரித்தனேயன்ருே? அப்பொழுது விநாயகப் பெருமான் கோபித்து எவரும் உன்னேப் பாராது நிந்தைசெய்து செல்வர், அதனுல் நீ நீசனேப்போல் ஆகக் கடவையென்று சாபமிட்டனரன்ருே? பின்னர் பிரம விஷ்ணுவாதி தேவர்களது பிரார்த்தனேக்கு இணங்கி ஆண்டுக்கு ஒரு நாள் மட்டும் அதாவது ஆவணிமாத சுக்கிலபட்சத்து சதுர்த்தி (விநாயக சதுர்த்தி) நாளன்று மட்டும் அச்சாபம் நிற்க, மற்ற காலங்களில் பண்டு போலிருப்பாய் என்று அருள் செய்தனரன்ருே? இம்மாதிரி ஒரு பழி உனக்கு உளதாயிருக்க, இப்பொழுது வேறு ஒரு குறையும் உன்மாமனுல் பெற்றனேயே, அதனுல் உன் அழகும் திருவும் இழந்தனேயே! விரைந்து சென்று பிரமதேவனிடம் உரைப்பாயானுல் அவர் தன் மகனிடம் உரைத்து இச்சாபத்தைப் போக்குவார்"

இந்திரன் இவ்வாறுரைத்தது கேட்ட சந்திரன் பிரம தேவனிடம் சென்று தனக்கு நேர்ந்த துன்பத்தின் வரலாற்றை விரிவாகக் கூறி குறையிரந்து நின்ருன்.

பிரமதேவன் சந்திரனே நோக்கிக் கூறலாயினுர், "சந்திரனே! நான் கூறுவதைக் கவனமாகக் கேட்பாயாக. இப்பொழுது தட்சன் செல்வச் செருக்கினுல் தனது மனம் போனவாறேயன்றி வேறு விதமாக ஒழுகான். எனது வார்த்தைகளேயும் செவி சாய்த்துக் கேட்கமாட்டான். இப்பொழுது அவன் தன்னேயே யாவர்க்கும் முதல்வனென்று எண்ணி இறுமாந்திருக்கின்ருன். சிவபெருமானுடைய கருணேயினுலேயே அளவற்ற செல்வத்தைப் பெற்றும் இப்பொழுது அப்பெருமானேக் கூட ஒரு சிறிதும் நினேயாத நிலேயில் இருக்கின்ருன் எனில் வேறு என்ன சொல்லமுடியும்? திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானும், முக்கண்ணனும், கருணேக் கடலுமான சிவ பெருமானிடம் முறையிட்டு எத்தகைய குறையையும் போக்கிக் கொள்ள முடியும்.

எனவே நீ சிறிதும் தாமதஞ்செய்யாது செஞ்சடை அண்ணலான எம்பெருமானைச் சரணடைந்து உன் குறையைப் போக்கிக் கொள்வாயாக. பரம கருணாமூர்த்தியாகிய சிவபிரானது திருவடிகளையே சிந்தித்திருந்த மார்க்கண்டேயன் மீது வந்த கொடியகாலனை உதைத்து, அம்மார்க்கண்டேயனை என்றும் பதினாறு வயதுடைய சிரஞ்சீவியாக்கியதை மறந்தனையோ? அதுமட்டுமா! உமாதேவியாரின் மலர் போலும் திருக்கரத்திலுண்டாகி ஆரவாரித்தெழுந்த கங்கையானது இவ்வுலக முழுமையையும் மூடிக்கொள்ள, அதற்குப் பயந்து நாம் துதிக்க, அதனைத் தலையில்வைத்து அந்தக்காலத்தில் நம்மைக்ககாத்ததையும் மறந்தனையோ? அளவிடுதற்கரிய குணத்தினையுடைய எமது பெருமான் தன்னைச் சரணடைந்தவர்களிடம் கொள்ளும் பேரருளின் தன்மையும் சொல்லளவுட் பட்டதோ? சொல்லமுடியாதாயினும் பலகாலம் மனதிற் பொருந்த நினைந்தாலும் முடிந்ததாகுமோ? மதியே! இனி ஒரு கணமும் வீணாக்காதே, விரைந்து சென்று சிவபெருமானைச் சரணமடைவாய்''.

இவ்வாறு பிரமதேவனால் அறிவுறுத்தப்பட்ட சந்திரன் விரைந்தோடிக் கயிலையங்கிரியை அடைந்து, கண்ணுதற் பெருமானின் கழலடிகளில் விழுந்து வணங்கினான். வேதங்களின் சத்திய வசனங்களால் துதித்து நின்ற சந்திரனை நோக்கி எம்பெருமான் ''சந்திரனே! நினக்கு உற்றதுயாது கூறுக'' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே சந்திரன் ''எம்பெருமானே! எனது மாமனாகிய தட்சனது கொடிய சாபத்தால் எனது கலைகளனைத்தும் அழிந்துபோக இந்த ஒரு கலையுடன் தேவரீர் பால் வந்துள்ளேன். நாளை இதுவுமின்றி தேய்ந் தொழியுமேல் இனிப்பாவியான நான் என்ன செய்யப்போகின்றேன்? மிகுந்துநின்ற இவ்வொருகலையுடன், மற்றைக்கலைகளும் வந்து பொருந்துமாறு அருள்புரியவேண்டும். என் ஐயனே! உம்மையன்றி வேறு புகலிடம் காணேன்'' எனக் கூறினான். இதனைக் கேட்ட சிவபெருமான் ''சந்திரனே! அஞ்சாதே'' எனக் கூறி, எஞ்சி நின்ற ஒரு கலையைத் தனது

அழகிய கரத்தாலெடுத்துத் தனது திருச்சடையின் மீது விளங்கு மாறு அணிந்தருளினர். அவ்விடத்துக்குத் தட்சன் சாபஞ் சென்றடையவில்லை. மிகவும் உயர்ந்தவர்கள் எனக் கருதப்படு கின்ற தேவர்களிடம் பொருந்திய தீவினைகளையும் சாபங்க ளனைத்யையும் போக்கியருளிய மஹாதேவருக்கு இந்த சந்திரன் பால் ஏற்பட்ட தட்சனுடைய சாபத்தைத் தீர்த்தருளுதல் ஒரு பெரிய காரியமோ? எங்கள் பெருமான் அவ்யாஜ கருணு மூர்த்தி, சரணுகதவத்ஸலன் என்கிற உண்மைக்குச் சான்று போல சந்திரகலையானது அவரது அழகிய சடைக்கற்றையின் மீது ஒளியுடன் பிரகாசித்தது.

எமது தந்தையாராகிய சிவபிரான் அப்பொழுது சந்திர னைப் பார்த்து, "சந்திரனே ! எமது முடியில் சேர்த்திய சிறப் பினுல் இக்கலை அழியாது இவ்விடத்தில் நிலைத்திருக்கும். அதனுல் நின்கலைகள் அனைத்தும் முறைப்படி நாள்தோறும் வளர்ந்து பதினைந்து தினங்கள் நிரம்பிய பின்னர் வளர்ந்த வண்ணமே குறைந்து இவ்வண்ணம் எந்நாளும் நடைபெறும் என்று திருவருள் புரிதலும், அப்பெருமானது திருவடிகளில் வணங்கி, விடைகொண்டு சென்று, சந்திரன் தனது உலகினை யடைந்து பண்டுபோல் சஞ்சரித்தலை மேற்கொண்டான். சிவ பெருமானுர் ஆணைப்படி அவனது கலைகள் வளர்ந்தும் தேய்ந்தும் நடைபெற்றுவந்தது.

இதையறிந்த தட்சன் பெரிதும் கோபித்து யானிட்ட சாபத்தை நக்கனே நீக்கவல்லவன் என்று கூறி நகைத்தான். என்தந்தையான பிரமனும் அவன் தந்தையான திருமாலும் மற்றெவரும் சந்திரனுக்கிட்ட சாபத்தை நீக்குமாறு என்னிடம் வந்து வேண்டினுரில்லை, அச்சமுற்றிருந்தனர். தாயும் தந்தையுமற்றவனே எனது சொல்லைத் தடைசெய்பவன் என்று இங்ஙனம் பலவாறு கூறி சிவபிரானை இகழ்ந்து பேசலாயினுன்.

தகுதியற்ற நெறியில் இங்ஙனம் தட்சன் சிவபெருமானை இகழ்ந்து நிற்றலை யறிந்த அவனது மருகர்களில் ஒருவரான

புலகர் என்னும் முனிவர் அவனையடைந்து, ஒப்பற்ற கண்ணு தற் கடவுளை இகழ்ந்தால் நின்னை அனைவரும் இகழ்வர், நின் செல்வமும்கெடும் என்று அறிவுரை கூறினர். தட்சன் இகழ்ச்சியாக நகைத்துக் "கடுந்தவஞ்செய்து யான்பெற்ற செல்வமும் நீங்குமோ ? பிரமவிஷ்ணுவாதி அனைத்துத் தேவர் களும் எனது கட்டளையை மறுத்திலர். எனவே என்னை இகழ் பவர்களும் உளரோ?" என்றினையன கூறி மறுத்தான். முனிவர் மீண்டும் தட்சனை நோக்கி "மஹாதேவர் இன்னும் சிலகாலத் தில் உனக்கு மருமகனுகப் போகின்ருரே ! சந்திரனும் நின் மருகனே யன்ருே ? தன்னைச் சரணடைந்த சந்திரனைத் தன்னுடைய இயல்பான கருணையினுல் சாபத்தை நீக்கி, அவனைக் காத்தருளினரேனும், பதினைந்து நாட்கள் வளர்ந்த பின்னர், உன்சாபம் நிறைவேறும் பொருட்டுப் பதினைந்து நாட்கள் குறையும்படியும் அம்மஹேசன் விதித்தனரன்ருே ? எனவே அப்பெருமானிடம் கோபங்கொளற்க. ஸர்வமங்கள காரணனுகிய சிவபெருமானைத் தியானித்து நலம் பெறுவா யாக" என்று அறிவுறுத்தினர். தட்சனும் கோபம் நீங்கிப் பிரம விஷ்ணுவாதி தேவர்கள் துதித்து நிற்பத் தன் அரசியலை நடத்திவந்தான். இறைவனின் இடம்பிரியாத் தேவி தட்சன் மகளான வரலாற்றை இனிக்கூறுவோம்.



சிவம்,

5. பரமனின் பாகம் பிரியாத் தேவி தட்சன் மகளாதல்

ஒருசமயம் அம்பிகையும், அண்ணலும் திருக்கயிலையில் வீற்றிருந்தபோது, தேவியார் இறைவரது திருவடிகளை வணங்கித் துதித்து "தேவ தேவனும், பகவானும், ஸர்வக்ஞனும், ஜகதீசனும், உலகங்களைக் காப்பதில் முயற்சி கொண்டவருமான எம்பெருமானே! தாவரம் சங்கமம் என இருவகையான இந்த உலகமானது தங்களிடமிருந்து தோன்றிய விதத்தையும், தங்களது ஒப்பற்ற நிலையையும் எனக்கு உரைத்தருள வேண்டும்" என வேண்டி நின்றார். அங்ஙனம் வேண்டிய அம்பிகையினிடம் அன்புவைத்து, உலகத்துக்கு நன்மையைச் செய்யும் சங்கரன், உருவமுங் குணமுஞ்செயலுமாகிய எவையுமில்லாமல் நிர்மலமாய்த் தாம் எங்கும் நிறைந்த தன்மையையும் ஒப்பற்ற தமது சக்தியால் ஐவகையான சக்திகளை உண்டாக்கியதும், அருவுருவந் தாங்கியதும், அனைவரும் அருச்சித்து உய்தற்கு சதாசிவ உருவத்தை தாங்கியதும், இருபத்திஐந்து மஹேசுர வடிவங்களைத் தாங்கியதும், மற்றும் அருள் செய்கின்ற மூர்த்தி பேதங்களும், மாயையை முதலாகக்கொண்டு அழிவற்ற முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றுமாறு செய்ததும், முறைப்படி படைத்தல்-காத்தல் - அழித்தல் - மறைத்தல் - அருளலாகிய ஐந்தொழில்களையும் கருணையால் நடத்துகின்ற செயலும், உயிர்க்கூட்டங்களும் மிகுதியான தத்துவக் கூட்டங்களும் அக்கூட்டத்துட் பொருந்திய கணங்களாக அனைத்தும் தோன்றிய முறைப்படி ஒடுங்கச் செய்து தான் ஒருதன்மையாகவே நிலைத்து நிற்பதுமாகிய தமது இயற்கைகளனைத்தையும் கண்ணுதற் பெருமான் வேத ஆகமங்களில் உரைக்கும் தலைவியான தேவியாருக்கு தொகை, வகை, விரி எனப்பட்ட மூன்று வகையாக உபதேசித்தருளினார்.

தேவியார் இவற்றைக்கேட்டு "எம்பெருமானே! உண்மை அறிவு ஆனந்தம் என்றவற்றின் வடிவமான பிரபுவே! தங்கட்கு உருவமே இல்லையென்று கூறியருளினீர்களே; அங்ஙனமாகவும் ஒன்று, ஐந்து, இருபத்திஐந்து, மற்றும் பலவுருவமடைந்தது எங்ஙனம்" என வினவினர். அம்மையின் வினவுக்கு, கந்தக்கடவுளைத் தந்த எமது சொந்தப் பெருமானாகிய சிவபிரானார் திருவாய்மலர்ந்தருளுவாராயினர்.

"நமக்கு உருவமில்லை என்பதே உண்மை, நமது உருவமாக நீ கூறியவையனைத்தும் நம்மிடத்துப் பொருந்திய அருளுருவம் என்று அறிவாயாக". இம்மொழியைக்கேட்ட அம்பிகை மிகுந்த மகிழ்ச்சியுடன், "அப்படியானல் தங்களுடைய அருள் யானென்று கூறும் முறைமையினால் தங்களது அற்புதமான சரீரமும், உருவமும் நானேயாயினேன். இந்த உலகனைத்தும் என்னிடத்திலிருந்துகொண்டு அதனதன் இயல்புக்கேற்றவண்ணம் இயங்கி வருகின்றது", என்று தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டார்.

இவ்வாறு புகழ்ந்துரைத்துக் கொண்ட வார்த்தைகளைக் கேட்ட பரமேசுவரன், "பெண்ணே! நம்முன்னிலையிலேயே நின்னைப்புகழ்ந்து கொண்டனையன்றோ? உன்னிடத்திலும் மற்றும் எல்லாவிடத்திலும் எப்பொழுதும் எங்கும் ஒளிவடிவாகவும் பரமாத்துமாவாகவும் நிரம்பியிருந்து அனைத்தையும் ஆட்டுவிக்கும் நமது தன்மையைக் காண்பாயாக" எனக்கூறியருளி, ஸத்யஞானனந்த மூர்த்தியான சம்புவானவர் உலகனைத்தையும் உயிர்கள் அனைத்தையும் பொருந்தி நின்று நடத்தும் தமது சக்தியைத் தமதுள்ளேயே அடக்கிக்கொண்டு தேவியின் முன்னிலையில் விளங்கினர்.

தேவர்கள் நாயகனாகிய சிவபெருமான் இங்ஙனம் செயலின்றி இருந்தமையால் ஆட்டுவித்திடுபவன் அது செயாது ஒழிந்தால் கூட்டமாகவுள்ள பாவைகள் யாவும் நிலைகுலைந்து வீழுமாப்போல, பரமசிவனார் தமது அருளை நடத்தாமையினால் பலவகையான உயிர்த்தொகைகள்யாவும் மாய்ந்தன. மற்றும்

உலகனைத்தும் உருவமற்றதும் அசைவற்றதாயுமாயின. அப்பொழுது பகலுமில்லை, இரவுமில்லை, சூரியன் சந்திரன் அக்னி தேவர்கள் எவருமில்லை. எங்கும் ஒரே இருள்மயமாகியது. தேவியானவர் மனநிலை தளர்ந்து அச்சத்துடன் பெருமானது திருவடிகளை வணங்கிக் கூறுவாராயினர்.

''தேவாதி தேவரே! மஹாதேவரே! பக்தர்களிடம் அன்புகொண்டவரே! அனைத்துயிர்க்கும் நன்மைசெய்யும் சங்கரரே! தேவரீர் அனைத்துமாகி நெருங்கி இருத்தலையும், அனைத்துயிர்களின் அனைத்துச் செயல்களையும் அடியவள் பொருட்டு நீக்கி ஊழிக்காலத்திற்போல அவ்வுயிர் அனைத்தும் இருளில் மூழ்குமாறு நின்றருளினீர். இச்செயலில் எம் பெருமானுக்கு ஒரு கணப்பொழுதேயாயிற்று. ஆயினும் உயிர்க்கூட்டங்கட்குப் பெரிய யுகங்கள் அனேகம் சென்றிருக்கும். ஆதலால் தங்களது மஹிமையை நான் அறியாது பேசிய குற்றத்தைப் பொறுத்தருளி அரிய உயிர்கள் தெளிவு பெற்றெழுந்து விருத்தியடையுமாறு திருவுளம் பற்றியருள வேண்டும்'' எனப்பிரார்த்தித்து நின்றார்.

இவ்வாறு அம்மையாரால் பலமுறை துதித்துப் பிரார்த்திக்கப்பட்ட இறைவன் தேவியாருக்கு அருள்புரிந்து, தனது இயல்பான கருணையினால் உயிர்க்கூட்டங்களையும் அனைத்து உலகங்களையும் முன்போல் நிலைநிறுத்தியருளத் திருவுளம் பற்றினார். முதலில் பதினோரு கோடி உருத்திரர்களைத் தூக்கத்தினின்றும் எழுப்புவதுபோல எழுப்பியருளினார். அந்த உருத்திரர் அனைவரும் பரபரப்புடன் எழுந்து பரமேசுவரனைத் தியானஞ்செய்துகொண்டு இவையனைத்தும் அப்பெருமானது செயலே என அறிந்து, அவரது திருவுள்ளப்படி எல்லாப் பிராணிகளையும் எழுப்பநினைத்து இந்த நிலவுலகில் திருவிடைமருதூர் என்ற மத்தியார்ச்சுனத்தலத்தை அடைந்தனர். சிவபிரானின் திருவடிகளில் நீங்காத அன்பினையுடையவராகிய அந்த உருத்திரர்கள் அந்த நேரத்தில் நான்கு யாமங்களிலும் சிவபூசைசெய்தனர். மேலோர்களாகிய உருத்திரர்களுடைய

சிவபூசையினை ஏற்றருளி முக்கண்ணராகிய பெருமான் அவர்கட்குக் காட்சியளித்தருளினர். தங்கள் முன்னால் எழுந்தருளிய முக்கணெந்தையைப் பக்தியுடன் உருத்திரர்கள் தோத்திரஞ் செய்தனர்.

நமஸ்தே விச்வரூபாய விச்வஸ்ரஷ்ட்ரே பரமாத்மனே ।
ஸம்ஹர்த்ரே(அ)ஸ்ய ஸ்வதந்த்ராய மஹாக்ராஸாய சூலினே ॥

க்ஷயத்வீராய சூராய நமோ(அ)ஸ்து ஸ்திரதன்வனே ।
பவத்ப்ரஸாதாத் தேவேச ஜகதேதச் சராசரம் ॥

உத்திஷ்டது யதாபூர்வம் அவாப்த ஞானமீச்வர ।
(ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத்தியாயம் 5, ச்லோகம்
10-11½)

இவ்வுலகமனைத்தும் வடிவமாகி நின்ற பெருமானே! வணக்கம். உலகனைத்தையும் தோற்றுவிக்கும் பெருமானே! வணக்கம். பரமாத்மாவான தங்களுக்கு நமஸ்காரம், உலகங்களை ஸம்ஹரிப்பவரும், ஸ்வதந்திரரும் ஊழிக்காலத்தில் உலகங்கள் யாவையும் ஒரே கவளமாக உட்கொள்ளுபவரும், சூலபாணியும், அண்டினவர்களை வீரர்களாகச் செய்பவரும், மஹாவீரரும், உறுதியான பிநாகமென்னும் வில்லையுடையவருமான பிரபுவே! தங்களுக்கு வணக்கம். ஓ, தேவேச! இந்த தாவர சங்கமமான இப்பிரபஞ்சமனைத்தும் முன்போல் அறிவுடன் எழுந்திருக்கத் திருவருள்புரியவேண்டும் என உருத்திரர்கள் பிரார்த்தித்தார்கள்.

உருத்திரர்களுடைய பிரார்த்தனைக்கு இணங்கிய சிவபிரானும் அங்ஙனமே ஆகுக என அருள்புரிந்தார். பிறகு மஹாதேவருடைய அருளால் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள், சூரிய சந்திரர்கள், மற்றும் எல்லா உயிர்க்கூட்டங்களுடனும் தாவர சங்கம ரூபமான அனைத்து உலகங்களும் முன்போல் அறிவுடன் விளங்கின. உலகில் நிறைந்த காரிருள் மறைந்து பேரொளி தோன்றியது. பிறகு அந்த தேவர்கள் அனைவரும் தேவாதிதேவனை மஹாதேவரின்

மாஹாத்மியத்தை நன்கு அறிந்துகொண்டு சிவபூசையைச் செய்தார்கள்.

தேவேசஞன பரமேசன் மறைந்தருளும்போது உருத்திரர்கள், ''ஐயனே! இரவில் ஒவ்வொருயாமத்திலும் தங்களைப் பூசிக்கின்ற மனிதர்களுக்கு மஹாசிவராத்திரி புண்யகாலத்தில் பூசைசெய்த பலனையளிக்க வேண்டுமென்ற வரத்தைக் கேட்க, மஹேசனும் அங்ஙனமே வரமளித்து மறைந்தார்.

பிறகு பிரம்மா விஷ்ணு முதலான தேவர்களனைவரும் திருக்கயிலாயமலைக்குச் சென்று அங்கு பிநாகபாணியான மஹாதேவரைத் தரிசித்து, ''எங்களது உயிருக்கு உயிராகிய வள்ளலே! நாங்கள் அனைவரும் தங்களது அருளடையாத தன்மையால் அறிவிழந்து சடமாகிப் பலகாலம் வரை எங்களுக்கு விதிக்கப்பட்ட கருமானுட்டானங்களைச் செய்யாது சும்மாகிடந்தோமன்றே? அதற்கொரு தீர்வினை அருள்செய்வீர்களாக'' எனப்பிரார்த்தித்தார்கள்.

''தேவர்களே! அஞ்சாதீர்கள், உங்களது அறிவிழந்த காரணத்தால் வேதவழி கர்மானுட்டானங்களைச் செய்யாத தன்மையால் வரும் குற்றமனைத்தும் உங்கள் தாயான அம்பிகையிடம் சென்றடையும். ஆதலின் நீவிர் அனைவரும் இன்றுமுதல் உங்கள் கடன்களைத் தவருது செய்து உய்தியடைவீர்களாக'' என்று சிவபிராஞர் அருள்செய்ய, பிரம விஷ்ணுவாதி தேவர்களும் மிக்க மகிழ்ச்சியுடையவர்களாகி இறைவரை வணங்கிச் சென்றனர்.

தேவர்களனைவரும் சென்றபிறகு தேவியார் இறைவரை வணங்கி உயிர்களிடம் பொருந்திய வினைகள்யாவும் தம்மை வந்து சேரவேண்டியதென்னையென வினவிஞர். இங்ஙனம் வினவிய தேவியை நோக்கி இறைவர், ''முன்னர் நீ நம் முன்பாக உன்னை வியந்தனையன்ருே? அப்பொழுது யாம் கோபித்து நின் பொருட்டு உயிர்களின் அறிவை விலக்கி அவைகளைச் சடமாக்கிப் பின்னர் உணர்த்திஞேமன்ருே?

ஆதலினால் அவ்வுயிர்களடைந்த பாவமனைத்தும் நின்னை வந்தடைதல் முறையேயாகும். மேலும் உயிர்களனைத்தையும் பெற்றதாயாகிய உனக்கல்லது பெரும்பாவத்தினை அச்சிற்று யிர்களால் தாங்குதல் எளிமையாகுமோ? எனவே நீயே அதனையேற்றுக்கொள்வாயாக'' என விடை கூறியருளினர்.

தட்சனுக்களித்தருளிய வரத்தினை முற்றுவிக்கத் திருவுளங் கொண்ட சிவபிரான் இவ்வாறு உரைத்தருளலும், தேவியார் உளம்மிக நடுங்கி, தனது பிழையைப் பொறுத்து அப்பெரும் பரவத்தினை நீக்குதற்குரிய உபாயமொன்றினை அருள்செய்ய வேண்டினர்.

சிவபெருமான் கூறினர் :- மங்களமுள்ளவளே! நீ யமுனை என்று பிரசித்திபெற்ற புண்ணிய நதியில் வெண்மை யான இதழ்களையுடைய தாமரை மலர்வனத்தில் ஓர் வலம் புரிச் சங்கின் வடிவாகி உலகினை அருளும் குறிப்பினெடு தவஞ் செய்துகொண்டிருப்பாயாக. அப்பொழுது தட்சன் அங்கு நீராடவருவான். சங்கத்தின் வடிவாய் இருக்கும் உன்னைக் கண்டு அதிசயத்துடன் கையால் எடுப்பான். அப்பொழுது நீ ஒரு பெண் குழந்தையாகிவிடு. அவனும் அவன் மனைவி யாகிய வேதவல்லியும் உன்னை அவர்களது குழந்தை போலவே வளர்ப்பார்கள். ஐந்து வயது நிரம்பியவுடன் எம்மை நினைந்து மனவிருப்புடன் தவஞ்செய்வாயாக. பன்னிரண்டு வயது முடிந்தவுடன் உன்னைத் திருமணஞ்செய்து கொண்டு இக்கயிலை மலைக்கு அழைத்து வருவோம்''.

பெருமானின் இவ்வரிய வார்த்தைகளைக் கேட்ட தேவியார் இறைவரை வணங்கி விடை கொண்டு வேகமாய் யமுனைக்கு வந்து ஒரு அழகிய வலம்புரிச்சங்கின் உருவத்தை யெடுத்துக்கொண்டு தாமரை மலரின்மேல் இருந்துகொண்டு, தெளிவினைத்தருகின்ற சிவமந்திரத்தினைச் சிந்தனைசெய்து கொண்டு, அரிய தவஞ்செய்து கொண்டிருந்தார்.

இங்ஙனம் தேவியார் தவஞ்செய்து கொண்டிருக்கையில், மிகுந்த புனலுடைய அந்த யமுனை நதியில் மாசிமகநீராடும் பொருட்டு தட்சன் தனது மனைவி, மற்றும் பரிவாரங்களோடு அங்கு வந்தான். நதியினுட்சென்று நீராடித் திரும்பும்போது ஒரு புறத்தில் தேன்ததும்பும் தாமரைமலர் ஒன்றின்மேல் தெய்வத் தன்மைபொருந்திய வெண்ணிறச் சங்கம் ஒன்றிருப்பதைக் கண்டான். கண்டவுடனே அதிசயங்கொண்டு அந்த அற்புதமான சங்கத்தைக் கையில் எடுத்தான். என்ன ஆச்சரியம்! தட்சனால் எடுக்கப்பட்டவுடன் அந்த சங்சம் மறைந்து அதற்குப்பதில் அழகு பொருந்திய ஒரு பெண்குழந்தை காணப்பட்டது. சிவபிரான் தாமளித்த வரத்தின்படி தமது பாகம் பிரியாத் தேவியையே நமக்குக் குழந்தையாக அளித்தார் என்று எண்ணிப் பெருமகிழ்ச்சியுடன் அக்குழந்தையைத் தன்மனைவி வேதவல்லியிடம் கொடுத்தான். கணவனாற் கொடுக்கப்பட்ட ஒப்பற்ற குழந்தையைத் தழுவிப் பெருமகிழ்வுற்றுத் தனது கொங்கைகளில் தலையன்பால் பெருகிய பாலினையூட்டி அக்குழந்தையைச் சீரும் சிறப்புடனும் வளர்க்கலானாள்.



சிவம்.

௬. தேவியின் தவமும் மஹாதேவனின் திருவருளும்.

அளவற்றனவான அண்டங்களுக்கும் அவற்றினுட் பொருந்திய உயிர்க்கூட்டங்கட்கும் ஒப்பற்ற தாயாகிய அம்பிகை தட்சனது தவத்தால் இங்ஙனம் அவன் மகளாகித் தாட்சாயணி என்ற திருநாமத்துடன் வளர்ந்து ஐந்து வயது நிரம்பியவராயினார். ஆறாவது ஆண்டு தோன்றுதலும் அம்பிகையார் தமதொரு கூறான சிவபிரானைக் கடிமணஞ் செய்துகொள்ளும் முறையைத் தமது கருத்தில் எண்ணித் தவறாது தவஞ்செய்வனென்று திருவுளங்கொண்டார். அரிய தவத்தினால் தன்னைமகளாகப் பெற்ற தட்சனிடமும், தாயாக அமைந்த வேதவல்லியிடமும் இச்செயலினை அம்பிகையார் இவ்வாறு உரைத்தருளினார்.

''அன்னை தந்தையரே! உங்களிடம் கூற வேண்டியதொன்று உள்ளது. யான் நதியணி செஞ்சடையண்ணலான சிவபிரானுக்கு உரிய பேற்றினையுடையேன். அப்பெருமான் வந்து என்னை மணஞ்செய்துகொள்ளும் நிமித்தம் யான் தவஞ் செய்யவேண்டும். அத்தவத்தினை யான் செய்தற்கு உரியதான நல்ல பாதுகாப்புடன் அமைந்த மாடமொன்றினை அமைத்துக் கொடுங்கள்''.

தனது தவப்பேற்றினால் பரமனின் பாகம் பிரியா தேவியைத் தன் மகளாகப்பெற்ற தட்சன், இவ்வார்த்தைகளைக் கேட்டு மிக மகிழ்ந்து அந்த ஒப்பற்ற நகரத்தின் ஒரு புறத்தில் காவலுடைய ஒரு தவச்சாலையை அமைப்பித்து தன் மகளான தாட்சாயணியை ''நீ உன்னுள்ளத்துள் விரும்பிய நோன்பினைச் செய்வாயாக'' என்று கூறிப் பல பெண்களுடன் அங்குத் தவஞ்செய்தற்கு அனுப்பிவைத்தான். தாட்சாயணியும் தாய் தந்தையரிடம் விடைபெற்றுத் தவச்சாலைக்குச் சென்றனள்.

வேதவல்லியானவள் தாட்சாயணி ஐந்தே வயதில் தவஞ் செய்யச் செல்வது கண்டு அதிசயித்துத் தனது கணவனைப் பார்த்து பேதைப்பருவத்தினளாகிய அவள் சிவபிரானை அறிந்ததெங்ஙனம், உரைத்தருள வேண்டுமெனத் தட்சனும் தான் மானஸஸரோவரத்தில் தவஞ்செய்து சிவபிரானை மகிழ்வித்து அவரிடம் குறைவற்ற பல வரங்களைப் பெற்று மேலும் தேவியார் தன் மகளாகவும், பெருமான் தனது மருமகனாகப் பிராமண வேடத்திலும் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்ட செய்தியை விரிவாக வேதவல்லிக்குக் கூறினான். அவ்வாறே சிவபிரான் அருளே தேவி தாட்சாயணியாகத் தங்களிடம் வளர்ந்தாள் என்றும் சிவபெருமானைப் பதியாக அடையத்தவம் முயலுகின்றாள் என்றும், எனவே இப்பெருமாட்டியைப் பேதையாக நினைத்தல் குற்றம் என்றும் தட்சன் கூறினான். வேதவல்லியும் இச்செய்தியையெல்லாம் அறிந்து விம்மிதமெய்திப் பெரு மகிழ்ச்சியுற்றனள்.

பலமாதர்கள் சூழ்ந்து பணி செய்யத் தாட்சாயணியார் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்யலாயினர். சிவபெருமானையே நாடிய மனதுடையவராய் தியானம் ஸ்தோத்திரம் இவைகளை இடைவிடாது செய்து கொண்டு பன்னிரண்டு வயது வருமளவும் தேவியார் கடுமையான தவத்தைச் செய்தார்.

வைராக்கியத்துடன் தவஞ் செய்வார்க்கு *விரும்பியவற்றை விரும்பியவண்ணமே அளித்தருளும் நமது சிவபிரானார், அம்மையாரின் தவத்தைக் கண்டு அவரை ஆட்கொள்ளக் கருதி ஒரு பிராமணப் பிரமசாரி வேடந்தாங்கி திருநீறணிந்த திருக்கோலத்துடன் தாட்சாயணியார் தவஞ் செய்யும்

---

*இங்கு "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற அப்பரடிகளின் அருள் வாக்கு நினைவு கூர்தற்குரியது. (திருமறைக்காடு "தூண்டு சுடரனைய சோதிகண்டாய்" எனத் தொடங்கும் திருத்தாண்டகம் காண்க).

இடத்திற்கு எழுந்தருளினார். தேவியாரின் தோழிகள் சிவக் கோலத்தினராகிய மறையவரைக்கண்டு அவரது வருகையைத் தமது தலைவியாருக்கு உரைத்தனர். அவரை உள்ளே அழைத்துவரத் தலைவியார் கட்டளை இட்டதும் தோழிகள் அம்மறைக்குலத்துப் பிரமசாரியை அம்மையார் தவஞ்செய்யுமிடத்துக்கு அழைத்துச்சென்றனர்.

தேவதேவரான சிவபிரான் சங்கரி என்னும் ஒரு திருநாமத்தினையுமுடைய தேவியார்முன் எழுந்தருளலும், சங்கரியார் விரைந்து வந்து இவர் தமது நாயகரான சங்கரனார்க்கு அதிக அன்புடையவர் என நினைத்து அவரை வணங்கி வரவேற்று வேண்டிய பூசைகளைச்செய்து நின்றனர்.

தன்முன் வணக்கத்துடன் நின்ற தாட்சாயணியைப் பார்த்து மறைக்குல பிரமசாரியின் வடிவத்தில் வந்த சம்புவானவர் "பெண்ணே, உன்னிடத்தில் நான் ஒன்றை விரும்பி வந்தேன், அதனைத் தருவாயானால் அது இன்னதென்று உரைப்பேன்" என்று கூறினார்.

இதைக்கேட்ட தேவியார், அந்த பிரமசாரியைப் பார்த்து "ஐயா, என்னால் கொடுக்கத்தக்கதான ஒரு பொருளை நீர் கேட்பீரேயானால், நிச்சயமாக அது உமக்குக் கிடைக்கும், எனவே நீர் விரும்பிவந்தது யாதெனக் கூறுவீராக" என்று கூறினார்.

உடனே சிவபிரானாகிய மறையோன் "உன்னைக் கலியாணமுறையாக மனைவியாக அடைதலையே விரும்பிவந்தேன், அதனை நீ எனக்கருளல் வேண்டும். இதனைத் தடுத்து எதிர் மொழி கூறேல்" என்று கூறினார். இம்மொழிகளைச் செவிமடுத்த அம்மையார் உடனே தனது அழகிய கைகளால் காதுகளை மூடிக்கொண்டு, மிகுந்த சீற்றங்கொண்டு, மனம் நொந்து, பெருமூச்சுவிடுத்து, "நீர் இங்ஙனம் கூறியவாறு என்னை ? பரமாத்மாவாகிய பரமசிவனார் எழுந்தருளித் திருமணம் புரிதற்கு இத்தவத்தினைச் செய்கின்றேன்" என்று

கூறியதும், பிரமசாரியானவர், "ஓ பெண்ணே! இன்ன தன்மையன் என்று எவரும் என்றும் சிறிதும் நினைக்கவும் முடியாது நின்ற ஆதிமுதல்வன் நின்னை மணமுறையால் அடைதல் அரியகாரியம், எனவே அரிய தவங்களைச் செய்து வருந்தாதே" எனவுரைத்தார். இவ்வார்த்தைகளைக் கேட்ட தேவியானவர், "ஐயா, மறையவரே! அந்தப் பரமனே விரும்பி வந்து இவ்வுலகத்தில் என்னை மணம்செய்து கொள்ளும் பொருட்டு மேலும் அரிய தவங்களைச் செய்வேன். அத் தவத்துக்கு இரங்கி இறைவனார் வந்து என்னைத் திருமணஞ் செய்துகொள்ளாது நின்று விடுவாரேயானால் யானே எனது உயிரைப் போக்கிக்கொள்வேன். இது சத்தியம். பித்தங் கொண்டவர்போல் பேசும் நீர் இங்கு இனியும் நிற்காதீர்; விரைந்து திரும்பிச்செல்லும்" எனவுரைத்துத் தான் வேறொரு பக்கம் செல்ல முயன்றார்.

தேவியார் உரைத்த இம்மொழிகளைச் செவிமடுத்த பரமனார் மிகவும் மகிழ்ந்து, "மாதே! நினது அன்பும் மன வுறுதியும் நன்று" எனக்கூறிப் பிறரறியாவண்ணம் அத் தேவியார்க்கு மிகுந்த ஆச்சரியமானதும் மனதைக் கவர்வது மான தமது நிஜ உருவத்தைக் காண்பித்தார். அப்பொழுது அந்த தேவியும் பரமேசுவரனைக் கண்குளிரத் தரிசித்து மிகவும் பக்தியுடன் பலமுறை வணங்கி, மகிழ்ச்சியுடன் அச்சமுங் கொண்டவளாகி, இருகரங்களையும் கூப்பியவாறே, "ஓ மஹாதேவ, கருணைக்கடலே, தங்களை யாரோ அயலானென எண்ணி இகழ்ந்தேன். தேவரீர் இங்ஙனம் மறைந்து வந்ததை அறிகிலேன். தேவரீரது கருணைக் கண்ணின் பார்வை எய்துமேல் யான் சிறிது அறிவுள்ளவளாகி இருப் பேனயன்றி வேறொரு தன்மையும் உளதோ? எனதிறை வனே! அடியேன் செய்த குற்றத்தினைப் பொறுத்தருள்வீர்" எனக்கூறி மேலும் பெருமானது புகழ்களைப் பலவாறு துதித்து நின்றார். "நல்ல தவத்தினையுடைய நங்கையே! நினது இயற்கை நன்று, நன்று, நீ அஞ்சாதே" என்றருளிச் செய்த இறைவனைத் தேவியார் மீண்டும் மீண்டும் வணங்கி

எம்பெருமானைத் தவிர வேறு எவரையும் பார்க்ாதவராயும் ஆனந்தக் கண்ணீரைப் பெருக விட்டுக் கொண்டும் துதித்துக் கொண்டே நிற்பாராயினர்.

அருகினில் நின்ற தோழியர் கூட்டத்தினர் இச்செயலினைப் பார்த்துத் தேவியார் எம்மைப் பார்க்கின்றாளில்லை, இங்கு வந்த மறையவன் மாய வித்தையில் வல்லவனோ? அன்றி தேவியார் தாம் கருதிய இறைவனையே அடைந்தனரோ? என்றெல்லாம் ஐயமுற்றனர், அவருள் சிலர் விரைந்து சென்று தட்சனிடம் நடந்தன முற்றும் கூறினர். தோழியர் உரைத்தவற்றைக் கேட்ட தட்சன் தனது அறிவினால் ஆராய்ந்து மறையவனாகி வந்தது பரமசிவனேயெனத் தெளிந்து, தன் மகளை அப்பெருமானுக்கு விதிப்படி திருமணம் செய்து கொடுப்பேன் எனக்களிப்புடன் கூறி அதற்குரியனவற்றைச் செய்வானாயினன்.



சிவம்

7. தாட்சாயணி திருமணமும் தேவேசர் திருவிளையாடலும்

பெருமையிற் சிறந்த சிவபெருமானுக்கு இத்தினத்திலேயே தனது மகளை அளிப்பதாக உள்ளே நிகழா நின்ற விருப்பத்துடன் தேவர்கள் அனைவரும் உடன் வருமாறு தட்சன் தூதர்களை அனுப்பினான். தனது நகரத்தை அழகு பொருந்துமாறு அலங்கரிப்பித்தான். தனது மாளிகையை முன்னிலும் சிறப்பாகத் திருமணத்துக்கேற்ற வண்ணம் அலங்கரிப்பித்தான். இங்ஙனம் தகுந்தவற்றையெல்லாம் செய்வித்துத் தாட்சாயணியார் தவம்செய்யும் தவச்சாலையை நண்ணி அங்கு எழுந்தருளியிருந்த மறையவராம் இறைவரைத் தட்சன் வணங்கி, அருகிற்சென்று, "அண்ணலே! தேவரீர் வந்து திருமணஞ்செய்து கொள்ளவேண்டுமென்ற விருப்பத்தால் என் மகள் தவஞ்செய்தனள். ஆதலின் என் நன்னகரிடத்து எழுந்தருளி அவள் விரும்பியவண்ணம் விதிப்படி மணஞ் செய்து கொள்வீராக" என்று வேண்டிக்கொண்டான். மறையவரும் அவ்வேண்டுகோளை ஏற்றருளி அவனது மாளிகையுள் எழுந்தருளினர்.

அங்ஙனம் எழுந்தருளிய இறைவரைத் தட்சன் பல புஷ்பங்களால் நிரம்பியதும், பல கொடிகளால் அலங்கரிக்கப் பட்டதும், பல மண்டபங்களோடு கூடியதுமான தனது அரண்மனையில் எல்லாவிதமான இரத்தினங்களாலும் சோபிக்கின்ற உயர்ந்த சிம்மாஸனத்தில் இருக்கச் செய்து, மிக புத்தி சாலியான தட்சன் தனது மகளை அலங்கரிப்பதற்காக அந்தப் புரத்துக்கு அனுப்பினான்.

அப்பொழுது எல்லா உலகங்களுக்கும் தாயான அம்பிகையைத் தனது மகளாக வளர்த்த பேறு பெற்ற தட்சனது மனைவி

யான வேதவல்லியானவள், அவ்வம்பிகைக்குத் திருமணத்திற் கேற்ற அலங்காரத்தைச் செய்யலாயினுள். தவம் செய்யும் காலத்தில் ஏற்பட்ட சடைகளையெல்லாம் பிரித்துப், பின் அழகு வாய்ந்த புனுகு நெய் பூசி நெல்லி முதலிய பொடியினைத் தேய்த்து அனேகங் குடங்களிற் கொண்டுவந்த நல்ல கங்காதீர்த்தத்தினுல் அபிடேகஞ் செய்தனள். நல்ல நீரால் அபிடேகஞ் செய்து, மணம் பொருந்திய அழகிய மலர் மாலைகளைச் சூட்டிப் பொன்னுடையணிவித்துப் பல வகையான அணிகலன்களைப் பூட்டி அழகு மிகுந்த தேவியாரை இறைவர் பால் விடுத்தனள்.

திருமணத்திற்கேற்ற அலங்காரத்தினை முற்றிலுங் கொண்ட தாட்சாயணியார் சென்று தமது கணவரான சிவ பிரானின் ஒரு புறத்தையடைந்தவுடனே அனைவரும் துதிக்க, முரசு முதலிய வாத்தியங்களை முழக்கினுர்கள். தேவியார் திருமண வைபவத்தைக் கண்டு களிக்க அங்கு வந்து சேர்ந்த திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் விரைந்து வந்து தாமரைமலரைச் சூழ்ந்து வந்த வண்டுகளைப்போலச் சிவ பிரானையடைந்து அடி பணிந்தவரானுர்கள். லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய தேவமாதர்கள் மங்கள வடிவினளான தாட்சாயணியை மிக்க அன்புடன் நமஸ்கரித்து கற்பகச் சோலைகளில் உண்டான தேனுேடுகூடின மணம்வாய்ந்த அழகியமலர்களைக் கொண்டு திருவடிகளில் அருச்சித்து மங்களமான வாழ்த்துப்பாடல்களைப் பாடினுர்கள். தேவ வாத்தியங்கள் முழங்கின. கின்னரர்கள் கீதம் பாட, அரம்பையர் நடனமாடத் திருமணமண்டபம் மங்களமும் பொலிவும் நிரம்பியதாயிற்று.

அப்பொழுது திருமணத்துக்குரிய முஹுர்த்த நேரம் நெருங்குதலையறிந்த தட்சன் தேவதேவனும், காலகாலனும், சூலபாணியுமான பெருமானின் பாதகமலங்களைத் தன்மனைவியான வேதவல்லியானவள் பொற்கரக நீரை விதிப்படி ஒழுக்க மெல்லென விளக்கினுன். திருவடித் தாமரைகளை விளக்கிய

பின்னர் மணம் பொருந்திய மலர்களால் பூசனைசெய்து, ஞான வடிவினரான சிவபிரானரது திருக்கரத்தின் மீது, தேவியாரின் செவ்விய கரத்தினைவைத்து "ஐயனே நுமக்கிவளையளித்தேன், இவளைச் செவ்வனே காத்தருள்வீராக" என்று பொன்னலாகிய கமண்டல நீரால் தாரைவார்த்துத் தந்தான்.

பிரமவிஷ்ணுவாதி தேவர்களனைவரும் அச்சுபமுஹூர்த்த காலத்தில் முதல்வனுடையவும் அம்பிகையினுடையவும் சிறப்பு வாய்ந்த திருமணக் கோலத்தினைத் தரிசித்துக் கடற் கூட்டம் பௌர்ணமி சந்திரனைக் கண்டு ஆரவாரித்தாற் போல ஆரவாரஞ் செய்தனர். அருகிலிருந்த பிரமதேவர் திருமணச் சடங்கிற்குத் தேவையான பொருள்களனைத்தையும் கொண்டுவந்து சாத்திர முறைப்படி ஆராய்ந்து சடங்கு களனைத்தையும் நிறைவேற்றத், திருமால் முதலியோர்கள் இறைவனது வாக்கான வேதங்களை ஓதினர்.

அப்பொழுது உருவமும் அருவமும் உயிரும் ஞானமுமாகி உலகம் யாவினுக்கும் சுகத்தினைச் செய்யும் சங்கரன் தன் அருளின் தன்மையால் அவ்விடத்துத் தாம் கொண்டிருந்த பார்ப்பனக் கோலத்தினையுடைய தமது திருவுருவை மறைத் தருளினர்.

சிவபெருமான் மறைந்தவுடனே தமது நாயகனைக் காணுத வராய்த் தவஞ் செய்து முன்னர், பெற்ற செல்வத்தினை இழந் தாரையொப்ப அம்பிகை பெரிதும் நடுங்கி வருந்தி மகிழ்ச்சியை இழந்தனர். கண்ணீர் ததும்பத் தன் தாயின் அந்தப்புரம் சென்று மிகுந்த துக்கத்துடன் அழுத தேவியை வேதவல்லி, லக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்கள் சமாதானப் படுத்தி, "நம்மால் செய்யப்பட்ட குற்றத்தால் பரமேசுவரன் மறைந் தார், எனவே நீ துயரத்தை விட்டு மீண்டும் தவஞ் செய்து அவரையடைவாய்" எனக் கூறினர்கள். இவ்வார்த்தை களைக் கேட்ட தாட்சாயணியும் ஒருவாறு மனந்தேறியவளாகி, தவச்சாலையை அடைந்து, முன்போல் தவஞ் செய்வதில் முயந்நியுள்ளவரானர்.

மஹேசுவரன் மறைந்தருளியவுடன் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களும், தவத்தையே தனமாகக் கொண்ட முனிவர்களும் மிகுந்த துக்கமடைந்தார்கள். இந்த தட்சன் பாவியானதால்தான் இறைவன் திருமணத்தின் நடுவில் திடீரென்று மறைந்து விட்டாரோ அல்லது நம்மிடத்தில்தான் ஏதேனும் குறையிருந்து அதனுல் மறைந்து விட்டாரோ? என்று பலவாருகத் தங்கள் மனதில் ஆலோசித்து மிக்க துக்கமடைந்தவர்களாகி, பேசாமல் தலைகுனிந்து நின்ருர்கள். தேவர்களுடைய மிகுந்த துக்கத்தையும், மிகுந்த துக்கமடைந்த தன் பெண்ணையும், தேவஸ்த்ரீகளின் விசனத்தையும் பார்த்து தட்சனும் மிகுந்த துக்கமடைந்தவனுகிக் கலியாண மண்டபத்திலிருந்த அனைத்துத் தேவர்களையும் பார்த்துச் சொன்னுன்.

"ஓ தேவர்களே! என் மீது ஏதாவது குற்றத்தைக் கண்டீர்களா? கூறுங்கள். பரமசிவன் கலியாணத்தின் நடுவில் இவ்விதம் சென்ருரல்லவா? தாய்தந்தையரை அறியாதவனும், எப்பொழுதும் மயானத்தில் குடியிருப்பவனுமான அச்சிவன், என் பெண்ணைத் தானுகவே விரும்பி வேதியக் கோலம் தாங்கி அவளிடம் வந்து நீ எனக்கு மனைவியாதலான வரத்தினைத்தா என இரந்தனன். அதை அறிந்த நான் அவனை அழைத்து வந்து தேவர்களான உங்கள் முன்னிலையில் எனது பெண்ணை விதிப்படித் திருமணஞ் செய்து கொடுத்தேன். அப்படியிருந்தும் கூத்தாடியான இவன் திருமணத்தின் நடுவில் மறைந்து மிக இழிவான அபகீர்த்தியை எனக்கு உண்டு பண்ணினுன். இவ்வுலகில் அவரவருக்குள்ள இயற்கையான குணமானது அவரவரை விடுவதில்லையல்லவா? ஆகையால் தான் இவன் அந்தணக்கோலம் தரித்துவந்தும் இத்தகைய செயலைச் செய்தான். இப்படித் தட்சன் எல்லோர் முன்னிலையிலும் சிவபெருமானை இகழ்ந்து பேசித் திருமால் முதலிய தேவர்களை அவரவர் உலகங்களுக்கு அனுப்பினுன். அது முதற் கொண்டு தட்சனுக்குப் பாதகத்தின் மிகுதியால்

உலகிற்கெல்லாம் மங்களத்தைச் செய்யும் தேவாதிதேவனுன சங்கரனிடத்தில் கோபம் ஏற்பட்டது.

பொன் போன்ற மேனியளான தேவியார் முன்னர்த் தவஞ்செய்த அழகிய மாளிகையையடைந்து தோழியர் கூட்டத்துடன் பொருந்தி, அங்கிருந்து பலதினம் ஈசன் தன்னை யடையுமாறு விரும்பித் தவஞ்செய்ய, ஒரு நல்ல தினத்தில் இறைவன் ஒரு தவசியைப் போல் அங்கு எழுந்தருளினுர். சடைமுடியுடனும், திருநீற்றுப் பூச்சுடனும், உருத்திராட்ச மாலைகளுடனும், சூலம்-கபாலம் முதலியவைகளுடனும் தவக் கோலத்தில் எதிரே வந்த அப்பெருமானைத் தேவியார் பார்த்து, இவர் நம் பெருமானுக்கு அடியவர் என்று நினைத்து எதிரே சென்று கரங்குவித்து வணங்கித் துதித்தார்.

அப்பொழுது கருணைக்கடலாகிய பரமசிவன் மிகுந்த மகிழ்ச்சியுடையவராகி இடபத்தின் மீது அமர்ந்த கோலத் தினராய் நான்கு தோள்களுடனும் மூன்று கண்களுடனும் தேவியாருக்குத் தமது உருவத்தைக் காட்டியருளினுர். உடனே தேவியார் துன்பமொழிந்து இனிமை வாய்ந்த மனத் துடன் பலமுறை விழுந்து வணங்கித் துதித்து "என் ஐயனே ! முன்னர் என்னெதிரில் இல்லாமல் திருவுருக்கரந்தருளினீர். இப்பொழுதெழுந்தருளிய சின்மயனே ! எனது குறையை நீக்கியருளுவீரோ" என்று கூறிக்கொண்டே அவரருகிற் சென்ருர். பிறகு பரமேசுவரன் அந்தத் தேவியைத் தனது மலர் போன்ற கரத்தினை நீட்டி எடுத்து மனதைக் கவரும் தமது இடபவாகனத்தில் தமது இடப்புறத்திலிருத்தித் திருக் கயிலாய மலைக்கு விரைந்து சென்றருளினுர். தவச்சாலையில் இருந்த சேடியர் இச்செயல்கள் அனைத்தையும் தட்சனிடம் விரைந்து சென்று கூறினுர்கள்.

தாட்சாயணி தேவியாரின் சேடியர்கள் உரைத்த வார்த் தைகளைக் கேட்டுத் தட்சன் எரிகின்ற தீயில் நெய்யினை ஒழுக் கினுற் போல அளவற்ற கோபங்கொண்டான். அப்பொழுது

அவனைத் தொழுதலாகிய கடனை முடித்து அருகில் துதி புரிந்தவர்களாக இருந்த தேவர்களைப் பார்த்து, "தேவர்களே! எனது மகளை விரும்பி வந்து மணந்து கொண்ட நீலகண்டன் திருமணச் சடங்குகள் முழுமையும் நிறைவேறுதற்கு முன்பே மறைந்தனன். அதுவுமன்றி இன்று என்மகளிடம் சென்று என்னெதிரில் வராது அவளைக் கைப்பற்றிச் சென்றுள்ளான். தாய் தந்தையர் விருப்பத்துடன் கொடுக்க, சுற்றத்தினர் நெருங்கியிருந்து வாழ்த்தப் பின்னர் மனைவியைக் கொண்டு சென்றிலன். பெற்றவர்கள் அறியாது அவன் செய்த காரியம் முறையோ? இதுவரையில் சிவன் பிச்சையெடுத்தான் என்ற ஒரு குற்றமாகிய வசனம் மட்டுமே உலகிற் பரவியிருந்தது. அதுவே யன்றித் திருமணத்தின் நடுவில் மறைந்தனன் என்ற ஓர் பழியும் உண்டாகி இப்பொழுது என்மகளைத் திருடிச் சென்றான் என்ற வேறு ஒரு பழியும் சேர்ந்து கொண்டது. முன் *எப்பொழுதாவது ஒரு பெண்ணை முறையாகத் திருமணஞ் செய்து கொண்டிருப்பானாகில் இங்ஙனம் செய்திருப்பானோ?" என இவ்வாறு கூறிச் செய்ந்நன்றி கொன்ற தட்சன் தன்னருகிலிருந்த தேவர்களை அவர்களுடைய நகரங்கட்குச் செல்லுமாறு பணித்தான். பின்னர் சீற்றம் பொருந்திய உள்ளத்தினனாகி அன்று முதல் சிவபிரானைச் சிறிதும் நினையானாகி இகழுதலையே மேற்கொண்டிருந்தான்.

சிவம்.

---

*சிவபிரானது அருளே அவருக்குச் சக்தியாவர். "அருளது சக்தியாகும் அரன்தனக்கு..." என்று சிவஞான சித்தியார் கூறும். இவ்வருட்சக்தியையன்றி வேறு தேவியில்லையாகலின் வேறு ஒரு பெண்ணை மணம் எஞ்ஞான்றும் செய்து கொண்டவரல்லர். தட்சன் மகளை மணம் செய்து கொண்டது அவனுக்களித்த வரத்தின்படித் தன் சக்தியையே அவனுக்கு மகளாகத் தந்தமையாலாகும். பின்னர் இமவான் மருகனாக ஆதலும் இங்ஙனமேயாகும்.

8. தட்சன் சிவநிந்தகனுதல்

இங்ஙனம் தட்சன் சிவபிரானைச் சிறிதும் நினையாமல் இருந்ததுடன் அவரை இகழ்வதையே தொழிலாகக் கொண்டு இருப்பதை பிரமதேவன் முதலான தேவர்கள் பார்த்து, "அந்தோ ! தேவதேவனும், சூலபாணியுமான மஹா தேவனை இந்தத் தட்சன் சிறிதும் மதியாது இகழ்ந்து பேசி வருகின்ருன். அதனுல் இவன் விரைவில் இறந்துபடுவான். சிவத்துரோகியான இவனது ஏவலை நாமும் செய்கின்ருேம். எனவே நமக்கும் தீங்கு நேரக் கூடும். இந்தத் தட்சனை நாம் நண்ணுதவர்களானுல் நமது பதவிகளையெல்லாம் பறித்து விடுவான். எனவே இனி நாம் செய்யக் கடவது தான் யாது" என்று பலவாருக யோசித்து, எப்படியாவது தட்சன் திருக் கயிலைக்குச் செல்லுமாறு அவன் மனதில் பொருந்தக் கூற வேண்டுமென முடிவு செய்தனர்.

ஒரு நாள் தட்சனை அணுகி, "ஓ தட்சப் பிரசாபதியே ! எல்லா உலகங்களுக்கும் பிரபுவாகிய நீர் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவரன்ருே ? உம்மால் மஹாதேவனுக்கு உமது பெண் முறைப்படி கொடுக்கப்பட்டாளல்லவோ ? ஆதலினுல் அந்த தேவாதிதேவன் உமது மாப்பிள்ளை என எல்லா உலகங்களிலும் பிரசித்தி பெற்றுள்ளார் அன்ருே ? ஆகையால் அவர் யாராகவோ எவராகவோ இருக்கட்டும். அவரை நிந்திக்க வேண்டாம். எல்லாவுலகங்களுக்கும் பிரபுவும், ஸமர்த்தருமான நீர் சிக்கிரமே திருக்கயிலாயமலைக்குச் சென்று உமது பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்துப் பேசி, அந்த சம்புவிடம் ஸமாதானம் செய்து கொண்டு திரும்பிவருவீராக" எனக் கூறினுர்கள். தட்சனும் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுத் தானடைந்த கோபம் தெளிந்தவனுகித் திருக்கயிலாயமலைக்குச் சென்று இறைவரைத் தரிசித்து வர உடன்பட்டான்.

பிரமதேவன், திருமால் மற்றும் தேவர்கள் அனைவரையும் அங்கிருக்கச் செய்து, தட்சன் தனது நகரை நீங்கி நின்மலரான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலையங்கிரியை அடைந்தான். வெள்ளிமலைக்குச் சென்று, பெருமான் கோயில் கொண்டுள்ள பொன்னாலயத்தையடைந்து, நந்தியெம்பெருமானுக்கு இருப்பிடமான கோபுர வாயிலையடைய, அங்கு நெருக்கமாக நின்று காவல் செய்யும் முறைமையையுடைய பூதகணங்கள் தட்சனைத் தடை செய்தார்கள். தன்னை உள்ளே செல்லவொட்டாது தடை செய்த பூதகணங்களைச் சீற்றத்துடன் பார்த்து, என்னால் கொடுக்கப்பட்ட எனதன்பிற்குரிய மகளையும், எனது மாப்பிள்ளையையும் பார்ப்பதற்காக வந்த என்னை ஏன் தடை செய்கின்றீர்கள்'' என்று தட்சன் கேட்டான்.

அம்மொழி கூறிய தட்சனைச் சீறிப் பார்த்தனவாய் வாயில்காக்கும் பெரிய பூதகணங்கள், ''ஓ தட்சனே! எங்கள் வார்த்தைகளைக் கவனமாகக் கேள். உன்னால் அனுபவிக்கப்படும் பெரிய செல்வமனைத்தும் ஜகதீசனான பரமேசுவரனிடமிருந்தே அடையப்பட்டதல்லவா? அப்படியிருந்தும் நீ பரமேசுவரனை நிந்திக்கின்றாய். முப்புரத்து அசுரரும் கூட உலகங்களை வருத்தினரேனும் எமது பெருமானிடத்துப் பக்தியுள்ளவராக இருந்தனர். அவர்களிடமிருந்த அன்பில் இறையளவு கூட உன்னிடத்திலில்லை. இனி நீ எங்ஙனம் வாழப்போகின்றாய்? சிவநிந்தை செய்யும் பாவியான உன்னைப் பார்ப்பதும் பேசுவதும் எங்களுக்குப் பெருங்குற்றத்தையே விளைவிக்கும். ஆயினும் ஒன்று கூறுகின்றோம். பரமாத்மாவான சங்கரனைத் தரிசிக்கவேண்டுமென்ற உறுதியான எண்ணம் உனக்கிருக்குமானால் தக்க சமயத்தை எதிர்பார்த்து அறிந்து, பின் பெருமானின் அனுமதியின்படி அவரைச் சென்று தரிசிக்கக் கூடும். வீண் புத்தி கொண்ட தட்சனே! அதற்கு விருப்பமாகில் இங்கு நிற்பாய், இல்லையேல் வந்தவழியே பார்த்துக் கொண்டு சென்றுவிடு'' என்று கூறின.

பூதகணங்களின் வார்த்தைகளைக் கேட்ட தட்சன் மிகுந்த சீற்றங் கொண்டான். பல ஆயிரம் பூதர்களால் காக்கப்படுகின்ற அந்த கோபுரவாயிலைக் கடந்து உள்ளே செல்லமாட்டாதவனாய் வெட்கமுற்று, உள்ளம் நொந்து, அதனால் மிகவும் அதிகரித்த சீற்றத்துடன் பூதர்களைப் பார்த்துக் கூறினான். "ஓ பூதர்களே ! பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் அனைவரும் எனக்கு ஊழியஞ் செய்பவர்கள். நானே எல்லாத் தேவர்களையும் ஏவுகின்றவனாயும், விலக்குகின்றவனாயும், பாதுகாப்பவனாயும், தண்டிக்கின்றவனாயும், நியமிக்கின்றவனாயும், அனைத்து உலகங்கட்கும் நாயகனாகவும் இருக்கிறேன். அப்படிப்பட்ட நானோ உங்கள் இறைவனை வணங்குவேன். என்னை 'நில்' எனத்தடுத்த உங்களது செய்கையும் என் பெண் - மருமகன் என்ற இவர்கள் ஏவலாலேயேயன்றி உங்களால் செய்யப்பட்டதல்ல. இங்ஙனம் உங்களைக் கொண்டு என்னைத் தடை செய்த உங்கள் தேவனை இனி எவரும் போற்றாமலும், வந்து வணங்காமலும், புகழ்ந்து மேன்மை கூறாமலும் இகழுந்தன்மைக்கேற்ற காரியத்தைச் செய்வேன்" என்று கூறித் தீயவூழானது பிடித்துத் தள்ளத் தனது நகரையடைந்தான்.


தனது நகரையடைந்த தட்சன், அங்கு நெருங்கியிருந்த பிரமன் முதலான தேவர்களைப் பார்த்து, "ஓ பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்களே ! உங்கள் வார்த்தையைக் கேட்டு நான் என் மகளையும் உருத்திரனையும் காண்பதற்காகக் கயிலைமலைக்குச் சென்றேன். அங்குக் கொடியவர்களான வாயிற்காப்பவர்களால் தடுக்கப்பட்டு அவமரியாதை செய்யப்பட்டேன். 'ஸ்ரீ சங்கரருடைய உத்தரவின்றி உள்ளே செல்லலாகாது. நாங்கள் உன் முகத்தைப் பார்க்கவும் தகாது, எங்கேயாவது சென்றுவிடு, அல்லது இங்கேயே நின்றுவிடு' என்று எனது பெண் - மாப்பிள்ளைகளின் வார்த்தையைக் கேட்டுக் கொடிய வார்த்தைகளைப் பேசுகின்ற அவர்களால் இன்னும் பல இகழ்வான வார்த்தைகள் கூறப்பட்டன. அந்த பூதர்கள் கூறிய மொழிகளை நினைக்கினும், அந்தோ !

உள்ளே நாணங் கொள்ளுகின்றேன். அவர்களிடம் சென்ற என்னை நோவதன்றி அவர்கள் மீது குறை கூறி என்ன பயன்? நன்று, நன்று, என்னை மதியாத அந்த *நக்கனையும் அவனது மனைவியையும் நீங்கள் அனைவரும் இன்று முதல் என்றும் இறைஞ்சி வணங்காதீர்கள். அவனை நினைக்கவும் கூடாது. அப்படிச் செய்தீர்களானால் உங்கள் பால் மிகுந்த குற்றம் ஏற்படும். எனது வார்த்தையை மறுத்து நடப்பீர்களேயானால் உங்கள் பதவிகளை இப்பொழுதே விரைவில் மாற்றி விடுவேன்'' என்று கூறினான்.

மிகுந்த சீற்றத்துடன் இவ்வாறு கூறிய தட்சனைத் தேவர்களனைவரும் பார்த்து, "இதுவரை உனது ஏவலை எப்பொழுதாவது மறுத்தது உண்டோ? இப்பொழுதும் உனது கட்டளைப்படியே நடக்கின்றோம், கோபங் கொள்ளற்க'' என மறுமொழி கூறித் தங்கள் நகரங்களையடைந்தனர். இவ்விதம் தேவர்களை அனுப்பிவிட்டுத் தட்சன் பரமேசுவரனை நிந்தித்துக் கொண்டே தனது காலத்தைக் கழித்து வந்தான்.

---

*நக்கன் என்ற சொல் நக்னன் என்ற வடமொழிச் சொல்லின் திரிபு ஆகும். ஆடையணியாதவன் என்பது பொருள்.



சிவம்.

9. நான்முகன் வேள்வியும் தட்சன் பெற்ற சாபமும்

இவ்வாறு பலகாலம் அனைவரும் தட்சனது ஆணைக்குப் பயந்து அவனது ஏவல்வழி நிற்கையில், கமலாசனனான பிரம தேவன் முப்புரமெரித்த சிவபிரானது கருணையால் அரியதொரு யாகம் செய்யவேண்டுமென்று நினைத்தார். அதற்குத் தேவையான பொருள்களனைத்தையும் முறையாகச் சேகரித்துக் கொண்டார். முன்னர் சிவபிரானை எவரும் மதித்தல் கூடாது என்று தட்சன் இட்ட கட்டளையையும் நினைத்து, "முக்கண்ணரும், அனைத்து உலகங்கட்கும் அப்பாற்பட்டவரும், பரஞ்சோதியும், பரப்பிரம்ம ஸ்வரூபியும், யாகங்களுக்கெல்லாம் அரசருமாகிய அந்த மஹாதேவனை அழைத்து வந்து, மிகுந்த பக்தியோடு அப்பெருமானை *ஹவிர்பாகங்களால் பூசை செய்யப் போகிறேன். இந்தத் தட்சன் அறிவு மயக்கத்தினால் ஈச்வரனிடம் பராமுகமாயிருந்தபோதிலும் அந்த மஹாதேவனைச் சிறிதும் ஸந்தேகமின்றிப் பூசை செய்யப் போகிறேன். இதற்காகத் தட்சன் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். இது விஷயத்தில் எனது உயிரையும் விடுவேன். எவனுக்கு உயிரில் அபிமானமிருக்கின்றதோ அவனுக்கல்லவோ எங்காகிலும் பயமுண்டு. யானைத்தோலை உடுத்தவரும், பிநாகம் என்ற வில்லையேந்தியவரும், பிராணேசனுமான மஹாதேவர் என்னைக் காப்பாற்றுவார்" என்று உறுதி கொண்டு திருக்கயிலாயமலைக்குச் சென்றார்.

---

*ஹவிர்பாகம் என்பது தேவர்களுக்கு அவரவர்கள் பெயரைச் சொல்லி அழைத்து வேள்வித் தீயில் இடப்படும் நெய், அன்னம் போன்ற ஆகுதிகள்.

மலைகளுக்குள் சிறந்ததான திருக்கயிலையை அடைந்ததும் அங்கு வாயிற்காப்போர்க்குத் தலைவரான நந்தியெம்பெருமானை வணங்கி அவருடைய உத்தரவால் ஸ்ரீ மஹாதேவர் சந்நிதியையடைந்து அவரை வணங்கிப் பலமுறை கிழே விழுந்து நமஸ்கரித்துப் பிரார்த்திக்கலானார்.

புந: புந: ப்ரணம்யாயம் ப்ரார்த்தயாமாஸ பூரிச: |
தேவ தேவ மஹாதேவ சரணாகத வத்ஸல ||

ரக்ஷமாம் கருணாமூர்த்தே யக்ஞேச்வர மஹேச்வர |
மயா கரிஷ்யமாணே த்வம் ப்ரசன்னோ பவசாத்வரே ||

அநுமன்யஸ்வ தேவேச ப்ரதமம் ஹவிரீச்வர |
பவிஷ்யாமி க்ருதார்த்தோஹம் தேந ஸத்யம் ஜகத்குரோ ||

"தேவாதி தேவரே! மஹாதேவரே! அடைக்கலம் புகுந்தவர்களிடம் பேரன்பு கொண்டவரே! கருணைக் கடலே! யாகங்களுக்கெல்லாம் தலைவரே! மஹேச்வரரே! அடியேனைக் காத்தருளி நான் செய்யப்போகின்ற யாகத்தில் தாங்கள் எழுந்தருளி ஓ தேவேச! ஈச்வரா! முதலாவதான ஹவிர்பாகத்தைத் தாங்கள் ஏற்றருள வேண்டும். அனைத்து உலகங்களுக்கும் குருவான ஈச்வரா! அதனால் நான் உண்மையாகவே கிருதார்த்தனாகி விடுவேன்" என்று இவ்வாறான வார்த்தைகளால் பிரமதேவன் சிவபெருமானைப் பிரார்த்தித்தார்.

இவ்வாறான பிரமதேவனது பிரார்த்தனையை அங்கீகரித்துச் சம்புவானவர் எழில் மிகுந்த புன்னகையுடன், "ஓ நான்முகனே! கவலையுறாதே! உனது யாகத்துக்கு என்னுடைய உருவமுடைய நந்தி வருவான்" எனக்கூறி பிரமதேவனை மகிழ்ச்சியுடன் விடைகொடுத்தனுப்பினார். இறைவனின் பொன்னார் திருவடிகளை வணங்கி விடைபெற்ற பிரமதேவன் தட்சனையடைந்து, "ஐயா, நான் நல்லதொரு யாகத்தினைச் செய்கிறேன். முனிவர், தேவர்களுடன் நீ வருவா

யாக'' என்றுன். தட்சனும் நீர் முதலிற் சென்று யாகத்தினைச் செய்வீராக என்று கூறப் பிரமதேவன் மஹாமேருமலைக்குச் சென்று அங்கு மனேவதி என்ற மங்களமான நகரத்தில் மிகப் பரிசுத்தராக இருந்து கொண்டு யாகத்தைச் செய்யலானுர்.

அப்பொழுது பிரமதேவனின் புத்திரர்களால் முன்னமேயே அழைக்கப்பட்டிருந்த திருமாலும் மற்றைய தேவர்களும் முனிவர்களும் விரைந்து சென்று தட்சனையடைந்தனர். அவன் அவர்களுடன் கலந்தாலோசித்து முக்கண்ணனுகிய பெருமானுக்கு ஹவிர்பாகம் அளிப்பதனைத் தடுப்பதற்கு முயற்சி செய்தான், தேவர்கள் முனிவர்கள் புடைசூழத் தட்சன் யாகசாலைக்கு வந்து சேர்ந்தான். பிரமதேவன் தட்சனையும் திருமாலையும் மற்ற தேவர்களையும் முனிவர்களையும் வரவேற்று உபசரித்து அவரவர்க்குத் தக்கதான ஆசனங்களில் அமரச் செய்தார். பின்னர் வேதங்கள் முழங்க வேள்வித் தொழிலில் ஈடுபடலானுர்.

அப்பொழுது பரமேசுவரனின் ஆணைப்படி நந்திதேவர் நூறு கோடி பூதர்கள் புடைசூழ அங்கு எழுந்தருளினுர். நந்தியெம்பெருமான் எழுந்தருளியது கண்ட நான்முகன் மிக்க மகிழ்ச்சியுடனும் அன்புடனும் விரைந்து சென்று வரவேற்றுத் துதித்து வணங்கி, அவரை அம்மண்டபத்தின் நடுவில் மிகச் சிறந்ததும் மேன்மை பொருந்தியதுமான சிம்மாசனத்தில் இருக்கச் செய்தார். அவருடன் வந்த பூதகணங்களையும் வரிசையாக ஆசனமளித்து அமரச்செய்தார்.

நந்திதேவருக்கு பிரமதேவர் இத்தகைய சிறப்பு செய்ததைக் கண்ட தட்சன் மனம் பொருதவனுகிக் கண்கள் தீப்பொறி பறக்கக் கடுங்கோபங் கொண்டு விஷ்ணு முதலிய தேவர்களும், லக்ஷ்மி - ஸரஸ்வதி முதலிய தெய்வமகளிரும் முனிவர்களும் நிரம்பியிருக்கும் இந்த யாகத்தில் நஞ்சுண்டு கூத்தாடும் சிவனின் வாயிற்காப்போனும் பூதர்களுமோ வந்திருப்பது? இவர்களை இங்கே அழைத்தவர் யாவர்?

என்று தன் உள்ளத்தில் எண்ணி நான்முகனைப் பார்த்துக் கூறலானான்.

"தந்தையே! நீர் யாகம் செய்யப்போவதை சிவனுக்குத் தெரிவித்து அவனனுப்பிய நந்தியை என் எதிரில் விருப்பத்துடன் வணங்கிச் சபை நடுவில் உயர்ந்த ஆசனத்தில் இருத்தினீர். உமக்கு இது தகுதியான செயலாகுமோ? எனது தந்தையானதால் நீர் பிழைத்தீர். இல்லையேல் உமது தலையை வெட்டியிருப்பேன். இன்னுமொன்று உமக்குக் கூற வேண்டியுள்ளது. அதையும் கேட்பீராக! சுடுகாடே வாழுமிடமாகப் பூதகணங்கள் புடைசூழத் தசைகழிந்த உடலைச் சூலத்தின் மீதேந்தித் தீயினிடத்து நின்றாடும் அவனுக்கு இதுகாறும் அளித்துவந்தது போல இன்று ஹவிர்பாகம் அளிக்காதீர். இன்று முதல் அவனுக்கு வேள்விகளில் ஹவிர்பாகம் இல்லை. எலும்பையும் கொடிய பாம்பையும் தலைமாலையையும் தாங்கிச் சாம்பலைப் பூசிக்கொண்டு நிற்கும் பித்தனும் வேள்விகளில் ஹவிர்பாகம் பெறுவதற்கு உரியனுவனோ? இந்நாள் வரையும் அதுவே வழக்கமென எண்ணி எதையும் ஆராயாது தூய்மைபொருந்திய ஹவிர்பாகத்தை அவனுக்குக் கொடுத்து வந்தனர். இனியும் அதே வழக்கத்தைக் கொள்ளலாகுமோ? அவனையன்றியுள்ள மற்றைய தேவரனைவருக்குங் கொடுப்பீராக. இந்நாள் முதல் திருமாலையே முதலாகக்கொண்டு ஹவிஸ்ஸைக் கொடுப்பீராக. கற்றைவார்சடைக் கண்ணுதல் கடவுளே பரம் என்று கூறுகின்ற சிறந்த வேதவாக்கியங்களையெல்லாம் விலக்கி விடுவீராக".

இவ்வாறு கூறிய தட்சனுடைய கொடிய வார்த்தைகளைக் கேட்டவுடன் நந்திகேசர், 'சிவசிவ' எனக் கூறித் தமது திருக்கரங்களால் இருசெவிகளையும் மூடிக்கொண்டு சிவபெருமானைத் தியானித்துக் கொண்டே, "இக்கொடிய மொழிகளைக் கேட்பதற்கோ இறைவர் என்னை அனுப்பினர்" என்று வருந்திப் பெருந்துன்பத்துள் மூழ்கினர். பின்னர்த் திடீரென்று

சீற்றமுடையவரானார். சிரித்துப் புரமெரித்த சிவபிரானது கருணையால் காவல்தலைமை நடத்துகின்ற ஒப்பற்ற நந்தி கேசர் கோபங்கொண்டதைக் கண்டு தேவர்கள் அனைவரும் அச்சத்தால் நடுங்கினர். தீக்கடவுளும் நடுங்கினான். அண் டங்களும், உயிர்க்கூட்டங்களும் நடுங்கின. திருமாலும் நான் முகனும், "பரம்பொருளான சிவபிரானது கீர்த்தியில் ஒரு சிறிதுமெண்ணாது அகந்தையால் ஹவிர்பாகத்தைத் தடுத்த தட்சனுக்கு அஞ்சி அவன் வார்த்தைகளை மறுத்து ஒரு சொல்லும் கூறுது இசைந்தோமே; இதனை நந்தீசர் பொறுத் துக் கொள்ளாது கோபங் கொண்டனரே!" என அச்சத் துடன் இருந்தனர்.

நந்தீசர் கண்களில் கனல்பறக்கத் தட்சனை நோக்கி, "மஹாபாபியான தட்சனே! மரண காலம் மிக நெருக்க மாக உள்ள உன்னால் இப்பொழுது சிவநிந்தை செய்யப்பட்ட தன்றே? ஸர்வேச்வரனை சம்புவை ஒருமுறை நிந்தித் தாலும் கூட, அங்ஙனம் நிந்திப்போரது நுனி நாக்கை அறுப் பதுடன் அவர்களுடைய முகத்தையும் குறுக்காய்த் திருப்பி வைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதன்றே? மஹா தேவனும் சூலபாணியுமான இறைவரின் திருவுள்ளம் யாதோ என்று எண்ணி உன்னை உயிருடன் விட்டேன். ஓ மூடனே! இனியும் எம்பெருமானை இகழ்ந்தாயாயின் உன் தலையைத் துண்டிப்பேன். வேள்வியில் யாகங்களுக்கு ராஜாவான மஹா தேவருக்கு ஹவிர்பாகம் இல்லையென்று சொன்னால் அதைப் பெறக்கூடியவர் வேறு யாவருளர்! எவர்கள் முதல் ஹவிர் பாகத்தைச் சிவபெருமானுக்குக் கொடுக்காமல் யாகம் செய் கிறார்களோ அவர்களது தலைகள் எனது ஆக்ஞையால் சீக்கிரம் வெட்டப்படும். மூடனான தட்சனே! உனது எல்லா ஐச்வர் யங்களும் விரைந்து அழிக. சிவனை நிந்தித்த உனது தலையும் பூமியில் விழக்கடவது. மீண்டும் அறுக்கப்பட்ட அந்தத் தலை யும் வேறோர் இழிவான தலையாக (ஆட்டின் தலை) ஆகக் கடவது. உன்னைச் சார்ந்த தேவர்கள் யாவரும் ஒரு நாள் இறந்து மீண்டும் எழுந்து சூரன் என்னும் அசுரனால்

அளவற்ற காலம் துன்பம் அடையட்டும்'' எனத் தட்சனின் மனமும் நடுங்கும்படியாகப் பல சாபங்களை இட்டார். பின்னர் ஒரு கணமும் அங்கு நில்லாது விரைந்து தன்னுடன் வந்த பூதகணங்கள் புடைசூழத் திருக்கயிலையை அடைந்தார். சந்திரகலையைத் தலையில் கொண்டவரும் தேவதேவனுமான மஹேசனை எட்டுறுப்புகளும் நிலம்தோய விழுந்து வணங்கி நடந்த செய்திகளை முறையாகத் தெரிவித்து, இறைவரது கட்டளைப்படி தன்னுடைய இருப்பிடத்தை அடைந்தார்.

நந்தியெம்பெருமான் இங்ஙனம் சாபமுரைத்து வேள்விச் சாலையை விட்டு விரைந்து நீங்குதலும், அங்கிருந்த தேவர்களனைவரும் ''விளைந்தது என்னே!'' என்று இரங்கி ஏங்கினார்கள். பிரமதேவன் ஒரு புறம் நந்திதேவரிட்ட சாபத்தினை எண்ணியும், ஒரு புறம் தட்சனின் சொல்லை மறுக்க அஞ்சியும் மிகுந்த துன்பமனுபவித்தார். தான் நடத்த முயன்ற வேள்வியையும் கைவிட்டார். சிவபிரானுக்குரிய ஹவிர்பாகத்தை தடுத்தவனான தட்சன் அதனைக் கண்டு, கோபங் கொண்ட மனத்தினனாய்ச் சிறிது அச்சமுங் கொண்டவனாய்த் தனது நகரத்தைச் சென்றடைந்தான். இங்ஙனம் பிரமதேவர் செய்யத் தொடங்கிய யாகம் நிறைவுறுதொழிய, அவ்விடத்து நெருங்கியிருந்த தேவர்கள் திருநந்திதேவர் கோபத்தாலிட்ட சாபத்தினையெண்ணி வருந்தினவர்களாய்த் தங்கள் நகரங்களுக்குச் சென்றனர்.



சிவம்.

10. தட்சன் வேள்வியும் தேவர்கள் வருகையும்

நந்திகேசுவரரின் சாபத்துக்கும் தட்சனின் அச்சுறுத் தலுக்கும் அஞ்சி முனிவர்களும், தேவர்களும், அந்தணர்களும் நீண்டகாலமாக வேள்விகள் புரிவதை விடுத்தார்கள். வெகு காலமாக வேள்விகள் எங்குமே நடைபெருதிருந்ததைக் கண்ட தட்சன் தானுகவே ஒரு யாகம் செய்ய எண்ணங் கொண்டவனுய் ஒரு நாள் தேவர்களைப்பார்த்து, "ஓ தேவர் களே! நீங்கள் அளவற்ற காலங்களாகச் செய்தற்கு உசித மான யாகங்களைச் செய்தலின்றி விட்டதேனே? உரையுங் கள்'' என்ருன்.

கொடிய வினைகளைத் தீயவூழின் வழிப்பட்டுச் செய்யமுனை யும் தட்சன் இவ்வாறு வினவுதலும் தேவர்கள், "ஐயனே! பிரமதேவன் முன்னுளில் செய்த யாகசாலையுள் ஐம்முகனுகிய சிவபிரானுக்கு ஹவிர்பாகம் அளித்தல் கூடாதென்று விலக் கினீர். அதனுலும் நந்திதேவரது சாபமொழியாலும் அஞ்சி நாங்கள் வேள்விகள் செய்தலை நிறுத்திஞேம்'' என்று விடை கூறினர்.

இவ்வாறு தேவர்கள் கூறுதலும் பெருமையற்றவனுகிய தட்சன் அவர்களை நோக்கி, "தேவர்களே! அந்நாளில் நந்தி யிட்ட சாபத்திற்கு அஞ்சியா நீவிர் இக்காலத்திலும் வேள்வி கள் புரியாது திரிகின்றீர்? உங்களது அச்சத்தினை ஒழித்தற்கு யாஞெரு சிறந்த வேள்வியை முன்னுகச் செய்கின்றேன். அது நிறைவேறுமாயின் பின்னர் நீவிரும் அஞ்சாது செய்வீர் களாக!'' எனக் கூறினுன். இதற்கு உடன்பட்ட தேவர் களைப் 'போமின்கள்' என அவர்களது நகரங்கட்கு அனுப்பி விட்டு, மிகவும் இறுமாப்பு வாய்ந்த மனமுடையவனுய் யாகச்

சடங்கினை நடத்துவதற்கு விரும்பி அதற்கானவற்றைச் செய்ய முனைவானுயினன்.

விச்வகன்மன் என்ற தேவதச்சனை அழைத்துத் தான் செய்யவிருக்கும் யாகத்துக்குத் தக்கதான ஒரு சாலையை உண்டாக்கும்படித் தட்சன் கூறுதலும், அவ்விசுவகன்மனும் கங்கா நதியின் ஒரு புறத்தில் மிக அழகு வாய்ந்த [1]கனகலம் என்னுமிடத்தில் ஆயிரம் யோசனை நீளமும் ஆயிரம் யோசனை அகலமும் பொருந்தினதாக இருக்கும் வண்ணம் விரைந்து ஓர் வேள்விச்சாலையை அப்பொழுதே உண்டாக்கினன். அதன் உட்புறத்தில் தேவமாதர்கள் இருத்தற்கு இடமும் அவர்கள் தேவர்களோடு பொருந்தி விளையாடுதற்குரிய அழகிய வாவி களையும் சோலைகளையும் அமைத்தான். தேவர்களும் மறைய வர்களும் மற்றைய எல்லோரும் உண்ணுதற்குப் பொருத்த மான அன்னம் முதலியவைகளை வைப்பதற்கேற்ற இருப்பிடங் களையும், அவர்கள் அனைவரும் வந்து உண்பதற்குத்தக்க தான விசாலமான அளவற்ற சாலைகளையும் இமைப்பினில் உண்டாக்கினன். விருந்தினர் அனைவரும் பெறும் வண்ணம் சந்தனக்குழம்பும், வாசனைப்பொருள்களும், முத்துமாலை களும், மலர்களும், வெற்றிலை பாக்கு முதலியவைகளும் இருக் கும் சாலைகளையும் அழகு பெற அமைத்தான். பலவகையான ஆடைகள், அழகிய ஆபரணங்கள், பொற்குவியல்கள், மற்றும் நவரத்தினங்கள், மற்றுமுள்ள செல்வங்கள் முதலிய வைகளைத் தானஞ் செய்தற்குத் தக்க இடங்களை அமைத் தான். மேலும் நூல்களில் உரைத்தவண்ணம் சதுரம், வட்டம், கோணம் என்னும் மூவகை வேள்விக் குண்டங்களும் வேதிகைளும் மற்றுமுள்ள பிறவும் உண்டாக்கினன். நான் முகனும் திருமாலும் இருத்தற்கு இருக்கையும் மற்றும் அட்ட திக்பாலகர்கள், தேவர்கள், முனிசிரேட்டர்கள், பழமையான

---

1. கனகலம் என்பது தற்பொழுது உத்தரப்பிரதேசத்தில் உள்ள ரிஷிகேசம் என்னுமிடமாகக் கருதப்படுகிறது.

வேதியர்கள் ஆகியோர் பந்துக்களுடன் வந்து இருத்தற்குரிய இருக்கையும், தட்சன் வந்து தங்கியிருத்தற்குரிய இடமும் தக்கவாறு அழகிய சிற்பநூல் முறைப்படி உண்டாக்கினன். இவ்விதம் யாகசாலையைச் சிறப்புடனமைத்து விசுவகன்மன் தட்சனிடம் சென்று யாகசாலை முற்றியதென்று உரைத்தலும், தட்சன் உடனே சென்று அதனைக்கண்டு அளவற்ற ஆசையின் மிகுந்தவனாகி மகிழ்ச்சியுடன் ஆச்சரியமும் உடையவனாயினன்.

வேள்விச்சாலையைப் பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்த தட்சன் அவ்விடத்தில் அக்கினியின்வழிச் சிறந்த யாகத்தை நடத்த எண்ணினவனாய்ப் பல முனிவர்களையழைத்து, யாகத்திற்கு வேண்டியதான உயர்ந்த விறகான சமித்துக்களையும், *''ச்ருக்கு - ச்ருவம்'' ஆகிய மரப்பாத்திரங்களையும், மற்றும் யூபஸ்தம்பங்கள், தருப்பைக்கயிறுகள், ஆடுகள் முதலிய யாகபசுக்கள், தீக்கடையும் கோல்கள், கோதுமையாதி நவ தானியங்கள் முதலியவைகளையும் கொண்டுவாருங்கள் என அனுப்பினன். கற்பகவிருட்சம், காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி ஆகியவற்றை அழைத்து யாகத்தைப் பார்க்கவரும் அந்தணர்கள் முதலியோர்க்கு அறுசுவை உணவும் பிறவும் அளியுங்கள் எனக்கூறினன். தனது உறவினர்களான முப்பதாயிரம் முனிவர்களையழைத்து யாகத்திற்கு வருபவர்களுக்கெல்லாம் உணவு மற்றும் அலவையோடு பொருந்தும் பிறபொருட்களனைத்தையும் அவர்கள் விருப்பப்படி அளிப்பீர்களாக எனக்கூறினன். மேலும் அறுபதாயிரம் முனிவர்களையழைத்து இந்த யாகத்தைக் காணவருபவர்கள்

---

*ச்ருக்கு என்பது வேள்வித்தீயில் நெய் அன்னம் முதலிய ஆகுதிகளைப் பெய்வதற்குத் தகுதியான அகப்பை போன்ற பெரிய மரப்பாத்திரம். ச்ருவம் என்பது சிறிய மரப்பாத்திரம் ச்ருவத்தினால் ஆகுதிகளை எடுத்து ச்ருக்கில் முறைப்படி நிரப்பி, வேள்வித்தீயில் இடவேண்டும். அவ்வாறு இடுவதற்கு ஹோமஞ்செய்தல் என்பது பெயர்.

அனைவருக்கும் அவர்கள் விரும்பும் பொருள்களையெல்லாம் ஓயாமல் கொடுப்பீர் என ஏவினான்.

குற்றத்தினையே குணமாக உணரும் தட்சன் பின்னர் தூதுவர்களை அழைத்துச் சிவபெருமானைத் தவிர பிரமவிஷ்ணுவாதி தேவர்களையும், சிறப்பு பொருந்திய முனிவர்களையும், வேதமுணர்ந்த மனிதர்களான மறையோர்களையும் மற்றுமுள்ள பிறரையும் எட்டுத்திக்குகளிலும் வானிலும் பூமியிலும் மற்றுமுள்ள பிற இடங்களிலும் சென்று அழைத்துக்கொண்டு வாருங்கள் எனக் கூறியனுப்பினான். தட்சனின் ஆணைப்படித் தூதுவர்கள் சென்று அழைத்தலும் பிரமன் விஷ்ணுவாதி தேவர்களும் மற்றும் அழைக்கப்பட்ட ரிஷிகள், அசுரர்கள் முதலியவர்களும் யாகசாலைக்கு வந்து சேர்ந்தனர். தட்சன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுத் தக்க ஆசனங்களில் அமரவைத்துத் தான் அவர்கள் நடுவே உட்கார்ந்தான். அப்பொழுது புகழ்பெற்ற பல வேதமறிந்த அந்தணர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். லக்ஷ்மி, ஸரஸ்வதி, இந்திராணி இன்னும் மற்ற தேவர்களின் மனைவியர்கள் மற்றும் ரிஷிகளுடைய பத்தினிகள் யாவரும் மிக அழகுள்ளவர்களாய் அங்கு வந்து தட்சனின் மனைவியான வேதவல்லியுடைய மாளிகைக்குச் சென்று, பல உபசாரங்கள் செய்யப்பெற்றவர்களாகி மிக மகிழ்ச்சியுடன் அவளோடு இருந்தார்கள்.

இந்த சமயத்தில் தேவர்களையும், முனிவர்களையும் பிறரையும் அழைக்கச் சென்ற தூதுவர்கள் திரும்பிவந்து தட்சனை வணங்கி நின்றார்கள். அத்தூதுவர்களைப் பார்த்து, "தூதுவர்களே! உங்களால் எனது ஏவலின்படி அழைக்கப்பட்டவர்களுள் இங்கு வராது தவறினர் உளரோ? சிறிதும் பயப்படாமல் அவர்கள் யாவர் என்பதை என்னிடம் உரையுங்கள்" என்று கேட்டான். தட்சனின் வார்த்தையைக் கேட்ட தூதுவர்கள், "தபஸ்விகளில் சிறந்த அகஸ்தியர், *சனகாதியர்,

---

*சனகாதியர்—பிரமதேவனின் மானஸ புத்திரர்களான சனகர், சனாதரர், சனந்தனர், சனத்குமாரர் ஆகிய நால்வர்.

அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாஸர், பராசரர் ஆகிய இத்தன்மையோர் நீர் செய்யும் யாகத்தினை இகழ்ந்து இங்கே வரமாட்டார்கள் என்று நினைக்கின்றோம்'' என்று கூறினார்கள்.

அகத்தியன் சனகன்முன்னோ ரத்திரி வசிட்டனென்பான்
சகத்துயர் பிருகுமேலாந் ததீசி வெஞ்[1]சாபத்தீயோன்
பகைத்திடு புலத்தைவென்ற பராசரன் [2]இனையபாலார்
மகத்தினை இகழாவீண்டு வருகிலர் போலுமென்றார்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், சாலைசெய்படலம்,
50-ம் பாடல்.

தூதுவர்கள் உரைத்த இவ்வார்த்தைகளைக் கேட்ட தட்சன், ''முனிவர்களுள் இவர்கள் தாமோ சிவபக்தர்கள்'' என்று கோபத்துடன் கூறித் தேவர்களனைவரும் நடுங்குமாறு சிரித்தனன்.

மற்றது புகலலோடு மலரயன் புதல்வன் கேளா
இற்றிது செய்தார் யாரே முனிவரில் இனையர் தாமோ
நெற்றியங் கண்ணினார்க்கு நேயம துடைய ரென்னாச்
செற்றமோ டுயிர்த்து நக்கான் தேவர்கள் யாரும் உட்க.

—கந்தபுராணம், தட்சகாண்டம், சாலைசெய்படலம்,
51-ம் பாடல்.

---

1. வெஞ்சாபத்தீயோன்—மிகுந்த கோபத்துடன் கூடியவராய் அனைவரையும் சபிக்கும் இயல்புடையவரான துருவாஸர்.
2. வடமொழித் தக்ஷ காண்டத்தில் நாரதரும் வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

11. *சிவபிரானே பரப்பிரம்மம் எனத் ததீசி முனிவர் நிரூபித்தல்

அப்பொழுது முன்பொருகாலத்தில் க்ஷுபன் என்ற அரசனுக்காகப் போர்செய்த திருமாலே வென்றவரும், மஹாத்மாவும், பரமேசுவரனிடத்தில் அளவற்ற பக்தியுடையவருமான ததீசி முனிவர் தனது சீடர்கள் குழாம் புடைசூழத் தட்சனின் யாகசாலைக்கு வந்து சேர்ந்தார். அவரது வருகையைப் பார்த்த கொடிய தட்சன் "இவர் சிவனுடைய பக்தரல்லர். இங்கு நிகழும் யாகத்தைக்காண என்னிடத்தில் உள்ள பயத்தினுல் இங்கு வந்துள்ளார்" எனத் தன்னுள் நினைத்து மகிழ்ச்சியுடன் அவரையும் அவரது சீடர்களையும் தக்கபடி வரவேற்று, அவர்கள் உட்காருவதற்குரிய சிறந்த பீடங்களில் இருத்தினுன்.

ஒப்பற்ற தவத்தினையுடைய ததீசி முனிவர் தட்சனை நோக்கி, "ஓ தட்ச ! இங்கு நீ என்ன காரியஞ் செய்கின்றனே ? எதற்காக என்னை அழைத்தனை ? விரைவாக அனைத்தையும் விடாது உரைப்பாயாக" எனக்கேட்டார். உடனே தட்சன் தனது மகளின் திருமணத்தில் சிவபிரான் இடையில் மறைந்தது முதல் நான்முகன் வேள்வியில் நந்திதேவர் இட்டசாபம்

---

*ததீசிமுனிவர் சிவபிரானே பரப்பிரம்மம் என்று கூறிய வடமொழிக் காந்த புராணத்து தக்ஷகாண்டம் பதினொன்று பன்னிரண்டு ஆகிய இவ்விரு அத்தியாயங்களிலும் சில பாகத்தில் உபநிஷத் மந்திரங்களே சுலோகங்களாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு அத்தியாயங்களின் பொருளை நன்கு விளக்குவது தமிழ்க் கந்தபுராணம், தக்ஷகாண்டத்துத் ததீசிப்படலமாகும்.

வரையிலும் விரிவாகக்கூறி நந்திதேவரின் சாபத்துக்கு அஞ்சி எவரும் வேள்விசெய்யாது விடுத்தமையால் தானே சிவ பிரானை விலக்கி ஒரு யாகஞ்செய்யத் துணிந்ததாயும், சிவ னுக்கு ஹவிர்பாகம் கொடுப்பதைத் தடுப்பதே இந்த யாகத் தின் நோக்கமேயன்றி வேறு ஒரு பயனையும் விரும்பிச் செய்யப்பட வில்லையென்றும் விடைகூறினன்.

தட்சனுடைய இவ்வார்த்தையைக் கேட்ட ததீசி முனிவர் கோபத்தினல் கைகொட்டிச் சிரித்து, "ஓ தட்ச! உனது புண்ணியங்கள் யாவும் *பாவங்களாகவே முடிந்து விட்டன வன்றோ?" எனக் கூறிச் சிறிது நேரம் மௌனமாக இருந் தார். இதைக் கேட்ட தட்சன் கோபத்தினல் சிவந்த கண்களை உடையவனுகி "நீர் முக்கண்ணனது அடியவர் போலும்; அதனுலேயே என் சொற்களைக் கேட்டு இகழ்ந்து சிரித்தீர்" என்ருன்.

தட்சன் இவ்வாறுரைத்தலும் தவத்திற் சிறந்த ததீசி முனிவர் அவனை நோக்கி உரைப்பாராயினர்.

"ஓ தட்சனே! அனைத்து நூல்களையும் நன்கு கற்றறிந்த வனுக இருந்தும் நீ மயக்க உணர்வினல் யாகங்களுக்கெல் லாம் அரசரான மஹாதேவனை விலக்கிவிட்டு யாகம் செய்ய விரும்புகிருய். பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களையும் மற்ற எல்லாப் பிராணிகளையும் படைத்துக் காத்து முடிவில் அழித்து உலகனைத்துமாகி ஏகமாய் உயிருக்குயிராய் அனைத் துக்கும் மேலாக விளங்கும் பரமாத்மா எனப் பிரசித்தி பெற்ற மஹாதேவனையா விலக்கி ஒரு யாகஞ் செய்கின்ருய்? தேவர் கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் அவியைக் கொள்பவ னும், அவியின் வடிவானவனும், அக்கினியின் தந்தையும், யாகத்திற்குக் கர்த்தாவும், அதைப் பாதுகாப்பவனும் சங்கரனேயன்றி பிறரெவருமில்லை என்று உபநிடதங்கள் கூறு நிற்கும். இப்பொழுது இந்த சபையில் வேள்விக்குத் தலைவன் யாராவது இருந்தால் நம் முன்னுல் வந்து நிற்கட்டும்.

*"பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவம் ஆகும்" என்ற சிவஞான சித்தியார் பாடல் பகுதி இங்கு கருதற்குரியது.

அத்வரேசம் மஹாதேவம் முக்த்வா தக்ஷ க்ரதும் பவான் ।
கர்துமிச்சதி மோஹேன மஹதா ஸர்வசாஸ்த்ர வித் ॥

பிரம்மவிஷ்ணு முகான்தேவான் பசூன் ஸ்ருஷ்ட்வா
மஹேச்வர: ।
கல்பயித்வா ஸ்திதிம் தேஷாம் ஸம்ஹரிஷ்யதி காலத: ॥

ஸர்வேஷாம் ஜனக: சம்பு: பரமாத்மேதி விச்ருத: ।
ஹவ்யாசோ ஹவிராகாரோ ஜனகோ ஜாதவேதஸ: ॥

கர்தாயக்ஞஸ்ய தேவோ (அ)யம் ரக்ஷகோ (அ)ஸ்ய
ஜகத் ப்ரபு: ।
சிவ ஏவேதி வேதாந்தா நான்யோ (அ)ஸ்தீதி வதந்திஹி ॥

அஸ்தி சேதத்ர யக்ஞேச: ஸமுத்திஷ்டது மத்புர: ।

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத்தியாயம்-11,
ச்லோகம் 16-19½.

மலரயன் முதலேயாக வரம்பிலா உயிரை முன்னம்
தலேயளித் துதவுகின்ற தாதையாய் அளித்து மாற்றி
உலகெலா மாகிஒன்ருய் உயிர்க்குயி ராகி மேலாய்
இலகிய பரனே நீத்தோ யாகமொன் றியற்ற நின்ருய்

புங்கவர் எவர்க்கும்நல்கும் புவிபுகழ் அவிகொள் வானும்
அங்கியின் முதலும்வேள்விக் கதிபனும் அளிக்கின் ருனுஞ்
சங்கரன் தானேவேதஞ் சாற்றுமால் மகத்துக் காதி
இங்கொரு தேவுண்டென்னின் எழுகென உரைத்தி மாதோ.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசிப்படலம்,
பாடல்கள் 18, 19.

விஷ்ணு முதலிய தேவர்களுக்கு எல்லாச்செல்வமும் பரமேசுவரனுலேயே அளிக்கப்படுகிறது. அவரே எல்லாவற்றையும் படைப்பவர். அவரைப் படைப்பவர் யாருமில்லே. சிவனும் மஹேச்வரனும் சம்புவும் நீலகண்டனும் முக்கண்ணனும், அனேத்துப் பிராணிகளின் உள்ளும் அந்தரியாமியாக

இருப்பவரும், பரப்ரம்மமூர்த்தியும், மாயைக்கு உட்படாத வரும் அவரேயாவர். அவர் எல்லாத்தேவர்களிலும் சிறந்த பிராம்மணரன்றே? அப்படிப்பட்ட ஜகத்பிரபுவாகிய அவரே மூவர்களிலும் மேன்மையானவர். மஹாதேவன் *பிராம்மண ரென்றும் திருமால் க்ஷத்திரியர் என்றும் வேதம் முறையிடு கின்றது. நீ மிகுந்த அறிவுமயக்கத்தால் வேதத்தில் கூறப் பட்ட இப்பொருளையறியாமல் யாகங்களுக்கு அதிபரும், யாகங்களுக்குக் கர்த்தாவும், துக்கத்தைப்போக்குகின்றவரும், அழிவற்றவருமான சிவபிரானைவிட்டு இலவம் பூவுக்கு நிக ரானவர்களும் அற்பமான பலனைக்கொடுக்கின்றவர்களுமான மற்றவர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு யாகம்செய்ய வீண் முயற்சிசெய்கின்ருய்.

அநேன தத்தமைச்வர்யம் விஷ்ண்வாதீனும் ஹி நாகினும் ।
ஸர்வ கர்தா மஹாதேவோ நாஸ்ய கர்தாஸ்தி குத்ரசித் ।
சிவோ மஹேச்வர: சம்பு: நீலக்ரீவஸ் த்ரிலோசனம் ॥
அந்தர்யாமி பரம்ப்ரஹ்ம பராத்பரதரச்ச ஸ: ।
ஸர்வேஷ்வேதேஷு தேவேஷு வரீயான் ப்ராம்மணோஹ்ய-
ஸௌ ॥
த்ரிமூர்திஷு பராமூர்த்திரஸ்யைவ ஜகதாம் ப்ரபோ: ।
ப்ராம்மணோயம் மஹாதேவ: க்ஷத்ரியோ விஷ்ணுரித்யபி ॥
ஆம்ஞயஏவ பகவான் அப்யாஸௌ வதத்யமும் ।
இமமர்த்தம் மஹாமோஹாத் அஸ்ம்ருத்வா ஆம்நாய
சோதிதம் ॥
அத்வரேசம் மஹாதேவம் ஹோதாரம் ருத்ரமவ்யயம் ।
முக்த்வான்யான் சல்மலீபுஷ்ப துல்யான் துச்சபலப்ரதான் ॥

—ஸ்காந்தபுராணம், தக்ஷகாண்டம், 11-வது
அத்தியாயம், ச்லோகம் 20-25

---

*'த்வம் தேவேஷு ப்ராஹ்மண:' என்று சாமவேத சதபத ப்ராஹ்மணம் கூறுகிறது. நீர் (சிவபெருமான்) தேவர் களுக்குள்ளே பிராம்மணராக இருக்கின்றீர் என்பது இதன் பொருள்.

மாலயன் முதலோர் யாரும் வரம்பிலித் திருவை எய்த
மேலைநாள் அளித்தோன் தானும் விமலனும் இனையர்க்
கெல்லாம்
மூலமுந் தனக்கு வேருேர் முதலிலா தவனும் எங்கள்
ஆலமர் கடவுள் அன்றி அமரரில் யாவர் அம்மா.

தேவதேவன்மா தேவன் சிறப்புடை ஈசன் எங்கோன்
மூவரின் முதல்வன் [1]ஏகன் முடிவிற்கு முடிவாய் நின்ருேன்
ஆவியுள் ஆவி யானேன் அந்தண ஞதி என்றே
ஏவரை இசைத்த அம்மா எல்லையில் மறைகளெல்லாம்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசிப்படலம்,
பாடல் 20, 21

பிரமன் முதலாகிய தேவர்கள் அனைவரும் பசுக்களே. சிவபெருமானே பதியாவர். பதியாகிய அவரது கட்டளை களையே இவர்கள் அனைவரும் தாங்கி நிற்கின்றனர். இதுவும் வேதவாய்மையேயாம். இவைகளையெல்லாம் மறந்து நீங்காத மாயையிலழுந்தி மதிமயங்கி நின்றனை.

இந்த பசுபதியாகிய பரமேசுவரனின் ஆணைக்குப் பயந்தே காற்று வீசுகிறது, சூரியன் உதயமாகிருன், அக்னி யும் மேல் நோக்கி எரிகிறது. இந்திரன் ஸ்வர்க்கலோகத்

1. ''ஏகன் அனேகன் இறைவனடிவெல்க'' என்ருர் மாணிக்கவாசகர். ஏகன் என்பது சிவபெருமானுடைய திரு நாமங்களில் ஒன்று என்று அதர்வசிர உபநிடதம் கூறுகிறது. ''யத் பரம்ப்ரஹ்ம ஸ ஏக:, ய ஏக: ஸ ருத்ர:, யோ ருத்ர: ஸ ஈசான:, ய ஈசான: ஸ பகவான் மஹேச்வர:'' (அதர்வசிரஸ்,-38). மேலும் எதனுல் மஹேச்வரர் ஏகர் எனப்படுகிருர் என்ற வினவை எழுப்பி, எல்லாப்பிராணிகளையும் தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுகிருன், எப்பொழுதும் ஸ்ருஷ்டிக்கின்ருன், சங்கரிக்கின்ருன், காக்கின்ருன் அதனுல் ஏகன் எனப்படுகின் ருன் என அவ்வுபநிஷதம் விடையும் இறுக்கின்றது.

தைக் காத்து வருகிருன் என்று அறிவாயாக. ஐந்தாவதான இயமனும் எந்தப் பரமேசுவரனிடத்தில் பயத்தால் அவருடைய பக்தர்களைக் கண்டவுடனேயே வெகு தூரத்திற்கு ஓடுகிருனே அந்த காலகாலனும் நித்தியானந்த ஸ்வரூபியான அந்த மஹாதேவனிடத்தில் தேவர்களுள் எவர்தான் பயப்படவில்லை ? அங்ஙனம் பயமற்ற ஒருவரைக் கூறுவாயாக. ஆகையால் ஓ தட்சனே ! நீ நடத்தும் இந்த வேள்வியில் அப்பெருமானுக்கு முதன்மையான ஹவிர்பாகத்தை யளிப்பாயாக.

*பீஷாஸ்மாத் ஸர்வதா வாயு: வாத்யுதேதி ச பாஸ்கர:
ஊர்த்வம் ஜ்வலதி வன்ஹிச்ச நாகம் ரக்ஷதிவ்ருத்ரஹா ।
பஞ்சமஸ்ஸோ(அ)பி ம்ருத்யுஸ்தத்பக்தஸ்யாசு விதூரத: ॥
பீஷாஸ்மாத்யாதி தேவேஷு கோ நபிப்யதி தம் வத ।
காலகாலஸ்ய தேவஸ்ய ஸர்வதா சித்ஸ்வரூபிண: ॥
தத் தஸ்மை பவதா தக்ஷ தாதவ்யம் ப்ரதமம் ஹவி: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 11-ம் அத்தியாயம், ச்லோகம், 29-31.

[1]அந்தணர்களுக்கு முதலாக உள்ளவர் சிவபெருமான். பிறருக்கு அரி, அயன், இந்திரன் என்று வேதங்கள்

---

*இந்த சுலோகம் தைத்திரிய உபநிஷத் ஆனந்தவல்லியில் ப்ரஹ்மானந்த மீமாம்ஸா என்ற பகுதியில் உள்ள பின்வரும் மந்திரத்தை ஆதாரமாகக் கொண்டது.

“பீஷாஸ்மாத் வாத: பவதே । பீஷோதேதி ஸூர்ய:
பீஷாஸ்மாத் அக்னிச்ச இந்த்ரச்ச । ம்ருத்யுர் தாவதி
பஞ்சம இதி ।

[1]“விப்ராணும் தைவதம் சம்பு: க்ஷத்ரியாணும் து மாதவ:” என்று மனுஸ்ம்ருதியும் கூறும். பிராமணர்களுக்குத் தெய்வம் சிவபெருமான். க்ஷத்திரியர்களுக்குத் தெய்வம் திருமால். எனவே சிவபிரானை வழிபடாத பிராமணர் பிராமணர்களாக மாட்டார்கள் என்பது கருத்து.

உரைத்தன. பிராமணர்கள் தமது முழு முதற்கடவுளை விடுத்து முறைமாறி நடத்தல் பெற்ற தந்தையை விலக்கி வேறொருவனைத் தந்தையாகத் தேடுவானது தன்மையேயாகும்.

அந்தணர்க் காதி ஈசன் ஏனையோர்க் கரியே வேதா
இந்திரன் என்று வேதம் இயம்பிய மறையோர் தங்கண்
முந்தையின் முதலை நீத்து முறையகன்று ஒழுகல் பெற்ற
தந்தையை விலக்கி வேறு தேடுவான் தன்மை யன்றே.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசிப்படலம், 23

ஆதலால் அனைவருக்கும் மேலான ஆதியாம் சிவபெருமானை இகழுதல் அறிவின்மையேயாகுமன்றிப் பெருமையாகாது. துன்பத்தை வேண்டி எவரேனும் தவஞ்செய்வரோ ? அத்தன்மையோன் நீயேயாதலின் வேத ஒழுக்கத்துக்கு மாருக ஒரு யாகஞ்செய்யத் துணிந்தனை. வேதங் கூறும் உண்மையை விடுத்து நீ யாகஞ்செய்யினும் அது நிறைவேருது, அதுவுமன்றி நீ வேத விரோதமாக நடப்பாயாயின் இறைவனது தண்டிக்கும் சக்தியாகிய ஆணையைக் காண்பாய். சிவபெருமானுக்கஞ்சாத வன்மையாளன் ஒருவன் உளனேல் அவன் நிச்சயம் இறந்துபடுவான். எனவே ஆதி அந்தமற்ற பரம்பொருளான சிவபெருமானுக்கு அவியை அளிக்காது வேள்வியை நடத்த நீ முயல்வது பெருங்குற்றம்'' என்று இவ்வாருன நன்மொழிகளை ததீசி முனிவர் தட்சனுக்குக் கூறினுர்.

தட்சன், ''முனிவரே ! வேள்வியில் சிவனுக்கு அளிக்கும் பாகத்தைத் திருமாலுக்கு அளிப்பேன்'' என்று கூறினுன். இதைக்கேட்ட ததீசி, ஓ தட்ச ! குற்றமான மொழிகளை உரைத்தனை. அனைவரும் புகழநின்ற பெரியோரை இழித்துச் சிறியரை உயர்ச்சிசெய்தல் உய்யுந் திறமன்று. உங்கள் அனைவர் உயிருக்கும் இது முடிவான காலம் என்று அறிந்து கொள்வாயாக. எல்லோருக்கும் பெரியவரும், மஹாதேவரும்,

ஸர்வைச்வர்ய ஸம்பன்னரும், சந்திரகலையைத் தரித்தவரும், யாகத்திற்கு அரசருமான மஹேச்வரர் வேதத்திலும் உலகத்திலும் பிரஸித்தமானவராய் விளங்குகிருர். எனவே யாகங்களுக்குப் பிரபுவான பரமசிவனுக்கு முதல் பூஜைசெய்வாயாக'' என்று அறிவுறுத்திஞர்.

அழிவை எதிர்நோக்கி நின்ற தட்சனும் முனிவரின் அறிவுரையை ஏற்பனே? எனவே, அவன் ''இந்த யாகத்தில் *ஈசானர் என்ற திக்பாலகரையும், ஏகாதசருத்திரர்கள் எனப் பெயர்பெற்ற பதினெருவரையும் பூஜித்து அவர்களுக்கே அவியையளித்து இந்த யாகத்தை முடிப்பேன்'' எனச்செருக்குடன் கூறினன்.

ததீசி கூறினர்:—''ஓ தட்சனே! நீ குறிப்பிட்ட உருத்திரர்கள் எல்லாம் மஹாதேவனுக்கு எப்படிச் சமமாக ஆவார்கள்? உலகத்தில் எந்த மஹாத்மாக்கள் பரம காரணராகிய சிவபிரானைத் தியானஞ் செய்கிருர்களோ அவர்கள் ஸாரூப்ய பதவியையடைந்து உருத்திரர்கள் என்று இறைவரது பெயரையும் பெற்று பிரஸித்தியுடன் விளங்குகிருர்கள். ஆனல் ஸாரூப்யத்தை அடைந்ததால் மட்டிலும் யாகத்தில் பரமேசுவரனைப் போலப் பூஜிக்கத் தக்கவர்களாக ஆகமாட்டார்கள். பரமேச்வரனுக்கு உரிய ஹவிர்பாகத்தை வாங்கவோ சாப்பிடவோ தகுதியற்றவர்கள். ஆனல் இவர்கள் பிரம விஷ்ணுக்களை விட மேம்பட்டவர்கள் என்பதில் ஐயமில்லை. சிவபெருமான் கருணையினல் தனது உருவங்கொண்ட ஈசானரை ஒரு திக்குக்கு அதிபதியாக ஏற்படுத்தியுள்ளார். இந்த உருத்திரர்கள் இந்திரன் முதலிய தேவர்களையொப்ப

---

*ஈசானர் - சிவபிரானது அருளால் அவரது உருவத்தையும், பெயரையும் பெற்று வடகிழக்குத் திசைக்குத் தலைவராக இருப்பவர். இவரால் வடகிழக்குத்திசை ஈசான்யம் என்ற பெயரைப்பெற்றது.

இங்கு வருவதற்குத் தகுந்தவர்கள் அல்லர். எம்பெருமா னிடத்து நீ அன்பற்றவனுயிருக்கும் தன்மையை நினைந்தில ராய் வந்திருக்கலாம். எனவே உருத்திரர்களுக்கு ஹவிர் பாகம் கொடுப்பதைவிட்டு யாகத்திற்குத் தலைவரும், மிகச் சிறந்தவருமான மஹாதேவரையே பூஜிக்கக் கடவாய். அந்த ஈச்வரனே எல்லாவிதமான விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வல்லவர்.

தஸ்மாத் தக்ஷமஹாதேவம் யஜ யக்ஞேச்வரம் பரம் ।
ஸ ஏவ பகவானீச: ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 12-ம் அத்தியாயம் 14—15.

ததீசி முனிவருடைய இவ்வார்த்தைகளைக் கேட்ட தட்சன் மறுபடியும் கூறினன். "ஓ முனிவரே ! *'ஆவோராஜாநம்' எனத்தொடங்கும் வேத மந்திரம் உருத்திரனுக்கு ஹவிர் பாகம் கொடுக்கவேண்டும் என்று தானே கூறுகிறது ? ஆகை யால் எனது யாகத்தில் எனது விருப்பப்படி எந்த உருத்திரனை யாவது பூஜிப்பேன். உருத்திரர்களுக்குள் ஏற்றத்தாழ்வு இருப்பதாக நான் நினைக்கவில்லை."

இங்ஙனம் தட்சன் பிடிவாதமாகக் கூறத் தத்துவார்த் தங்களை நன்கு அறிந்தவரும் தவஞ்செய்பவர்களில் சிறந்த வருமான ததீசி முனிவர் பின்வருமாறு கூறலானார்.

"ஓ தட்சனே ! உருத்திரன் என்ற பெயரானது யாகத் திலும், அப்படியே முருகனிடத்திலும், எல்லோருக்கும் துன்பத் தைச் செய்யும் ஜ்வரத்திலும், ஸாருப்யபதவியை அடைந் திருக்கும் காலாக்னிருத்திரர், கூஷ்மாண்டருத்திரர், ஹாட கேச்வரர், மற்றும் பதினேரு கோடியெனப்படும் உருத்திர

---

*'ஆவோராஜாநம்' என்ற மந்திரத்தையும் அதன் பொருளையும் இந்நூலின் பிற்சேர்க்கையில் காண்க.

க்ணங்கள் முதலியோருக்கும் பொருந்தியுள்ளது. மேலும் அக்கினிதேவனுக்கும் உருத்திரன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. ஆனல் இப்பெயர் தனக்குப் பிரியமான பக்தர்களை அவர்களுக்கு ஏற்படும் துக்கத்தினின்றும் தயவுடன் காப்பதால் பரப்பிரம்மமும், ஸர்வேசுவரரும், மஹாதேவரும், முக்கண்ணரும், நீலகண்டரும், ஸத்யானந்தப் பாற்கடலும், மிகப் புனிதமானவருமான அந்தச் சிவபிரானிடத்தில் தான் காரணப்பெயராகவும் இடுகுறிப்பெயராகவும் முழுமையாகப் பொருந்தியிருக்கிறது.

ருஜம் த்ராவயதீஷ்டானும் பக்தானும் தயயாஹி அஸௌ ।
வர்ததே யோகரூடிப்யாம் தந்நாமேதம் ஸுபாவனே ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 12-ம் அத்தியாயம், 24,

இன்னலங் கடலுட் பட்டோர் யாரையும் எடுக்கும் நீரால்
உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் எனும்பேர் பெற்ருன்
அன்னவன் தரவந்தோர்க்கும் அடியடைந் தோர்க்கும் அன்னுன்
தன்னுரு வெய்தி ஞேர்க்குஞ் சார்ந்ததால் அவன் தனிப்பேர்

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசிப்படலம், 46.

துன்பக்கடலுள் அழுந்தினவர்கள் அனைவரையும் [1]அத்துன்பத்தினின்றும் எடுக்கும் தன்மையால் எவராலும் நினைத்தற்கரிய பரம மூர்த்தியாகிய சிவபிரான் உருத்திரன் என்ற பெயரைப் பெற்ருர். அப்பெருமானல் படைக்கப்பட்டவர்களுக்கும், அவரது திருவடிகளைச் சரண்புகுந்தவர்களுக்கும், அவரது உருவத்தைப் பெற்றவர்களுக்கும் அவரது ஒப்பற்ற திருநாமமாகிய உருத்திரன் என்ற பெயர் சென்று பொருந்தியது.

---

1. "இடும்பையது ஒட்டலின் உருத்திரன்" என்பது சிவஞான முனிவர் வாக்கு.

வேதங்களுள் உருத்திரன் என்னும் பெயரை வைத்துப் பிறரைக் கூறியிருப்பது சிவபெருமானைச் சாராது. அதேபோல அந்த ஆதி நாயகனை உருத்திரன் என்ற பெயரால் உரைத்ததும் மற்றவர்களைச் சாராது. *அறிஞர்கள் இந்த பேதத்தினை உணர்வார்கள். எனவே, ஓ தட்சனே! உருத்திரன் என்ற பெயரால் இறைவரைக் கூறியுள்ள இடங்களை ஆராய்ந்து அறிந்து அவரது தலைமையையறிந்து, உனது விஞ்ஞான மதி மயக்கத்தினை விடுத்து, மற்ற எல்லாத் தேவர்களை விலக்கி வேள்விகளுக்கு அரசரும் மஹேச்வரருமான பரமேசுவரனையே நீ ஹவிர்பாகத்தினால் பூஜிக்கவேண்டும்'' என்று கூறினார்.

தட்சன் கூறினான்:—''ஓ முனிவரே! படைத்தலையும் காத்தலையும் செய்யும் நான்முகனும் திருமாலும் இருக்க அழித்தலைச் செய்யும் உருத்திரனே முதற்கடவுள் என்று நீர் கூறியது எங்ஙனம் பொருந்தும்?''

ததீசி விடை கூறினார்:—''ஓ தட்சனே! உருத்திரன் எவ்வாறு முழு முதற் கடவுளாவர் என்பதை நீ அறியுமாறு உரைக்கின்றேன், புத்திமோகத்தை விட்டு நல்ல புத்தியுடன் கேட்பாயாக, சிவபெருமான் ஞானமூர்த்தியும் [1]ஸத்யானந்த ஸ்வரூபியுமாவார் என்று வேதம் கூறுகிறது. அப்பெருமானுக்கு என்றும் அழிவற்றதான அவரது சித்சக்தியைத் தவிர வேறு சரீரமில்லை, அவரே தந்தையாக இருந்து நான்முகன் திருமால் முதலியவர்களைப் படைத்து அவர்கட்கு முறையே படைத்தல் காத்தல் ஆகிய தொழில்களை ஏற்படுத்துகிறார்,

---

*தட்சன் மூடனுகையால் இந்த பேதத்தினை அறியவில்லை என்பது இதனால் பெறப்படுகிறது.

1. 'ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம' என்பது தைத்ரிய உபநிஷத் வாக்கு. இதே உபநிஷத் 'ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' (ஆனந்தமே பிரம்மம் என்று தெரிந்து கொண்டான்) என்றும் கூறுகிறது.

அனைத்துப் பிரபஞ்சமும் ஒடுங்கும் ஊழிக்காலத்தில் அவர்களால்கூட அப்பெருமான் அறியப்படுவதில்லை. காலமாகிய இயந்திரத்தில் அகப்பட்ட இந்த எல்லோரையும் அவர் எப்பொழுதும் ஆட்டிவைக்கிறார். பலகாலம் சென்றவுடன் பிரம்மன், திருமால் முதலிய எல்லாத் தேவர்களையும் அவர் அழித்துப் பிறகு விளையாட்டாக எல்லோரையும் மீண்டும் படைத்து அவர்களுக்குத் தொழிலையும் ஏற்படுத்தி ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்களை அவர்கட்குக் கற்பித்து அவர்களை விபூதி ருத்திராக்ஷங்களைத் தரிக்கும்படி செய்கிறார். ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் ஆகிய ஐந்து பிரம்ம ஸ்வரூபத்தைக் கொண்ட ஸ்ரீபஞ்சாக்ஷர மஹாமந்திரத்தையும் உபதேசித்து என்றும் அழிவற்றவரான அந்த மஹாதேவன் அவர்களைப் பாதுகாத்து வருகிறார். அவர்கள் புத்தி மோகம் அடைந்தால் அவர்களை ஒறுத்து நன்னெறியில் செலுத்துகிறார். ஈச்வரனான பரமசிவனைத் தவிர வேறுயாராலும் ஸம்ஹாரத் தொழில் செய்ய முடியாதாகையால் ஜகத்குருவான பரமேசுவரன் தானே உருத்திரனாய் நின்று ஸம்ஹரித்தலையும் செய்கின்றார். ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களும் பிரபுவும், பரமேசுவரனும், ஸத்யஞான ஆனந்த ஸ்வரூபியுமாகிய மஹாதேவனாலேயே செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்வாயாக.

மேலும் இன்னொன்று கூறுகிறேன், கவனமாகக்கேட்பாயாக. முன்னொருசமயம் சில முனிவர்கள் மஹாமேரு மலைக்குச் சென்று அங்கு பிரம்மதேவனைக்கண்டு பலதோத்திரங்களால் துதித்துப் பணிவுடன் கேட்டார்கள். "ஓ பிரம்மதேவனே ! ஸந்தேகத்தால் சூழப்பட்ட மனதுடன் கூடிய எங்களுக்குப் பரப்பிரம்மமும் பரஞ்சோதியுமான தெய்வம் யார் என்பதை ஐயந்திரிபறக் கூறவேண்டும்". இவ்வார்த்தைகளைக் கேட்ட நான்முகன் தனது இருதயத்தாமரையில் வீற்றிருப்பவரும், நீலகண்டரும், சந்திரசேகரரும், சாந்தமூர்த்தியும்,

சச்சிதானந்த மூர்த்தியும், ஒரு பக்கத்தில் கருப்பும் மற்ருெரு பக்கத்தில் சிவப்பு நிறத்தைக்கொண்டவரும், மானஸிக ஸத்ய ஸ்வரூபியும், வாசிக ஸத்யஸ்வரூபியும், இப்பிரபஞ்சத்தைக் காட்டிலும் வேருனவருமான பரமேசுவரனைச் சிறிது நேரம் தியானித்தார். பின்னர் ஆனந்தக்கண்ணீர்த் திவலைகளால் நனைந்தவராகி, மகிழ்ச்சிப் பெருக்கிஞல் தழதழத்த சொற்களை யுடையவருமாகிய பிரம்மதேவன் கூறலானுர்.

"ஓ முனிவர்களே, நான் கூறுவதைக் கேளுங்கள். எல்லா வித்தைகளுக்கும் ஈச்வரனும், எல்லா உலகங்களுக்கும் ஈசனும், பிரபுவும், பிரம்மதேவனுகிய எனக்கும் தலைவனும், தன்னைச் சரண்புகும் அடியவர்களுக்கு இன்பத்தையளிப் பவரும், வேதங்களுக்கெல்லாம் தலைவரும், அழிவற்றவரும், பரஞ்சோதியும், பிரணவத்தையே தனது இருப்பிடமாகக் கொண்டவரும், மஹானுமான சங்கரன்தான் பரப்பிரம்மே யன்றி வேறு எவருமல்லர் எனக்கைகளை உயரத்தூக்கிக் கொண்டு ஸத்யமாகச் சொல்லுகிறேன். இது ஸத்யம்! இது சத்யம்!! எங்கும் நிறைந்தவரும், வாய்மையின் வடிவான வரும், பரம்பொருளும், ஒருபக்கத்தில் கறுப்புநிறமும் மற்ருெரு பக்கத்தில் சிவப்பு நிறமுமுடைய புருஷரும், மேல் நோக்கி எழுந்து பிரகாசிக்கும் ரேதஸ்ஸை உடையவரும், உலகத்தின் உருவாய் இருப்பவருமான அவரையே வேதங்கள் நமஸ் கரித்து மிக்க அச்சத்துடன் முழுமுதற்கடவுள் என்று போற்று கின்றன. ஆகையால் அவரையே அனைவர்க்கும் மேம்பட்ட ஈசுவரர் என்று நான் நூறுமுறை கூறுகின்றேன். அவருக்கு நிகரானவரோ மேற்பட்டவரோ ஒருவரும் கிடையாது. அவர் பெரியவற்றுக்கெல்லாம் பெரியவர். சிறிய வஸ்துக் களுக்கெல்லாம் சிறியவர். மரம்போல ஆகாயத்தில் ஓங்கி விளங்குகின்ருர். அனைவருக்கும் ஆத்மாவாக இருக்கும் அப் பெருமானுல் இவ்வுலகம் முழுமையும் நிரம்பியிருக்கின்றது. வேதங்கள் மனதினுல் கூட அவரையடையமாட்டாமல் திரும்பிவந்து விடுகின்றன. இவருடைய ஆனந்தமயமான வடிவத்தை எவன் அறிவானே அவனுக்கு ஓரிடத்திலும் பயம்

என்பதே ஏற்படாது. பிரம்மாவான என்னாலும், விஷ்ணுவாலும் கூட இந்தப் பரமசிவன் அறியப்படவில்லை. இந்தப் பெருமானே பசுபதி ஆவர். பிரம்மதேவனாகிய நான் உட்பட எல்லோரும் பசுக்களே. கருணாமூர்த்தியும், நிகரற்றவரும், அடியார்களுக்கு அபயமளிப்பவரும், எல்லாவிதமான ஐச்வர்யங்களுடனும் கூடியிருப்பவரும், அனைவருடைய இதயமென்னும் ஆகாயத்தில் விளங்குபவரும், சம்பு எனப்படுபவருமான அவரே பரம்பொருளாவர். மேலும் மேலும் சொல்ல வேண்டுவது யாது உளது? அவரே பரஞ்சோதியும் பரப்பிரம்மமும் ஆவார்''.

*தேஷாம் தத்வசனம் ச்ருத்வா ப்ரஹ்மா த்யாத்வா க்ஷணம்ததா ।
ஹ்ருத்புண்டரீக மத்யஸ்தம் நீலக்ரீவம் த்ரிலோசனம் ॥

சந்த்ரார்த்தபூஷணம் ஸௌம்யம் ஸச்சிதானந்த விக்ரஹம் ।
க்ருஷ்ணபிங்களமீசானம் ருதம் ஸத்யம் பராத்பரம் ॥

ஆனந்தாச்ருகணான் ஸிஞ்சன் ஹர்ஷகத்கதவாகயம் ।
ஈசானஸ்ஸர்வ வித்யாநாம் ஈச்வரோ ஜகதாம் ப்ரபு: ।

ப்ரஹ்மணோதிபதிச்சம்பு: ப்ரஹ்மாதிபதிரவ்யய: ।
ஸதாசிவ: பரஞ்ஜ்யோதி: ஓங்காரநிலயோ மஹான் ॥

ஸ ஏவ சங்கரச் சம்பு: பரம்ப்ரஹ்ம நசேதர: ।
ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்ருத்ய கரமுச்யதே ॥

ருதம்ஸத்யம் ப்ரஹ்மபரம் புமாம்ஸம் க்ருஷ்ணபிங்களம் ।
ஊர்த்வஜ்வலனரேதஸ்கம் விச்வாகாரம் மஹேச்வரம் ॥

நமஸ்க்ருத்வைவ தே வேதா வதந்தீசம் மஹா பயாத் ।
ஸ ஏவ தஸ்மாத் ஸர்வேச: சதவாரம் மயோச்யதே ॥

தத்ஸமோ நாஸ்தி லோகேஷு நவரோ நாபர: க்வசித் ।
ஸர்வஜ்யாயானணீயாம்ச்ச ஸ்தப்தோ வ்ருக்ஷ இவாசல: ॥

திவி திஷ்டதிஸர்வாத்மா தேனபூர்ணமிதம் ஜகத் ।
யஸ்மாத் வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ ॥

---

*தைத்திரியம்-மஹாநாராயண உபநிஷத் மந்திரங்களே இப்பகுதியில் சுலோகங்களாக அமைந்துள்ளன.

ஆனந்தமஸ்யயோ வேத்தி நபயம் தஸ்யகுத்ரசித் ।
அத்யாபி ப்ரஹ்மவிஷ்ணுப்யாம் நத்ருஷ்டோ(அ)யம் மஹேச்வர: ॥
[1]பசூனும் பதிரீசோயம் ப்ரம்ஹாத்யா பசவஸ்ம்ருதா: ।
கருணமூர்த்திரதுலோ பக்தானும் அபயங்கர: ॥
*ஸர்வைச்வர்யேண ஸம்பன்ன: சம்புராகாச மத்யக: ।
பஹுனுகிம் பரம்ப்ரஹ்ம ஸ ஏவ ரிஷிசத்தமா: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத்தியாயம் 12,
ச்லோகம் 40-51.

இவ்வாருன பிரம்மதேவனின் வார்த்தைகளைக்கேட்ட முனிவர்கள் தெளிவு பெற்றவர்களாகி மஹாதேவனே பரம்பொருள் என்ற நிச்சயமான புத்தியுடன் பிரம்மதேவனை வணங்கி விடைபெற்று விபூதி தரித்து, ருத்திராக்ஷமாலைகளை ஆபரணங்களாக அணிந்தவர்களாகியும் பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை ஜபிப்பவர்களாகியும் வாழ்ந்து சிவபக்தர்களான அவர்கள் அனைவரும் பிறப்பிறப்பில்லாத பேரின்பத்தைப் பெற்ருர்கள். ஆதலால் தட்சனே! ஸகலமான கல்யாண குணங்களும் நிரம்பியவரான அந்த ஜகதீசனே பரமாத்மா அவரே பரப்பிரம்மமும் பரஞ்சோதியும் ஆவார். அந்த மஹாதேவனைத்தவிர பார்ப்பவரோ கேட்பவரோ பரம்பொருளோ வேறு இல்லை அந்த பகவானே பதி, மற்றவர்யாவரும் பசுக்களே என்று முன்பு பிரம்மதேவனுல் வேதத்தை ஆதாரமாகக்கொண்டு நிச்சயிக்கப்பட்டது.

தட்சனே! மேலும் கூறுவேன், கேட்பாயாக. நீயும் முன்பு நான்முகன் நவின்ற நல்லுபதேசத்தைக் கேட்டு அந்தப்

---

1. பசூனும் பதயே நம: (ஸ்ரீருத்ரம்), பசுபதயே நமோநம: (மஹா நாராயண உபநிஷத்). பசுபதி என்பதற்கு ஜாபால உபநிஷத் கூறும் விளக்கத்தைப் பிற்சேர்க்கையிற் காண்க.

*இந்த வரி அதர்வசிகை என்னும் உபநிஷத் மந்திரத்தைத் தழுவியதாகும்.

பிரபுவான பரமேசுவரனிடத்தில் பக்தி கொண்டு கடினமான தவத்தைச் செய்து அவரது திருவருளால் இவ்வாருன சிறந்த ஐச்வர்யத்தை அடைந்தாய். பிரம்மதேவனுக்குப் படைத்தல் தொழில் கிடைத்ததும், திருமாலுக்கு அசுரர்களே அழிக்கும் ஆற்றல் கிடைத்ததும் இந்திரனுக்கு, ஸ்வர்க்கலோகத்தை ஆளும்பேறு கிடைத்ததும் எல்லாம் சிவபூஜையின் பயனே யல்லவா ?

ப்ரஹ்மணஸ் ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் விஷ்ணோர் தானவ
மர்த்தனம் ।
ஸ்வர்காதிபத்யம் இந்த்ரஸ்ய சிவபூஜாபலம் நநு ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 12-ம் அத்தியாயம், 59.

உனக்கு மரண காலம் நெருங்கி விட்டபடியால் தான் இத்தகைய அறிவு மயக்கத்தை அடைந்திருக்கின்ருய். அவரது மாயையை பிரம்மாவோ திருமாலோ வேறுயாருமோ கடக்க முடியாது. [1] ப்ரக்ருதி என்பது மாயை எனப்படும். அந்தமாயையை அடக்கி வைத்திருப்பவர் மஹேசுவரன். அந்த கொடிய மாயை சிவபக்தர்களேப் பாதிப்பதில்லே. அந்த மாயையால் தான் இப்பொழுது சிவபிரானேச் சிறிதும் நினே யாது இருக்கிருய். இந்த பிரம்ம விஷ்ணு முதலிய தேவர்கள் அனேவரும் மஹா மோஹத்துக்கு வசமானவர்களாகி ஹவிர் பாகத்துக்கு ஆசைகொண்டு உனது யாகத்துக்கு வந்திருக் கிருர்கள். வேத ஒழுக்கத்துக்கு மாருன காரியங்களேச் செய்ய முனேந்துள்ள தட்சனே! நீ சிறந்த நன்மையை உண்மை யாகவே விரும்புவாயாகில் யாகத்திற்குத் தலேவனுன அந்த மஹாதேவனே ஹவிஸ்ஸுக்களால் இப்பொழுது திருப்தி செய்து வைப்பாயாக. அந்த மஹாதேவனே ஸகல பிரபஞ்ச சொரூபியான பரப்பிரம்மம். அவரையன்றியுள்ள மற்றவர்

1. ''மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயினம் து மஹேச் வரம்'' எனச் சுவேதாசுவதர உபநிஷத் கூறும்.

அனைவரும் உயிர்த்தொகையினரேயாவர். இதனை யான் அச்சிவ பரஞ்சுடரின்மீதுள்ள அன்பினால் உரைத்தேனல்லேன். உண்மையாகவே உனக்கு நன்மையை விரும்பியே உரைத்தேன். நான் மட்டும் அல்ல; வேதங்களும் இவ்வாறே உரையாநிற்கும்'' என்றினையவற்றைக் கூறிவிட்டு அச்சிறந்த ததீசி முனிவர் மௌனமாய் அமர்ந்திருந்தார்.

மாயயா மோஹிதோ நூனம் த்வமாஸன்ன ம்ருதிர்யத: ।
ப்ரஹ்மணோ விஷ்ணுனோவாபி தஸ்ய மாயா துரத்யயா ॥
மாயாம்து ப்ரக்ருதிம் வித்யாத் மாயினம் து மஹேச்வரம் ।
நபாதயே தான் ஸாகோரா மஹாத்மானச் சிவப்ரியான் ॥
அத ஏவ பவானத்ய கிஞ்சித்வா ந ஸ்மரத்யஹோ ।
மஹா மோஹவசாதேதே ப்ரஹ்மவிஷ்ண்வாதயஸ்ஸுரா: ॥
ஆசதே தே(அ)ந்திகம் ப்ராப்ய ஸர்வே(அ)பிஹவிராசயா ।
பஹூனுகிம் துராசார யதீச்சஸி பரம் ஹிதம் ॥
அத்வரேசம் மஹாதேவம் ஹவிர்பி: ப்ரீணயாதுனு ।
ஸர்வாத்மா ஸ மஹாதேவ: பரம்ப்ரஹ்ம நசேதர: ॥
ஹிதமிச்சன்னஹம் தக்ஷ தவேத்தமவதம் த்ருவம் ।
ஏவமுக்த்வா ரிஷிவரோ மௌனமாச்ரித்ய திஷ்டதி ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 12-ம் அத்தியாயம், ச்லோகம் 60-65.

ஆதலால் எங்கள் ஈசனே பரம்பொருள் அல்லா
ஏதிலார் எலாம் உயிர்த்தொகை ஆகுமால் இதனைக்
காதலால் உரைத்தே னன்று வாய்மையே காண்டி
வேதமே முதலாகிய கலையெலாம் விளம்பும்

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசிப்படலம், 63.

சிவம்.

12. தட்சனின் வினுக்களும் ததீசியின் விடைகளும்

இவ்வாறு சிவபிரானே பரம்பொருள் என்று ததீசி முனிவர் வாயிலாகக் கேட்ட தட்சன் நகைத்தான். அவரை நோக்கிப் பின்வருமாறு வினவினன்.

"ஓ முனிவரே! நீர் பரனென்று கூறும் மேலோன் எலும்பையும் தலைமாலையையும் அணியுமோ? தேவர்களின் வெந்த சாம்பலையும் பூசுமோ? உயிரற்ற உடலைச் சுமந்து திரியுமோ? இழிந்த தலைமயிரைப் பூணூலாகத் தரிக்குமோ? பன்றியின் கொம்பினையும் ஆமையின் ஓட்டையும் தரிக்குமோ? உயிர்களையெல்லாம் ஸம்ஹாரம் செய்யுமோ? புலியினைக் கிழித்து அதன் தோலை உடையாகவுடுக்குமோ? யானையின் தோலை உரித்து அதனைத் தனது தோள்களில் போர்த்திக் கொள்ளுமோ? தீ, மழுவாயுதம், மான், முத்தலைச் சூலம் இவற்றைக் கையில் ஏந்துமோ? பிச்சையெடுக்குமோ? நிருத்தமுஞ் செய்யுமோ? பூதகணங்களைப் படையெனக் கொண்டு அலையுமோ? விஷத்தினைக் கக்குகின்ற கொடிய பாம்புகளை அணிகலன்களாக அணிந்து கொள்ளுமோ? வெண்டலையை தலையில் தரித்துக் கொள்ளுமோ? திக்குகளையே ஆடையாகக் கொண்டு திகம்பரனுகுமோ? வேற்றுருவங் கொள்ளுமோ? எருதின்மீது ஏறிச்செல்லுமோ? கொடிய விஷத்தை அருந்துமோ? சுடுகாட்டில் நடனமாடுமோ? தலையில் ஒரு பெண்ணைச் சுமந்துகொண்டு இடப்பாகத்தில் மற்ெருரு பெண்ணையும் அமர்த்திக்கொள்ளுமோ? குழந்தையைப் பெறுமோ? கொடியதான தாமதகுணம் படைக்குமோ?"

இவ்வாருக இருபத்திரண்டு வினுக்களை விடுத்து "ஆதலால் உங்கள் கடவுள் ஒரு குணமும் அற்றவன்.

அவனுக்கு நான்செய்யும் இந்த வேள்வியில் ஹவிர்பாகம் கொடுக்கமாட்டேன்'' என்று தட்சன் கூறினன்.

இந்த வண்ணமத் ததீசிமா முனிவரன் இயம்பக்
கந்த மாமலர்க் கடவுள்சேய் நகைசெய்து கானிற்
சிந்து மென்பொடு சிரத்தொகை அணியுமோ தேவர்
வெந்த சாம்பரும் பூசுமோ பரனெனும் மேலோன்.

கழிந்த தீயுடல் ஏந்தியே திரியுமோ கானில்
இழிந்த கேசமுந் தரிக்குமோ ஏனத்தின் எயிறு
மொழிந்த கூருமத் தோடுமேற் கொள்ளுமோ உலகம்
அழிந்தி டும்படி உயிர்களை முடிக்குமோ அமலன்.

புலியின் ஈருரி உடுக்குமோ தந்தியின் புன்றோல்
வலிய தன்புயம் போர்க்குமோ செந்தழல் மழுமான்
இலைகொள் முத்தலை வேற்படை ஏந்துமோ எங்கும்
பலியு மேற்குமோ நிருத்தமுஞ் செய்யுமோ பகவன்.

மிக்க சாரதர் படையெனத் திரியுமோ விடமே
கக்கும் வெம்பணி பூணுமோ வெண்டலை கலமாச்
செக்கர் மாமுடி தரிக்குமோ அம்பரந் திசையா
நக்க ஞகுமோ வேற்றுருக் கொள்ளுமோ நாதன்.

விடையும் ஏறுமோ ஆலமுங்கொள்ளுமோ வீந்தோர்
சுடலை தன்னினும் ஆடுமோ ஒருத்தியைச் சுமந்தோர்
மடம கட்கிடங் கொடுக்குமோ மகவையும் பெறுமோ
கடிய தோர்குணம் படைக்குமோ பரமெனுங் கடவுள்.

ஆதலால் உங்கள் ஈசனேர் குணமிலன் அவனுக்
கீதலின்றியாம் புரிகின்ற மகத்தவி எனலும்
நாத னைக்கொலோ பழிக்குவன் இவனென நகையாக்
கோதின் மாதவ முனிவரன் அழலெனக் கொதித்தான்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசி
உத்தரப்படலம், 1-6,

தட்சனுடைய புன்மொழிகளைச் செவிமடுத்தார் ததீசி முனிவர். நமது பெருமானையோ இவன் இச்சபையில் பழிப்பது என்று சிறந்த தவத்தினையுடைய அவர் மிகுந்த சினமடைந்தார். சிவபெருமானுடைய உண்மையை ஒரு சிறிதும் உணராத இவனிடம் பேசுதல் தகுதியன்று. எனினும் இவனது வினாக்களுக்கு விடைகொடுக்க வேண்டுமென்று எனது உள்ளம் தூண்டுகின்றது. ஆதலின் இவனுக்கு மேலும் சில உண்மைகளை உணர்த்துவேன் என்று திருவுள்ளத்தில் எண்ணி அவனது வினாக்களுக்கு விடையளிக்கலானார்.

"புத்தியற்ற கயவனே, எம்பெருமானிடத்து நிந்தை போலச் சிலவற்றை உரைத்தனை. சிவபிரானிடத்து அவை வந்த வரலாறுகளைச் சிறிதும் உணர்ந்தாயல்லை. அவற்றைக் கூறுகின்றேன், கேட்பாயாக" என்று அவனது வினாக்களுக்கு விடைகளை உரைப்பாராயினர்.

1. சிவபெருமான் எலும்பு முதலியனவற்றை அணிதல்

"தமது கருணையினாலே திருவுருக்கொண்ட நிமலனாகிய சிவபெருமான் பிரமன், திருமால் முதலிய முதன்மை வாய்ந்த தேவர்களை முன்னர் படைத்து, அனைத்து உலகங்களையும் படைத்துக் காக்குமாறு அருள் செய்து கணக்கற்ற உயிர்கள் அனைத்தையும் பிரமனிடம் நின்று படைத்தருளுவார். திருமாலிடத்து நின்று அவ்வுயிர்க்கூட்டங்கள் அனைத்தையும் காத்து அவ்வுயிர்கட்குப் போகத்தை நுகருமாறு செய்து மேல்வரக் கடவதாகிய ஆகாமிய வினையை ஒழித்து, அவ்வுயிர்களில் பலவற்றை வீடுபேறு அடையுமாறு செய்தருளி, அங்ஙனம் பேறு பெறுது பொருந்தின மற்ற உயிர்களையும் உலகனைத்தையும் பின்னர் அழித்தருளுவார். அவையனைத்தையும் அழித்த பின்னர், படைத்து அளிப்பவர் என நின்ற பிரம விஷ்ணுவாதியரையும் ஒடுக்குவார். இதன் பின்னர் முன்னருள்ள [1]ஏகரூப

---

1. ஏகன் என்ற பெயருக்கு முன்னர் காட்டிய பொருள் நன்கு பொருந்துவது இங்குக் கண்டுகொள்க.

மாக எமது இறைவர் எழுந்தருளியிருப்பார். பின்னரும் முற் கூறிய வண்ணமே செய்வார். இச்செயல் எஞ்ஞான்றும் நிகழா நிற்கும்.

சிவபிரான் இங்ஙனம் சங்காரத்தொழிலைச் செய்யுந் தோறும் அனேகரான அரி பிரமாதியரின் *எலும்புகளைத் தரிப்பார். பெரியவர்கள் எனப் பிறர் கருதும் அவர்களின் தலைகளையெல்லாம் மாலையாகத் தொடுத்துத் தரிப்பார். அவர்களது சிகைகளை தமது மார்பில் முப்புரிநூல் என்னும் பூணூலையொப்ப அணிந்து எழுந்தருளியிருப்பார். அல்லது அப்பிரமாதி தேவர்களைத் தமது முத்தலைச் சூலத்தால் மெல்லவே எடுத்து ஏந்தி அச்சங்கார காலத்தில் நீருக்கியும் தரிப்பார். தூய்மையாளரான சிவபெருமான் அப்பிரமனுதியர் செய்த சிறந்த தவப்பயனுல் அவ்வாறெல்லாம் செய்வார். ஆதலால் இவ்வாறெல்லாம் எம்பெருமான் செய்வது பிறர் தம்மைப்புகழ வேண்டும் என்பதற்காக அல்ல. மற்றும் சிவபிரானே அனைவருக்குந் தலைவர் என்பதற்கடையாளம் பிற தலைவர்களின் தலைமாலை முதலியனவற்றை அணிந்திருத் தலே என்று அனைவரும் அறிந்து தமது திருவடிகளையடைந்து குற்றமனைத்தும் ஒழிந்து வீடு பேறு பெற்று உய்யவேண்டும் செயலுக்காகவும் இங்ஙனம் செய்கின்ருர் என்றும் கொள்க. அகந்தையால் உன்னைப் பெரியவனென்று மதித்திருக்கும் தட்சனே ! எலும்பும் சாம்பலும் தசை கழிந்த எலும்புக்கூடும் சிகையும் முடியும் முதலியவனைத்தையும் சிவபிரான் அணியும்

---

*நங்காயி தென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன் காண் சாழலோ.

என்ற திருவாசகம், திருச்சாழல், 11-வது திருப்பாடல் இங்கு கருதற்குரியது. (கங்காளம்-எலும்புக்கூடு; இருவர்-பிரமனும் திருமாலும்).

இயல்பினை அனைத்துயிர்க்கும் அன்பு செய்யும் செயலாம் என்று அறிவாயாக''.

2. பன்றிக்கோடு அணிதல்

''பரம்பொருள் பன்றியின் கொம்பை அணிந்து கொள்ளுமா? என வினவிய தட்சனே! அதன் வரலாற்றைக் கூறுகிறேன், கேட்பாயாக. முன்னொரு காலத்தில் இரணியாட்சன் என்றொரு அசுரன் இருந்தான். அவன் தேவர்களுக்குச் சொல்லொணாத துன்பத்தினை நாள்தோறும் செய்து வந்தான். ஒருநாள் அவன் இந்த பூவுலகத்தினைத் தன்வயிற்றில் மறைத்து வைத்துக்கொண்டு உயிர்கள் எல்லாம் துன்புறுமாறு விரைந்து பாதாள உலகிற்குச் சென்றான். அதனைக் கண்டு தேவர்கள் அனைவரும் அச்சங்கொண்டனர். அப்பொழுது திருமால் பிரமதேவனுடைய மூக்கினின்றும் ஒரு பன்றியாகப் பிறந்தார். மேருமலையை ஒப்ப வளர்ந்து மிகுந்த ஆரவாரத்துடன் பாதாளத்துக்குச் சென்றார். அங்கிருந்த இரணியாட்சனைத் தமது கூர்மையான கொம்பினால் (இது தெற்றிப்பல் எனப் படும்) குத்திக்கொன்று பூமியை முன்போல் வைத்தார்.

இச்செயலால் தமது வீரத்தைப் பெரிதாகமதித்த திருமால் அகந்தையால் மயங்கி அறிவிழந்து தன் கொம்பினால் உலகம் முழுமையும் அழியுமாறு கிளறிப் பூமியைச் சூழ்ந்த கடலையும் உடைத்தார். திருமாலின் இச்செயலைச் சிவபெருமான் கண்டு இரணியாட்சனைக் காட்டிலும் உலகுக்கு அதிக துன்பம் செய்த வராகமாகிய திருமாலின் அகந்தையை அடக்கவெண்ணி அவ்வராகத்தின் முன்சென்று அதன் ஒரு கோரமான தெற்றிப் பல்லைப் பிடுங்கினார். அப்பொழுது திருமால் அகந்தை நீங்கியவராய் தனது சுய உருவத்துடன் நல்லறிவு பெற்று தேவாதிதேவனான பரமேசுவரனை நமஸ்கரித்துத் துதித்தார். ''பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் மஹேச்வரனே! தங்களை வணங்குகின்றேன். உலகத்துக்குத் துன்பத்தைச் செய்பவர்களைக் காலரூபியாக இருந்து அழிப்பவரே!

தங்களுக்கு நமஸ்காரம். உலகுக்கு நன்மையைச் செய்பவரே! தங்களுக்கு வணக்கம். மங்கள வடிவினரான தங்களுக்கு நமஸ்காரம். அனைவரையும் காத்தருள் செய்கின்ற மஹா தேவரே! தாங்கள் என்னைக் காப்பாற்றியது ஞாபகத்திலிருக்கும்படியாய் இந்த தெற்றிப்பல்லைத் தாங்கள் தரித்துக் கொள்ளவேண்டும். எம்பெருமானே! தங்கள் திருமார்பில் இந்தப் பல்லைப் பார்த்தவுடன் எனக்கு அஞ்ஞானம் என்பதே ஏற்படாது'' என்று இவ்வாறு அந்தத் திருமாலால் பிரார்த்திக்கப்பட்ட பரம மங்கள ஸ்வரூபியும், முற்றறிவுடையவரும், கருணைக்கடலுமான பரமேசுவரன் ''அங்ஙனமே ஆருக'' என்று அப்பல்லைத் தரித்துக் கொண்டார். இந்தப் பன்றிக் கொம்பு (தெற்றிப்பல்) எம்பெருமானுடைய திருமார்பில் ஒரு வெண்பிறைபோலத் திகழாநிற்கும்.

> ததா துஷ்டாவ தேவேசம் கதமோஹோ ஹரிச்சிவம் ।
> நமஸ்துப்யம் மஹேசாய பக்தானுமிஷ்டதாயினே ॥
> ஸம்ஹர்த்ரே காலரூபாய லோகோபத்ரவகாரிணும் ।
> சங்கராய நமஸ்துப்யம் மங்களாய நமோ நம: ।
> தம்ஷ்ட்ராமிமாம் மஹாதேவ மதீயாம் ஸர்வரக்ஷக ।
> வோடுமர்ஹஸி தேவேச மத்ரக்ஷாக்ஞாபனாய போ ॥
> த்ருஷ்ட்வைனுமபி மேபூயோ நாக்ஞானம் பவதீச்வர ।
> இதிஸம்ப்ரார்திதஸ்தேன விஷ்ணுநா பரமேச்வர: ॥
> ததேதி தாம் பபாராஸௌ ஸர்வக்ஞ: கருணாகர: ।

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத்தியாயம் 16, ச்லோகம் 9—12½.

எம் இறைவர் பன்றிக்கோடு தரித்தவரலாறு இதுவர்கும் இனி ஆமையின் ஓட்டைத் தரித்த செய்தியினைக் கூறுகிறேன். கவனமாய்க் கேட்பாயாக''.

3. ஆமை ஓட்டை அணிதல்

''வலிமை மிகுந்த தேவர்களும் அசுரர்களும் முன்னளில் பாற்கடலைக் கடைந்திட்ட பொழுது, மத்தாக அமைந்த மந்தர

மலையானது கவிழத் திருமால் அதனை நேராகநிறுத்தி விரைந்து கடலில் மூழ்கி உள்ளே சென்று ஆமையாகித் தன் முதுகின் மீது அம்மலையைத் தாங்கினுன். அவ்வாறு தாங்கிய பின்னர் அக்கடலைக்கடைய அதனின்றும் அமிர்தம் வந்தது. அதனைக்கண்டு "இது நம்முடைய வலிமையால் வந்தது, நம்முடையது" என்று அமரரும் அவுணரும் கூறித் தமக்குள் போர்புரியலாயினர். இந்தப் போரினை விலக்காமல் திருமால் இம்மலையை அலைத்த இக்கடலுள் அதனை நிலை நிறுத்தி நம் முதுகில் சுமந்து காத்தோம் என்று மிக நினைந்து, அந்நினைவு காரணமாக அவனுள்ளத்தில் அஹங்காரம் ஒரு கடல் போலக் குடிபுகுந்தது. அவ்வளவில் வேறு எதையும் உணராதவனுய் அத்திருமால் கடலைக்கலக்கினவனுகத் திரிய ஆரம்பித்தான். அதனுல் உலகத்துக்குத் துன்பம் ஏற்படவே தேவர்கள் பிரமதேவனை முன்னிட்டுக் கொண்டு திருக்கயிலை சென்று மஹாதேவனிடம் திருமாலின் இந்தச் செயலைப்பற்றி முறையிட்டனர். அப்பொழுது அந்த மஹாதேவன் விரைந்து சென்று அந்த ஆமையின் முதுகு ஓட்டைப்பறித்து அதன் வலிமையையும் அகந்தையையும் அழித்து அருளினுர். அப்பொழுது தேவர்களால் மிகவும் பிரார்த்திக்கப்பட்டு அந்த ஆமையின் ஓட்டைத் தரித்துக்கொண்டார். தனது பழைய உருவெய்திய திருமாலானவன் சிவபெருமானைத் துதித்து வணங்கி நிற்றலும், சிவபெருமான் திருமாலை நோக்கி, "நீ அசுரரையழித்துத் தேவர்கட்கு அமிர்தத்தினை அளிப்பாயாக" என ஆணையிட்டருளினுர். அவ்வண்ணமே திருமாலும் தேவர் களுக்கே அமிர்தம் கிடைக்கச் செய்தான். ஓ தட்சனே ! எம்பெருமான் ஆமையோட்டைத் தரித்த வரலாறு இது வாகும். இனிப் பெருமான் தாருகாவனத்தில் பலிக்குச் சென்ற தன்மையையும் அப்பொழுது அங்கு நடந்தவையும் பற்றிக் கூறுகிறேன், கவனமாகக் கேட்பாயாக".

4. சிவபிரான் பிச்சையெடுத்தல்

"முன்பு தாருகா வனத்தில் வசித்து வந்த முனிவர்கள் (48, 000 முனிவர்கள் என்று கூறுவது உண்டு) பரமேசுவரனிடத்தில் பக்தியற்றவர்களாயும், யாகம் தவம் முதலிய கர்மாக்களிலேயே ஈடுபட்டவர்களாயும் இருந்தார்கள். தவத்தைக் காட்டிலும் வேறு தெய்வமே இல்லை. யாகத்தைக் காட்டிலும் பலன் தரத்தக்க தெய்வம் எதுவுமில்லை. யாவருக்கும் அவரவர்களது கர்மாக்களே பலனையளிக்கின்றன, எனவே ஈசுவரன் தேவையில்லை என்றிவ்வாருன வீண்வாதங்களில் ஈடுபட்டனர். பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்கள் இதனைப்பார்த்து, "பாவத்தினுல் கெட்டுப்போன மனமுடையவர்களுக்கு சிவபெருமானிடத்தில் பக்தியுண்டாகாது. ஆகையால் அதற்குத் தகுந்த முயற்சி செய்தாலன்றி இவர்களுக்குச் சிவபக்தி உண்டாகப்போவதில்லை" எனக்கருதினுர்கள். ஆயினும் முனிவர்களது சாபத்துக்கு அஞ்சித் தாமாக அவர்களைத் தண்டிப்பதற்கும் சக்தியற்றவர்களாகித் திருக்கயிலை சென்று மஹாதேவரிடம் இவையாவற்றையும் தெரிவித்தார்கள். மஹாதேவரும் அவையாவற்றையும் செவிமடுத்து அப்பொழுது அந்தத் தேவர்களையெல்லாம் அனுப்பிவிட்டுப் பிறகு வெகுகாலம் சென்ற பிறகு உலகத்திற்கெல்லாம் மங்களத்தைச்செய்கின்ற அந்த சங்கரன் தாருகாவனத்து ரிஷிகளை மயக்குவதற்காகத் திருமாலைத் தமது சமீபம் வருமாறு நினைத்தார். உடனே திருமாலும் சிவபிரான் திருமுன்பு வந்துசேர்ந்தார். ஸ்ரீமஹேச்வரன் திருமாலை மோஹினியின் உருவத்தை எடுத்துக்கொண்டு தாருகாவனத்து ரிஷிகளை மோஹமடையும்படிச் செய்யுமாறு ஏவியருளினுர். பிறகு தாம் ஒரு *திகம்பரராகி உமையம்மையாரும் கண்டால் மயங்கி விழும்படியான பேரழகுகொண்டவராகி இச்சை,

---

*திகம்பரர்—திக்குகளையே ஆடையாகக் கொண்டவர். அதாவது வேறு ஆடை எதுவுமின்றி நிருவாணக்கோலம் கொண்டார் என்பதாம்.

கிரியை, ஞானம் என்ற மூன்று சக்திகளின் உருவமான திரிசூலத்தையும், பராசக்தியின் உருவாகிய கபாலத்தையும், திரோதான சக்தியின் உருவமாகிய பாதுகைகளையும் தரித்துக் கொண்டு வேகமாகப் புறப்பட்டுத் தாருகாவனத்துக்குச் சென்றார்.

இத்யுக்த்வா ஸ மஹாதேவோ திகம்பரதயா ததா ।
இச்சா ஞானக்ரியா சக்தி ஸ்வரூபம் சூலமத்புதம் ॥
பராசக்திஸ்வரூபஞ்ச கபாலம் பரமேச்வர: ।
பாதுகே ச திரோதான சக்திரூபே விசித்ரிதே ॥
பரிகல்ப்யா விவேசாசு தாருகாவனமீச்வர: ।

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 13ம் அத்தியாயம்
ச்லோகம், 35-36½

முதல்வனது பேரெழிலைத் தனது விழிகளாலருந்தித் துன்பம் பொருந்திய காமமயக்கங்கொண்டு துண்ணெனத் திருமாலும் சோர்ந்து பரமாத்மாவான சிவபிரானுடன் போகத்தை வேண்டினர். அப்பொழுது மேல்நோக்கிய வீர்யத்தையுடையவரான சம்புவானவர், சுழலுகின்ற பார்வையுடன்கூடிய கண்களை உடையவளும், அழகான மாலைகளைத் தரித்தவளும், பிறர்மனதை அபகரிக்கும் பல்வரிசைகளால் சுத்தமான புன்சிரிப்பை உடையவளும், புதிய பவளம்போல் விளங்காநின்ற தளிர்போன்ற உதடுகளையுடையவளும், சந்திர கலைபோன்ற புருவங்களை அசைக்கின்றவளும், நீலோத்பலம் போன்ற கண்களையுடையவளும், நன்கு வட்டமாகப்பருத்த கொங்கைகளின் பாரத்தினல் சற்றே வணங்கினவளும், மெல்லிய இடையை உடையவளும், நீலோத்பலத்தின் காந்தி போன்ற ரோமாவளியையுடையவளும், இன்பரஸத்தையே முக்கியமாகக்கொண்ட வார்த்தைகளை உடையவளுமான அந்த மோஹினியைக் கண்டு, புன்முறுவல் உடையவராகி, "யாவரையும் மயக்கும் மோஹினியே !

மற்ருெரு சமயத்தில் உனக்கு என்னுடன் சேர்க்கை ஏற்படும். இப்பொழுது தாருகாவனத்தில் பக்தியில்லாமல் வெறும் கர்மாக்களையே செய்து காலங்கழிக்கும் முனிவர்களை மோஹிக்கச்செய்து விரைவில் வருவாயாக'' என்று ஏவியருளினர். இவ்வாறு விஷ்ணுவானவர் முதல்வனது பேரழகைக்கண்டு மயங்கி மாலுற்றமையால் திருமால் என்ற பெயரை அன்று பெற்றனர் போலும்!

முன்பன துருவை எல்லாம் முகனுறு விழியால் மாந்தித்
துன்புறு மால்மீக் கொள்ளத் துண்ணென அரியும் சோர்ந்தும்
அன்புடை அருளால் வந்தான் மற்றவன் தனக்கு மாலோன்
என்பதோர் பெயரும் அஞ்ஞான் றெய்திய போலும் அன்றே.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததிசி
உத்தரப்படலம், 36.

சிவபெருமாளுல் அனுப்பப்பட்ட திருமால் வேள்வியும் தவமும் தாமே முத்தியைக்கொடுத்துவிடும் என்ற கொள்கையையுடைய முனிவர்கள் அனைவரும் ஒருங்கே நெருங்கியிருந்த சபையிடத்துச்சென்று அளவற்ற மன்மதர்களால் விரைவாகத் தொடுக்கப்பட்ட கணைகளைப்போலத் தனது இரண்டு விழிகளையும் பரப்பியவாறு ஒய்யாரமாக நடைபயில்வாளாயினள். இங்ஙனம் வந்த மோஹினியைக்கண்டு முனிவர்கள் அனைவரும் காமமேலிட்டவர்களாய்த் தங்களது விரதங்களையும் யாகத்தினையும் ஒழிந்து மதநீர்பாய மெலிந்து யானையுண்ட விளாங்கனிபோல அறிவிழந்து உருகினர்கள். நீலகண்டனாகிய பெருமானது அருளினல் மாயோன்கொண்ட அந்த அழகுவாய்ந்த வடிவத்தினை முற்றிலும் குறிப்புடன் பார்த்துப் பார்த்துத் தமது ஒழுக்கம் அனைத்தையும் விடுத்து செவ்விய தீபவொளியைக் கண்டு இரையும் விட்டிற் பூச்சிகளையொப்ப வந்து சூழ்ந்தார்கள். மோஹினியிடம் ஸல்லாப வார்த்தைகளைப் பேசியவராய்த் தீயிற்பட்ட மெல்லிய தளிர்

மாலையையொப்ப விரகத்தீயால் வெந்து இறந்தாரையொப்ப அந்த முனிவர்கள் நின்றனர்.

இது இவ்வாருக, கோடிமன்மதர்களையும் தோற்கடிக்கும் பேரெழில் கொண்டு ஆடையற்றகோலங்கொண்ட சிவபிரான் பிச்சையெடுப்பவர்போல முனிவர்களது இல்லங்களையடைந்து வீதியில் பண்ணேடியைந்த அருமறைகளைப் பாடிக்கொண்டே சென்ருர். உயிருக்கு உயிராய் நிற்கும் சிவபெருமான் சில இடங்களில் வேதவாக்கியங்களைக் கூறிக்கொண்டும், சில இடங்களில் அழகிய வீணையை மீட்டிக்கொண்டும், சில இடங்களில் தேவகாந்தாரம் என்னும் சாதாரிப் பண்ணைப்பாடிக்கொண்டும், சிலவிடங்களில் சிவநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டும் விளையாட்டாகப் பிச்சையெடுத்துத் திரிந்தார்.

இவ்வாருக ஜகதீசஞன பரமேசுவரன் உல்லாசமாய்ப் பிச்சையெடுத்து ஸஞ்சரித்தபோது அவ்விடத்திலுள்ள முனிவர்களின் மனைவியர்கள் திகம்பரரின் இனிய குரலோசையைக் கேட்டு, எவரோ இவ்வினிய குரலுடன் பாடிவருவது என்று அவரைக் காண வீதியில் வந்தார்கள். யௌவனமும் பேரழகும் பொருந்தியுள்ள இந்தப் பரமசிவனைக் கண்டதும் மன்மதனுடைய ஐந்து அம்புகளாலும் ஒருங்கே தாக்கப்பட்டவர்களாகி உயிர் துடிதுடித்துச் சோர இறைவனுடைய ஆசையென்னும் ஆழ்ந்த கடலுள் அகப்பட்டனர். அவர்களது ஆபரணங்கள் நழுவின, அவர்களது கூந்தல் அவிழ்ந்தன, உடல் புளகம் போர்த்தது, இந்த நிலையில் ஸரஸ உல்லாச வார்த்தைகளைப் பேசுகின்றவர்களாஞர்கள்.

சில மாதர் இசையோடுற்ற எந்தையான பரமசிவன்மீது உண்டான ஆசை மிகுதியால் விரைந்து சென்று பால் தயிருடன் கலந்த அன்னத்தினை அவர்களது அழகிய கைகளினின்றும் விழுகின்ற வளையல்களுடன் அவரது பிச்சைப் பாத்திரத்தில் இட்டனர். சில மாதர் கலக்க மிகுதியாக

உடலினெவ்விடத்திலும் மன்மதனது கணைகள் பட்டு உயிரை வாட்ட, மயிர்க்கால் தோறும் காமநீரொழுக விழுந்தனர். சில மாதர் இக் கண்ணுதலோன் மாதரெதிரே பிச்சைக்கு வருந் தன்மையால் ஆடையின்றி வந்தனன். எனவே நமது ஆடை விழ்கினும் அதனால் நமக்குக் குற்றம் இல்லையெனத் தமதாடைகள் நழுவி வீழ்ந்தமைக்கு ஆறுதல் கூறிக் கொண் டனர். சில மாதர்கள், இவனால் நாணமும் நம்மை விட்டு அகன்றது ; உள்ளத்தில் மயக்கம் புகுந்தது; உள்ளமும் தீகின்றது ; நிறையும் அழிந்தது ; இனி அரிய உயிரும் உடலும் அழியும்; நமது உயிரை இவனே நமக்களிப்பான் எனக் கூறினர். சில மாதர்கள் இவரின் யாசகப் பொருள் அரிசிதானே என்று அதனை எடுத்து கொண்டு அவரருகிற் சென்று, நெருங்கிய காமம் என்னும் தீயினால் சுடப்பட்டு அரிசி முழுமையும் வெண்மையான பொடியாதலும் தேவ தேவனான சிவபிரானைப் போல அப்பொடியைத் தமது உடலிற் பூசிக்கொண்டனர்.

சில மாதர்கள் எங்களை உமது வடிவினால் மயக்கி ஆளு மெனத் திருவடியில் வீழ்ந்தாலும் அரிய கருணையைச் செய் கின்றிலர். இவரது எண்ணம் விரைந்து போதல் போலும். எனவே இவர்க்குப் பிச்சையிடாதீர் எனக் கூறினர். சில மாதர்கள் பொறுமையற்றவர்களாய் மார்பில் முத்து மாலையு மில்லாமல் சந்தனப் பூச்சும் உதிர்ந்து விழுந்து உடல் ஈரமற்று மன்மதபாணம் பிளக்க மேகலாபாரம் முற்றும் இழந்தவரா யினர். சில மாதர்கள் இவரிடம் சூலம் உள்ளது. படர்ந்த சடையும், செந்நிற வடிவும், இளம்பிறையுமுள்ளது. எனவே இவர் ஆலாலமுண்ட அரனேயாவர் என்றனர்.

சிலமாதர்கள் கட்டப்பட்ட சிவந்தசடையான வலையுள் அகப்பட்ட மானைப்போலப் பார்த்த கண் வாங்காதவராய்ச் சட்டுவத்தில் ஏந்திவந்த அன்னத்தினைப் பலிபாத்திரத்தில் போடாது வெளியிற்சிந்திக் கலங்குவராயினர். சிலமாதர்கள் மகிழ்ச்சியுடன் அவரைப்பார்த்து, விருந்தினராக இவ்விடத்

துக்கு வந்தவரே! அமுதம்போலும் இனிய உணவு இங்கு உளது. அதனையுண்டு எம்மீது கருணைசெய்து எம்மிடத்து ஒரு இறைப்பொழுது இருந்துபோதிர் என்றனர். சிலமாதர்கள், ''ஐயனே! நமது மனைக்கு எழுந்தருள்வீராக, கையிலேந்திய சூலமும் கபாலமும் கீழேவைப்பீராக. பாலும் நெய்யுங்கலந்த உணவினைத் தினமும் அருந்தி யாங்கள் உய்ய எங்களுடனிருப்பீராக'' என்றனர்.

சில மாதர்கள்' ''உம்மைக்கண்ட பெண்களுக்கு மட்டுமல்லாமல் புருஷர்களுக்கும் மோகத்தையளிக்கும் பேரெழில் கொண்ட பெருமானே! நீர் கையினில் ஓடு ஒன்று ஏந்திப் பிச்சையெடுப்பது முறையோ'' என்றனர். சிலமாதர்கள் ''ஐயா, இன்று உம்மைக்கண்டு உம்போலவே நாங்களும் ஆடை போகிக் காதலுற்று ஒய்ந்தோம். எனவே எங்களை நீர் சேருவீராக'' என்றனர். சிலமாதர்கள், ''ஐயரே! எமது கணவராகிய முனிவர்கள் இப்பொழுது வந்து விடுவார்களோ என்று எண்ணவேண்டாம், அவர்கள் இப்பொழுது வாரார். எனவே ஒரு இறைப்பொழுது எமதில்லங்கட்கு வந்து போவீராக'' என்றனர். சிலமாதர்கள், ''எங்களைத் தவப்பெண்டிர் என்று கருதியோ எங்கள் விரகதாபத்தை இவ்வளவு எடுத்துரைத்தும் எம்மைச் சேராது செல்கின்றீர்'' எனப்பெருமூச்செறிந்த வண்ணம் இயம்பினர். சிலமாதர்கள் அவரது அருகில் சென்று, ''ஐய! எங்கள் ஆடைகளைத்தாரும். தராவிடின் நாங்கள் கொண்ட விரகதாபத்தைப் போக்கும். இதுவும் செய்யீராயின் எம்முடன் வாரும். உமது எண்ணம் தான் என்னவோ? உரையும்'' என்றனர்.

சிலமாதர்கள் ''ஐயா! இந்த அழகிய வடிவத்தால் உமக்குப் பொருந்திய தொழில் எதிர்ப்படும் மாதர்களையெல்லாம் கொல்லுவதோ? அல்லது பிச்சை எடுப்பதோ? உரைப்பீர்'' எனக்கூறிக்கொண்டே அவரைப்பின்தொடர்ந்தனர். சில மாதர்கள், ''நாங்கள் உம்மைத்துதித்து எங்களை அணைவீர் என்று வேண்டியும் எங்கட்கு மயக்கத்தையொழித்து

இன்பம் அளிக்கிலீர். சங்கரன் (இன்பத்தைச் செய்பவன்) என்ற உமது பெயருக்கு இச்செயல் தக்கதோ'' என்று கூறினார்கள். தேவமாதரினும் சிறந்த சிலமாதர்கள் இறைவனுடைய கோசத்தினை மிகுந்த மயக்கத்துடன் பார்த்து அதனை வணங்குவாரைப்போலத் தலைகவிழ்ந்து சென்றனர்.

இவ்வாறு தாருகாவனத்து முனிவர்களின் மனைவியர்கள் அனைவரும் நெருங்கித் தங்கள் ஆடைகளும், வளையல்களும், உடலிற் பொருந்திய ஆபரணங்களும், நாணமும், எந்நாளும் துறத்தற்கரியதான கற்புஞ் சிந்தி, உயிரொன்று மட்டுமே தாங்கி விரகதாபங்கொண்டு பின்தொடர, எமதிறைவன் தம் பொன்னடிகள் சிவப்ப வீதிகளில் நடந்து செல்லலானார், இறைவர் சிலவிடங்களில் வீணாகானம் செய்து கொண்டும். சிலவிடங்களில் வேதகானங்களைச் செய்து கொண்டும், சிலவிடங்களில் ஆகமத்தை உரைத்துக்கொண்டும், சிலவிடங்களில் தமது உண்மை நிலையை உணர்த்திக் கொண்டும், சிலவிடங்களில் பிச்சை கேட்டுக்கொண்டும், சிற்சிலவிடங்களில் மெய்யன்பர்களைப் போலத் தமது கீர்த்தியைப் புகழ்ந்து கொண்டும் செல்வதை மேற்கொண்டார். உடலுள் உற்ற உயிரனைத்துக்கும் உயிராய் நின்ற இறைவன் கொண்ட பெருமை வாய்ந்த இந்த பிட்சாடனத் திருவுருவை நினைத்தால் மோஹினியான மாலோனும் மாலெய்தி இன்னமுந் தளர்வுறுவானானால், பிறர் செயலை இத்தகைத்தென்று கூற இயலுமோ ?

வேறு வேருக இந்திரசாலம் போல அளவற்றவடிவங்களைக் கொண்டு திருமகள் போன்ற மேனியினையும் சிற்றடிகளையும் கரிய கண்களையுமுடைய பசிய வளையல்கள் அணிந்த அந்த ரிஷி பத்தினியர்களின் கற்பு என்னும் கடலைக் கடைகின்ற அளவற்ற மந்தரமலைகளையொத்து இறைவர் இருந்தனர். இவ்வாறு சிவபிரான் மீது வைத்த இச்சையினாற் கண்ட அம்மாதர்கள் அனைவரும் கருவுற்று சூல் வருத்தமும்

பிற வருத்தமும் ஏதுமின்றி அவ்விடத்திலேயே நாற்பத் தெண்ணாயிரம் ஆண்மக்களைப் பெற்றெடுத்தனர். எம்பெருமானிடத்து இச்சைவைத்த இமைப்பொழுதினுள் அம்மாதரார் பெற்ற மைந்தர்களனைவரும் இறைவனின் மலரடிகளை வணங்கி அன்புடன் துதிக்க, அப்பெருமான் "நீங்கள் நம்மை நினைத்து நல்ல தவத்தினைச் செய்பவர்களாய் இவ்விடத்திலிருங்கள்" என்றருளிச் செய்தார். அண்ணலார் அருள் செய்ததைக் கேட்டு வணங்கி விடைபெற்றுக் கொண்டு நாற்பத்தியெண்ணாயிரம் குமாரர்களும் தவஞ் செய்வாராய் அங்கொரு புறத்திலிருந்தனர்.

சிவபெருமானது மக்களென வந்தவர்கள் தவம் புரியச் சென்றவுடன், பெண்களான பெரிய கடல் வெள்ளம் காம மயக்கம் தெளியாதாராய்ப் பின் தொடர்ந்து வர, அப்பெருமான் நகரின் புறம்பே செல்லலானார். அங்ஙனஞ் செல்லுதலும் அதனைப் பார்த்து மோஹினியாக வந்த மாலோன் சிவபெருமானையடைதலும், அவனைத் தொடர்ந்து பின்னாக அங்குள்ள முனிவர்கள் அனைவரும் வந்தார்கள். பெண்வடிவங்கொண்டு வந்த திருமாலைப் பார்த்து மோஹமுற்றுப் பின்னே செல்லும் அம்முனிவர்களனைவரும் மிகவும் தீவினையைச் செய்த காரணத்தால் சிவபெருமான் அவர்களுக்குத் தமது பழையவுருவினைக் காட்டாமல் மறைத்து வேறு ஒரு வடிவுடன் நின்றார்.

முனிவர்கள் தத்தம் மனைவியர்களைப் பார்த்து இவர்கள் இவனைக் கண்டு காமுற்றனரோ? நம்மைபோலவே ஆடைகளையும் நாணத்தையுமிழந்து ஊரெல்லையையும் கடந்து வந்தனரே என்று எண்ணினார்கள். மோஹினியிடம் வைத்த மோஹத்தைச் சிறிதொழிந்த அந்த முனிவர்கள் தங்களது அரிய குலபத்தினியரின் இழிந்த செயலைப்பார்த்து மிக வருந்தியும் இரங்கியும் இறந்தவர் போல நின்றனர். "ஐயோ! இதென்ன மாயம்! பேரழகுடையாளி ஒருத்தி நம்மிடத்துக்கு வந்து மோஹத்தை உண்டாக்கி நமது தவத்தைச் சிந்தும்படி

செய்தனள். ஒரு ஆடவன் வந்து நமது மனைவியரின் கற்பை அழித்தனன்" என்று நினைத்து அனைவரும் ஒருங்கு கூடி ஆலோசித்தனர். இங்ஙனம் ஆலோசனை செய்த முனிவர்கள் தெளிவுற்று "நம் மனைவியரின் கற்பையழித்தவன் கயிலை யிலிருக்கும் முக்கண்ணனாகும். நமது தவத்தையழித்தவன் மாயவனாகும். மாலோன் தானே நம்மிடத்து வந்திலன். ஈசன் கட்டளையினாலேயே மாயஞ் செய்தான். நமது நோன்பு அழியும்படி நேர்ந்ததேனும் அதற்குத் தீர்வு செய்து பின்னரும் தவஞ் செய்வோம். ஆனால் பிச்சையெடுப்பான் போல் சங்கரன் இங்கு வந்து இத்தாருகாவனத்து மாதர்களின் கற்பையழித்த வசையுரைக்கு முடிவுமுளதோ? இப்பழி எல்லாத் திசைகளிலும் பரவுமே என்றெல்லாம் எண்ணி அம்முனி வர்கள் கண்ணுதற் பெருமான் மீது கோபங்கொண்டனர்.

அங்ஙனம் கோபங்கொண்ட முனிவர்களனைவரும் கண் களில் தீக்கனல் பரக்கப் பார்த்துத் தங்கள் மனைவியர்களை விளித்து "கற்பிலக்கணத்தை விடுத்த பெண்களே! நீவிர் எவர் பின்னே போகின்றீர்கள். இங்ஙனே இறத்தல் அழகிது. அன்றேல் உங்களது ஊருக்குச்செல்லுங்கள்" என்று கூறினர். முனிவர்களின் இம்மொழிகேட்ட மாதர்கள் நகைத்து, "இந்த முனிவர்கள் பித்தரே போலும்! இப்பெருமானைத் தரிசித்த வர்கள் ஜீவன் முத்தராவரேயன்றி இறந்துபடுவரோ" எனக் கூறிக்கொண்டே அந்த பிட்சாடன மூர்த்தியின் பிரகாசிக் கின்ற உருவத்தை உட்கொண்டு அழிவற்றதான சிவகிருபை யால் திரும்பித் தத்தம் இருப்பிடங்களை அடைந்தனர். பின்னர் மோஹினி வடிவங்கொண்ட திருமால் அதனை விடுத்துத் தமது ஆணுருவுடன் இறைவரது அருகில் நின்றனன். அதனைக் காண்பதற்கு பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் வந்து பெருமானை வணங்கி நின்றனர். ஓ தட்சனே! சிவபிரான் பிச்சையெடுத்ததாகக் கூறினையே! அதன் வரலாறு இதுவேயாகும். இனி அவர் புலித்தோல், மான், மழு முதலியவற்றைத் தரித்த செய்திகளை முறையாகக் கூறுகின்றேன் கேட்பாயாக".

5. புலித்தோல் அணிதல்

"முடிவற்ற முதல்வனுன சிவபிரான் மீது கோபங் கொண்ட முனிவர்கள் இவ்விடத்துக் கொடியதொரு ஆபிசார வேள்வி செய்து இவனை அழிப்போம் என்று சிறிதும் அறிவற்றவர்களாகி ஒரு கொடிய யாகத்தினைச் செய்தனர். அந்த வேள்வித்தீயிலிருந்து எவரும் நினைத்தற்கரிய பேருருவத்தை உடையதாயும், இடி போன்ற குரலுடையதாயும், பிளந்த வாயினையும், கோபக்குறிகாட்டும் தீக்கண்களையும், கூரிய நகத்தினையுமுடையதாயும் ஒரு புலி விரைந்து எழுந்தது. அங்ஙனமெழுந்த புலியைப் பார்த்து முனிவர்கள் ஈசனைக் கொல்வாயாக எனக்கூறி விடுத்தனர். அப்புலியும் ஈசன் நிற்கும் இடத்துக்கு யாவரும் அஞ்சுமாறு விரைந்து வருதலும் நெற்றிக் கண்ணையுடைய சிவபிரான் அதனைப்பற்றித் தம் அழகிய கரத்தால் உரித்து அப்புலித்தோலை ஆடைபோல அணிந்து கொண்டார். இச்செயல் பெருமானுக்கு இழிவைத் தருமோ?"

6. மழுப்படையை ஏந்துதல்

"புலியானது இவ்வாறெழிய, வேள்வித் தீயிலிருந்து கொலைபுரியும் மழுவென்ற ஒரு ஆயுதம் தோன்றியது. முனிவர்கள் அதனைப் பெருமான் மீது செலுத்த அது சிவபெருமானெதிரில் வருதலும் அதனைப் பிடித்துத் தம் திருக் கரத்தில் ஒரு படைக்கலமாகக் கொண்டருளினர்".

7. மான் ஏந்துதல்

"பின்னர் ஓம குண்டத்திலிருந்து ஒரு மான் பிறந்தது. முனிவர்கள் அனைவரும் அதனைச் சிவபிரான் மீது ஏவ, அது வானிலெழுந்து பாய்ந்து பெருங்குரலால் விரைவாகச் சராசரங்களை அழித்துச் செல்ல, பெருமான் அதனைக்கண்டு "விரைவாக வருக" என அழைத்து "இனி நீ தினமும் நம்

காதில் கூவுவாயாக'' என அருள்புரிந்து தமது இடது திருக் கரத்தால் பிடித்து விரைவாக ஏந்தி நின்றார்''.

8. பாம்புகள் அணிகலன்களாதல்

''மீண்டும் வேள்வித்தீயினின்று அளவற்ற பாம்புகள் தோன்றின. அவற்றை அக்கொடிய முனிவர்கள் சிவபிரான் மீது ஏவ, அவைகளும் மிக்க கோபத்துடன் வந்தன. பெருமான் அவற்றை முன்பு கருடனுக்குப் பயந்து தம்மை அடைக்கலம் புகுந்த பாம்புகளுடன் சேர்த்து உடலில் ஆபர ணங்களாக அணிந்து கொண்டார். அதனால் புஜங்க பூஷணன், ஸர்ப்பாபரணன், நாகாபரணன் முதலிய திருநாமங் களும் இறைவருக்கு ஏற்பட்டன''.

9. பூதகணங்கள் சூழ்தல்

''அரவமனைத்தும் அரனுருக்கு ஆபரணங்களாகி விளங்கு தலும், அதன் பின்னர் தீயிலிருந்து இடிகள் தோன்றினாற் போல அளவற்ற பூதங்கள் விரைந்து தோன்றலும் அம்முனி வர்கள் அப்பூதங்களைப் பெருமான் மீது ஏவினார்கள். முனிவர் களின் ஏவுதலால் அக்கொடிய பூதங்களும் அண்டங்கள் எல்லாம் நடுங்கும் வண்ணம் ஆரவாரித்து இறைவரை நோக்கி வருதலும், சரணடைந்தார் துன்பங்களைப் போக்கும் சிவபிரான் அப்பூதர்களை நோக்கி, ''நீவிர் எம்மை விட்டு நீங்காமல் எஞ்ஞான்றும் எமது சேனையாக இருப்பீர்'' என் றருளிச்செய்து அவற்றைத் தமது சேனையாக்கிக்கொண்டார்''.

10. வெண்டலை (உடலற்றதலை) தரித்தல்

தாங்கள் ஏவிய பூதக்கூட்டங்கள் சிவபெருமானுக்குச் சேனையாகி விட்டதைக் கண்டு சீற்றங்கொண்ட முனிவர்கள், பின்னரும் ஓமஞ்செய்ய, அதனின்றும் வெண்டலையொன்று தோன்றி உலகம் அனைத்தும் அழியுமாறு சிரித்து எழுந்தது. அங்ஙனம் சிரித்தெழுந்த தலையை அம்முனிவர்கள் சிவபிரான்

மீது விடுதலும், அது விரைந்து வர, அதனுல் உலகம் அழியாவண்ணம் முக்கண்ணரான பெருமான் அருள்புரிந்து அந்த குறைத்தலையைத் தாமரைமலர் போன்ற தமது திருக் கரத்தால் பற்றிச் செவ்வானம் போன்ற சடைமீது னவத்து, ''நின்செயலைச் செய்வாயாக'' என்று கூறினர்''.

11. உடுக்கையைக் கையில் ஏந்துதல்

"தாங்கள் ஏவிய வெண்டலையைச் சிரத்தில் கொண்ட இறைவரைப் பார்த்துப் பார்த்து அச்சமுற ஆரம்பித்த முனிவர்கள் தங்களிடம் உண்மையாக விளங்கிய மந்திரங்களை யெல்லாம் சிவபெருமானைக் கொல்லுமாறு ஏவினர். அம் மந்திரங்களும் ஒரு உடுக்கையின் உருவங்கொண்டு உலகமனைத்தும் செவிடுபடும்படி ஒலித்தது. உடுக்கையின் பேரோசையைக்கேட்டு உலகங்கள் ஈசன் கருணையால் இறவாதிருந்தன. ஆயினும் இடியோசைகேட்ட பாம்புகளைப் போல மயங்கின. இவ்வாறு பெருத்த ஆரவாரஞ்செய்து கொண்டுவரும் உடுக்கை இறைவர் எதிரிலே வருதலும் பெருமானுர் தமது ஒரு திருக்கரத்தால் அதனைப்பற்றித் தம் காதருகே ஒலித்துக்கொண்டிருக்குமாறு பணித்து, யாவரும் வியப்படையும் வண்ணம் அதனை ஏந்தினர். முனிவர்களும் கூட இச்செயலைப்பார்த்து 'யாவரே இதனைச்செய்யத்தக்கார்' என வியந்துகூறினுர்கள்.

12. முயலகனையும் வேள்வித்தீயையும் அடக்குதல்

"இறைவரது இச்செயலைப் பார்த்த பின்னராவது முனிவர் கள் நல்லறிவு வரப்பெற்றனரோ ? முந்தையூழினுல் கோபம் நீங்காதவராய்ப் பின்னரும் வேள்வி செய்தனர். வேள்வித்தீயி னின்றும் [1]முயலகன் என்ெருரு பூதஉருவந் தோன்றியது.

1. முயலகன்—இதனை அபஸ்மார தேவதை என வட மொழி நூல்கூறும். ஒரு கொடிய நோயை விளைவிக்கும் துர்த்தேவதை எனவுங்கூறுவர். இந்நோய் உணர்வற்றுக் கிடக்கவும், வலிப்புடன் கிடக்கவும், பிறவாறு நலிவுற்றுக் கிடக்கவும் செய்யவல்லதாம்.

மஹாசங்காரமூர்த்தியான சிவபெருமானுக்குச் சங்காரம் கிடையாது என்று உணரும் அறிவில்லாதவர்களாகி அந்தப் பூதத்தை சிவபெருமானைக் கொல்லுக என ஏவினர். அத்துடன் வேள்வித்தீயையும் அழைத்து சிவபிரானைக் கொல்லும்படி அனுப்பினர். அவைகள் விரைந்துவந்தன. தீக்கடவுளும் அஞ்சும்படி வந்த அவ்வேள்வித்தீயை முதல்வனான சிவ பெருமான் ஒரு திருக்கரத்திலேந்தி, முயலகனைத் தனது பாதத் தால் கீழே தள்ளி, அத்திருப்பாதத்தை அந்தப் பூதத்தின் முதுகில் ஊன்றித் தேவர்களனைவரும் துதிக்கும்படி நின்றருளினார்.

அங்ஙனம் முயலகனைத் தள்ளிமிதித்து அதன் முதுகின் மீது நின்ற பரமனைக்கண்ட முனிவர்கள் நெருப்பெழ விழித்து, "அந்தோ! நாம் உண்டாக்கி அனுப்பிய அனைத்தும் அழிந் தனவேயன்றி இச்சிவன் இன்னமும் இறந்தானில்லையே" எனவருந்தி உலகனைத்தையும் அழித்தருளும் சங்கார மூர்த்தி அழியவேண்டுமென்று அளவற்ற சாபங்களை உரைத் தனர். தம்முடைய தவத்தினால் செருக்குற்றிருந்த முனிவர் கள் உரைத்த சாபங்கள் அனைத்தும் எம்பெருமான் திருமுன்பு செல்லும் ஆற்றலற்றவையாய் ஊழித்தீயின் மீது செல்லும் பஞ்சுபோல அழிந்தன. தங்களது சாபமொழிகளும் பயனற்ற தாக முடிதலும் அம்முனிவர் அனைவரும் மேலும் செய்யக் கூடிய செயல் ஏதுமின்றி வாட்டமும் நாணமுங்கொண்டு, நடுக்கத்துடன் பாவமும் பழியும் பூண்டு வாளாநின்றனர்.

இச்சமயத்தில் சிவபெருமான் பாதத்தால் ஊன்றிய முயலகன் என்ற பூதம் மெல்ல மெல்ல உடலைத் தூக்கித் தூக்கி அசையலாயிற்று. இதனைக் கண்ட இறைவர் அதன் மீது நின்றுகொண்டே மஹாதாண்டவமாகிய நடனத்தைச் செய்தார். அந்தத் தாண்டவத்தைப் பார்த்து முனிவர்கள் யாவரும் பயத்தால் நடுங்கி, பிரமித்து, திகைத்துத் தலை கவிழ்ந்து கீழே விழுந்தார்கள். சிவ தாண்டவத்தைத் தரிசித்த பிரமதேவனும் திருமாலும் கண்களித்துத் துதித்து வணங்கி

மனமகிழ்ந்து அருகில் நின்றனர். மற்ற தேவர்களும் வணங்குவாரைப் போல வீழ்ந்தனர். அப்பொழுது அருளுடன் நடனஞ் செய்யும் இறைவன் இவ்வுலகமனைத்தும் அஞ்சும் தன்மையையும், அயர்ந்து விழுந்த தேவர்களது நிலையையும் கண்டு, திருநடனத்தை நிறுத்தியருளத் தேவர்களும் இந்திரனும் அன்புடன் எழுந்து வணங்கி அருகில் எய்தினர்.

மாதொருபாகனுன இறைவன், தன்னை மதித்திடாது வேள்வியே பெரிதென்று கொடிய பாவத்தையே சேர்த்து வந்த முனிவர்கள் அனைவருக்கும், சிறிதே நல்லுணர்ச்சியைக் கொடுத்தருளினுர். உடனே அவர்கள் நல்லறிவு பெற்று விரைந்து எழுந்து பெருமானை வணங்கி, "தேவாதிதேவனும் கருணைக்கடலுமான மஹாதேவனே! தாங்கள் வெற்றியுடன் விளங்கவேண்டும். பொல்லாத துன்பமே செய்த எங்களைக் காத்தருளவேண்டும். எங்களது பெரும் பிழைகள் அனைத்தையும், நாதனே, நீ பொறுத்தருள வேண்டும்" என்று தோத்திரஞ்செய்து கொண்டு மீண்டும் மீண்டும் இறைவரது திருவடிகளில் விழுந்து வணங்கினுர்கள். அங்ஙனம் வணங்கி நின்ற முனிவர்களைப் பார்த்துப் பரமசிவனுர், கருணையுடன் கூடியவராய், ஓ முனிவர்களே ! நீவிர் இதுவரை என்னை மதியாது புத்தி மோஹங்கொண்டு தவருன வழியில் சென்று இருந்து விட்டீர்களன்றே ? இனி அதனை விடுத்து நமது கட்டளைப் படி விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்து வேறெங்கும் மனதைச் செலுத்தாது எப்பொழுதும் என்னையே பூஜை செய்து வருவீர்களாக" எனத் திருவாய்மலர்ந்தருளி அம்முனிவர்களை அங்கேயே நிறுத்தித் தயாநிதியான பரமேசுவரன் திருமாலையும் பிரமதேவனையும், மற்ற இந்திராதி தேவர்களையும் அவரவர்களது இருப்பிடங்களுக்குச் செல்லப் பணித்துத் தம் திருக்கயிலையைச் சென்றடைந்தார். உரிக்கப்பட்ட புலியின் தோல் முதலாக உள்ளவைகளை எங்கள் பெருமான் தரித்ததுவும், தாருகாவனத்தில் அந்நாள் நிருத்தஞ் செய்ததுவும் மற்றுள்ளவைகளையும் விரித்துரைத்தோம். ஓ தட்சனே !

இனி பெருமான் யானையின் தோலைப் போர்த்திக் கொண்ட வீரச்செயலை உரைக்கின்றோம், கேட்பாயாக'' என்று ததீசி முனிவர் மேலும் கூறலானார்.

13. யானையின் தோலைப் போர்த்திக் கொள்ளுதல்

''முன்னொரு காலத்தில் மிகக் கொடியவனும், யானைவடிவங்கொண்டவனுமான கஜாஸுரன் என்பவன் பிரம்மதேவனைக் குறித்து கடுமையான தவத்தைச் செய்தான். அவனது தவத்துக்கு மகிழ்ந்து பிரமதேவன் அவன் முன்னர் தோன்றி உனக்கு வேண்டுவது யாதென்று கேட்டார். கஜாஸுரன் ''எனக்குப் பேராயுளும் ஆற்றலும் வெற்றியும் தருதிர்'' என்றான். நான்முகன் நகைத்து ''நீ விரும்பிய அனைத்தும் அளித்தேன். ஆனால் பகையுடன் அந்திவண்ணனான சிவபிரான் மீது செல்லாதே. செல்வாயாயின் அந்நாளில் உன் வரமனைத்தும் அழியும்'' என்று கூறி மறைந்தார். அப்பொழுது கஜாஸுரன் ஈசன்மீது செல்லாது மற்றவர் மேல் சென்று கடும்போர்புரிந்து எல்லா உலகங்களையுமழித்துத் துன்பமே செய்வோம் என்று எண்ணினவனாய் அங்ஙனமே பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களைப் போர்முனையில் வெற்றி கொண்டும், இன்னும் மற்றதேவர்களையும், ரிஷிகளையும் துன்புறுத்தியும், இந்திரனை வெற்றி கொண்டும் அனைவருக்கும் கொடுமையே செய்து வந்தான்.

ஒரு சமயம் அக்கொடியவன் பூவுலகிலிருந்துகொண்டு மனிதக்கூட்டம் முழுமையும் அழித்துக் கொடிய விஷம்போல உலாவுதலும், இவனது செயலையறிந்த நல்ல தவமுடைய முனிவர்கள் பேரச்சத்துடன் ஓடிக் காசியம்பதியை அடைந்தனர். அரிய தவத்தினையுடைய முனிவர்கள் காசியைச் சென்றடைதலும் அவர்களைத் துரத்திக்கொண்டு கயாசுரனும் அங்கு வந்து சேர்ந்தான். அந்த மஹரிஷிகள் அனைவரும் முன்னிலும் அதிகப்பயமடைந்தவர்களாய் காசி நகரவாசிகளுடன் நெருங்கி விரைந்து மணிகர்ணிகையை

அடைந்து விச்வநாதருடைய சிறந்த அற்புதமான கோவிலுக்குள் சென்றனர். அங்குப் பரமேசுவரனை வணங்கி, "ஐயனே! உமது திருவடிகளை அடைக்கலமென அடைந்தோம். கொடிய யானை உருவமுடைய கஜாஸுரன் உலகினையழித்து எங்களையும் கொல்ல வருகின்றான், எங்களைக் காத்தருள்வீராக" என்று துதித்தனர்.

இங்ஙனம் விசுவநாதருடைய ஆலயத்துக்குள் அவ்வடியவர்கள் கூட்டமாகச்சென்று அடைக்கலம் என்று அடைந்ததைக்கண்ட கயாசுரன் கோபித்துப் பார்த்து ஆலயத்தின் வாயிலையடைந்து இடிமுழக்கம்போலக் கர்ஜித்தலும் கோயிலுக்குள் சென்ற முனிவர்கள் அனைவரும் உள்ளங்குலைந்து அங்கு எழுந்தருளியிருந்த சிவபெருமானைக் கட்டிக்கொண்டு மயக்கமடைந்தனர். கஜாஸுரனும் அவர்களைக் கொல்வதற்காகநெருங்கி வந்தான். தம்மைச் சரண் அடைந்தவர்களைக் காக்கும் பரமேசுவரன் அனைத்தையுமழிக்கின்ற ஸர்வஸங்கார உருவினை எடுத்து அண்டத்தின் மேலுச்சியில் முடி தொடும் வண்ணம் உயர்ந்தார். வானுலகத்துத் தேவர்களும், மற்றும் முனிவர்களும் கண்திறந்து பார்த்தற்கரியதெனக் கண்களை மூடினவராய் வருந்தும்படி பெருமைவாய்ந்த ஆயிரங்கோடி சூரியர்கள் ஒருங்கே திரண்டாற்போன்ற அளவிடற்கரிய பேரொளியுடன் இறைவர் காணப்பட்டார். இங்ஙனம் பெரிய உக்கிரவடிவங்கொண்ட சிவபெருமான் ஒருமுறை வீரட்டஹாஸம்செய்து உரத்தகுரலில் அக்கொடியவனை அதட்ட, ஜகதீசனுடைய அந்த ஒலியானது அகிலவுலகங்களையும் நடுங்கவைத்துப் பலகாலம் விலகாமலிருந்தது. பிரமன் மால் முதலிய சிறந்த தேவர்கள் அவ்வோசையைக் கேட்டவுடன் வெருட்சியடைந்தார்கள்.

இவ்விதமான உக்கிரவடிவத்துடன் இறைவர் கயாசுரனெதிரே செல்லுதலும் அவரைச் சிவபெருமான் என்று அறிந்தும், கர்வத்தாலும் கோபத்தாலும் பிரமனுரையை மறந்து அவரோடு போர்செய்வானாயினன். அவனைத் தீயெழப்பார்த்து,

தன்னுடைய ஒரு திருப்பாதத்தால் உதைத்துத் தள்ளுதலும் கயாஸுரன் பதைபதைத்துக் கவிழ்ந்து பூமியில் விழுந்தான். உடனே மற்றொரு திருப்பாதத்தால் அவன் தலையை மிதித் தனர். பின்னர் ஒரு பாதத்தினை அந்த கஜாஸுரனின் தொடையில் வைத்து, *உமாதேவியாரும் அஞ்சும் வண்ணம் தமது இரு கர நகங்களால் அந்த யானையின் முதுகினைப் பிளந்து நான்கு கால்களும் பக்கங்களிற் பொருந்த குரு தியினைக் கக்கிப் பேரிரைச்சலிட அதன் தோலை உரித்தனர்.

மதித்து வேழமாந் தானவன் எதிர்தலும் வடவை
உதித்த வன்னியும் அச்சுற எரிவிழித் தொருதன்
கதித்த தாள்கொடு தள்ளவே கயாசுரன் கவிழ்ந்து
பதைத்து வீழ்தலும் மிதித்தனன் சிரத்தையோர் பதத்தால்.

ஒரு பதத்தினைக் கவானுருத் திருகரத் துகிரால்
வெரிநி டைப்பிளந் தீரிரு தாள்புடை மேவக்
குருதி கக்கியே ஓலிட அவுணர்தங் குலத்துக்
கரியு ரித்தனன் கண்டுநின் றம்மையுங் கலங்க.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம்,
ததீசி உத்தரப்படலம், 145-146

கரியநிறம் வாய்ந்த கஜாஸுரனை அஸுரன் இறக்கும் வண்ணம் குளிர்ச்சிவாய்ந்த தோலினையுரித்தலும், உலகின் கண் உள்ள உயிரனைத்தும் சிவபெருமானுடைய திருமேனியிற்

---

*உமாதேவியாரும் அஞ்சும்படி இறைவர் யானையின் தோலை உரித்தனர் என்பதை

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே.

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பாடலாலும் அறியலாம்.

பொருந்திய ஆயிரங்கோடி சூரியருக்கொப்பான அந்தப் பேரொளியைப்பார்த்துத் தங்கள் விழிகளனைத்தும் ஒளியிழந்து சுழல வருந்தின. தேவர்களுடைய கண்களும்கூட மங்கிப் போயின. அங்ஙனம் உயிர்கள் கண்ணொளியின்றி வருந்துதலை அவைகளுக்குத் தலைவராகிய சிவபெருமானுணர்ந்து அவை கட்கு மீண்டும் கண்ணொளியை அருள்செய்யுங் காரணமாக யானையை உரித்த தோலினைத் தமது தோளின்மீது போர்த் திக்கொண்டனர். தனக்கொப்பாரும் மிக்காரும் இல்லாத நிருமலன் தமது திருமேனிச் சுடரினை யானையின் தோலினால் மறைத்தருளி உலகத்தவர் அனைவரும் மீண்டும் கண்ணொளி பெறுமாறு திருவருள் சுரந்தனர். பிறகு எல்லோரும் பயமற்ற வர்களாகி இறைவனைப் பணிந்தெழுந்தபோது, கயாஸுரனு டைய இரத்தமும் எலும்புகளும் தசையுங்கண்டு அவனை இறைவர் கொன்றருளினார் என உணர்ந்து அலைவீசுங்கடல் போல ஓயாது ஆடிப்பாடி ஆரவாரஞ்செய்தனர்.

ஓ சம்புவே! மஹாதேவரே ! வணங்கினவர்களின் துக்கங் களைப் போக்குகின்றவரே ! தாங்கள் வெற்றியுடன் விளங்க வேண்டும். அனைத்து உலகங்களுக்கும் தலைவரே ! ஸச்சிதா னந்த மூர்த்தியே! கஜாஸுரன் தோலைப் போர்த்திக்கொண்ட தங்களை எந்த அறிவாளிகள் புகழ்ந்து பாடுகின்றார்களோ அவர்களுக்கு எங்கும், எப்பொழுதும், எவர்களிடத்தும் அச்சம் என்பதே ஏற்படாதிருக்க அருள்புரியவேண்டும். மேலும் அந்த அறிஞர்கள் எல்லா மக்களாலும் பூஜிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டினார்கள். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமகருணாமூர்த்தியும் அங்ஙனமே வரமளித்துவிட்டு மறைந்தருளினார். காசிவாசிகளும் முனிவர் களும் தேவர்களும் இறைவருக்கு விசேடமான பூஜைகள் செய்வித்துத் துதித்துச் சென்றார்கள். ஓ தட்சனே ! விச்வாதி கரான பரமேசுவரன் ஸகல தேவர்களுக்கும், மஹரிஷிகளுக் கும், மற்றுமுள்ள உலக மக்களுக்கும் துன்பம் விளைவித்துவந்த கொடியவனான கஜாஸுரனைக்கொன்று அனைவரையும் காத்தருளி, யாவரும் அறியும்படி அவனுடைய கடினமான

தோலைத் தரித்துக்கொண்டது அவருக்குப் பெருமையாகுமே யன்றி இழிவாகுமோ? இனி பெருமான், பிரம்மகபாலத்தை ஏந்திய தன்மையைக் கூறுகிறேன், கேட்பாயாக''.

14. பிரமதேவனின் மண்டையோட்டை ஏந்தியது

''முன்பு ஒரு சமயம் திருமாலும் நான்முகனும் மேருமலையின் உச்சியில் ஒரு சிகரத்தின் மீது இருந்தார்கள். அச்சமயம் அவர்களிடம் தேவர்களும் முனிவர்களும் அளவற்றவர்கள் வந்து அவர்களை வணங்கி கரங்களைக்குவித்து ''எல்லா தேவர்களுக்கும்சிறந்தவரும் மூவருள், முதலானவரும், ஆதியும் அந்தமும் நடுவும் இல்லாத தேவரும், வியாபகரும், பிரபுவும், அனைத்து உயிர்க்கும் உயிராக இருப்பவரும், பரஞ்சோதியும், பரமாத்மாவும், பராபரரும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐம்பெருந்தொழில்களையும் நடத்துபவருமான தேவன் யார்?'' என்று கேட்டார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட பிரமதேவன் எம்பெருமானுடைய மாயையால் கட்டுண்டு ''நானே அந்த தலைமை வாய்ந்த பிரம்மமாகும். நானே எல்லா உலகங்களையும் படைப்பவன். என்னாலேயே அவை காக்கப்படுகின்றன, முடிவில் என்னிடமே அடங்கப்போகின்றன'' என்று கூறினர். இதனைக்கேட்ட திருமால் பிரமனைப் பார்த்து ''பிரமதேவனே, உன்னுடைய பேச்சு மிகவும் நன்றாக உள்ளது. முதலில் உன்னைப் படைத்து உலகத்தையும் படைத்தது யார் என்பதை அறியாயோ? அப்படிப்பட்ட என்னைத் தவிர வேறு எவரும் பரப்பிரம்மமாக மாட்டார்கள். ஸகல உலகும் விஷ்ணு ஸ்வரூபம் என்று கூறப்படுவதால் நான்தான் பரப்பிரம்மம்'' என்று கூறினர். இப்படி அவர்கள் இருவரும் அளவற்ற தினங்கள் வாதாடிப் பகையாய் ஒப்பற்ற தருக்கம் செய்ய, தேவரும் முனிவரும் நம்மால் அல்லவோ இத்தகைய பூசல் விளைந்தது என்று அச்சத்துடன் கூறிக்கொண்டே தங்கள் இருப்பிடங்களைச் சென்றடைந்தனர். முனிவராதியர் சென்ற பின்னும் அரியும் அயனும் தொடர்ந்து சண்டைசெய்த

காலத்து வேதமும் பிரணவமும் வேறு வேறு உருவங் கொண்டு அங்குத் தோன்றி, "ஓ பிரம்மதேவனே! ஓ திருமாலே! நீங்கள் இருவரும் ஏன் இப்படி வீண் வாதம் செய்கின்றீர்கள். எப்பொழுதும் நிலைபெற்று உயிருக்கு உயிராய் அனைவருக்கும் தந்தையாய் பரமாத்மாவுமான அந்த மஹேச்வரனே பரப்பிரம்மமாவார். அவரே பிரபஞ்சங்களுக்கு மேற்பட்டவரும் ஸகல பிரபஞ்ச ஸ்வரூபியும் ஆவர். உருத்திரர் என்று பெயர்கொண்ட அவரே மிகப்பெருமை பொருந்திய *மஹரிஷியும் ஆவர். [1]ஆகாசமத்தியில் விளங்கும் அந்த சம்புவே அனைத்து ஐச்வர்யங்களுடன் கூடியவர். [2]அணுப் பொருள்களைக் காட்டிலும் அணுவானவர். பெரிய வஸ்துக் களைக் காட்டிலும் பெரிதானவர். [3]பார்வதியோடு கூடிய அந்தப் பிரபுவே அறிவுக்கறிவாயிருந்து இயக்குபவர். மேல், கீழ், நடு என்று சொல்லப்பட்ட மூவுலகங்களையும் இந்திரன் மற்றும் தேவர்களையும் அவரே உண்டாக்கினவர்" என்று கூறின. இந்த வேத வசனங்களை அவர்கள் இருவரும் முன்ன மேயே உணர்ந்திருந்தும் மோஹத்திற்கு வசமாகி அவற் றைப் பொருட்படுத்தாமல் மீண்டும் போர் புரிதலிலேயே ஈடுபட்டார்கள். அதனைக் கண்டு பரமாத்மாவும் தேவ தேவனுமான பரமேசுவரன் அவர்கள் இவ்விதம் அஹங்காரத் திற்கு வசமாகிப்போரிடுவதைக்கண்டு அதைத் தவிர்க்க கோடி சூர்யப் பிரகாசமுள்ள நிர்மலமான சோதி வடிவாகி வானின்

---

*"விச்வாதிகோருத்ரோ மஹர்ஷி:" என்ற சுவேதாசுவதர உபநிஷத் வாக்யத்தின் கருத்து இங்கே கூறப்பட்டுள்ளது.

1. இது "ஸர்வைச்வர்ய ஸம்பன்ன: சம்புராகாச மத்யக:" என்ற அதர்வசிகோபநிஷத்தின் கருத்தாகும்.

2. இது "அணோரணீயான் மஹதோர்மஹீயான்" என்ற கடோபநிஷத் வாக்கியத்தினை ஆதாரமாகக் கொண்டது.

3. "உமா ஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும்" என்ற கைவல்ய உபநிஷத்மந்திரப்பகுதி இதற்கு ஆதாரம்.

நடுவில் வந்து தோன்றினர். மாயாமயக்கம் ஒழியாத பிரமனும் திருமாலும் சிவபெருமானென்று கருதாமல் இவ் வொளியாதோ என மருண்டனர். அப்பொழுது பரமசிவன் பிரம்மவிஷ்ணுக்களான அவ்விருவருக்கும் பார்வதியுடன் கூடிய தமது அதி அற்புதமான திருவுருவத்தைக் காட்டியருளினர். இறைவன் தோன்றியதைக் கண்ட திருமாலானவர் சிறிது மோஹம் தெளிந்தவராகி அம்பிகாபதியும் மஹா தேவனுமான பெருமானைப் பார்த்து வேகமாய் எழுந்து அடிக்கடி நமஸ்கரித்து பல தோத்திரங்களால் துதித்துத் தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

பிரம்மதேவன் ஒரு சிறிதும் மதிமயக்கம் தெளியாதவனாகி எமது தந்தை வந்தனர் என்று திருமாலை ஒப்ப அன்புடன் எழுந்து வணங்காமல் தனது *ஐந்து முகங்களில் உச்சியிலுள்ள முகத்தால் சிவபெருமானை இகழ்ந்தனன். அதனைக் கண்டு கருணைக்கடலான சிவபெருமான் சீற்றங்கொண்டாரில்லை. சிறிது கோபங்கொண்டாலுங்கூட உலகமும் உயிரும் அழியுமன்றோ? பிரம்மதேவனுடைய செருக்கினைத் தொலைக்கவும் மற்ற தேவர்களுடைய அஹங்காரத்தை ஒழிக்கவும் முனிவர்களின் இறுமாப்பைப் போக்கவும் மிகுந்த கருணையினால் வேதநாயகனான சிவபெருமான் வைரவக்கடவுளை உண்டாக்கினர். அப்பொழுது வைரவமூர்த்தியும் உடல் முழுவதும் பூசிய விபூதியை உடையவராகியும், நீலநிறம் வாய்ந்த ஒளி பொருந்திய திருமேனியும் சிலம்புகள் முழங்கும் திருவடியும், விஷத்தினைக் கக்குகின்ற சிறந்த பாம்புகளைத் தரித்தும், அனந்தகோடி தலைமாலைகள் அசையும் மார்பும், சூலமும் மழுவும் பாசமும் உடுக்கையும் அமைந்த தோள்களும், வட்டமாயும் பயங்கரமாயும் பிரகாசிக்கின்ற மூன்று கண்களும், பிறைச்சந்திரனைப் போன்ற ஒளி பொருந்திய

*முதலில் பிரமதேவனுக்கும் ஐந்து முகங்கள் இருந்தன. வைரவமூர்த்தியால் ஒரு தலை கொய்யப்பட்ட பிறகே நான்முகனானான்.

பற்களும், தீயின் நிறமான சடைகளால் மிக்க பயங்கரத் தோற்றமும், சீற்றம் காட்டும் நகையும் ஆகிய இவைகளுடன் கூடியவராயும் மிகுந்த உக்ர வடிவத்தோடு தோன்றினுர்.

அங்ஙனம் தோன்றிய வைரவரை நோக்கிக் கருமை பிரகாசிக்கின்ற கழுத்திணையுடைய எம்பெருமான் "ஓ! வைரவ! நமது மாயையால் மோஹம் அடைந்து பிரம தேவனது உச்சிச் சிரமானது நம்மை இகழ்ந்தது. அதனை விரைவாகக் கிள்ளிக் கையிலேந்தி அவன் உயிரை அளித்து, அஹம்பாவம் கொண்ட முனிவருடையவும் தேவருடையவும் ஊர்கள் தோறும் சென்று, அவர்களுடைய இரத்தத்தைப் பிச்சையாக வாங்குவாய். அங்ஙனம் வாங்கும் சமயத்தில் அவர்கள் இறந்தால் அவர்களுடையி உயிரை அளித்து, அவர்களது அஹங்காரத்தை ஒழித்துப் பிறகு இந்த அண்டத்திற்கு மேலுள்ள உனது இருப்பிடத்திற்குச் சென்று மக்கள் கூட்டமும் தேவர்குழாமும் எங்கும் துன்புருவண்ணம் காப்பாயாக" என்று அவரை அனுப்பிவிட்டு சிவபெருமான் தனது நிர்மலமான சோதியுள் புகுந்தருளினுர்.

இறைவரது ஆணையைச் சிரமேல் தாங்கிய வைரவக் கடவுள் மிகுந்த அட்டஹாஸம் செய்துகொண்டு மிகவும் அச்சந்தரும் தோற்றத்துடன் *பிரம்மதேவனின் ஐந்தாவது தலையைத் தனது நகத்தின் நுனியால் கிள்ளினுர். பிரம்ம தேவன் உடனே இரத்த வெள்ளத்தில் விழுந்து இறந்தான். வைரவக்கடவுள் தனது நெற்றிக்கண்ணின் தீயினுல் இரத்த வெள்ளத்தை வற்றச்செய்து தனது கருணையுடன் கூடிய

---

*நல்ல மலரின்மேல் நான்முகனுர் தலை
ஒல்லை அரிந்ததென்று உந்தீபற
உகிரால் அரிந்ததென்று உந்தீபற.

என்ற திருவாசகம் - திருவுந்தியார், 18ம் பாடல் இந்த செய்தியைக் கூறுகிறது.

பார்வையினுல் பிரம்மதேவனைப் உயிர்பெற்றெழும்படிச் செய்தார். உயிர்பெற்றெழுந்த பிரம்மதேவன் நல்லுணர்வு பெற்று, வைரவக்கடவுளை வணங்கி, "பெருமானே! நான் சிவபெருமானுக்குப் பெருங்குற்றங்கள் புரிந்தேன். அதன் பயனையும் அடைந்தேன். உமது பேரருளால் எனது ஆணவம் அடங்கி நல்லறிவும் பெற்றேன். சிவபெருமானை இகழ்ந்து பேசிய என் உச்சித்தலை தூய்மைபெறவும், அதனைப் பார்க்கும் பொழுதெல்லாம் அடியேனின் மாயை நீங்கவும் இதனைத் தேவரீர் உமது திருக்கரத்தில் ஏந்தியருள் புரிக!" எனப் பிரார்த்தித்து நின்ருர். அருட்கடலான வைரவரும் அங்ஙனமே ஆகுக எனத் திருவருள் புரிந்தார்.

மீண்டும் வைரவக்கடவுள் காலவேகன், அக்னிமுகன், சோமகன், ஆலஹாலன், அதிபலன் முதலிய பல பூதர்களைப் படைத்தார். பூதகணங்கள் தம்மைப் புடை சூழ்ந்துவர, செருக்குற்றிருந்த முனிவர்கள் வாழும் இடங்களும், பின் தேவர்கள் வாழுமிடங்களும் சென்று, அவர்களின் இரத்தத்தைப் பிச்சையாக ஏற்றுப் பின்னர் அவர்களை உயிர்ப்பித்தருளினுர்.

பிறகு வைரவக்கடவுள் திருமால் வாழும் வைகுண்ட உலகம் சென்ருர். அங்கு விடுவசேனன் என்ற திருமாலின் காவலன் பூதகணங்களைத் தடுத்துப்போரிட, வைரவக்கடவுள் அவனைத் தமது சூலத்தில் கோத்து எடுத்துக்கொண்டு உள்ளே சென்று திருமாலின்முன் நின்ருர். நீண்ட சூலப் படையேந்திய வைரவர் தம்முன் வரக்கண்ட திருமால் பூதேவி ஸ்ரீதேவி என்ற இருதேவியர்களுடனும் எழுந்து அவ்வைரவக் கடவுளின் திருவடிகளில் வணங்கி, "எந்தையே! தேவரீர் இங்கெழுந்தருளியது யாதைக்கருதியோ" என அச்சத்துடன் வினவினுர். "நாம் இங்கு வந்தது பிச்சைக்கேயாம். நினது அழகிய தலையிற்பொருந்திய இரத்தத்தையே அளிப்பாயாக" என வைரவர் விடையிறுத்தார். திருமாலும் நல்லதெனத் துதித்து தனது நெற்றியிலுள்ள ஒரு நரம்பைத் தனது

செவ்விய நகத்தினுல் கீறி அதனுல் பெருக்கெடுத்த இரத்த வெள்ளத்தை வைரவரது திருக்கையில் உள்ள கபாலத்தில் சொரிந்தார். இவ்வாறு பதினுயிரம் ஆண்டுகள் இரத்தத்தைச் சொரிந்தாராயினும் பிரமகபாலம் அரைப்பங்கு கூட நிரம்ப வில்லை. இரத்தம் வருதலும் ஒய்ந்து திருமால் மயக்க மடைந்து கீழே விழுந்தார், தங்கள் கணவனது நிலையைக் கண்டு வருத்தமுற்ற திருமகளும் பூமகளும் வைரவரது செவ்விய திருவடிகளையடைந்து வணங்கித் திருமாலை உயிர்ப் பித்தருளுமாறு வேண்டினர். அவர்களது வேண்டுகோளை யேற்ற வைரவர் ''அஞ்சாதீர்'' எனக்கூறித் திருமால் பிழைத் தெழும்படி அருளினர். அத்துடன் அத்திருமாலின் நெஞ்சிற் பொருந்திய மயக்கத்தினையும் நீக்கியருளினர். பின்னர் திருமால் சூலத்திற்கிடந்த விடுவசேனனையும் உயிர்ப்பித் தருளுமாறு வேண்ட அங்ஙனமே வைரவர் சூலத்தில் இறந்து கிடந்த திருமாலின் சேனுதிபதியான விடுவசேனனை இறக்கி அவனது உயிரை அளித்துக் கருணைசெய்தார்.

திருமாலின் உலகத்தினைவிடுத்து வைரவர் பூதகணங்கள் நெருங்கிவர அண்டமுகட்டிலுள்ள புவனத்தினையடைந்து பலவண்டங்களையும் காத்திருந்தனர். உலகினையழிக்கின்ற சங்காரகாலத்தில் சிவபெருமானுடைய கட்டளையால் இவ் வைரவர் தேவர்களது தலைகளையும் பிரமன் முதலியவர்களது தலைகளையும் அறுத்து, உயிர்முழுதுமழித்து, புவனங்கள் அனைத்தையும் நுண்ணிய பொடியாகுமாறு செய்வார். இங்ஙனம் புவனமனைத்தும் அவற்றிற் பொருந்திய உயிர் களும் முடிவாயழியும் சுடலையில் வேதவடிவான நாய் வாகனத்திலேறிக்கொண்டு, சுடுகாட்டுச் சாம்பலைச் சரீரம் முழுவதும் பூசிக்கொண்டு, பயங்கரமான சப்தம் செய்கின்றவ ராய் அவ்விதமான பூதகணங்களால் சூழப்பட்டவராய், பராபர மூர்த்தியான சிவபிரானைத் தியானஞ்செய்து கொண்டு தாங்கமுடியாத பேரானந்தத்துடன் உலவுவார். இவ்வாறு பிரம்மதேவன் முதலானேர் ஆணவமுற்ற காலத்து இறைவர் அவர்களைத் தண்டித்து நன்னெறிப்படுத்தியது

மறக்கருணையேயன்றோ ?" இவ்வாறு ததீசி முனிவர் கூறி, மேலும் சங்கரனது செய்கைகளைக் கூறலானார்.

15. வேற்றுருக்கொள்ளுதல்.

"ஒரு சமயம் இந்திரன் சிவபிரானைத் தரிசிக்கத்தேவர் குழாம் புடைசூழச் செருக்குடன் திருக்கயிலாயமடைந்தான். இந்திரனுக்குப் புத்திபுகட்ட எண்ணிய இறைவர், ஒரு பூத உருவந்தாங்கித் தம் திருக்கோயிலின் வாயிலில் நின்றார். மிக்க ஆரவாரத்துடன் அங்கு வந்த இந்திரன் பூதவடிவைக் கண்டு "நீ யார் ? இங்குப்புதியவனாய் இருக்கின்றாய். உன்னை இது காறும் இங்குக் கண்டதில்லையே. பெருமானைத் தரிசிக்க இது சமயமோ ?" என அஹங்காரத்துடன் கேட்டான். பூத வடிவங்கொண்ட சிவனார் இந்திரனது வினவுக்கு விடையேது மளிக்காமல் அஞ்சத்தக்க பார்வையுடன் நின்றார். கோபங் கொண்ட இந்திரன், இந்த பூதம் கருவங்கொண்டது போலு மென்றெண்ணிக் கோபத்துடன் அதன்மேல் தனது குலிசா யுதத்தை எறிந்தான். உடனே மஹேச்வரன் பூதவடிவை மாற்றித் தமது உருத்திரவடிவங்கொண்டு நின்றார்.

இந்திரனுடைய அஹங்காரத்தினைப்பார்த்து அவனைத் தண்டித்தற்கு சிவபிரானது சடையினில் விளங்குகின்ற கங்கா நதியே மயிர்க்கால்தோறும்வந்து தோன்றினாற்போல உடல் முழுவதும் வியர்வைத்துளிகள் தோன்றின. இவனுடைய உயிரை வாங்குவோம் என்று சீற்றங்கொண்ட அக்கினியுடன் காற்றுமெழுந்து ஒன்றாய்ச் சென்றாற்போல விரைவாகப் பெருமூச்சுடன் கோபத்தீயும் புகையுடனுண்டாகியது. அருகி லடைந்து வச்சிராயுதத்தினை எறிந்த கொடியவனை எரிக்க நெற்றிக்கண்ணைத் தூண்டுவதுபோல நெறிக்கப்பெற்ற புருவ மும் நெற்றியையடைந்தது. "நாமழித்தற்கு இவன் என்ன முப்புரமோ அல்லது உலகின் கூட்டமோ அன்றி அவற்றிற் பொருந்திய உயிர்த்தொகைகளோ ? இவ்வறிவிலியை அழித் தலால் வசையுண்டாகும். இவனது செய்கையைப் பார்ப்

போம்'' என்றெண்ணிய இறைவர் வீர அட்டஹாஸஞ் செய்தனர். அவரது கோபத்தீயினுக்குத் துணைவரைப் போலச் செவ்விதழ்கள் துடித்தன. இடியிடித்தது போன்று தூயவாய் அதட்டியது. இரண்டு கண்களும் செந்நிறமடைந்தன. இங்ஙனம் அனைவருக்கும் முதல்வனான முக்கண்ணன் பிரமாதி தேவர்களும் மற்றுமுள்ள உயிர்க்கூட்டங்கள் அனைத்தும் அஞ்சுமாறு வெவ்விய உக்கிரவடிவங்கொண்டு நின்றது கண்ட இந்திரன் நடு நடுங்கினான். நெஞ்சம் பதைத்து அச்சமுற்றுப் பெருமானின். திருவடிகளில் அடியற்ற மரம்போல விழுந்தான். ''எம்பெருமானே! தேவரீரது மாயமனைத்தையும் எளியேன் அறியவல்லனோ ? திருமாலும் நான்முகனும் இன்னமும் தேர்ந்து உணராது அருமாலுற நின்ற பெருமான் தேவரீரன்றோ ? தங்கச்சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்த தயாநிதியே ! தீவினையையுடைய என்னாற்செய்யப் பட்ட பிழையினைப் பொறுத்தருள்வீராக'' எனப் பலமுறை துதித்து இந்திரன் வணங்கினான். தனது பிழையை உணர்ந்து வருந்தித் தன்னைச் சரணடைந்த இந்திரனிடம் கருணை கொண்ட எம்பெருமான் ''இந்திரனே ! அஞ்சற்க'' என அபயமளித்துத் தாம்கொண்ட சினத்தை மேற்குக்கடலில் எறிந்துவிட்டார். இந்திரனுக்கு விடையளித்து அவனை அவனுலகுக்கு அனுப்பியருளினார்.

16. ஜலந்தாசுரன் தோற்றமும் அழிவும்

மேற்குக் கடலில் சிவபெருமான் எறிந்த சினம் ஒரு ஆண் குழந்தையாகியது. வருணன் அக்குழந்தையை மகிழ்ச்சியுடன் வளர்த்து வந்தான். அக்குழந்தை அழுதபோது அவ்வொலி மண்ணுலகம், விண்ணுலகம் யாவற்றிலும் பெரிதாகக் கேட்டது. அவ்வொலி கேட்டு யாவரும் நடுங்கினர். பிரம்மதேவன் ''இவ்வொலி எவ்வாறு தோன்றியது'' என அறியும் பொருட்டுக் கடலையடைந்தார். வருணன் பிரம்மதேவனை வரவேற்றுத் தனது பாலகனைக் காட்டினான். பிரம்மதேவனும் அக்குழந்தையை வாங்கித் தன் மடியில் வைத்துக்கொண்டார்.

சிவபெருமானின் சினத்தாலுண்டான அக்குழந்தையும் அழுதுகொண்டே பிரம்மதேவனின் நான்கு தாடிகளையும் வலிமை மிகுந்த தனது கைகளாற்பிடித்து இழுத்தது. அதனால் பிரம்மதேவன் மிகுந்த துன்பமுற்றுக் கண்ணீர் சிந்தினன். பிறகு தனது தாடிகளை அப்பாலகனிடமிருந்து விடுவித்துக் கொண்டு, வருணனை நோக்கிக் கூறலாயினர்.

''கேளாய் வருணனே! இப்பாலகன் பரமேசுவரனின் சீற்றத்திற் பிறந்தவனாவான். அதனால் இவன் ஒரு கடவுளை நினையான். ஒருவரிடமும் எந்த வரத்தையும் கேட்டுப் பெருன். அன்றியும் ஒருவராலும் அழியான். இவனைக் கண்டால் மண்ணுலகம் வானுலகம் மற்றும் எல்லா உலகங்களும் அஞ்சும். எவருடைய சாபமும் இவனை வந்தடையாது. இவனுக்கு நானும் திருமாலும் இந்திரனும் மற்றும் அக்கினி முதலியவர்களும் அஞ்சுவர். இயமனும் அஞ்சுவான். கொடியவர்களான அசுரப்படைகளோடு நெடுங்காலம் அரசு புரிவான். சிவபெருமானையன்றி இவனை யாரே வெல்வார்''.

இவ்வாறு கூறிய பிரம்மதேவனைப்பார்த்து வருணன், ''ஐயனே! இவனுக்கு நன்மை தரக்கூடிய ஒரு பெயரினை உரைப்பாய்'' என வேண்டலும், ''நீ இவனைத் தாங்கி நிற்றலின் இவனது பெயர் *சலந்தரன்'' என்று கூறித் தனது இருப்பிடம்சென்ருர்.

வருணன் அப்பாலகனை அனேக காலம் சிறப்புடன் வளர்த்தலும் அவன் காளைப்பருவம் அடைந்தவுடன் பழைய அசுரர்கள் தன்னை நெருங்கிவர, எல்லாத் திசைகளையும் வென்றனன். அவன் புரிந்த கொடுமைகளுக்கு ஆற்ருத

---

*சலந்தரன் - வடமொழியில் ஜலந்தரன் என வழங்கும். ஜலம் - கடல், தரித்தல் - காத்தல். அல்லது ஜலம் - கடல்; தரித்தல் - தாங்குதல், எனவே ஜலந்தரன் - அதாவது ஜலத்தினுல் தாங்கப்பட்டவன் என்பதுபொருள்,

தேவர்கள் இந்திரனுடன் மேருமலைக்கு ஓடிச்சென்றனர். இந்திரன் ஓடிப்போதலும் சலந்தரன் தேவநாடனைத்தையும் அசுரர்கட்கு அளித்தனன். பின்னர் அசுரத்தச்சனையழைத்து சாலந்தரம் என்ற அழகிய நகரை நிர்மாணிக்கச்செய்து அசுரர்கள் துதிக்க அதில் இருந்துகொண்டு அரசுபுரிய லுற்றான். காலநேமி என்ற அசுரனின் மகளான விருந்தை (பிருந்தை) என்பவளை மணந்துகொண்டு அனைத்து இன்பங் களுடன் வாழ்ந்துவந்தான்.

ஒரு சமயம் சலந்தரன் மேருமலையில் மறைந்திருந்த தேவர்களை வெல்லக் கருதி அங்கே சென்றான். அதனைக்கண்ட தேவர்கள் நடுங்கி அச்சங்கொண்டு தங்களைக் காத்தருளுமாறு திருமாலை வேண்டினர். திருமால் சலந்தரனோடு இருபதினா யிரம் ஆண்டுகள் போர் புரிந்தும் வெல்ல முடியாமல் அவனைப் புகழ்ந்து சென்றார். இங்ஙனம் திருமாலும் சலந்தராஸுர னும் போர் செய்த காலத்து தேவர்களும் இந்திரனும் பயந்து நீலகண்டத்தினையுடைய சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கயிலையை அடைந்தனர். மேருமலையில் தேவர்களைக் காணாத சலந்தரன் அவர்கள் கயிலை சென்றனர் போலும் என்றெண்ணிக் கோபத்தோடு தனது சலந்தரபுரியை அடைந் தான்.

சிலகாலம் அங்குத் தங்கிவிட்டுத் தன் சேனைகளுடன் கயிலாயத்துக்குப் போருக்குப் போகின்றேன் என்று புறப்பட்ட சமயம் அவனது மனைவியும், நல்ல புத்தியுடையவளும், கொடி போன்றவளுமான விருந்தை "ஐயனே! நீர் திருக்கயிலை செல்ல வேண்டாம். சிவபிரான் அழிவற்றவர். அவருடன் போர் செய்யில் நீர் இறந்து படுவீர்" என்று தடுத்தனள். அவளது வார்த்தைகளைப் பொருட்படுத்தாதவனாய், தனக்கு வரக்கடவதாகிய ஆபத்தையும் அறியமாட்டாதவனாய்க் கோபமதிகரிக்கத் திருக்கயிலையை நோக்கிப் புறப்பட்டான். கார்காலத்து மேகத்தைப் போல ஆயுதங்களை வருஷிக்கின்ற சேனைக் கூட்டங்கள் புடைசூழக் கயிலையையடைந்த

சலந்தரனைக் கண்ட இந்திரனும் தேவர்களும் சிவபெருமானிடம் சென்று, "நீலகண்டப் பெருமானே! கொடியவனான சலந்தரன் எங்களைத் துன்புறுத்த, மேருமலையில் சென்று ஒளிந்து கொண்டோம். அங்கும் போருக்குவரத் திருமாலை நினைத்தோம். அவரும் வந்து போர் புரிந்துதோற்றுப் போய் அவனைப் புகழ்ந்து சென்றனர். அதனால் நாங்கள் இங்கு ஓடி வந்த செய்தியையறிந்து அவன் இங்கும் வந்துள்ளான். எமது பெருமானே! தேவரீர் அவனையழித்து எங்களைக் காத்தருளவேண்டும்" என்று பல முறை வணங்கிக் குறை யிரந்தனர்.

தேவர்களது முறையீட்டைச் செவிமடுத்த கண்ணுதற் பெருமான் அவர்களது துன்பத்தை நீக்கியருளத் திருவுளங் கொண்டார். தனது இயல்பான கருணைத் தன்மையால் ஒப்பற்ற ஒரு திருவிளையாடலை உள்ளத்திற் கருதித் திருக் கரத்தில் கமண்டலத்தையும் ஓலைக்குடையையும் ஏந்திக் கொண்டு, தண்டூன்றி ஒரு நரைத்த கிழ அந்தணர் வடிவங் கொண்டருளினார். தேவர்கள் தம் பின்னே மறைந்துவர, சிவபெருமான் திருக்கயிலாயமலையின் ஒருபுறத்தில் அசுரத் தலைவனான சலந்தரனை எதிர்கொண்டு செல்லத் தொடங்கினார். அசுரன் எதிர்ப்படலும் அவனை நோக்கி, "நீ யார்? எங்கிருப்பவன்? எவரைத் தேடிக்கொண்டு இங்கு வருகின்றாய்" என வினவச் சலந்தரன் "அழகிய தன்மையையுடைய மறையவனே! நான் மண்ணுலகில் உள்ளவன். வருணனின் மகனான எனது பெயர் சலந்தரன் என்பதாகும். தேவர்கள் அனைவரையும் வென்று இப்பொழுது பரமேசுவரனை வெல்லுவதற்காக வந்தேன்" என்று விடையிறுத்தான்.

இதனைச் செவிமடுத்த சிவபெருமானார் நல்லது நல்லது என்று புகழ்ச்சியைப்போல இகழ்ந்து நகைத்து உரைப்பாராயினார், "சலந்தரனே! கேட்பாய். நான் சிவபிரானின் பக்கத்திலிருப்பவன். பக்தர்களின் சத்துருக்களை அழிப்பவரும் பிநாகமென்ற வில்லைக்கொண்டவருமான பரமேசுவரனுடன் யார்தான் போர்செய்யமுடியும்? எவன் பரமேசுவர

னுடன் போர்செய்யவேண்டுமென்று மனதால் நினைக்கின்றானோ அவன் அவமானத்தையே அடைவான். அங்ஙனமிருக்க அவரை வெல்லுவதற்கு எவ்விதம் ஸமர்த்தனுவான்? நீ உயிருடன் இருக்கவேண்டுமென்று விரும்பினையாயின் உடனே வந்த வழியே திரும்பிப் போவாய்'' என உரைத்தருளினர். அந்தணக்கோலம் தாங்கிய இறைவர் இவ்வாறு கூற, ஆலோசனையற்றவனான சலந்தரன் பெருங்கோபத்தினால் கண்கள் தீப்பொறி பறக்க, உடல் வியர்க்கப் பெருமூச்சுடன்'' அந்தணரே! என்னைச் சிறியவன் என எண்ணினீர். எனது வலிமையை இப்போது காண்பீராக'' என்றான். அந்தணராகிய பெருமானும், ''ஓ அசுரனே! உன்னுடைய பலம் எத்தன்மையது ? அதைக்காணவே நாமும் இங்கு வந்துள்ளோம்'' எனக்கூறித் தமது திருவடியால் பூமியில் ஒரு சக்கரத்தைக் கீறியருளினர். அது உடனே ஒரு சக்கரப்படையாக மாறியது. அந்தணர் அசுரனை நோக்கி ''இச்சக்கரத்தை உனது வலிமையால் தூக்கித் தலைமீதுவைத்துத் தாங்குவாயா?'' எனவினவினர். அந்த சக்கரத்தைப் பார்த்து சலந்தரன் ''ஐயா ! அந்தணரே ! தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தவன் நான் ; கங்கையின் வெள்ளத்தையடக்கினவன் ; வடவைத்தீயை அவித்தவன்; திருமாலை வெற்றிகொண்டவன். இத்தகைய எனக்கு இச்சக்கராயுதத்தை எடுத்துச் சுமக்கும் செயல் கடினமோ?'' என்று சொல்லிக்கொண்டே அச்சக்கராயுதத்தைக் கைகளால் எளிதாக எடுக்க முயன்றான். அது மிகவும் கனமாக இருந்தமையால் அவனால் எளிதாக எடுக்க இயலவில்லை. எனினும் உடலெல்லாம் வியர்க்க, மூச்சுத்திணறப் பெருமுயற்சிசெய்து ஒருவாறாகத் தனது தலையின்மீது வைத்துக்கொண்டான். உடனே அச்சக்கரம் அவனது உடலை இரு கூறுகளாகக் கிழித்தது. அப்பொழுது பெருக்கெடுத்து வந்த இரத்தவெள்ளம் சிவபெருமானது ஆணையால் நரகலோகத்தைச் சென்றடைந்தது. சலந்தரன் இறந்தவுடன் பரமேசுவரன் தமது திருக்கண்ணினின்றும் தோன்றிய தீயினால் அசுரப்படைகளையெல்லாம் நீருக்கினர். சக்கராயுதமும்

ஒரு தெய்வ உருவமாகச் சிவபிரானிடம் வந்துசேர்ந்தது. அப்போது பெருமான் தமது பரமேசுவரவடிவத்தைக் காட்டி யருளத் தேவர்களும் இந்திரனும் விடைபெற்றுத் தமது உலகுக்குச் சென்றனர். பூரணானந்த மூர்த்தியான பெருமானும் தமது திருக்கோயிலுக்குச் சென்றருளினர்.

சலந்தரனின் மனைவியாகிய விருந்தையைத் திருமால் விரும்பினர். உடனே அவர் ஒரு முனிவர் வேடம் பூண்டு சலந்தரனின் அரண்மனைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு சோலை யில் வந்து தங்கினர். சலந்தரனின் மனைவி விருந்தையான வள் சலந்தரன் இறந்துபோன செய்தியை அறியாதவளாய் மிகவும் மனம் நொந்து அவன் இன்னமும் திரும்பிவர வில்லையே என்று வருந்தியவாறு இருந்தாள். கற்பிற் சிறந்த அந்த மெல்லியலாள் தன் கணவன் மீது கொண் டிருந்த பேரன்பினல் சோர்ந்து மிக இளைத்துத் துன்பத் தோடிருந்தன்ள். திருமாலைப் புணர வேண்டிய பழையவூழி னுல் ஒருநாள் விருந்தையானவள் அத்திருமால் வஞ்சகமாக முனிவர் வேடந்தாங்கியிருந்த அச்சோலைக்குள் உலாவ வந்தனள். விருந்தையானவள் வருதலும் வைகுண்டத்தில் திருமாலின் வாயில்காப்பாளர் இருவரும் வலிமை பொருந்திய இரண்டு சிங்கங்களாகிக் கர்ஜித்துக்கொண்டு அவளெதிரே வர அது கண்ட விருந்தை அச்சங்கொண்டு ஓடினுள். விருந்தை ஓடுதலும் சிங்க உருவங்கொண்ட வாயிற்காப்போர் விடாது தொடர்ந்து வர மிகவும் நடுங்கிச் சோலையினிடத்து முனிவர் வேடம் கொண்டு இருந்த வஞ்சகனுன மாயோனை அடைந்தாள். அவனும் அஞ்சேல் எனக் கூறி அபயமளித்த வுடன் சிங்கங்களாகிய காவலர்களும் ஓடிவிட்டனர்.

அப்பொழுது விருந்தை அந்த மாயமுனிவனை நோக்கி, ''பரமேசுவரனேடு யுத்தம் செய்யச் சென்ற என் கணவர் இது வரையிலும் திரும்பிவரவில்லையே. அவர் வெற்றி பெற்ருரா? அல்லது போரில் இறந்துபட்டாரா? தாங்களே கூற

வேண்டும்'' என வேண்டினாள். அப்போது திருமாலின் காவலர் இருவர் சலந்தராஸுரனின் உடலைக் கொண்டுவந்து அங்கே போட்டனர். அது கண்டு விருந்தையானவள் உள்ளம் பதைத்துத் தன் கணவனது உடல் மேல் வீழ்ந்து புரண்டு அழுதாள். அப்பொழுது திருமாலாகிய முனிவர் அவளைத் தேற்ற, விருந்தையும் அம்மாய முனியை வணங்கி, "ஐயனே! தங்களைப் போலச் சிறந்த தவம் புரியும் முனிவர் வேறு யாரும் இல்லை. தாங்களே என் கணவர் உயிர்பெற்றெழும்படிச் செய்ய வேண்டும்'' என மிகவும் வேண்டி நின்றாள். திருமாலும் மிக மகிழ்ந்து அவனது பிளவு பட்ட உடலைப் பொருத்தித்தாம் மாயமாக அவனது உடலில் புகுந்து எழுந்தார். அவரது காவலர்களும் அங்கிருந்து மறைந்தனர்.

இங்ஙனம் திருமால் மாயமாக சலந்தரனின் உடலிற் புகுந்து உயிர்பெற்றெழுந்தான் என்பதையறியாத விருந்தை தன் கணவனே உயிர்பெற்றெழுந்தான் எனப் பெரிதும் மகிழ்ந்து அவ்வஞ்சகனைத் தழுவினாள். அவ்வாறு தன்னைத் தழுவிய விருந்தையைச் சிறிது நேரமும் பிரியாமல் திருமால் காமவின்பத்தில் மூழ்கி நெடுங்காலம் அவளோடு அப்பூஞ் சோலையில் ரமித்து இருந்தார். அப்போது ஒரு நாள் சிவ பிரானது ஆணையால் தான் கொண்ட மாயையை மறந்து திருமால் உறங்குதலும் சலந்தரன் மனைவியாகிய விருந்தை பார்த்து, இவன் வஞ்சகன் மாயனே என்று மிகவும் அஞ்சி அவனைவிட்டு விலகிச் சென்றனள். அருந்ததியனைய தனது கற்பு அழிந்த தன்மையால் பெரிதும் வருந்தி மாயோனது மாயமனைத்தையும் தனது ஞான உணர்விலுல் உணர்ந்து உறங்குகின்றமாலோனை நோக்கி உரைப்பாளாயினாள்.

"மிக்க வன்மையுடையராகி சிங்கமாக வந்து என்னைத் துரத்திய நின் வாயிற்காவலர் நின் பகைவராகி நிற்க, நீ நிலவுலகில் அரசனாகப் பிறந்து குரங்குகள் சூழத்திரிவாயாக. எனது கணவனைப் போல வந்து என்னை அநேக நாட்கள் வஞ்சனையால் கூடினையாகையால் நினது கற்பினையுடைய

மனைவியைப் பகைவர் கவர்ந்து போக அதனால் பெரும்பழியை நீ சுமப்பாயாக'' என்று இவ்வாறு திருமாலுக்குச் சாப மிட்டாள். இந்தக் கொடிய சாபமொழிகளைக் கூறிய பிறகு விருந்தையானவள் தீ மூட்டி அதில் விழுந்து இறந்தனள்.

விருந்தை தன்னைப் பிரிந்ததைத் திருமாலால் பொறுக்க முடியவில்லை. மிகவும் வாடி வருந்தி அவள் விழுந்திறந்த தீயின் சாம்பலில் விழுந்து புரண்டு அவளது சாம்பலை உடல் மீது பூசி வருந்தினார். அப்போது தேவர்களும் பிரமதேவ னும் திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி மாயோனது செய்தியை உரைத்தலும், உமாதேவியார் தனது ஸஹோதரனின் நிலையை உணர்ந்து கருணை செய்து தான் ஒரு விதையினை உண்டாக்கித் தேவர்களிடம் கொடுத்து இதனைத் திருமாலின் எதிரே இடுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். உமாதேவியார் கொடுத்த வித்தினைப் பெற்றுக்கொண்ட பிரமனும் மற்ற தேவர்களும் அதனைத் தலைமீது தாங்கிச் சென்று பிருந்தையின் சாம்பலில் விதைத்துக் கடல் நீரை வார்த்தனர். அந்த விதை திருமாலின் எதிரில் துளசி என்னும் செடியாக வளர்ந்து பின் ஒரு அழகிய பெண்ணுருக்கொண்டு நின்றது. இந்தப் பெண்ணைக்கண்ட திருமால் விருந்தையின்மீது கொண்டிருந்த ஆசை நீங்கி இவள் மீது ஆசை கொண்டார். பிரமதேவனும் பிற தேவர் களும் துளசியென்ற அந்தப் பெண்ணைத் திருமாலுக்குத் திரு மணம் செய்து வைத்தனர். திருமால் அப்பெண்ணோடு தன் நகரடைந்து இன்பத்தில் மூழ்கியிருந்தார். அத்துளசியை மாலையாகவும் தரித்துக் கொள்ளலானார்.

17. திருமால் சக்கராயுதம் பெறுதல்

சலந்தராஸுரனை அழித்த அச்சக்கரப் படையைச் சிவ பெருமானிடமிருந்து பெற எண்ணினார் திருமால். எங்ஙனம் பெறுவது? பக்தியுடன் பூசிப்பவர்க்கே சிவனருள் கிட்டும் என்பதை உணர்ந்தவராதலின் சிவபிரானைத் தினந்தோறும்

ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு பக்தியுடன் அருச்சனை புரிந்து வழிபட்டு வந்தார். ஒரு நாள் ஒருமலர் குறையவே திருமால் தாமரை மலருக்குப் பதிலாகத் தனது கண்களில் ஒன்றைப் பெயர்த்து அதனையே மலராகப் பெருமானது திருவடியில் சாத்தினுர். இதனைக் கண்டு மகிழ்ந்த பரமேசுவரன் விருஷபாரூடராய்க் காட்சியளித்து கோடி சூர்யப்பிரகாசம் பொருந்திய அற்புதமான அந்த [1]சக்கரா யுதத்தைத் திருமாலுக்குக் கொடுத்தருளினுர். அதனுல் திருமால் நேமியான் என்ற பெயரும் பெற்ருர்.

அவன்சலந் தரனை வீட்டும்
ஆழியை வாங்கப் பன்னுள்
சிவன்கழல் வழிபட்(டு) ஓர்நாள்
செங்கணே மலராச் சாத்த
உவந்தனன் விடைமேல் தோன்றி
அப்படை உதவப் பெற்று
நிவந்தனன் அதனுல் வையம்
நேமியான் என்ப மாதோ.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசி உத்தரப்படலம், 297

தோஷயித்வா மஹாதேவம் நிஜாக்ஷ கமலார்ச்சனை: ।
சக்ரம் ஜலந்தரவதாய சிவேந பூர்வம்
யந்நிர்மிதம் ஸவித்ருகோடி ஸமான காந்தி ।

---

1. சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்(று) அருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன் காண் சாழலோ.

என்ற திருவாசகம், திருச்சாழல் 18-ம் திருப்பாடல் இங்கு கருதற்பாலது.

லப்த்வா ததத்புதமயம் ஹரிராப துஷ்டிம்
இத்தம் விபோர் விவிதரூப கதாமயோக்தா ||

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 23-ம் அத்தியாயம்,
ச்லோகம் 42½-43.

"இவ்வாறு, பகைவர்களின் முப்புரங்களையெரித்த இறைவர் வேற்றுருக் கொண்ட அருளின் தன்மையை உரைத்தோம். இனி, ஓ தட்சனே ! தன்னிகரற்ற இறைவர் இடபத்தின் மீது ஏறிவரும் தன்மையை உரைக்கின்றோம், கேட்பாயாக" எனத் ததீசி முனிவர் மேலும் கூறலானார்.

18. சிவபெருமான் இடபவாகனராதல்

"பிரம்மதேவனின் ஆயுளும் ஒழிந்து, திருமாலின் ஆயுளும் ஒழிந்தகாலத்தில் ஜீவராசிகள் அனைத்தும் குறையும். எங்கு பார்த்தாலும் அண்டங்கள் சிதைந்தழியும். எங்கும் பரவிப் பெருகிய அக்கினியே அனைத்துப் பொருள்களையுமழிக்கும். மஹாப் பிரளயம் எனப்படும் அக்காலத்தில் அனைத்துலகும் சுடுகாடாய்க் காணப்படும். அவ்விடத்தில் ஞானநாயகராகிய சிவபெருமான் தமது அருட்சக்தியார் காணும்படி திருநடனம் புரிவார். இத்தகைய அக்கினிப் பிரளயத்தைக் கண்ட தருமதேவதை அச்சமுற்று, "இனி நாமுமிறப்போம், இனிச் செய்வதென்னையோ" என்று ஆலோசனை செய்தது. எக்காலத்தும் அழிவற்றவரான சிவபிரானையடைந்தால் நாமும் அழியாமலிருப்போம் என்று துணிந்து தருமதேவதை சிவந்த கண்ணையுடைய அழகிய ஒரு இடபத்தின் (காளை மாடு) உருவெடுத்துச் சென்று பெருமானைச் சரணடைந்தது. "அடியேன் இப்பொழுது பிரளயத்தில் இறவாத தன்மையையும், சிறந்த ஆற்றலையும், தேவரீரைத் தாங்கும் வாஹனமாகும் பேற்றினையும் அளித்தருள வேண்டும்" எனப்பிரார்த்தித்து நின்ற தருமதேவதைக்கு

என்றும் சாவாத தன்மையையும் வாஹனமாய்த் தம்மைச் சுமக்கும் தன்மையையும் அளவில்லாத ஆற்றலேயுமளித்து, "தருமதேவதையே! உன்னே வாஹனமாக ஏற்றுக் கொண் டோம். நான்கு யுகங்களிலும் தருமத்தின் தன்மை இது வென்று நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று ஆகிய கால்களு டன் உலகிற் சஞ்சரிப்பாயாக. யாமெக்காலத்திலும் உன் னிடத்தில் நீங்காதிருப்போம். இடபவடிவங் கொண்டு எப்பொழுதும் நம்மிடம் இருப்பாயாக. [1]என்னிடம் பக்தி யில்லாமல் எப்படிப்பட்ட பெரிய புண்ணியங்களே எவர்கள் செய்தாலும் அவை பாவத்தின் பயனே அளிப்பதாக ஆகட்டும். என்னிடம் பக்தியுள்ள அடியவர்கள் செய்கின்ற பாவமும் புண்ணியத்தின் பயனே அளிப்பதாக ஆகட்டும். இடப வாஹனமாகத் தாங்குதலேயன்றி வேறு ஒரு வடிவு கொண்டும் நம்மைப் பூசிப்பாயாக" என்று சிறந்த அருளேப் புரிந்தனர். அன்று தொட்டு சிவபெருமான் தம்மைச் சிந்தை யிற்கொண்ட சிறப்பினேயுடைய அடியவர்கட்குக் காட்சியளிக் கும்போது இடபவாஹனத்தில் எழுந்தருளுகின்ருர். தரும தேவதையாகிய இடபத்துக்குத் தன்னேச் சுமக்கும் பேராற்றலே இறைவர் அளித்ததை அறிந்தன்ருே முப்புரங்களேயெரித்த போது *திருமாலும் இடபவாஹனமாகி எமது பெருமானேச்

---

1. அரனடிக்கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக்கன்பி லாதார் புண்ணியம் பாவமாகும்

என்ற சிவஞானசித்தியார் பாடற்பகுதி இங்கு கருதற்குரியது.

*திருமால் இடபவடிவெடுத்து இறைவனேச் சுமந்ததைப் பின்வரும் திருவாசகப் பாடலும் கூறும்.

கடகரியும் பரிமாவுந் தேரும்உகந் தேருதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ

—திருவாசகம், திருச்சாழல், 15-ம் பாடல்

சுமந்தனன். ஆதலால் அறக்கடவுளையும் திருமாலையும் இடப வாஹனமாகக் கொண்டது இறைவனின் பெருமைக்குக் குறைவாகுமோ? இனிக் கடலிடை தோன்றிய நஞ்சை உண்டனனென்று கூறினையே! அதன் உண்மையை உரைத் திடுவோம், கவனமாகக் கேள்'' என்று ததீசி முனிவர் இறை வர் விடமுண்ட வரலாற்றைக் கூறலானார்.

19. சிவபிரான் நஞ்சுண்டகண்டனாதல்

முன்பு ஒரு சமயம் தேவர்களும் அசுரர்களும் கொடிய போர் புரிந்தனர். இரண்டு பக்கத்திலும் பலர் இறந்ததைக் கண்டு அஞ்சிப் போரை நிறுத்தினர். பிறகு தேவர்கள் அசுர வரசனுடன் கலந்து ஆலோசனை செய்து அளவற்றகாலம் போர்புரிய எண்ணிப் பிரமதேவனையடைந்து, "நாங்கள் இறவாமல் பலகாலம் போரிடும் பொருட்டுப் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தினை எங்கட்கு எடுத்துத் தருவீராக'' என்று வேண்டினார்கள். பிரம்மதேவன் தேவர்களை அழைத் துக்கொண்டு திருமாலிடம் சென்று "தேவர்களும் அசுரர் களும் பலகாலம் இறவாமல் போரிடும் பொருட்டுப் பாற் கடலைக் கடைந்து அமுதம்பெற விரும்புகின்றனர்'' என்று கூறினார். திருமாலும் அதற்கு இணங்கி மந்தரமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிருகவும் அமைத்துக் கொண்டு ஒரு புறம் தேவர்களும் மறுபுறம் அசுரர்களும் பிடித்துக்கொண்டு கடையுங்களெனக் கூறினார். மத்தாகிய மந்தரமலையைத் தாமே தமது கைகளாலும் முதுகாலும் தாங்கினார்.

இவ்வாறு தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக்கடைய அது வாய்விட்டு ஒலித்தது. அவ்வொலியைக் கேட்டுத் தேவர்களும் அசுரர்களும் நடுநடுங்கினார்கள். உலகமனைத் தும் அஞ்சின. மேருமலையும் சலித்தது. எட்டுத்திசைகளிலும் உள்ள யானைகளும் பயந்து பிளிறின. அட்ட நாகங்களும் பெருமூச்சுடன் ஒடுங்கி நடுங்கின. தேவர்களும் அசுரர்களும்

தமது பெரிய வலிமையைக் கொண்டு மந்தரமாகிய மத்து சுழலுமாறு கடைந்து பாற்கடலைக் கலக்கியபொழுது கயிருக இருந்த வாசுகி என்ற பாம்பு வலியைத் தாங்காமல் மிகவும் கோபங்கொண்டு தன்னுடைய ஆயிரம் முகங்களிலும் உள்ள ஆயிரம் வாய்கள் மூலமாகவும் விஷத்தைக் கக்கியது. பாற் கடலும் தன்னிடமிருந்த விஷத்தை வெளிப்படுத்தியது.

அவ்விஷம் அனைத்தும் ஆலஹாலம் என்ற கொடிய விஷமாகி உலக முடிவு காலத்தில் எழுகின்ற மேகங்களை யொப்பக் கருமைநிறம் பெற்றுக் கோடிக்கணக்கான கூற்று வர்களிடம் தங்கும் கொலையாகிய கொடுமையை மேற் கொண்டு, திக்குகள் தோறும் ஸஞ்சரிக்கின்ற கோடிக்காற்றுக் களின் வேகத்துடன் நூறுகோடி வடவைத் தீயைப் போல விரைவாகப் பரவியது. இங்ஙனம் பரவிய விஷத்தின் கொடுமைக்கு அஞ்சி அசுரர்களும், தேவர்களும் முனிவர்களும் ஓடினார்கள். உலகெல்லாம் படைக்கும் ஆற்றலுடையோ னெனத் தன்னை மதிக்கும் பிரம்மதேவனும் அஞ்சியோடினார். திருமால் இச்செயலினைப் பார்த்து தேவர்கள் முதலாயினோ ரைக் காக்கக் கருதி, அக்கொடிய விஷத்தை எதிர்த்துத் தடுக்க முயன்றார். அவரும் விஷத்தால் தாக்கப்பட்டுப் பண்டிருந்த வைரமணி நிறம் கெட்டு நீலநிறமாகமாறப்பெற்றார். இதனால் திருமாலும் நஞ்சின் கொடுமையை எதிர்க்க இயலாதவராய் ஓடலானார்.

இங்ஙனம் அனைத்துத் தேவர்களும் அசுரர்களும் மற்றும் யாவரும் விஷாக்னியால் பொசுக்கப்பட்டுக் காப்பவர் யாருமில் லாமல் ஹா ஹா என்று கதறிக்கொண்டே ஓடினார்கள். இங்ஙனம் ஓடும்பொழுது ஸகல பிரபஞ்சங்களுக்கும் சரண்ய ரான சிவபெருமானையே சரணமென்று எண்ணி எல்லாவித மான துக்கங்களையும் போக்குகின்ற திருக்கயிலாயமலைக்கு ஓடிவந்தார்கள். கொடிய விஷம் சுடுதலினால் விலகியோடிய வர்கள் எமது தந்தையான சிவபிரானும் தாயான எம் பெருமாட்டியும் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலாயமலைக்கு

வந்தது ஆச்சரியமான செயலோ? குழந்தைகள் பயமடைந்தால் தந்தை தாயரிடத்தன்றி வேறு எவ்விடம் செல்வார்கள்?

முந்து வெவ்விடஞ் சுடுதலால் இரிந்தவர் முக்கண்
எந்தை எம்பெரு மாட்டிவாழ் கயிலையில் எவரும்
வந்த தற்புத நீரதோ வெருவினுல் மைந்தர்
தந்தை தாயிடத் தன்றியே யாங்ஙனஞ் சார்வார்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசி
உத்தரப்படலம், 333.

பிறகு தேவர்கள் திருக்கயிலாயத்தின் வாயிலில் இருக்கும் கணங்களுக்கு அதிபரான நந்தியெம்பெருமானை வணங்கி அவரிடத்தில் தங்களது துன்பத்தைக் கூறினுர்கள். அதைக் கேட்டு நந்தியும் மிகவும் கருணை கொண்டவராகி எல்லாத் தேவர்களையும் அங்கு நிறுத்திவிட்டு பிரம்மா, விஷ்ணு, இந்திரன், திக்பாலகர்கள் இவர்களோடு உள்ளே சென்று ஐந்தாவது வாயிலில் திக்பாலகர்களை நிறுத்திவிட்டு ஆருவது வாயிலில் பிரம்மா விஷ்ணு இருவரையும் இருக்கச் செய்து தான் உள்ளே சென்று பகவானுன பரமேசுவரனிடத்தில் தேவர்களின் வரவை விண்ணப்பித்தார். சிவபெருமான் பிரம்மாவையும் விஷ்ணுவையும் உள்ளே வரும்படி உத்தரவிட்டு அருளினுர். பிறகு பிரம்மா விஷ்ணு இருவரும் சிவபெருமானின் திருமுன்பு சென்று நமஸ்கரித்து உபநிஷத்துக்களால் ஆன தோத்திரங்களால் துதித்தார்கள். அப்போது மஹேசுவரன் அவர்களைப் பார்த்து "ஓ! விஷ்ணுவே! நீர் இப்பொழுது எக்காரணத்தினுல் காட்டுத் தீயினுல் எரிந்த மரம்போலக் கருத்து விட்டீர்? உமது கண்கள் இரத்தம் குழம்பியும் உமது சரீரம் முழுவதும் வியாதி உள்ளது போன்றும் காணப்படுகிறதே! உருக்கிய தங்கத்திற்கு ஒப்பான பிரம்மதேவனின் சரீரம் நிறம் மாறிக் காணப்படுகிறதே" என்று வினவியதும், திருமால் அவரைப் பணிந்து கூறலானுர்.

"ஓ மஹாதேவா! தேவரீரிடம் தெரிவித்து அருள்பெரு மல் அமிர்தம் உட்கொள்ளும் விருப்பத்தால் அனைத்து தேவர் களாலும் அசுரர்களாலும் பாற்கடல் கடையப்பட்டது. அப் பொழுது பிரளயகாலாக்னிக்கு ஒப்பானதும் மஹாகோரமு மான விஷம் உண்டாயிற்று. முக்கண் எந்தையே! அந்த விஷத்தின் ஜுவாலையால் கருகிய எல்லா தேவர்களும் காப்ப வர் வேறு யாரும் இல்லாமல் ஸதாசிவனுன தங்களையே சரணம் என்று அடைந்திருக்கிருர்கள். அவர்களில் முதல் வனுயிருந்த நான் அந்த தேவர்களுக்குப் பின்னுல் ஓடிவந்த படியால் எம்பெருமானே! எனது சரீரம் அதிகமாகப் பொசுங்க லாயிற்று. ஓ தேவாதிதேவ! மஹாகோரமான இந்த விஷத் தினுல் உலகம் முழுவதும் மிகவும் பாதிக்கப்படுகின்றது. ஓ சம்புவே! நானும் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு க்ஷணத்திலும் கருத்துப் போகிறேன். எல்லா உயிர்களுக்கும் மேலான ஓ பிரபுவே! வேறு கதியற்ற இந்தத் தேவர்களைக் காத்தருள வேண்டும், ரக்ஷிக்க வேண்டும். ஓ கருணைக் கடலே! தாமதிக்கக் கூடாது. ஓ அனைத்துமுணர்ந்த பரம சிவனே! எல்லாப் பிராணிகளின் உள்ளும் புறமும் வியாபித்து அழிவற்றவராகவும் விளங்குகின்ற பரப்பிரம்மமாகிய தாங்கள் எல்லா உலகங்களையும் காப்பாற்றுவதற்காகவே அனைத்துச் சிறந்த குணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட இப்பேர்ப்பட்ட ரூபத்தை எடுத்துக் கொண்டு விளங்குகிறீர்" என்று மாதவன் கூறிவிட்டு வேகமாய் அடிக்கடி வணங்கினுர்.

அப்பொழுது வெளியிலிருந்த தேவர்களும் மற்றும் அனை வரும் ஒரே சமயத்தில் கூக்கூரலிடலானுர்கள். "சரண மடைந்தவர்களிடத்தில் அன்புகொண்ட மஹாதேவனே! விஷம் என்னும் பெருந்தீயினுல் பொசுக்கப்படுகின்றவர்களும் வேறு கதியற்றவர்களும் தங்களையே சரணமடைந்தவர்களு மான எங்களைக் காத்தருளவேண்டும், காத்தருளவேண்டும்" எனப்பலமுறை கதறினுர்கள். கருணைக்கடலான சங்கரர் பிரம்மதேவனை நோக்கி இது என்னவென்று கேட்கப் பிரம்மதேவர், "பார்வதிநாதனே! அதிகோரமான விஷத்

திஞல் எரிக்கப்படுகின்ற தேவர்கள் அசுரர்கள், முனிவர்கள் முதலியோர் மிகவும் துக்கமடைந்து தங்களேயே அடைக்கல மாய் நாடிவந்து வெளியிலிருந்தபடி கதறுகிருர்கள். என் ஐயனே! தாங்கள் அனைவரையும் காத்தருளவேண்டும்'' என்று விடைகூறிஞர். பிரம்மதேவனின் இந்த வார்த்தைகளேக் கேட்ட சங்கரர் அவர்களேயும் தம்முன்பு வருமாறு ஆக்ஞாபிக்க அவர்களும், இந்திரன் திக்பாலகர்கள் முதலியோர்களும் இறைவரின் திருமுன்பு வந்து அனேகம் தோத்திரங்களால் துதித்து வணங்கிஞர்கள்.

இவ்வனைத்தையும் கேட்ட சிவபெருமான் உமாதேவி யாரைப்பார்த்து இவர்கள் கூறும் வார்த்தைகள் உனது மனத் துக்கு உகந்தவைதானே என்று வினவியருளத் தேவியாரும், ''எம்பெருமானே! இவர்களனைவரும் தேவரீரைச் சரண மென்று வந்தடைந்துள்ளனரன்றே? ஆதலால் அவர்கட்கு அருள்புரிந்திடுவீர்'' என்றனர். உலகமனைத்துக்கும் தாயா கிய அம்மையார் இவ்வாறு அருளிச்செய்தவுடனே முழுமுதற் கடவுள் மிக்கமகிழ்ச்சியுடன் தமது அணுக்கத்தொண்டராகிய *சுந்தரன் என்பவரைப் பார்த்து அக்கொடிய விடத்தினை இங்குக் கொண்டு வருவாயாக எனக்கட்டளையிட்டருளிஞர். சுந்தரரும் வணங்கிச் சென்று எங்கும் பரவிக்கிடந்த விஷத் தினைப் பிடித்துக்கொண்டு இறைவரின் சந்நிதானத்தை யடைந்தவுடனே உலகனைத்தும் முன் பரவிக்கிடந்த அந்த விஷமானது ஒரு சிறிய துளியையொப்ப ஒடுங்கியது.

---

*இந்தச் சுந்தரர் ஆலஹால விஷத்தினைப் பற்றிக் கொண்டு வந்தமையால் ஆலாலசுந்தரர் என்ற திருநாமம் பெற்ருர். இந்த ஆலாலசுந்தரரே பின்னர் இறைவரது அருளாணையின் வண்ணம் ''மாதவம் செய்த தென்திசை வாழ்ந் திடத் தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர'' சுந்தரமூர்த்தி நாயஞராகத் திருநாவலூரில் அவதரித்தார். விரிவு திருத் தொண்டர் புராணத்தில் காண்க.

அந்தக் கொடிய ஆலஹாலவிஷத்தை எம்பெருமான் தமது திருக்கரத்தினில் வாங்கித் தம்முன் நடுக்கத்துடன் நின்று கொண்டிருக்கும் பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களை நோக்கி, ''ஓ தேவர்களே! நான் இந்த விஷத்தினை உண்ணவோ அல்லது நெடுந்தூரத்தினிற்சென்று சேரும்வண்ணம் வீசியெறியவோ'' என்று வினவியருளப் பிரம்ம விஷ்ணுவாதி தேவர்கள் அனைவரும் பெருமானது திருவடிகளில் மீண்டும் மீண்டும் விழுந்து வணங்கிப் பின்வருமாறு கூறலாயினர்.

''பிரளயகாலத்தில் [1]உலகம் முழுவதையும் ஒரு கவளமாகச் சாப்பிடுகிறவரும் காலகாலனுமான எம்பெருமானே! தாங்கள் இவ்விஷத்தினைத் தூரத்தில் எறிந்தால் ஒரு க்ஷணத்தில் அது திரும்பி வந்துவிடுமென்று நாங்கள் அஞ்சுகிறோம். தங்களது அழகிய திருக்கரத்தில் இருக்கும் இந்த விஷத்தினைப் பார்க்கும் பொழுதே எங்களுக்குப் பயமேற்படுகிறது. ஆதலால் ஸர்வக்ஞரும், கருணைக்கடலும், ஸகல பிரபஞ்சங்களையும் பாதுகாப்பதில் முயற்சியுடையவரும், மஹேசுவரருமாகிய தாங்கள் அன்றி வேறு யாவரே இத்தீமயமான விஷத்தின் கொடுமையைத் தாங்கவல்லவர்? தேவரீரது திருக்கரத்தில் சிறு துளி போன்று தங்கியிருக்கும் இதனைத் தேவரீர் விடுவீராயின் பின்னர் எவரும் உயிர் பிழைக்கமாட்டார்கள். மேலும் அழிவற்ற தேவரீருக்கன்றோ [2]முதற்பாகம் அனைத்தும்

---

1. இதனால் இறைவருக்கு மஹாக்ராஸர் என்று ஒரு திருநாமம் வழங்கலாயிற்று.

2. திருமாலும் இறைவரை இவ்வாறு வேண்டினார் என்பதை அத்திருமாலின் பெருமை கூறவந்த இராமாயணமும் கூறும். வால்மீகிராமாயணம், பாலகாண்டம், 45ம் சருக்கம், சுலோகம் 23–24. தைவதைர் மத்யமானே து யத்பூர்வம் ஸமுபஸ்திதம், தத்த்வதீயம் ஸுரச்ரேஷ்ட ஸுராணாம் அக்ரதோ ஹி யத், அக்ர பூஜாம் இஹஸ்தித்வா க்ருஹாணேதம் விஷம் ப்ரபோ''. இதன் பொருள்: தேவரீரே எல்லாத் தேவர்கட்கும் முன் உள்ளீர்.

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

சேரவேண்டும். எனவே, விஷமாயினும் ஆகுக, தாங்கள் எங்கள் வேண்டுகோளை அங்கீகரித்து அடியோங்கள் உய்யுமாறு இந்த விஷத்தினை அருந்தியருளுமாறு பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.''

பிரம்ம விஷ்ணு முதலிய தேவர்களது பிரார்த்தனையைச் செவிமடுத்த கருணைக்கடலும் பரிபூரணானந்தமூர்த்தியுமாகிய பகவான் அழகிய புன்முறுவல் கொண்ட திருமுகத்துடன், தமது அருட்சக்தியாகிய தேவியைப் பார்த்துக் கொண்டே அந்தக் கொடிய விஷத்தைப் பருகியருளினார். மிகக் கருமை நிறம் வாய்ந்ததும் மஹாகோரமுமான அந்த காலகூடம் என்னுமொரு பெயருடைய ஆலஹால விஷமானது பரமேசுவரனது திருக்கழுத்தினளவு இறங்கியது. அச்சமயம் அனைத்துத் தேவர்களும் கைகளைக் கூப்பி வணங்கியவர்களாக ''தேவாதிதேவனே! கருணைக்கடலே! பக்தர்களிடத்தில் அன்பு கொண்டவரே! உலகமனைத்தையும் பாதுகாத்தருள்பவரே/ அளவற்ற மஹிமைகளுக்கு ஆதாரமானவரே! ஸ்வதந்திரபுருஷரே! ஆனந்தமூர்த்தியே! வேதமறிந்தவர்கள் மஹாப்பிரளய காலத்தில் எல்லாவுலகங்களையும் ஒரே கவளமாய் விழுங்குகிறவரும் சூலபாணியுமான தங்களுக்குப் *பிராம்மணக்ஷத்திரியர்கள் முதலிய ஜாதிகள் அன்னமென்றும்

நீரே எல்லாத் தேவருள்ளும் சிறந்த தலைவராகவும் இருக்கின்றீர். ஆதலால் எல்லார்க்கும் வருவதில் முதற்பங்கு தேவரீரையே சேர வேண்டியதாகலின், பிரபுவாகிய பெருமானே! முதலில் வந்த இந்த விஷத்தினைப் பருகியருள்விராக. (சிவபிரானைப் 'பிரபோ' என்று திருமால் அழைத்ததாக வால்மீகி கூறுவது காண்க).

*யஸ்ய ப்ரஹ்மச க்ஷத்ரம் சோபே பவதஓதன: ||
ம்ருத்யுர்யஸ்யோபசேசனம் க இத்தா வேத யத்ர ஸ: ||

என்ற கடோபநிஷத், முதலாவது அத்தியாயம், இரண்டாவது வல்லி 24வது மந்திரத்தின் பொருள் இங்குக் கூறப்பட்டுள்ளது.

மிருத்தியுவானவன் (இயமன்) நாரத்தங்காய் ஊறுகாய் என்றும் கூறுகிறார்கள். ஸ்வாதீனமான சக்தியுள்ள பெருமானே! சுத்தமான ஸ்படிகத்தின் நிறம் பொருந்திய தங்களது திருக்கழுத்தில் இந்த விஷத்தை நிறுத்தியருள்வீராக. அது தங்கட்கு அதியற்புதமான ஒரு அலங்காரமாகி விளங்கும். எம்பெருமானே! இந்த விஷம் தங்களது கழுத்தை அலங்கரித்ததால்தான் தேவஸ்த்ரீகளுடைய கழுத்தை திருமங்கல்ய சூத்திரங்கள் அலங்கரிக்கின்றன. மேலும் விஷத்தின் தீயினால் பொசுக்கப்பட்ட தேவர்களாகிய எங்களுக்கு பிரபுவான தாங்கள் அந்த விஷத்தை அருந்தி எங்களைக் காப்பாற்றியது எப்பொழுதும் நினைவிலிருப்பதற்காகவும் அதைக் கழுத்தில் நிறுத்திக் கொண்டருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள்.

தேவதேவ தயாஸிந்தோ பக்தவத்ஸல விச்வப ।
அனந்த மஹிமாதார ஸ்வதந்த்ரானந்த விக்ரஹ: ॥

ப்ரஹ்ம க்ஷத்ரஞ்ச யஸ்யாஹ ரோதனம் ப்ரஹ்மவாதின: ।
நாரங்கவ்யஞ்ஜனம் ம்ருத்யும் மஹாக்ராஸஸ்ய சூலின: ॥

ஸ்வதந்த்ரசக்தே: தத்கண்டே சுத்தஸ்படிகஸந்நிபே ।
ஸ்தம்பயாஸ விஷம் கோரம் அலங்காரஸ்தவாத்புத: ॥

அலஞ்சகார பகவன் தவகண்டம் யதா விஷம் ।
அலங்குர்வந்தி தேவஸ்ஸ்த்ரீகண்டம் மங்கள்ய தந்தவ: ॥

தேவானும் விஷதக்தானும் அஸ்மாகம் பவதாப்ரபோ ।
விஷம் பீத்வா க்ருதாரக்ஷா ந ச விஸ்மர்யதே தத: ॥

ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 17-ம்
அத்தியாயம், 25-29.

இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட மஹேசுவரனும் அங்ஙனமே ஆகுக என்று அருள்செய்து அந்த விஷத்தைத் தன் கழுத்தில் விளையாட்டாக நிறுத்திக் கொண்டார். எவராலும் வர்ணிக்க

முடியாத பெருமையுடையவரான பரமேசுவரன் தமது *கழுத்தில் நிறுத்திக்கொண்ட விஷத்தின் கறை அவருக்கு ஒரு அலங்காரமாக அமைந்தது. தேவாதிதேவனுன பரமேசுவரனைத் தேவர்கள் எல்லோரும் தோத்திரஞ் செய்து வணங்கினர்கள்.

"தேவாதிதேவனுன தங்களுக்கு நமஸ்காரம். கரியநிறமுடைய கழுத்தையுடையவரும், மங்களத்தைக் கொடுப்பவரும், பசுபதியும், தேவர்களுக்கு உயிரை அளித்தவருமான தங்களுக்கு நமஸ்காரம். உயிர்களுக்கு ஈசரும், யானைத் தோலைப் போர்த்திக்கொண்டவரும், ருத்திரருமாகிய தங்கட்கு நமஸ்காரம். தயாநிதியாகிய பெருமானே! இந்த உலகமானது இது முதல் தங்களை நீலகண்டர் என்று எப்பொழுதும் அறிந்து கொண்டாடும்."

நமோ நமஸ்தே தேவேச நீலக்ரீவாய சம்பவே |
பசூனும்பதயே துப்யம் தேவானும் ப்ராணதாயினே ||
ப்ராணேச்வராய ருத்ராய நமஸ்தே க்ருத்திவாஸஸே |
அத்யப்ரப்ருதி லோகோயம் பகவந்தம் மஹேச்வரம் ||
த்வாம் விஜாநாது ஸததம் நீலகண்டம் தயாநிதே |

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 17-ம்
அத்தியாயம், 32-33½.

இந்தத் தோத்திரத்தினுல் பரமேசுவரன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். ஆசுதோஷி என்று பெயர்பெற்றவரல்லவா?

---

*"கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே" என்ற புறநானூறு கடவுள் வாழ்த்துப் பகுதியும், அதற்கு "நஞ்சினது கறுப்பு திருமிடற்றை அழகு செய்தலும் செய்தது. அக்கறுப்பு தான் மறு வாயும் வானேரை உய்யக் கொண்டமையின் வேதத்தைப் பயிலும் அந்தணரால் புகழவும் படும்" என்று அதன் உரையாசிரியர் திறம்பட வகுத்த உரையும் இங்கு கருதற்குரியது.

"தேவர்களே! என்னுடைய கட்டளையின்படி நீங்கள் பாற்கடலை இப்பொழுது கடையுங்கள். அதிலிருந்து நிகரற்ற அமிர்தம் உண்டாகும். அதனை நீங்கள் கவலையின்றிப் பானம் செய்வீர்களாக" எனக்கருணையுடன் தேவேசன் தேவர்களைப்பார்த்துக் கூறியருள, அவர்களும் மிக்கமகிழ்ச்சியடைந்தவர்களாய் பரமேசனை நமஸ்கரித்து விடைபெற்றுச் சென்று மீண்டும் பாற்கடலைக் கடைந்தார்கள். மிகச்சிறந்த தான அமிர்தத்தைப் பெற்றுத் தேவர்கள் மரணமில்லாதிருப்பதற்காகப் பரமேசுவரனது திருவருளால் ஏவப்பட்டவர்களாய்ப் பானஞ்செய்தார்கள். எனவே, ஓ தட்ச! எம்பெருமான் பாற்கடலிற்பிறந்த விஷத்தினை உண்டது தேவர்களைக் காக்கும் பொருட்டேயாம் என்பதை அறிவாயாக.

20. சிவபெருமான் சுடலையில் நடனமாடுதல்

"இறந்தவர்களது சுடலையில் பரம்பொருள் ஆடுமோ என வினவிய தட்சனே! அதுபற்றிக் கூறுவோம்; கவனமுடன் கேட்பாயாக. பரமேசுவரன் ஸம்ஹாரம் செய்யுங்காலத்தில் உடலும் உயிரும் அகிலமும் ஒடுங்கிய இடமே சுடலை எனப்படும். அச்சுடலையே இறைவன் நடனஞ்செய்கின்ற இடமாகும். அதன் தன்மை எவராலும் அறியவொண்ணுது, அதுவுமன்றி, எமது தந்தையாராகிய பரமசிவன் அனைத்து மழித்த காலத்தில் எங்கும் வெளியிடமாகிச் சுடலையாகும். அச்சுடலையில் தேவியும் தாமுமாகி எழுந்தருளியிருப்பர். இது குற்றமான செயலாமோ? இனி அப்பெருமான் தலைமீது ஒரு பெண்ணைக் கொண்டிருப்பதாக நீ கூறியதன் உண்மையைக் கூறுகின்றேன்" என்று ததீசி முனிவர் கங்கையைப் பெருமான் தலையில் தரித்த செயலைக் கூறலானுர்.

21. சிவபெருமான் கங்கையைத் தரித்தல்

பண்டொருசமயம் எம்பெருமான் திருக்கயிலையிலுள்ள பூஞ்சோலையொன்றில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது உமையம்மையார் விளையாட்டாகப் பெருமானின் பின்புறமாக

வந்து அவரது கண்களைச் சற்றே மூடினார். அதனால் நெருங்கிய உலகங்களனைத்திலும் உள்ள உயிர்கள் வருந்தும் வண்ணம் கடுமையான இருள் சூழ்ந்தது. சிவபிரானின் விழியால் எல்லாச் சோதியும் தழைக்கும் தன்மையால் அவ் விழிகள் மூடப்பெறுதலும் சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய ஒளிகளும் மற்றைத் தேவர்களின் சரீர ஒளியும், மற்றைய எல்லா ஒளிகளும் மறைந்து ஒரே இருள்மண்டலமாக ஆகியது. இங்ஙனம் தேவியார் இறைவரின் திருவிழிகளை மூடியது ஒரு கணப்பொழுதேயாயினும் உயிர்களுக்கெல்லாம் எல்லையில்லாத ஊழிக்காலங்கள் சென்று விட்டன. உடனே இறைவர் ஒப்பற்ற தமது நெற்றியில் ஒரு கண்ணை உண்டாக்கி அதனால் கருணையுடன் பார்த்து நீங்குதற்கரியதாயிருந்த இருளையொழித்து எல்லா ஒளிப்பொருள்களும் ஒளி பெறுமாறு செய்தருளினார்.

இறைவரின் இச்செயலைக்கண்ட தேவியார் பெரிதும் அச்சமடைந்து கண்களை மூடியிருந்த தமது இரு திருக்கரங்களையும் விரைவில் எடுத்தருளினார். அங்ஙனம் எடுக்கும் காலத்தில் அச்சத்தினால் அவரது திருக்கரங்களின் பத்துத் திருவிரல்களினின்றும் வியர்வை நீர் உண்டாக அதனைத்தேவியார் பார்த்து தமது கரங்களை உதறினதும் அவ்வியர்வையானது பத்து கங்கைகளாகி ஆயிரம் நூறு கோடி முகங்களை உடையனவாகிக் கடல்கள் போல் எங்கும் வியாபித்தன. இவ்வாறான கங்கையின் பெருக்கத்தைக் கண்ட பிரமவிஷ்ணுக்களும் மற்றைய தேவர்களும் அகாலத்தில் பிரளயம் ஏற்பட்டுள்ளதே, இது என்ன என்று பெரிதும் அஞ்சி நடுக்கத்துடன் சிவபெருமானையடைந்து, அகாலப்பிரளயத்தினால் விழுங்கப் படுகின்ற இந்த உலகத்தைக் காக்கவேண்டும் என்று வேண்டினார்கள். தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டவுடன் உலகங்களைக் காப்பதில் முயற்சியுடைய சம்புவானவர் அப் பெருநீர் வெள்ளத்தை அழைத்துத் தமது சடைமுடியில் ஒரு மயிர்க்காலில் சிறியதொரு திவலையாகுமாறு விடுத்தார். இறைவரது இச்செயலை மிகுந்த வியப்புடன் கண்ட விஷ்ணு,

பிரமன், இந்திரன் ஆகிய மூவரும், "எமது தலைவரே! கங்கையானது தேவரீரது அருட்சக்தியாகிய தேவியாரின் திருக்கரங்களில் தோன்றினமையாலும் தேவரீரது சடையில் தரிக்கப் பட்டமையாலும் மிகவும் [1]பரிசுத்தத்தை அடைந்தது. ஆகையால் எங்களுடைய இடங்களுக்கு ஒரு சிறிது அதனின்றும் அருளவேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்கள். உடனே பெருமானும் தமது திருச்சடையில் வைக்கப்பட்டிருந்த கங்கையினின்றும் ஒரு சிறிதை அவ்வி அம்மூவருக்கும் கொடுத்தார்.

அம்மூன்றினுள் பிரம்மதேவனின் உலகத்தையடைந்த கங்கையைத்தான் பகீரதன் கடுந்தவம் புரிந்து நிலவுலகத்துக்குக் கொண்டு வந்தான். அந்த கங்கை பூமிக்கு வந்த போது மிகுந்த அலைகள் கொண்டு விண்ணும் மண்ணும் அஞ்சுமாறு மிகவேகத்துடனும் கர்வத்துடனும் வந்தது. வேறு எவராலும் தாங்கமுடியாத வேகத்துடன் வந்த அந்த கங்கையைக் கருணைக்கடலாகிய சிவபிரான் தமது *செஞ்சடையில் ஏந்தி வற்றச் செய்தார். பின்னர் பகீரதன் வேண்ட

---

1. "பூதம் ஸ்வத: பூததரம் ததோயத் காங்கம் பய: சங்கர மௌளி சங்காத்" என்ற ஸ்ரீமத் நீலகண்ட தீக்ஷிதரின் வாக்கு இங்கு கருதற்குரியது. கங்கா ஜலம் இயல்பாகவே புனிதமானது. சங்கரனின் தலையில் கூடியதால் மேலும் புனிதமாயிற்று என்பது இதன் பொருள்.

*மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தா லவன் சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ

என்ற திருவாசகப்பாடல் இங்கு கருதற்குரியது. கங்கை நதியைப் பெண்ணாகக் கூறுதல் மரபு.

—திருவாசகம், திருச்சாழல், 7ம் பாடல்.

பெருமான் அதனைப் பூமியில் செல்லுமாறு விடுத்தார். அந்த கங்கையும் வேகமாகப் பூமியையடைந்து பகீரதனின் முன்னோர்களான சகரர்கள் எனப்படுவோர் நற்கதியடையுமாறு அவர்களது வெந்த உடலெலும்பில் பாய்ந்து கடலைச் சேர்ந்தது. மற்றைய இரண்டு கங்கைகளும் தாம் சென்றடைந்த இடங்களிலேயே இருந்தன. இங்ஙனம் உலகங்கள் அழியா வண்ணம் இறைவியின் கரத்தில் தோன்றிய கங்கையைச் சடையில் அடக்கிக் கொண்டதும், அதனின்றும் பிரமலோகஞ் சென்ற கங்கை பகீரதனின் தவத்துக்காகப் பூமியில் இறங்கிய பொழுது அதன் செருக்கையடக்கித் தலையில் தரித்ததும் சிவ பிரானுக்கு மேன்மையேயன்றி இழிவாகுமோ?

22. இடது பாகத்தில் ஒரு பெண்ணை வைத்துக்கொள்ளுதல்

"பரப்பிரம்மம் ஒரு பெண்ணை இடப்பாகத்தில் வைத்துக் கொள்ளுமோ என்று கேட்ட மூடனான தட்சனே! உன்னுடைய அறியாமை நீங்குமாறு அந்தச்செய்தினைக் கூறுகிறேன், கேட்பாயாக" என்று ததீசிமுனிவர் அந்த வரலாற்றை உரைக்கலானார். "முன்னொருகாலத்தில் ஒரு பிரம்மதேவன் தோன்றி, உயிர்களைப்படைக்கக் கருதி முதன் முதலில் சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனாதனர் என்ற நான்கு புத்திரர்களைப் படைத்தான். அவர்கள் ஞானநெறியில் நின்று விட்டார்கள். அதன் பின்னர் பிரமனுக்குப் படைப்புத்தொழில் மேலும் வளர்ந்து வராது தடைப்பட்டு நின்றது. அதனால் பிரம்மதேவன் மிகவும் வருத்தமடைந்தவனாய் சனகாதியருடன் சென்று திருமாலை வணங்கித் தனது குறையினைக் கூறினான். திருமால் அந்த நான்முகனை உடன் அழைத்துக்கொண்டு திருக்கயிலையை அடைந்து சிவபெருமானின் இணையடிகளை வணங்கிநின்று பிரம்மதேவனின் படைப்புத்தொழில் வளராது தடைப்பட்டு நின்றதைக்கூறி முறையிட்டார்.

அப்பொழுது பரமேசுவரன் திருமாலையும், நான்முகனையும் சனகாதியரையும் பார்த்து நுண்ணிய துகளாகுமாறு விரைவாக அழித்தருளினர். தனித்தவராக எழுந்தருளியிருந்த எந்தையார் தமது இடது தோளைப்பார்த்தனர். உடனே அவ்விடத்தில் அவரது *அருட்சக்தியாகிய தேவியானவர் தோன்றினர். அத்தேவியாரைத் தமது இடது பாகத்திலிருத்தி அவருடன் விருப்பத்துடன் கலந்திருந்து திருமாலையும், பிரம்மதேவனையும், சனகாதியரையும் மீண்டும் உண்டாக்கியருளினர். அவர்கள் வணங்கிநிற்கக் கருணையங்கடலான சிவபிரான் திருமாலை நோக்கி "நமது அருளாயுள்ள நங்கையாகிய இப் பராசக்தியுடன் நாம் இனிது பொருந்தினோம். இனி முன் போலப் பிரமனின் சிருட்டித் தொழில் இனிது கைகூடும்" என்றருளிச்செய்து அவர்களனைவரையும் அனுப்பியருளினர். அம்மையப்பரது திருவருளைப்பெற்ற பிரம்மதேவனும் அதன் பின்னர் பலவாறுக மன்னுயிர்த் தொகைகளை முறைப்படி படைத்தனன். பகைவரது முப்புரங்களை எரித்த பரமன் தமது அருளாகிய [1]சக்தியுடன் வீற்றிருந்தருளலால் விருப்பத்துடன் ஆணும் பெண்ணுங்கலந்து மிகவும இன்பமடைந்து உயிர்கள் வளர பிரமதேவனுடைய படைப்புத் தொழில் செவ்வனே நடக்கலாயிற்று. பிரம்மதேவனின படைப்புதொழில் நிறைவேறும் வணணம் தமது அருளினை ஒரு பெண்ணுருவாகச் செய்து அம்மையப்பராய் எழுந்தருளியிருக்கும் இச்செயலை

---

*"அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்ற சிவஞான சித்தியார் பாடற் பகுதி இங்கு கருதற்குரியது.

1 தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

என்ற திருவாசகம், திருச்சாழல் 9-ம் பாடல் இங்கு கருதற்குரியது.

யறியாது மற்றைய தேவர்களைப்போல எமது பெருமானையும் எண்ணிவிட்டனை. நாம் காணும் வடிவங்கள் எல்லாம் சக்தியின் வடிவங்களாகும். அவற்றுள் அறிவுமயமாய் நிற்பவர் நிலை பெற்ற சிவபெருமானேயாவர்'' என்று ததீசிமுனிவர் கூறினர்.

23. கஜமுகாசுரனைக் கொன்ற கஜமுகக் கடவுள்

பரப்பிரம்மம் ஒரு பிள்ளையைப் பெறுமோ என்று தட்சன் கேட்ட வினவிற்கு விடையாகத் ததீசிமுனிவர் கூறலானர். ''தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் ஏற்பட்ட போரில் ஒரு முறை அஸுரர்கள் தோல்வியடைந்தார்கள். அசுர மன்னனுகிய அஸுரேந்திரன் தனது குலகுருவாகிய சுக்கிரா சாரியாரிடம் தன் குலம் மேன்மையடையும் மார்க்கத்தை வேண்டினன். அதனைக்கேட்ட சுக்கிராசாரியார், ''அஸுரேந்திரா! கவலையுருதே. வசிட்ட மாமுனியின் மரபில் தோன்றிய மாகதர் என்னும் முனிவரிடம் ஒரு அசுர கன்னிகையை அனுப்பினல் அவள் சென்று அவருடன் சேர்ந்து யானைமுகத்தையுடைய ஒரு புத்திரனைப்பெறுவாள். அவனுல் உனது குலம் மேன்மையடையும்'' எனக்கூறினர்.

''அவ்வண்ணமே அஸுரேந்திரன் தனது குலத்தைச் சேர்ந்தவளும், பேரழகியுமான விபுதை என்னும் பெண் மணியை மாகதமுனிவர் தவஞ்செய்யுமிடத்துக்கு அனுப்பி னன். மாகதமுனிவரிடம் சென்ற விபுதை அவரது தவத்தின் கடுமையைக் கண்டு கலங்கினள். ''மேனகையே வரினுங்கூட ஏறிட்டுப் பார்க்கமாட்டார் போலுள்ளதே! இவரது தவத்தை நான் எங்ஙனம் கலைத்து இவருடன் கூடுவேன்'' என எண்ணிப் பெரிதும் ஏங்கினள். எவ்வண்ணமேனும் மாகதமுனிவருக்குத் தன்மீது ஆசைபிறக்குமாறு செய்ய வேண்டுமென்ற உறுதியோடு சிவபெருமானின் திருவருளைத் தியானித்தவண்ணம் அவர்முன்பு நீண்டகாலம் கடுமையான தவத்தைச்செய்து வந்தாள். அவளுடைய நல்லகாலமோ

அல்லது அமரர்களது கெட்டகாலமோ, நாமறியோம், அச்சமயம் ஆண்யானை ஒன்று பெண்யானையோடு சேர்ந்து சேர்க்கையில் ஈடுபட்டு இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தது. தற்செயலாகத் தியானத்திலிருந்து கண்விழித்த மாகதர் அதனைப் பார்த்தார். பின்னும் ஆசையோடு பல முறை பார்த்தார். அதனால் தவத்தை மறந்தார். காமவலையில் அகப்பட்டு எப்படியாயினும் தாமும் இந்தக் கலவியின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று உறுதிகொண்டார்.

அப்பொழுது அவர் எதிரிலே இருந்த விபுதை என்ற மங்கையைக் கண்டு அகமகிழ்ந்தார். தவத்தினை விடுத்துத் தன்னிடம் வரும் முனிவரைக்கண்ட விபுதை தன் காரியம் கைகூடியது என்று எண்ணி மிகக்களிப்புடன் முனிவரையணுகி அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். விபுதையின் பேரழகு மேலும் முனிவரைப் பித்துக்கொளச் செய்தது. அவளை நோக்கி, "பெண்ணே! நீ யார்? நம்மிடம்யாது வேண்டிவந்தாய்?" என்று வினவினார். விபுதை அவரைப் பார்த்து "சுவாமி! தங்களைக் கணவனாக அடையப் பலகாலம் தவஞ்செய்தேன். அத்தவப்பயனால் இப்பொழுது தங்களையடைந்தேன்" என விடைகூறினாள். முனிவரும் மிகவும் மகிழ்ந்து "நாமிருவரும் யானையின் வடிவெடுத்துப் புணருவோம். நீ பெண் யானையின் வடிவாகுவாய்" என்று கூறிப் பெண்யானை வடிவெடுத்த அவளைத்தாம் ஆண் யானையாகித் துதிக்கையால் தழுவிக் கலவிசெய்து இன்பமனுபவித்துச் சிற்றின்பத்தின்பால் ஏற்பட்ட ஆசையைப் போக்கிக் கொண்டார்.

அவ்விருவருடைய கலவி முடிந்ததும் முகத்தில் வளைந்த தந்தங்களும் தொங்கும் வாயினையுமுடைய கஜமுகாஸுரன் (ஆனைமுகத்தவுணன்) என்பான் உடனே பிறந்தான். பிறந்த உடனே ஆயுதங்கள் பலவற்றுடன் ஆரவாரம் மிகச்செய்து கோபத்துடன் திரிந்தான். விபுதையாகிய பெண்யானையின் மயிர்க்கால்கள்தோறும் அனேக அஸுரவீரர்கள் ஆயுதங்

களோடு உண்டானுர்கள். இதனைக்கண்ட மாகதரும் விபுதை யும் பயந்து தங்களது உண்மை வடிவங்களை எடுத்தார்கள். நிகழ்ந்ததையெல்லாம் கண்ட மாகதர் விபுதையை நோக்கிக் கோபத்துடன், ''பெண்ணே! நீ யார்? ஏன் இங்ஙனம் வந்தாய்?'' எனக்கேட்க, அவளும் தனது வரலாறு முழுமை யையும் கூறினுள். மாகத முனிவர் அவளது வரலாற்றைக் கேட்டுத் தேவர்களுக்கும் மற்றும் நல்லவர்களுக்கும் ஒரு நலிவுவரத் தான் காரணமானதை நினைத்து மனம் வருந்தி மீண்டும் தவஞ்செய்யச் சென்றுவிட்டார். விபுதையும் அஸுரேந்திரனிடஞ் சென்று நிகழ்ந்தவற்றையெல்லாங்கூற அவனும் மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

கஜமுகாஸுரனும் அவனது பெரும்படையும் உலகெலாம் சுற்றித் திரிந்து பலவுயிர்களையும் கொன்றுதின்றனர். சுக்கிரா சாரியார் அவனைச் சந்தித்து, தன்னை அவனது குரு என அறிமுகப்படுத்திக்கொண்டு, அவனை நோக்கி, ''நீ தவ வலிமைபெற வேண்டும். உடல் வலிமை மட்டும் போதாது. இந்திராதி தேவர்கள் உன்னை வஞ்சித்து விடுவார்கள். எனவே நீ சிவபிரானைக்குறித்துத் தவஞ்செய்து பல அரிய வரங்களைப் பெறவேண்டும். அப்பொழுது தேவர்களும் மற்ற வர்களும் உனக்குத் தொண்டுசெய்ய நீ ஸகல உலகங்களுக் கும் பேரரசனுக விளங்குவாய்'' எனக்கூறித் தவத்துக்குரிய விதிமுறைகள், மந்திரங்கள் முதலியவற்றை உபதேசித்துச் சென்றுர்.

அசுரகுருவான சுக்கிராசாரியருடைய வார்த்தைகளை மனதிற்கொண்டு அசுரர் தலைவனுன கஜமுகன் கடுந்தவம் புரிய அசுரர்கள் புடைசூழ மேருமலையை அடைந்து அங்கொரு புறத்தில் சென்று தவமியற்றலானுன். ஐம்புலன் களையடக்கிக் காமம் முதலிய அகப்பகைகளை வென்று, குரு உபதேசித்த குறிப்பையே குறியாகக்கொண்டு திருவைந் தெழுத்தினை ஓங்காரத்துடன் செபித்து அறிவுக்கறிவாய், உயிருக்கு உயிராய், பரம்பரமாய், அமலமாகி, எங்கும்

நிறைந்துள்ள கண்ணுதற்பெருங்கடவுளின் திருவடிகளைத் துதித்து அப்பெருமானின் திருவுருவத்தினைச் சிந்தித்தனன். இவ்வாறு கடுந்தவம் புரியும் கஜமுகனின் உடல் சிவபெருமானின் திருவருளால் வச்சிரம் போன்று ஒளியும் வன்மையுமுடைத்தாயிற்று. பின்னரும் அவன் தொடர்ந்து தவமியற்றச் செஞ்சடை வேதியனுன சிவபெருமான் இடபவாஹனத்தில் அவனெதிரில் எழுந்தருளினர்.

சிவபிரான் காட்சியளித்தருளியவுடனே கஜமுகன் மேலும் தவம்செய்தலை விடுத்து மனத்தின்கண் அன்புடன் தலையில் குவித்த கைகளையுடையவனுய்த் தொழுது அப்பெருமானை வணங்கிநின்று துதித்தனன். தம்முன் கைகூப்பித் தொழுது நிற்கும் கஜமுகனை நோக்கிச் சிவபிரான், "கஜமுகனே ! யாது வேண்டி நீ இக்கடுந்தவம் புரிந்தனை?" என வினவியருளினர். கஜமுகனும்இறைவரை நோக்கி," எம்பெருமானே ! பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய அனைத்துத் தேவர்களும் மற்று முள்ளோர்களும் கொடிய போரில் என்னை எதிர்ப்பார்களாயின் அவர்கள் தோற்றுப் புறமுதுகிட்டு ஓடும்படிச் செய்தருளவேண்டும். தேவர்களாலும், மனிதர்களாலும், மிருகங்களாலும் அடியேன் இறவாத வரம் அருளவேண்டும். எத்தகைய வலிமை மிகுந்த ஆயுதங்களாலும் நான் இறவாத வரம் தந்தருளவேண்டும். தேவர்களும், முனிவர்களும், பிறரும் வாழ்கின்ற உலகங்கள் அனைத்திலும் எனதாணையும் செங்கோலும் செல்லுமாறு அரசுரிமையை அளித்தல்வேண்டும். பின்னர் செஞ்சடையண்ணலே ! மேலும் ஒன்றுள்ளது. அடியேன் தங்களது மாயையால் இறக்கநேரினும் எனக்கு மீண்டும் பிறவியேற்படாமல் அருள்புரியவேண்டும்" என்று கூறியவுடனே தவஞ்செய்வார் கருதும் அனைத்தையும் அளிக்கும் கண்ணுதற்கடவுளும் அங்ஙனமே அவைகளைப் பெறுவாயாக என்று அவன் வேண்டிய அனைத்தையும் அருள்செய்து மறைந்தருளினர்.

சிவபெருமானிடம் பெற்ற வர பலத்தினுல் கஜமுகாசுரன் இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களையும் வென்று அவர்களுடைய உலகங்களையெல்லாம் அசுரர்களுக்குக் கொடுத்தான். பிரம்ம விஷ்ணுக்களையும் வென்ருன். பின்னர் நிலவுலகமடைந்து அங்கு அசுரத் தச்சனைக் கொண்டு மதங்கபுரம் என்ற அழகிய நகரை நிர்மாணிக்கச்செய்து அதிலிருந்து கொண்டு ஆட்சி புரியலானுன். பிறகு சிலகாலஞ் சென்றபின் அசுரேந்திரன் மகளாகிய விசித்திரகாந்தி என்பாளை மணஞ் செய்து கொண்டான். மற்றும் பல உலகத்துப் பெண்களையும் மணந்து கொண்டான். நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் குற்றேவல் புரிய, காமதேனு-சிந்தாமணி-கற்பகவிருக்ஷம்-நவநிதிகள் ஆகியவற்றைத் தனக்கு உரிமையாகக் கொண்டு, அசுரேந்திரனும் சுக்கிராசாரியாரும் அமைச்சர்களாக இருக்க அவனது கொடுங்கோல் ஆட்சி ஏழு உலகங்களிலும் தடையின்றி நடைபெற்றது.

இப்படி இருக்கையில் ஒரு சமயம் இந்திரன் முதலிய தேவர்கள் அவனது ஏவல்களைச் செய்யவந்து, அவனை வணங்கி நிற்கையில் அவர்களைப் பார்த்து, "ஒ தேவர்களே! இனி நீங்கள் எல்லாம் நம்முன்வந்து வணக்கம் செய்துவிட்டு, கலைகளில் மூன்றுமுறை குட்டிக்கொண்டு, இருகைகளாலும் *காதுகளை மாறிப்பிடித்துக்கொண்டு உட்கார்ந்து எழுந்து வணக்கஞ்செய்துவிட்டுப் பிறகு நீவிர் செய்யவேண்டிய பணிகளைச் செய்வீர்களாக" என்று கட்டளையிட்டான்.

வைகலும் மிவண் வந்துழி நுங்கள்தம்
மெய்கொள் சென்னியில் மும்முறை தாக்கியே
கைகள் காதுறக் கால்கொடு தாழ்ந்தெழீஇச்
செய்க நம்பணி தேவர்கள் நீரென்ருன்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், கயமுகனுற்பத்திப்படலம், 117.

---

* இது தோப்பிக்கரணம் போடுதல் எனப்படும்,

அவனுடைய கட்டளையை மீற இயலாத தேவர்கள் அங்ஙனமே செய்தார்கள். பலகாலம் இந்தச் சிறுமையைப் பொறுத்துக்கொண்ட தேவர்கள் பிறகு ஒரு சமயம் திருக் கயிலை சென்று தங்களுக்கு நேர்ந்த துன்பத்தினைச் சிவ பெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமானும் அவர் களை நோக்கி "தேவர்களே! அஞ்சாதீர்கள். நாம் விரைவில் ஒரு புத்திரனைத் தோற்றுவித்து யானை முகத்தினையுடைய வலியதிறலாளனுன கயமுகாசுரனைக் கொன்று உங்களது துன்பத்தைப் போக்குவோம்'' என்று அருள் புரிந்தார். தேவர்கள் மிக்க களிப்புடன் ஆடிப்பாடி இறைவரிடம் விடை பெற்றுக்கொண்டு தங்களிருப்பிடம் சென்றனர்.

தேவர்கள் சென்றவுடன் அளவற்ற பிரமகபாலங்களை ஆபரணமாக அணிந்த திருமுடியையுடைய சிவபெருமான் தமது இடப்பாகத்திற்பொருந்திய தேவியாருடன் தாம் உண்டுபண்ணிய மிகவுயர்ந்ததும் குளிர்ச்சிவாய்ந்ததுமான ஒரு சோலையில் எழுந்தருளினுர். அங்குள்ள வளங்களையெல் லாம் கண்டு இன்புற்று அச்சோலையின் திறத்தையெல்லாம் தேவியாருக்குரைத்துச் சிற்பரரான சிவபெருமான் உயிருக்குள் உயிர்போல் அச்சோலையுள் இருக்கின்ற ஒரு சித்திரமண்ட பத்துள் விரைந்தெழுந்தருளினுர். உமாதேவியாருடன் அம்மண்டபத்துள்ளிருந்த சித்திரவுருவமனைத்தையும் சென்று பார்த்தனர். அப்பொழுது சிவபெருமானுடைய கட்டளையால் அச்சித்திரங்களின் நடுவில் முதலானதாக விளங்கிய ஏகாட் சரமான பிரணவமானது ஒன்று இரண்டாகித் துதிக்கையினை யுடைய யானைகளைப்போல உருக்காட்டிற்று. அவ்விருயானை களும் ஆணும் பெண்ணுமாகிச் சந்தோஷத்துடன் விளையாடின. இந்த நிகழ்ச்சியைப் பார்வதியும் பரமேசுவரரும் அன்புடன் பார்த்தார்கள். ஸர்வமங்களையான தேவியானவள் மிகவும் ஆச்சரியமடைந்து இறைவரை நோக்கி, இது என்னவென்று வினவினுர். பரமேசுவரன், "ஓ கல்யாணி! இது உலகமனைத் தின் நன்மைக்காக ஏற்பட்ட உனது கருணையென்றே அறிவா யாக'' எனக்கூறியருளினுர். பின்னர் மீண்டும் கஜதம்பதிகளை

இறைவரும் இறைவியாரும் அன்போடு பார்த்தருளினர்கள். அப்போது அவ்விருயானைகளின் சேர்க்கையால் கோடிசூரியப் பிரகாசம் உள்ளவரும் ஐந்து திருக்கரங்களையுமுடையவராகிய விநாயகப் பெருமான் அருள் பொழியும் மூன்று கண்களையும் தொங்குகின்ற வாயினையும் மும்மதமான ஆறுபாய்கின்ற மைபோலுங் கரிய யானைமா முகத்தினையும் சந்திரகலை யணிந்த சிவந்த சடையினையுமுடைய ஒரு சிறுவனாக அவதரித் தருளினர்.

ததா கஜமுகஸ்தத்ர ப்ராதுராஸீத் கணேச்வர: ॥
சண்டார்க்க கோடி ஸங்காச: க்ரீடதோர் கஜயுக்மயோ: ।
ஸோயம் விநாயகோ தேவம் தேவீமபி முதாததா ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம்,
அத்தியாயம் 27, ச்லோகம் 5½-6

அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனருள்
முக்கண்நால் வாயினன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன் வந்தருளினன்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், கயமுகனுற்பத்திப்
படலம், பாடல் 148.

ஒருமைப்பட்ட மனத்துடன் சிந்திப்பவர்களது சிந்தனையுள் அறிவுக்கறிவாய் விளங்கும் பெருமையினையுடையவனும், அருமையானவனும், அனைவரும் அடிவணங்கும் தகுதியால் இரண்டாவது ஈசனேயென்ன நிற்பவனும், பரம்பொருள் இது வென்று மயக்கமறக் கூறும் சதுர்வேதங்களில் விளங்கும் உண்மைப்பொருள் என உரைக்கப்படுபவனும், அனைத்து உலகங்களிலும் பொருந்தியுள்ள அஞ்ஞானவிருளை ஒழித்து உயிர்களின் மனத்துயரை நீக்கியருளுதற்கென்றே ஒரு அருளுக்கொண்டு அவதரித்தவனுமான அப்பெருமான் தமது அன்னையத்தர்களான பார்வதி-பரமேசுவரரின் திருவடி

களில் மனவிருப்பத்துடன் தலைசாய்த்து வணங்கி நின்ருர். அதுகண்ட சிவபெருமானும் தேவியாரும் விநாயகப் பெருமானை வாரியெடுத்துத் தழுவி அளவற்ற கருணையைக் காட்டியருளினர்கள்.

"எத்தகையோராயினும் ஏதேனுமொரு செயலைச் செய்ய எண்ணுவதன் முன்னர் உனது பாதங்களில் தலை சாய்த்து வணங்குவார்களாயின் அவர்களது எண்ணம்போல அக் காரியத்தினைத் தடையின்றி முடியச் செய்வாயாக. அங்ஙனம் உன்னை நினையாதார் செய்கையை இடையூறு செய்வாயாக. பிரமன் திருமால் முதலாயுள்ள தேவர்களுக்கும், அரிய உயிர்த் தொகைக்கும், பலவகைக் கணங்களுக்கும் மற்றும் எத்தகை யோருக்கும் நீ தலைமைத் தன்மையை நினது நல்லருளின் தன்மையால் நடத்துவாயாக. மேலும் கஜமுகாஸுரன் எனப்படும் அவுணனது ஆற்றலையழித்து பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களுடைய சிறுமையையொழித்து வருவாயாக" என்று யானைமுகப் பெருமானுக்குச் சிவபிரான் அருள் செய்தார். பிரணவஎழுத்து எனப்படும் ஓங்காரமளித்த ஞானப்பிள்ளை யான விநாயகருடன் செல்லுவதற்கு ஆற்றல் மிக்க பூதச் சேனைகளையும் உண்டாக்கிக் கொடுத்துத் தமது கோயிலின் வாயிலில் வீற்றிருந்து தலைமைத் தன்மையை நடத்தும்படி இருத்திவிட்டுச் சிற்பரரான பெருமான் சிற்பரையான தேவி யாருடன் தமது இருப்பிடத்துக்கு எழுந்தருளினர். பின்னர் விநாயகப்பெருமானும் பூதகணங்கள் புடைசூழக் கோயிலின் வாயிலில் பிரமாதி தேவர்கள் போற்றி செய்ய மகிழ்ச்சியுடன் வீற்றிருந்து வரலானர்.

இங்ஙனமிருக்கையில் தம்மை வழிபட வந்த திருமாலை நடுவராக வைத்துச் சிவபெருமான் தேவியுடன் விளையாட்டா கச் சொக்கட்டான் ஆடியபோது தாம் தோற்றுவிட்ட போதிலும் வெற்றி பெற்றதாகக் கூறினர். நடுவராக இருந்த திருமாலும் இறைவனின் திருவுளப்படியே உரைக்கத் தேவியார் வெகுண்டு திருமாலை ஒரு மலைப்பாம்பாக ஆகுமாறு

சபித்தார். திருமால் மனம் வருந்தித் தமக்குச் சாபவிமோசனம் வேண்ட, இறைவரும் கஜமுகாஸுரனைக் கொன்று விட்டுத் திரும்பிவரும்போது விநாயகரைத் தரிசித்தால் உன்னைப்பற்றிய சாபம் நீங்கும் எனச் சாபவிமோசனம் கூறியருளினர். திருமாலும் பெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தென் திசையில் உள்ள ஆலங்காட்டிற்குச் சென்று அங்கு ஒரு பெரிய ஆலமரப்பொந்தில் வஸித்துக் கொண்டு தமது சாபவிமோசன காலத்தை எதிர் நோக்கி நிகரற்ற சிவபிரானையும், மஹா கணபதியையும் தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

கஜமுகாஸுரனின் கொடுமைகளால் வருந்திய இந்திராதி தேவர்கள் அனைவரும் விநாயகப் பெருமானைச் சரணடைந்து தமது துன்பங்களையெல்லாம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். விநாயகப் பெருமானால் ஆதரவு காட்டப் பெற்ற தேவர்கள் பயத்தைவிட்டுக் கூறினர்கள். "கணங்களுக்கெல்லாம் தலைவரே! மிக்க பராக்கிரமம் உடையவரே, அண்டினவர்களான பக்தர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிவைப்பவரே! கணபதியும், அடைக்கலம்புகத்தகுந்தவருமான தங்களிடம் அடைக்கலம் புகுந்தோம். கணாதிபனே! கஜமுகாஸுரனைக் கொன்று எல்லாத் தேவர்களையும் காப்பாற்றியருள வேண்டும். அந்தக் கொடியவனுக்குக் கட்டுப்பட்டு இரவு பகலாகத் துன்பமனுபவித்து வருகிறோம்.

இத்யுவாச ததோ தேவா நிர்பயா வாசமூசிரே ।
கணநாத மஹாஸத்வ பக்தானுமிஷ்டதாயக ॥

கணநாம் த்வாம் கணபதிம் சரண்யம் சரணம் கதா: ।
ரக்ஷ ரக்ஷ ஸுரான் ஸர்வான் ஹத்வா கஜமுகாஸுரம் ॥

துராத்மநா கணேச பாத்யமானாநஹர்நிசம் ।
இதி தேஷாம் வசச்ச்ருத்வா ததேத்யுக்த்வா கணேச்வர: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 28-ம்
அத்தியாயம், சுலோ. 5-7

தேவர்களுடைய பிரார்த்தனையைச் செவிமடுத்தருளிய கணபதியானவர் அவ்வண்ணமே செய்கின்றோம் என்று கூறி யருளினர். உடனே அசலன் என்னும் பூதத்தின் மீது ஏறிக் கொண்டு, வாத்தியங்கள் பல பேரொலி செய்ய, பூதப்படை கள் பின் தொடர, கஜமுகாஸுரனுடன் போர்புரியச் சென்றார். இச்செய்தியையறிந்த கஜமுகனும் ஆயிரம் வெள்ளம் அரக்கர் படை புடைசூழ விநாயகப்பெருமானை எதிர்த்துப் போர் செய்ய வந்தான். அவனது கொடிய போரினால் பூதர்கள் மிகவும் துன்பமடைந்தார்கள். அதைக்கண்ட விநாயகர் அவனுடைய படைகளையெல்லாம் தமது மழுவாயுதத்தினால் வென்றார். சிவபிரானது வரபலத்தினால் ஆயுதங்கள் ஒன்றி னாலும் அவன் இறவாதவனானமையால் தமது இரு தந்தங்களில் ஒன்றை முறித்து அவன் மீது எறிந்தார். அது அவனது மார்பைப் பிளந்து அவனுடல் கீழே விழுமாறு தள்ளியது. பிறகு நன்னீரில் முழுகி விநாயகரின் திருக்கரத்தைச் சென் றடைந்தது. அந்த அஸுரனின் மார்பினின்றும் பெருகிய இரத்தம் பரவியோடிய இடம் திருச்செங்காட்டங்குடி என்ற பெயருடன் இன்றும் காணும்படி விளங்குகிறது.

அஸுரன் மார்பு பிளந்து வீழ்ந்தானாயினும் சிவபிரானின் வரமஹிமையால் இறவானாகிப் பெருச்சாளியின் உருவெடுத்து விநாயகரை எதிர்த்து வந்தான். உடனே விநாயகர் அதைத் தூய்மைக் குணமுடையதாக்கி அதன் மீது அமர்ந்து தமது வாஹனமாக்கிக் கொண்டார்' அந்த பெருச்சாளியும் திவ்ய ஞானம் பெற்று விநாயகரைப் பக்தியுடன் சுமக்கலாயிற்று. துன்பம் நீங்கிய தேவர்கள் மகிழ்ச்சியினால் ஆடிப்பாடிப் பேராரவாரஞ் செய்தார்கள். மேகத்தைக் கண்ட மயிற்குழாங் கள் போலக் களிப்பில் மூழ்கி மகிழ்கின்ற அத்தேவர்கள் சிவ குமாரரை இறைஞ்சி அவரது புகழ்களைப்பாடித் துதித்தனர்.

"இவ்வுலகமனைத்தையும் காப்பவனும், படைப்பவனும், அழிப்பவனும் தேவரீரையன்றி வேறு ஒருவருமிலர், அம்பு

பட்டுத் துடித்தாற்போல எங்கள் உள்ளமடைந்த துன்ப நீக்கு தலை எண்ணியன்றே தேவரீர் இவ்வருள் வடிவங்கொண் டருளினீர். தேவரீரிடத்தே பிறந்த வேதம் தேவரீரது பெரிய நிலையை இன்னதென்று அறிந்ததில்லை. அங்ஙனமிருக்க நாங்கள் எவ்வாறு அறிவோம். தேவரீரே எங்களுக்குத் தாயும் தந்தையுமாயினீர். அதனால் மைந்தர்களான நாங்கள் கூறும் புகழ்மொழிகளையும் விரும்பிக் கேட்டருளினீர்''.

காப்பவன் அருளும் மேலோன் கண்ணகல் ஞாலம் யாவும்
தீர்ப்பவன் ஏனைச் செய்கை செய்திடும் அவனும் நீயே
ஏப்படுஞ் செய்கை யென்ன எமதுளம் வெதும்பும் இன்னல்
நீப்பது கருதி யன்றே நீயருள் வடிவங் கொண்டாய்.

உன்னிடைப் பிறந்த வேதம் உன்பெரு நிலைமை தன்னை
இன்னதென் றுணர்ந்த தில்லை யாமுனை அறிவ: தெங்ஙன்
அன்னையும் பயந்தோன் தானும் ஆயினை அதனால் மைந்தர்
பன்னிய புகழ்ச்சி யாவும் பரிவுடன் கேட்டி போலாம்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், கயமுகன்
உற்பத்திப்படலம், 255-256.

இவ்வாறு பிரமதேவனை உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் விநாயகப்பெருமானைத் தோத்திரஞ்செய்ய அதனால் மகிழ்ந்த பெருமானும் அவர்களுக்குத் தமது கருணை நோக்கினால் அளவற்ற பேரருளைப் புரிந்தார். பின்னர் திருச்செங்காட்டங் குடி சென்று அங்கு சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்து தமது தந்தையாரைப் பூசித்து மகிழ்ந்தார். விநாயகர் வழி பட்ட அவ்விடம் கணபதீச்சரம் என வழங்கப்படுகிறது.

முப்புரமெரித்த முதல்வனாகிய சிவபிரானைப் பூசித்த பின்னர் விநாயகப் பெருமான் பெருச்சாளியாகிய தமது ஊர்தி யின்மேல் ஏறிக்கொண்டு பூதகணங்களும் பிரமதேவன் இந்திரன் மற்றும் தேவர்களும் தொழுதுகொண்டே உடன்

வரத் திருமால் மலைப்பாம்பாகிச் சாபவிமோசனத்தை எண்ணி வசித்துவரும் ஆலங்காட்டினுள் பிரவேசித்தார். இச்செய்தியையறிந்த திருமால் தாமும் எதிர்வந்து விநாயகரைத் தரிசித்த மாத்திரத்தில் மலைப்பாம்பின் வடிவம் நீங்கிச் சங்கு சக்கரங்களுடன் கூடிய தமது பண்டைய உருவத்தைப் பெற்றார்.

அம்பிகையிட்ட சாபம் நீங்கித் தமது உண்மையான உருவத்தைப் பெற்ற மகிழ்ச்சியினால் திருமால் விநாயகரைத் துதிக்கலானார். "பக்தர்களின் மனோபீஷ்டங்களையெல்லாம் அளிக்கும் ஓ கணேசா ! தங்களுக்கு நமஸ்காரம். எவருக்கு மேற்பட்ட தலைவர் இல்லையோ அப்படிப்பட்ட பெருமானே ! எல்லோருக்கும் பெரியவரே! எல்லா உலகங்களுக்கும் முக்கிய நாயகரே ! தங்களுக்கு வணக்கம். தேவர்களைக் காக்கும் கணேசப் பெருமானே ! தங்களைத் தரிசித்தவுடன் அம்பிகையின் சாபத்தால் ஏற்பட்ட எனது அதிகோரமான மலைப்பாம்பின் உருவமானது நாசமாயிற்றன்றோ ?" எனப்பலவாறு துதித்து மகிழ்ந்தார். திருமாலின் இந்தத் தோத்திரத்தினால் கணேசரும் மிக்க மகிழ்ச்சியடையத் திருமால் அவரை நோக்கி, "ஸர்வேசனும் விச்வேசனுமான ஓ விநாயக ! எனக்குச் சாபவிமோசனம் ஏற்பட்ட இந்த நாளாகிய மார்கழி மாதத்துச் *சுக்கிலபக்ஷ ஷஷ்டி நன்னாளில் எந்த மனிதர்கள் தங்களைப் பூசிக்கிறார்களோ அவர்கள் கோரிய பொருளை அடியேனை ரட்சித்ததன் ஞாபகார்த்தமாகக் கொடுத்தருள வேண்டும்" என்ற வரத்தையும் கேட்டுப்பெற்றுத் தமது இருப்பிடம் சென்றடைந்தார்.

திருமாலுக்கு விடைகொடுத்தருளிய பின்னர் விநாயகப் பெருமான் பெருச்சாளி வாஹனத்தில் அமர்ந்து பூதப்படைகள் பின்தொடரத் திருக்கயிலையில் தமதிருப்பிடம் சென்றடைந்

---

*அமாவாசை கழிந்த மறுநாள் முதல் பௌர்ணமிவரை சுக்கிலபக்ஷம் எனப்படும். ஷஷ்டி என்பது ஆறுவது நாள்.

தார். விநாயகரால் வினைதீர்ந்த தேவர்கள் அனைவரும் ஒருங்குகூடித் திருமாலும் நான்முகனும் உடன் வர, விநாயகரை மீண்டும் தரிசித்து வணங்கினார்கள். அப்பெருமான் தங்களுக்குச் செய்த உதவிக்குப் பிரதியாக ஏதும் செய்ய இயலாத நிலையில் இதுவரையில் கஜமுகாஸுரனுக்குச் செய்துவந்த தலையில் குட்டிக் கொள்ளுதல், தோப்பிக்கரணம் போடுதல் ஆகிய வணக்கத்தை அவரது திருமுன்பு செய்யவும், அம்மாதிரியே எல்லோரும் செய்யவும், அவ்விதமான வணக்கத்தைச் செய்பவர்களது மனவிருப்பங்களையெல்லாம் நிறைவேற்றிவைக்க வேண்டும் என்றும் வரம் வேண்டினார்கள். விநாயகரும் அவ்வாறே ஆகுக எனத் திருவருள் புரிந்தார். (விநாயகரின் திருமுன்பு இந்த வழிபாடு இன்றளவும் நடைபெற்று வருவது கண் கூடு).

எந்தை கேண்மதி எம்மை அலைத்திடும்
தந்தி மாமுகத் தானவற் செற்றியால்
உய்ந்து நாங்கள் உனதடி யோமிவண்
வந்து நல்குகைம் மாறுமற் றில்லையே.

நென்னல் காறும் நிகரில் கயாசுரன்
முன்ன ராற்று முறைப்பணி எந்தைமுன்
இன்ன நாட்டொட் டியற்றுதும் யாமென
அன்ன செய்திரென் றான்அருள் நீர்மையான்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், அனந்தன்
சாபநீங்கு படலம், 9-10

''ஆகையால் மூடனான தட்சனே! இறைவன் ஒரு பிள்ளையைப் பெற்றது தேவர்களின் துயரைத் தீர்க்கவேயன்றோ? இனி, நீ கேட்ட மற்றவற்றுக்கும் பதில் கூறுகிறேன்'' என்று ததீசி முனிவர் தொடர்ந்து கூறலானார்.

சிவம்.

13. சிவனரது தாமதகுணம் பற்றிய விளக்கமும் ததீசி தட்சனுக்கிட்ட சாபமும்.

"பரமேசுவரன் தமோகுணத்தோடு கூடியவர் என்று கூறிய தட்சனே! நான் கூறுவதைக் கேட்பாயாக" எனத் ததீசி முனிவர் கூறலானர். "பரமேசுவரன் முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். அனந்தமான *கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவர். அளவற்ற மஹிமைக்கு இருப்பிடமானவர். பரஞ்சோதியும் பரம் பொருளுமான பரமேசுவரன் ஸத்வம், ராஜஸம், தாமஸம் ஆகிய மூன்று குணங்களேயும் உண்டாக்கிப் பிரம்மதேவனே ராஜஸ குணத்தோடு சேர்த்துப் படைத்தல் தொழிலில் ஏவியருளினர். திருமாலே ஸத்வ குணத்தோடு சேர்த்துக் காத்தல் தொழிலே அவருக்குக் கொடுத்தருளினர். ஞானகுணத்தினேயுடைய பராபரனுகிய சிவபிரான் ஸத்வம் ராஜஸம், தாமஸம் என்ற முக்குண சம்பந்தமற்றவராயினும் ஸம்ஹாரம் என்னும் அழித்தல் தொழிலேப் பிற தேவர் எவராலும் செய்யமுடியாதாகையால் தாமே தமோ குணத்தோடு கூடிய உருத்திரமூர்த்தியாக இருந்துகொண்டு ஒவ்வொரு கல்பத்திலும் எல்லா உலகங்களேயும் அழிக்கிருர். அந்த சங்காரத் தொழிலும் கடுங்கோபத்துடன் நிறைவேறுதலேப் பொருந்திய தன்மையால் அதனிடத்துத் தாமத குணத்தினேயமைத்தனர். எனவே இத்தாமதகுணம் எம்பெருமானுக்கு இயல்பானதன்று என்று அறிவாயாக.

---

*ஐச்வர்யமுடைமை முதலிய ஆறு குணங்களும் முற்றறிவுடைமை முதலிய எண் குணங்களும் இவற்றுள் அடங்கும். விரிவு பிற்சேர்க்கையிற் காண்க.

இயல்பாகவே பரமன் தாமத குணமுடையவராயின் சிறந்த அளவற்ற வேதங்களையும் வரம்பற்ற ஆகமங்களையும் குற்றமற அருளிச்செய்து ஒப்பற்ற கல்லால விருட்சத்தின் அடியில் சனகாதியர்க்கு ஞானோபதேசம் செய்தருளினர் என்பது எங்ஙனம் பொருந்தும்? முக்கண்ணனாகிய அப் பெருமான் குற்றமற்றதான பளிங்கின் நிறத்தையுடையவ ரென்பதும் எங்ஙனம் பொருந்தும்? இறைவன் தாமத குணத் தராயின் வேதங்கள் * அனைத்து வித்தைகளின் மூலம் என்று அவரையே உரைக்குமோ? தேவர்கள் அனைவரும் வணங் கும் சிவபெருமான் பண்டு சங்காரத்தினைச் செய்த முறைமை யால் அவரைத் தாமதகுணத்தரென்றனை. இக்குணம் செயற்கையேயன்றி இயற்கைக் குணமன்று என்பதனை அறிவாயாக.

நிர்மலரும், நிர்க்குணரும், விகாரமற்றவரும், அளவற்ற மஹிமைகளுக்கு இருப்பிடமானவரும், குறைவில்லாத பெருமைகளையுடையவரும், மாயா ஸம்பந்தமற்ற திருமேனி யையுடையவருமான மஹாதேவரை அவர் மிகவும் புனித மானவராகையால் வேதம் "சிவ:" என்று கூறுகிறது.

---

*ஈசாந: ஸர்வ வித்யாநாம் ஈச்வர: ஸர்வபூதானாம் ।
ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா சிவோமே
அஸ்து ஸதாசிவோம் ॥

என்ற நாராயண உபநிஷத் மந்திரத்தின் கருத்து இங்குக் கூறப்பட்டுள்ளது.

வித்தைகள் எல்லாவற்றுக்கும் ஈசர் என்பது "ஈசாந: ஸர்வ வித்யானாம்" என்பதாலும், பூதங்கள் எல்லாவற்றுக் கும் பதி என்பது "ஈச்வர: ஸர்வபூதானாம்" என்பதாலும், பிரம்மனுக்குத் தலைவர் என்பது "ப்ரஹ்மாதிபதி:" என்ப தாலும் பிராம்மணருக்கு அதிபர் என்பது 'ப்ரஹ்மணோதிபதி:' என்பதனாலும் அறியப்படுகிறது.

பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்கள் முக்குணங்களோடு கூடியவர்கள். விஷ்ணுவானவர் தூக்கத்துக்கும் சோம்பலுக்கும் வசப்பட்டிருப்பதாலும் கருமை நிறத்தோடு கூடியிருப்பதாலும் தாமத குணமுடையவராவார். அஹங்காரம் முதலியவற்றோடு கூடியிருப்பதால் ராஜஸகுணமுள்ளவரென்றும் கூறப்படுகிறது. சிவஞானம், சிவத்தியானம், சிவபூஜை முதலியவற்றுடனும் கூடியிருப்பதால் அவர் ஸாத்விகரும் ஆவார். அதே போலப் பிரம்மதேவனும் பொன்னின் நிறம் பெற்றமையாலும், சில சமயங்களில் மயக்கத்தினுல் தன்னையே பரம்பொருள் என்று கூறிக் கொண்டமையாலும் இராஜஸ தாமஸ குணங்களைக் கொண்டவராகிருர். பரமேசுவரனை வழிபடும் தன்மையால் ஸாத்விகம் உள்ளவராகிருர். இங்ஙனம் பிரம்மன் திருமால் உள்ளிட்ட அனைவரும் முக்குணங்களுக்கு வசப்பட்டவர்களே என்பதை அறிவாயாக. ஆனுல பரமசிவனுேவெனில் முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். ஞானமே வடிவானவர். அனைத்து உயிர்களுக்கும் அந்தராத்மாவாக விளங்குபவர். அப்படிப்பட்ட பரம்பொருளை நீ நடத்தும் இந்த வேள்வியில் ஹவிர்ப்பாகத்தினுல் பூசித்து நனமையையடைவாயாக". இவ்வாறு ததீசி முனிவர் தட்சனுக்கு தந்தை மகனுக்குரைப்பது போன்று நல்லுரைகளை வழங்கியருளினுர்.

ஆனுல் முனிவரது வார்த்தைகள் தட்சனது செவிகளில் ஏறவில்லை. "ஐயா முனிவரே ! உமது பரமசிவன் முழு முதற் கடவுளேயானுலும் எனது யாகத்தில் ஹவிர்ப்பாகம் கொடுகக மாட்டேன். நீா இங்கிருந்து செல்லலாம்" என்று விதிவழியே மதிசெல்ல இறுமாப்புடன கூறினுன். அவனது கொடிய மொழிகளைக கேட்ட ததீசீ முனிவர் கடுங்கோபங் கொண்டார். பின்னர் தமது சினத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு தட்சனைப் பார்த்து, "ஓ தட்சனே ! இன்று சங்கரனை விலக்கி நீ செய்கினறயாகம் அழிக. உன்னுடன் இங்கிருக்கும் தேவர்கள் எல்லாம் இன்றே அழிக" எனச்சாபமிட்டார். பின்னர் அங்குக்கூடியிருந்த வேதியர்களைப் பார்தது "பார்ப்

பனரில் அலிகள் போலானீர்கள். உங்களது குலத்தன்மையைக் கைவிட்டீர்கள். வேதங்கள் அனைத்தும் பராபரன் என்று துதிக்கின்ற சிவபெருமானையும், சிவனடியார்களையும், சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களையும் இகழ்ந்து நீங்கள் பிராம்மணர்களாய் எந்நாளும் பிறந்து இறந்து மோட்சமடையாது பாசத்தின் வயப்பட்டு உழலக்கடவீர்'' எனச் *சபித்தார், இவ்வாறு பல சாபங்களையுரைத்துத் ததீசி முனிவர் இரு புறத்திலும் முனிவர் கூட்டம் தம்மைச் சூழ்ந்து வரச் சிவபிரானைத் தமது உள்ளத்தில் தியானித்தவண்ணம் தமது இருப்பிடத்தை நாடிச் சென்றார். அதே நேரத்தில் தட்சனது பெருந்தன்மையும், கீர்த்தியும், திருவும், வன்மையும் மற்றும்அவனது மனச்செருக்கும் போயிற்று.

இனையநெறி யாற்சாபம் பலவுதைத்துத்
ததீசிமுனி இரண்டு பாலும்
முனிவர்தொகை தற்சூழத் தானுறையும்
ஆச்சிரம முன்னிச் சென்றான்
அனையவன்தன் பின்னாகத் தக்கனென்போன்
பெருந்தகவும் ஆற்றும் நோன்பும்
புனைபுகழுஞ் செழுந்திருவும் ஆற்றலுமாம்
மனச்செருக்கும் போயிற் றன்றே.

---

*ததீசி முனிவரின் இந்தச் சாபத்தினால் தான் இந்நாளும் வேதியர்களில் ஒரு சாரார் சிவத்துவேஷிகளாக இருக்கிறார்கள் என்று அறிக.



சிவம்.

14. வேள்வி முயலலும் விமலையின் வருகையும்

கடுஞ்சாபமிட்டுத் தட்சனின் வேள்விச்சாலையை விட்டுத் ததீசி முனிவர் வெளியேறியதும் பல அபசகுனங்கள் நிகழ்ந் தன. கொடி அறுந்து விழுந்தது. தட்சனின் மனைவியின் திருமாங்கல்யச் சரடான்து தானாகவே அறுந்து விழுந்தது. யூபஸ்தம்பத்தின் மீது காக்கைகளும் கழுகுகளும் வந்து உட்கார்ந்தன. இவ்வாறு நிகழ்ந்த பல அபசகுனங்களையும் பொருட்படுத்தாமல் துராத்மாவான தட்சன் முதலில் விஷ்ணு வையும் பிறகு பிரம்மதேவனையும் வழிபட்டு தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும வேண்டியன வேண்டியவாறு அளித்து தனது பெண்களுககும் மருகர்களுக்கும பல வரிசைகளை எல்லாம் அளித்தான.

காமதேனு பற்பல உணவு வகைகளைக் கொடுத்தது. சிந்தாமணியும, சங்கநிதியும், பதுமநிதியும், ஐந்து தேவதருக் களும் பலவகையான மணிகளையும் ஆடைகளையும் ஆபரணங் களையும் கொண்டுவந்து குவித்தன. அந்தணர், முனிவர் முதலியோரையழைத்து பொன் தட்டுக்களில் உணவு வகை களைப் பரிமாறி, அனைவரும் தங்கள் மனம்போல் உண்டு மகிழும்படிச் செய்தான். பிறகு பொன் - ஆடை - ஆபரணங் கள, பசுக்கள், குடை, பாதுகை கமண்டலம் முதலியவற்றை மிகுதியாகத் தானஞ் செய்யப் பிராம்மணர்கள் அவைகளை மகிழ்ச்சியுடன் பெற்றார்கள். வேள்விச்சாலை முழுவதும் மகிழ்ச்சியின் பேரொலி நிறைந்தது. அங்கு வந்திருந்த தேவர்களின் வாகனங்கள் எல்லாம் ஒலித்தன. தேவமகளிர் கள் ஒரு புறத்தில் நடனம் ஆடினார்கள். இவ்வாறாகிய பல நிகழ்ச்சிகள் பொருந்திப்பேரொலியுடன் யாகசாலை திகழ்ந்தது. பிறகு யாகத்துக்கு எஜமானனாகிய தட்சன் மூவகை அக்னி

களையும் (ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணுக்கினி) குண்டங்களில் உண்டாக்கி, அங்குள்ள ரித்விக்குகளைக் கொண்டு சிவபெருமான் அல்லாத மற்றைய தேவர்களுக்கு வரிசையாக மந்திரங்களைச் சொல்லி ஆஹுதிகளைக் கொடுத்தான். இவ்வாறு வேள்வி செய்யும்போது அக்னியில் ஆஹுதி செய்யப்பட்ட அவிகளை அந்தந்த தேவர்கள் உயிருக்குயிராகிய இறைவன் இல்லாமல் அருந்தும்போது அவை சுவையில் அமுதத்தை ஒத்திருப்பினும் உண்ணத்தகாத நஞ்சை ஒத்தனவாயின.

அப்பொழுது ஸ்ரீமானுன நாரத முனிவர் இந்த விஷயத்தை அறிந்து கைலாசபர்வதத்திற்கு விரைந்து சென்று தேவியோடு கூடிய மஹாதேவரை நமஸ்கரித்து அவருக்கு தட்சனின் யாகத்தைப் பற்றிய வரலாறுகளையெல்லாம் கூறினுர். "தேவதேவனுன ஸர்வேச்வரா! தட்சனுனவன் துர்புத்தியினுல் யக்ஞபதியான தங்களுக்கு அவிர்ப்பாகத்தைக் கொடாமல் யக்ஞேச்வரனுன தங்களை அவமதித்து மற்ற தேவர்களையெல்லாம் பூசித்து ஒரு வேள்வி செய்கின்ருன்" என்று விண்ணப்பித்தார். தாட்சாயணி தேவியார் அதனைக் கேட்டுத் தன் தந்தை செய்யும் யாகத்தைக் காணவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு ஸ்ரீ மஹேச்வரரை நமஸ்கரித்துக் கூறினுள். 'ஒ தேவேச! நான் யாகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி விடுகிறேன். ஹே ஸர்வேச்வரா! அங்குச் செல்வதற்கு உத்தரவளிக்க வேண்டும்" எனப் பிரார்த்தித்த தேவியை நோக்கி "கல்யாணீ! நீ அங்குச் செல்வது எங்ஙனம் பொருந்தும்? அந்த தட்சன் தான் பெற்ற வரங்களால் அஹங்காரத்தையடைந்து மயங்கி நிற்கின்ருன். அம்மயக்கத்தினுலே அவன் உன்னையழைக்காமல், என்னையும் விலக்கி மற்றைய தேவர்களையெல்லாம் பூசித்து வேள்வி செய்கின்ருன். இப்பொழுது நீ அங்குச் சென்ருல் அவன் உன்னை மதிக்கமாட்டான். ஆகையால் நீ அவனது யாகத்துக்குச் செல்லாதே" என்று கூறினுர். தேவியாரோ தந்தையிடம் கொண்ட அன்பினுல் மீண்டும் இறைவரை நோக்கிப்

பிரார்த்தித்தாள். "சுவாமீ! தட்சன் அற்ப அறிவு உள்ளவன். அவனுடைய பிழையைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும். நான் அவன் நடத்தும் வேள்வியைப் பார்த்து விட்டு வருகிறேன். எனவே அடியவளுக்கு உத்தரவளித்தருள வேண்டும்." இவ்வாறு கூறி மஹாதேவரை மீண்டும் மீண்டும் வணங்கிநிற்கச் சிவபெருமானும் தேவியின் விருப்பத்தை மீண்டும் தடுக்காமல் சென்றுவர அனுமதி கொடுத்தருளினர்.

தேவியார் சிவபெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு ஒரு பெரிய விமானத்திலேறி, சுமாலினி,-மாலினி என்பவர்கள் குடைதாங்க, மங்கலை - சுமங்கலை முதலிய பெண்கள் சாமரம் வீச, சுகேசை என்பவள் பாதுகைகளைத் தாங்கிக்கொண்டு பின்னே வர, கமலினி-அநிந்திதை என்னும் சேடியர்கள் இருவரும் புஷ்பமாலைகளைக் கொண்டு செல்ல, பற்பல பெண்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இசைக் கருவிகளை ஒலித்துக் கொண்டும் உடன் வர, தட்சனின் யாகசாலையை நோக்கிப் புறப்பட்டார். பன்னிரண்டு கோடி பூதர்கள் புடைசூழச் சோமநந்தி என்ற கணாதிபன் தேவியை வணங்கினவனாய் எருதின்மீது ஏறிக் கொண்டு முன்னே சென்றான். இவ்விதம் பரமேச்வரியார் தமது பரிவாரங்களுடன் யாகசாலையை அடைந்து தனது விமானத்தினின்றும் இறங்கித் தட்சன் இருக்குமிடஞ் சென்றார்.*

---

*பரமேச்வரியார் வேள்வித்தீ வளர்க்கும் தட்சன் முன் சென்றது "தீவினை விளைவிக்கும் தட்சன் முன் புதிதாகச் செய்யப்பெற்ற நல்வினையே போல் காணப்பட்டது" என்று திருக்குற்றாலத்தல புராணங்கூறும். தீவினை என்பது அக்கினியை வளர்த்துச் செய்யும் யாகச்செயல் என்ற பொருளும் தந்து, தீயசெயல் என்ற பொருளும் தரும் நயம் காண்க.

சிவம்

15. தட்சன் தேவியை அவமதித்தலும் தேவியார் சாபமும்

அழைப்பு விடுக்காதிருந்தும் தந்தை என்ற அன்பு காரண மாக வந்த அம்பிகையை அறிவிலியான தட்சன் வரவேற்கு னில்லை. அது மட்டுமா? தேவியாரைச் சீறிப் பார்த்து அவமதிக்கவும் ஆரம்பித்தான். "உனது பதியானவன் தாய் தந்தையற்றவன். உன்னை நான் அழைக்கவுமில்லை. அங்ஙன மாகவும் மகளிரில் ஒருத்திபோல நீ எதற்காக இங்கு வந்தனை? நீ திரும்பி உன்னிருப்பிடத்துக்குச் செல்வாய்" என்று கூறி னான். இவ்வார்த்தைகளைக் கேட்ட தாட்சாயணியார் தட்சனை நோக்கி "நீ என்னுடைய ஸஹோதரிகள், அவர்கள் கணவர் கள் ஆகியோர் அனைவருக்கும் தக்க வெகுமதிகள் அளித்து சிறப்பித்தனை, எங்களை மறந்தாய், அப்படியிருந்தும் நானாக உன்னையும் உனது யாகத்தையும் காணவந்தேன். அப்படி வந்த என்னை அன்பு காட்டாது கோபிக்கின்றாய். நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? வீட்டில் பிறந்த பெண் ணான என்னை அவமதிப்பது உனக்கு ஒருநாளும் நன்மை பயக்காது. உனது எண்ணம் தான் யாதோ?" என்றார். இவ்வாறு கூறிய தாட்சாயணியாரை நோக்கித் தட்சன் மறு படியும் கூறினான். "முக்குணங்களால் நடக்கும் செய்கை களுள் கொடிய தாமதகுணச் செயலைச் செய்து பேயோடாடல் செய்த பித்தனுக்கு நீ மனைவியானாய். அவனுடன் சேர்ந்து நீயும் அவன் நிலையை அடைந்தாய். அதனால் நான் உன்னை அழைக்கவில்லை. உன்னுடைய ஸஹோதரிகளும் அவர்கள் கணவர்களும் எனக்கு இனியவர்கள் ஆகையால் நான் அவர் களிடம் அன்புடையவனாகி வரிசைகள் அனைத்தும் அவர் கட்குக் குறையாது கொடுத்தேன். பிரம்மதேவனும்

திருமாலும் மற்ற தேவர்கள் அனைவரும் என்னைத் துதிக்கின்றனர். சிவனும் நீயும் என்னை மதிப்பதில்லை. அதனால் உங்களிடம் எனக்கு விருப்பமில்லை. என்னுடைய யாகத்தில் சிவனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுக்கமாட்டேன், அவனுக்கு ஹவிர்ப்பாகங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று கூறும் வேதவாக்கியங்களையும் எனது வலிமையால் மாற்றுகின்றேன். அதுவன்றி இங்கு வந்த உனக்கும் ஒரு சிறப்பும் செய்யேன். இவ்விடத்தைவிட்டு விரைவினில் நீ செல்வாய்''.

இம்மொழிகளைக் கேட்ட தேவியார் பெருஞ்சினங் கொண்டார். அச்சினத்தினைத் தாங்காது பரந்த கடல்களும் நடுங்கின. அக்கினிகளும் மேகங்களும் நடுங்கின. திக்குயானைகளும் மற்றுமனைத்தும் நடுங்கின. பிரமன் திருமால் இந்திரன் மற்றும் உள்ள தேவர்கள் முதலியவர்களும் நடுங்கினர் என்றால் அத்தேவியாரின் கோபத்திறனை இவ்வளவிற்றென்று எவரே கூறவல்லவர் ? அச்சமயம் தேவியாரின் அருகே இருந்த விமலை என்னுமொரு மாது வணங்கி, ''அம்மையே, உலகனைத்துக்கும் தாயாகிய உனக்குத் தக்கதோ இத்தகைய சினம் ? தட்சன் தரும நெறி இழந்தானென்று கொண்ட கோபம் எவரையும் கணப்பொழுதினில் அழித்துவிடுமே ! ஆதலாற் பொறுத்தருள்வாயாக'' எனத் துதித்தனள், இம்மொழிகளைச் செவியுற்ற அம்பிகையும் தமது கோபத்தினை அடக்கிக்கொண்டு யாகஞ் செய்யும் தட்சனைப் பார்த்து * இவ்வாறு கூறினர்.

''துர்மதியாளனான தட்சனே ! நீ என்னை அவமதித்ததை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் தேவாதிதேவனான

---

* கவிச்சக்கரவர்த்திகளான ஒட்டக்கூத்தர் இயற்றியருளிய தக்கயாகப்பரணி என்னும் நூலில் தேவியார் கூற்றாக வருவனவற்றையும், திருக்குற்றாலத்தல புராணத்தில் வருவனவற்றையும் பிற்சேர்க்கையிற் காண்க,

எனது நாயகராகிய சிவபெருமானை இகழ்ந்தது என் காதுக்குட் செல்லும் விஷம் போல இருந்தது. களங்கமற்றவரும், ஆதாரமற்றவரும் (தாமே எல்லாவற்றுக்கும் ஆதாரமாவதன்றித் தமக்கு ஓர் ஆதாரம் வேண்டாதவர்), முக்குணமற்றவரும், தீமையற்றவரும், முற்றறிவுடையவரும், அனைத்து வித்தைகளுக்கும் ஆதிகர்த்தாவும், அழிவற்றவரும், தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவரும், மங்களத்தையளிப்பவரும், சாந்தமே வடிவானவரும் நன்மையைச் செய்பவரும் வணங்குபவர்களின் துன்பங்களைப் போக்குபவருமான அந்தப் பரமேசுவரனை நீ அறிவு மயக்கத்தினால் தாமத குணமுடையவராகக் கூறினாய். இது பாவம்.

நிரஞ்ஜனம் நிராதாரம் நிர்குணம் நிருபப்லவம் ।
ஸர்வக்ஞம் ஸர்வவித்யாநாமாதிகர்தாரம் அவ்யயம் ॥
தத்வாதீதம் சிவம்சாந்தம் சங்கரம் ப்ரணதார்த்திஹம் ।
தாமஸம் ப்ரோக்தவான் மோஹாதஹோபாபம் தவேத்ருசம்॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 30ம் அத்தியாயம்
சுலோ. 55 - 56

அச்சிவபிரான் நிர்க்குணத்தவரேயாயினும் அவர் சிற்குணராகவும் விளங்குவார். சங்கார காலத்துக்கு முன் உள்ள குணத்தினைக் கருதுவதன்றி தாமதமாகிய ஒரு குணம் உடையவராவரோ? சங்கார காலத்திலன்றி ஞானநாயகனாகிய அப்பெருமானுக்கு அத்தாமதகுணம் எந்நாளும் இயல்பாக அமைந்ததாகுமோ? ஆராயுங்காலத்துச் சங்காரத் தொழிலும் உயிர்கள் பிறந்தும் இறந்தும் ஓயாமலுழன்று வருந்தாமல் இளைப்பாற்றுதலால், அருட்செயலேயாகும். காத்தலையும் படைத்தலையும் போலச் சங்காரமாகிய தொழில் அழிவற்ற ஞானநாயகனுக்கன்றி அஹங்காரம் பொருந்திய பிறரால் செய்ய இயலுமோ? அனைத்தையும் சங்கரித்த சிவபெருமானே அழித்தவைகளையெல்லாம் பின்னரும் படைப்பார்.

அவ்விறைவரிடமிருந்தே எல்லாம் தோன்றும். இதுவே சிவ பிரானின் உண்மை நிலே என்று அறிந்து கொள்வாய். குற்ற மற்ற வேதங்களேயும் ஆகமங்களேயுமருளிச் செய்து, அனேத் துக்கலேகளுக்கும் இறைவனுகிய, நிந்தையற்ற பொருள்களே அளித்த, எந்தையைத் தாமதகுணத்தன் எனக் கூறுதலுங் கூடுமோ ? ஆதலால் அப்பெருமான் அனேவருக்கும் ஒப்பற்ற தலேவன் ஆவார். அவருக்குப் பயந்து வேதங்களனேத்தும் முதற்கருத்தா சிவனே சிவனேயென்று வியந்து துதியா நிற்க, நீ அப்பெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காது இகழு கின்றனே.

சிறப்பு வாய்ந்த 'சிவ' என்னுமிரண்டு எழுத்துக்களே எப்படிப்பட்ட பாபியும் ஜபித்த மாத்திரத்தில் அவன் பிறவிப் பெருங்கடலேத் தாண்டி வீடுபேறெய்துகிருன். அப்படிப்பட்ட பெருமானே நீ இகழ்ந்தனே. எவரே இதைச் செய்வர் ? அறி விலியின் தன்மையையடைந்த நீ எவ்வாறு உய்தி பெறுவாய்?

யந்நாம பரமம் யோவா சிவ இத்யக்ஷரத்வயம் |
ஸக்ருத் ஜபதி யத்பாபீ ஜனே மோக்ஷம் ஸ விந்ததி ||

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத்தியாயம் 30, சுலோ. 58

*சிவனெ னுந்துணேச் சீரெழுத்தினே
நுவலு வோர்கதி நொய்தி லெய்துவார்
அவனே எள்ளினுய் ஆரி தாற்றுவார்
எவனே உய்குதி இழுதை நீரைநீ.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம்,
உமைவருபடலம், 54.

பிரம்மதேவனும் திருமாலும் தேடிக்காணுத சிவபெரு மானே முதல்வனுகக் கொள்ளாது இகழ்ந்த கொடுமையினே

*வைணவ புராணமாகிய பாகவதத்திலும் சிவநாம மஹிமை கூறப்பட்டுள்ளதைப் பிற்சேர்க்கையிற் காண்க.

உடையவர் அனைவருக்கும் தண்டனை கிடைக்கும் என வேதங்கள் உரைக்கும். ஓ தட்ச! நீ இயற்றும் இந்த வேள்வியை வேத முதல்வனாகிய அப்பெருமானை விலக்கிச் செய்கின்றனை. ஆதலால் சிவநிந்தை செய்யும் பாதகனாகிய உனக்கும் தண்டனை விரைவில் வந்தடைய உனது யாகமும் நாசமடையட்டும். இவ்வாறு சாபமுரைத்து, இவ்வுலகினைப் பெற்ற அம்பிகையானவர் யாகசாலையினின்றும் நீங்கித் தமது பரிசனங்கள் சூழ்ந்துவர விமானத்திலேறித் திருக்கயிலை சென்றடைந்தனர். தட்சன் கூறிய கொடிய மொழிகளை நினைத்து மனம் புழுங்கியவராகச் சிவபெருமானின் திருவடிகளை விரைந்து சென்று வணங்கி "பெருமானே! சிறியோனான தட்சன் தங்களை மிகவும் இகழ்ந்து பேசினான். அவனது யாகத்தினை அழிப்பீராக" என வேண்டினார். குற்றமற்ற பேரருட்கிறைவனாகிய சிவபெருமான் தேவியாரின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதிருந்தனர், உடனே அம்பிகையானவர் துன்பத்துடன் மீண்டும் பெருமானை வணங்கி, "சம்புவே! ஸர்வக்ஞரே! ஸகல புவனங்களுக்கும் தலைவரே! அகில உலகங்களையும் காத்தருள்பவரே! கருணைக் கடலே! வேண்டுதல் வேண்டாமை இலாதவரே! தாங்கள் தட்சனுடைய வேள்வியை அழித்து அவனையும் ஸம்ஹரிக்க வேண்டும். அந்தப் பாபியானவன் துராசாரம் உள்ளவனாகவும் சிவநிந்தையில் முயற்சி உள்ளவனாகவும் இருக்கிறான். அவனை அழிப்பது அனைத்து உலகங்களுக்கும் நன்மையைச் செய்வதாகும். மற்றும் என்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகவும் ஆகும்" எனப் பிரார்த்தித்தார்.

சிவம்.

16. வீரபத்திரரின் தோற்றமும் வேள்வியின் அழிவும்

சங்கரியின் இவ்வாருன வேண்டுகோளைச் செவிமடுத்தருளிய சங்கரர் தட்சனின் வேள்வியை அழிக்கத் திருவுள்ளங்கொண்டார். அங்ஙனம் திருவுள்ளங்கொண்டருளியவுடனே, இளந்திங்களைச் சூடிய மகுடங்களையுடைய ஆயிரம் தலைகளுடனும், ஒளி பொருந்திய மண்டலம் போல விளங்கும் முகந்தோறும் பிரகாசிக்கின்ற அரவ குண்டலங்கள் இரு காதுகளிலும் பொருந்தி அசையவும், ஆயிரம் முகங்களிலும் மும்மூன்று கண்கள் பொருந்திச் சீற்றத்தாற் சிதறின அக்கினிப் பொறிகளால் அண்ட முழுதும் கரியவும், மூக்கினிடத்து மூச்சுடன் பிறந்த தீயானது அண்டகோளத்துடன் அப்புறத்திலுஞ்சென்று அவைகளையழித்து மேகத்தினிடத்து உலவும் மின்னலைப் போல விளங்கவும், பிறைச்சந்திரனைப் போன்று ஒளிவிடும் பற்கள் விளங்கவும், கோபமாகிய கொடிய நெருப்பு எட்டுத் திக்குகளையும் அழிக்கின்றதென்று கூறவும், உயிர்த்தொகைகள் அஞ்சித் தளர்ச்சியடையவும், மேலுள்ள அண்டங்கள் பிளக்கவும், அவைகளில் பொருந்திய கடல்கள் கலங்கவும், ஸர்வசங்கார மூர்த்தியைப்போலக் கொள்ளப்பட்ட ஆரவாரிப்பு திசைகளனைத்திலும் பொருந்தி மேற்செல்லவும், உலகங்கள் முழுமையும் உண்டுமிழத்தக்க பாம்பினங்களை அழகிய கடகங்களாகவும் அங்கதங்களாகவும் ஒன்றோடொன்று பொருந்திய மெல்லிய தொடிகளாகவும் அணிந்து வானமளாவ உயர்ந்த இரண்டாயிரம் கரங்களும் எட்டுத்திக்குகளனைத்தும் நெருங்கவும், பிரம்ம விஷ்ணுக்களின் சிரமாலை வரிசைகளும், அவர்களின் எலும்புகளாகிய ஆபரணங்களும், பெரிய பன்றியின் கொம்புடன் ஆமையோடு முதலியனவும் மார்பிற் பொருந்திய முப்புரி நூலுடன் அசைந்து விளங்கவும்,

ஈட்டி - பலகை - தோமரம் - எழு - குலிசம் - சூலம் - வில் - அம்பு - தண்டம் - சக்கரம் - வாள் - மழு முதலான அளவற்ற ஆயுதங்கள் கைகளினகங்கள் தோறும் விளங்கவும், பொன்னு லும் மணிகளாலும் செய்யப்பெற்ற ஆபரணங்களுடன் கலந்து ஒளிவாய்ந்த கொடிய பாம்புகளான ஆபரணங்கள் உடலிலே நெருங்கி விளங்கவும், தமது அடியவர் கூட்டத்தினை 'அஞ்சேல், அஞ்சேல்' என்னும் அழகிய சொற்கள் போலப் பெரிய கால் களில் செஞ்சிலம்புகளுடனே வீரக்கழல்கள் ஒலிக்கவும், அந்திக்காலத்து வானம் போல் விளங்கும் திருமேனியனும் நஞ்சுண்ட கண்டனுமான எந்தை சிவபிரானின் வடிவாயுள்ள வனுமான வீரபத்திரக்கடவுள் இறைவரின் நெற்றிக்கண்ணு கிய அக்கினி குண்டத்தினின்றும் தோன்றினர். உடல் முழுவதும் திருநீற்றினுல் அலங்கரிக்கப்பட்டு ருத்திராக்ஷா பரணங்களோடு சிவப்பு சந்தனத்தை நெற்றியிலும் மார்பி லும் தரித்து அவர் திகழ்ந்தார். அப்பொழுது அம்பிகையார் தமது சீற்றத்தினின்றும் பத்திரகாளியை உண்டாக்க, அக் காளியானவள் இரண்டாயிரம் திருக்கரங்களும் ஆயிரம் முகங் களுமுடையவளாய் வீரபத்திரனுக்குத் துணைவியாகச் சென்று நின்றனள்.

வீரபத்திரரும் பத்திரகாளியும் இறைவரையும் இறைவி யையும் வலம் வந்து வணங்கி நின்றுர்கள். அப்பொழுது வீரபத்திரர் "ஓ சம்புவே! மஹாதேவரே! பக்தர்களின் சத்துருக்களையழிப்பவரே! பிநாகபாணியே! சங்கரரே! தாங்கள் அடியேங்களுக்கு என்ன பணியிட்டாலும் அதனைச் செய்து முடிப்போம். இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்? பிரம்ம விஷ்ணுக்களைக் கட்டி வரவேண்டுமா? இயமனைக் கொல்லவேண்டுமா? உலகங்களையழிக்க வேண்டுமா? தேவர் கள் அசுரர்கள் மற்றும் எல்லோரையும் நொறுக்கிவிட வேண் டுமா? என்பதனைப் பணித்தருள வேண்டும்" என்று குவித்த கரங்களுடன் கேட்டவராய் இறைவரின் திருமுன்பு நின்றுர். இறைவனுர் வீரபத்திரரை நோக்கி, "மஹாவீரனே! இப் பொழுது தட்சன் நம்மை விலக்கிவிட்டு ஒரு வேள்வி

செய்கின்றுன். நீ அங்குச் சென்று நமக்குரிய ஹவிர்ப்பாகத்தைக் கேட்பாயாக. அதனை அவன் கொடுத்தால் பெற்றுக் கொண்டு திரும்புவாய். அவன் கொடுக்க மறுத்தால் அவனுடைய தலையை அறுத்து, மற்றும் யாகத்தையுமழித்து, அவனைச் சேர்ந்த அனைவரையும் அழிப்பாய். அப்பொழுது நாமும் அங்கு வருவோம்'' எனக்கட்டளையிட்டு அனுப்பினுர்

இறைவனின் கட்டளையைச் சிரமேற்றுங்கிய வீரபத்திரக் கடவுள் பெருமானை வணங்கித் தட்சனது யாகத்தை அழிக்கும் எண்ணத்தோடு புறப்பட்டார். தமது மூச்சுக்காற்றை விடுவதிலிருந்தும், இழுப்பதிலிருந்தும் இணையற்ற பல வீரர்களை உண்டு பண்ணினுர். மேலும் அந்த வீரபத்திரர் தமது எல்லா மயிர்க்கால்களிலிருந்தும், மூக்குகள், காதுகள் இவற்றிலிருந்தும், வியர்வைத் துளிகள், கண்கள், சடைகள், கைகள், மார்பு, கழுத்து, முழங்கால், கணுக்கால், பாதங்கள், நாபி, இடுப்பு முதலிய மற்ற அங்கங்களிலிருந்தும் தமக்குச் சமமான அனேகம் பூதகணங்களை ஒரு கணத்தில் விளையாட்டாகப் படைத்தார். அப்பொழுது பத்திரகாளியும் அதேமாதிரி பல பத்திரகாளிகளை உண்டாக்கினுள். பிறகு பல ஆயுதங்களைக் கையில் தரித்தவர்களாகவும், பல நிறங்களையுடையவர்களாகவும், பலவித முகங்களைக் கொண்டவர்களாகவும், பலவிதமான ஆபரணங்களால் பிரகாசிக்கும் சரீரமுடையவர்களாகவும், அதி பயங்கரமான நெருப்புக் கண்களையுடையவர்களாகவும், மிகுந்த பலமுள்ளவர்களாகவும், மிகுந்த வேகமுள்ளவர்களாகவும், பிரம்ம விஷ்ணுக்களுடைய எலும்பு மாலைகளைத் தரித்தவர்களாகவும், அண்டங்கள் அனைத்தையும் பிண்டமாய்ச் செய்யும் பேராற்றல் உடையவர்களாகவும், வடவைத் தீயையும் உண்பதற்குத் தகுதியான பசியுடையவர்களாகவும் இப்படிப்பட்ட பயங்கரமான பூதர்கள், வீரர்கள், காளிகள், மோஹினிகள், சாகினிகள், டாகினிகள், யோகினிகள், பைரவிகள், காளராத்திரிகள் முதலிய பெண் கணங்களும், இவர்கள் எல்லோரும் மிகுந்த ஆரவாரஞ் செய்துகொண்டு வீரபத்திர

ரையும், பத்திரகாளியையும் பின் தொடர்ந்து சென்றார்கள். மேலும் பானுகம்பன் முதலிய கணங்கள் எல்லாம் வாத்தியங் களை முழங்கினார்கள். குடைகள், சாமரங்கள், கொடிகள் இவைகளைப் பிடிப்பவர்களும், பலவிதமான உபசாரங்களைச் செய்கின்றவர்களும், மற்றும் பிநாகி, தண்டி முதலிய கணங் களும் விரைந்து பின்தொடர்ந்து சென்றார்கள். அப்போது உண்டான ஆரவாரத்தால் பதினான்கு உலகங்களும் அவற் றில் உள்ள உயிர்க் கூட்டங்களும் நடுங்கினர். இவ்வாறு இவர்கள் யாவரும் சென்று ஒரு கணத்தில் தட்சனின் யாக சாலையைச் சென்றடைந்தனர். யாகசாலையை அடைந்ததும் வீரபத்திரர் தமது படைத்தலைவர்களை நோக்கிச் சுற்றுப் புறங் களையெல்லாம் நன்கு காவல் புரியுமாறு கட்டளையிட்டார். பூதப்படைகளும் அவ்வாறே தேவர்களும் மற்றவர்களும் தப்பியோடாதபடி யாகசாலையைச் சுற்றிக் காவல் காத்தன. தட்சனுடைய சேனைகளாகத் தங்களை எதிர்த்து வந்தவர்களைக் கொன்று தின்று பூதகணங்கள் ஆரவாரஞ்செய்தன.

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியும் யாகசாலையினுள் சென்றனர். பிரமன் திருமால் முதலிய தேவர்கள் அவ்விரு வரையும் பார்த்து உள்ளந் துண்ணென்று பதைபதைத்து அச்சமடைந்தனர். சிங்கத்தின் வருகையைக் கண்ட மானின் கூட்டத்தைப்போல உடல் நடுங்கி, வலிமையிழந்து, நகை நீங்கி, முகம் வாடி உயிரற்றவரையொப்பச் சில கூறுவாரா யினர். ஈசனும் உமையுமே இக்கோலத்துடன் வந்து சேர்ந் தனர் என்பார்கள். அவர்களது பெருஞ்சினத்தால் உண்டாக் கப்பட்டு வந்த தோற்றத்தினர் என்பார்கள். இவ்விருவரது சீற்றம் உரைத்தற்கரியது என்றும் நம்முயிரனைத்துக்கும் நாசம் இன்றே உண்டாகியது என்றும் கூறுவார்கள். தட்ச னுக்கு இன்றே அழிவு வந்தது போலும், எவற்றினுமுயர்ந்த விதியை யாவரே விலக்க வல்லார் என்று கூறுவார்கள். சிவநிந்தை செய்பவர்கள் உடனே அழிந்து போவார்கள் என்பதில் சிறிதும் ஐயமுண்டோ என்றும் கூறுவார்கள். சிவ பிரானை இகழ்ந்து ஏனோ இந்த யாகத்தைச் செய்தனன்?

தேவர் கூட்டத்துக்கெல்லாம் இன்று அழிவு வந்ததோ? என்று கூறுவார்கள். வன்மை மிக்க பூதர்கள் அனைவரும் எல்லாவிடத்திலும் சூழ்ந்து கொண்டனரே! தப்பியோடவும் அரிது; ஒளிந்து கொள்வதற்கும் இடமில்லையே! நாம் இறந்தோம் என்று பக்கங்களிற் சூழ்ந்த பெருந்தீயில் சிக்கிக் கொண்ட யானைகளைப் போலாயினர். இவ்வாறு தேவர்கள் வருந்தப் பெரிய பூதர்கள் சிலர் சூழ்ந்துவர, பத்திரகாளியுடன் மிக்க சீற்றத்தினையுடைய வீரபத்திரர் சென்று கொடிய தட்சன் யாகஞ் செய்வதனைப் பார்த்தார்.

இடியிடித்தாற்போலச் சிரித்துச் சீறி தீப்பொறி தோன்றக் கண்களை உருட்டி விழித்துக் கர்ஜனை செய்து, கொம்பு என்னும் அற்புத வாத்தியத்தினை ஊதி ஓசை உண்டாக்கினர் வீரபத்திரர். அவ்வோசையைக் கேட்டு இடிபட்ட நாகம்போலச் சோர்ந்து முனிவர்களும் தேவர்களும் கீழே விழுந்தனர், பதைத்தனர், வாய் குளறினர்,ஏங்கியழுதனர், ஓடினர், பூதர்கள் காவலினால் வெளியே ஓடவியலாது திரும்பினர். வீரபத்திரரின் சிங்கநாதங்கேட்டு தேவர்களும் இவ்வாறு ஓடுகின்றார்கள் என்றால் அங்குக் கூடியிருந்த நிலவுலகத்துப் பிராமணர்கள் முதலியோர் அடைந்த தன்மையை உரைத்தற்கு எவரே வல்லவர்?

அப்பொழுது திருமாலும் நான்முகனும் அஞ்ச, வீரருள் வீரரான வீரபத்திரர் யாகத்தின் எதிரிற்செல்லுதலும் தட்சன் அவரைக்கண்டு ஏங்கி மிகவும் நடுங்கி நிலைகெட்டு உள்ளந் தளர்ந்தான். வெளிப்புறம் முழுமையும் பூதகணங்கள் சூழ்ந்து நின்றதையும், யாகசாலை அழியும் தன்மையையும், தேவர்களனைவரும் தளர்வுறுதலையும் பார்த்துப் பெரிதும் துக்கமடைந்து, ஒருவாறு தேறி, பெருந்திறலுடையான்போல வீரபத்திரரைப் பார்த்து "நீ யார்? இங்கு எதற்கு வந்தனை?" என்று கேட்டான். உடனே, வீரபத்திரர் கம்பீரமான குரலுடன் "தட்சனே! தேவாதிதேவன், சம்பு, சூலபாணி,

மஹாதேவன், சிவன் என்று உலகத்தாராலும் வேதங்களாலும் போற்றப்படுகிற பரமேசுவரரின் புதல்வன் யான். உன்னுடைய யாகத்தில் அப்பெருமானுக்குரியதான ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன். சீக்கிரம் அதனைக் கொடுப்பாயாக'' என்று விடையளித்தார். தட்சன் அதனைக் கேட்டு ''இந்த யாகத்தில் சங்கரனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுக்கப்படமாட்டாது. அந்தச் சங்கரனை விலக்கிவிட்டு மற்ற தேவர்களுக்குத்தான் நான் அவியைக்கொடுக்கின்றேன்'' என்று கூறியவுடன் நான்கு வேதங்களும் பிரணவமும் திடீரென்று எழுந்துவந்து, ''ஓ தட்ச! ஒப்பற்ற பெருமானாகிய * சிவபிரானைத் தவிர யாகத்துக்கு வேறு ஒரு பதியும் உண்டோ? அப்பெருமானுக்குக் கொடுக்க வேண்டிய பாகத்தைத் தாமதமின்றிக் கொடுப்பாயாக'' என்று கூறின. ஆயினும் தட்சன் மஹாதேவருக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கவிரும்பவில்லை. அப்பொழுதே வேதங்கள் பிரணவத்துடன் சிவபிரானின் பொருள்சேர் புகழ்களைப்பாடித் துதித்துக்கொண்டு வீரபத்திரக்கடவுளை வணங்கிவிட்டுத் தம்மிருப்பிடஞ் சென்றன. உடனே வீரபத்திரர் தட்சனைப் பார்த்து ''வேதங்களும் பிரணவமும் கூறிய மெய்ம்மொழிகளைக் கேட்டனையன்றோ? இனியாகிலும் சங்கரனுக்குரிய ஹவிர்ப்பாகத்தைத் தாமதமின்றி உடனே கொடுப்பாயாக'' என்று கூறினர். ஆனல் அழிவுப்பாதையில் வெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் தட்சன் அதனைச் செவிமடுத்தானில்லை. ''சுடுகாட்டில் பூதபிரேத பிசாசங்களோடு கூத்தாடும் பித்தனுக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கமாட்டேன்'' என்று மீண்டும் சிவநிந்தையான வார்த்தைகளையே கூறினன்.

தட்சனின் வார்த்தைகளைக் கேட்ட வீரபத்திரர் கடுஞ்சினம் கொண்டார். அங்குக்கூடியிருந்த பிரம்மன் திருமால்

---

* ''சிவபிரானை விட்டு வேறு எவர் பொருட்டு 'ஹவிஸ்' கொண்டு வழிபடுவோம்'' என்று கூறும் சில வேதமந்திரங்களைப் பிற்சேர்க்கையிற்காண்க.

முதலிய தேவர்களைப்பார்த்து தட்சனின் இந்த சிவநிந்தைச் செயல் உங்களுக்கெல்லாம் சம்மதம் தானே ? என இடியிடித் தாற்போலக்கேட்டார். பிரமன், திருமால், இந்திரன் மற்றும் அங்குக் குழுமியிருந்த தேவர்களனைவரும வீரபத்திரர் இங்ஙனம் வினவியவுடனே பழைய ஊழின் தொடர்பினால் அவர் கூறியதைக் கேட்டும் கேளாதவர்களைப்போல மறு மொழி ஒன்றும் உரையாராய் ஊமைகளைப்போல இருந்து விட்டனர். உடனே வீரபத்திரர் இந்தப் பெரிய அண்டத் தையே வெடிக்கச்செய்வதுபோலப் பெருத்த ஆரவாரத்தைச் செய்து கையிலிருந்த ஒரு பெரிய தண்டத்தினால் இவன் நெஞ்சுரம் நன்று என்று கூறிக்கொண்டே தட்சனின் மார்பு பிளந்து போகுமாறு அடித்தார். தட்சன் அடிபட்டு உள்ளத் தில் அச்சத்துடன் திருமாலின் எதிரில் விழுந்தான்.

பிறகு வீரருள் வீரரான வீரபத்திரர் தமது திருக்கரத்திலி ருந்த தண்டத்தினால் திருமாலின் மார்பில் வேகமாக அடித் தார். அப்பொழுது திருமாலின் மார்பிலிருந்த கௌஸ்துப மணி சிதறிக்கீழே விழுந்தது. திருமகளும் பூமியில் சென்று விழுந்தாள். திருமாலும் வலிமை இழந்தவராய் மூர்ச்சை யாகிக் கீழேவிழுந்தார். அடுத்தபடி வீரபத்திரர் பிரம தேவனைப்பார்த்து அவனது தலையில் இடிவிழுந்தாலென்னப் பின்வரும் குமரக்கடவுளைப்போலத் தனது ஒரு கையினால் குட்டினார். குட்டுதலும் ஐயனுடைய கால்களில் விழுந்து வணங்குவோனை ஒப்பப் பிரமதேவனும் விழுந்தான். வெளியே கிளம்பிய சாவித்திரி, காயத்திரி, ஸரஸ்வதி ஆகி யோரது மூககுகளையும் கொங்கைகளையும் கத்தியால் அறுத்து விட்டார். இவ்வண்ணம் வீரபத்திரர் தண்டித்ததனைப்பார்த்து அவ்விடத்திலிருந்த தேவர்களனைவரும் ஓடிவிழுந்து ஒளித்தற் கிடமேதென்று தேடி, ஒருவரும் அங்கின்றிச் சிதறிக் கதறி வெளியே தப்பியோட முயன்றார்கள். அப்படி ஓடின தேவர் களை வெளியே காவல் செய்துகொண்டிருந்த பூதர்கள் மறுபடி யும் உள்ளே துரத்தினார்கள்.

அப்பொழுது ஓடிச்செல்ல முயன்ற கலைநிறைந்த சந்திரனை வீரபத்திரர் தமது ஒரு காலினுல் தள்ளி உடல் சிதைவுறுமாறு தேய்த்தார். பயந்து ஓடுகின்ற *சூரியனை நட்சத்திரங்கள் உதிர்ந்தாற்போல அவனது பற்கள் உதிரும் வண்ணம் கன்னத்தில் அடித்தனர். [1] பகன் என்னும் மற்ருெரு சூரியனுடைய இரண்டு கண்களையும் பிடுங்கினுர். சிவத்துவேஷிகளுக்குத் தகுந்த தண்டனைகளைக் கொடுக்கும் வீரபத்திரர் இயமனுடைய கடினமான தலையை வெட்டினுர். எமனிறந்ததைக் கண்டு மனமுடைந்த இந்திரன் குயிலுருவங் கொண்டு வானிற்பறந்து சென்று தப்பிப்பிழைக்க முயன்ருன். அப்பொழுததனைப் பார்த்த வீரபத்திரர் தமது கைவாளினுல் அந்தக் குயிலை வெட்டிக் கொன்ருர். தேவர்களுக்கெல்லாம் அரசனுன இந்திரன் விழுந்தவுடனே அலமந்து ஓடிய அக்கினி தேவனை வெற்றி வீரரான வீரபத்திரர் பார்த்து அவனது கைகளை விரைவில் துண்டாக வெட்டி எறிந்தார். "கறுத்த கண்டத்தினையுடைய கடவுளான சிவபெருமானை மறுத்த வனுன தட்சன் கொடுத்த உணவுகளை வெறுக்காமல் உண்டனையன்ருே?" என்று கூறியவண்ணம் அக்கினி தேவ னின் ஏழு பகுதிகளையுடைய நாவினை அரிந்தார். அக்கினி தேவனின் மனைவியான ஸ்வாஹா தேவியின் உயர்ந்த மூக்கினைக் கூரிய நகத்தினுற் கிள்ளியெறிந்தார். அச்சத் துடன் ஓடமுயன்ற நிருதியைத் தண்டத்தாலடித்துக் கொன்ருர். வருணனை உலக்கையாலடித்தும், வாயுதேவனை கோடரியால் பிளந்தும் கொன்ருர். குபேரனைத் தமது முத்தலைச் சூலத்தின் நுனியில் கோர்த்துக்கொண்டு பயங்கர மான நடனத்தைச் செய்தார். சிவபிரானது திருவுருவத்தைப்

---

* இந்த சூரியன் பூஷா எனப்படுவான். சிவ அஷ்டோத் தர சதநாமத்தில் உள்ள "பூஷதந்தபிதே நம:" என்று அருச்சனை நாமம் இந்தச் செய்தியைக் குறிக்கும்.

1. "பகநேத்ரபிதே நம:" என்ற சிவாஷ்டோத்தரசத அருச்சனை நாமாவளி இந்தச் செய்தியைக் குறிக்கும்.

பெற்ற ஈசானரும் உருத்திரகணங்களும் பயந்து வணங்குதலும் வீரபத்திரர் அவர்களைக் கொல்லாது வைது அனுப்பியருளினர். விரைந்தோடும் சோணிதபுரத்து அரசனை அசுரேந்திரனை வாட்படையினால் வெட்டிக் கொன்றார். வேள்வித்தெய்வமானது ஒரு மானுருவங்கொண்டு பயந்தோடுதலும் அதனைத் தடுத்து ஒரு அம்பினை எய்து வீரபத்திரர் அதன் தலையைக் கொய்தார்.

வீரபத்திரரால் அடியுண்டு மூர்ச்சையாகிக்கிடந்த தட்சன் தெளிவுற்று இச்செயல்கள் அனைத்தையும் துன்பத்துடன் கண்டான். அஞ்சுகின்ற மனத்தினையுடையவனாய் விரைந்து எழுந்து இவ்வாறு சிந்திக்கலானான். "எனது அளவிடுதற்கரிய பெருமை மிக்க யாகம் என் கண் முன்னே அழிவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேனே. எனது தந்தையான நான்முகனது உபதேசப்படி சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து எல்லையற்ற செல்வங்களை அவரருளால் பெற்றேன். எனக்குச் செல்வததையளித்த ஒப்பற்ற தலைவனை மதித்திலேன்; மனமுருகி வணங்கிலேன், செல்வத்தில் மயங்கினேன். அது மட்டுமோ? எனது மருகனென அப்பெருமானை இகழ்ந்தேன். வேதசாத்திரங்கள உரைத்தபடி அவ்விமலனுக்கு அளிக்கப்படவேண்டிய முதலாவதான அவியைக் கொடுக்கலாகாது என்று என் தந்தையினது யாகத்தில் தடைசெய்து, நானும் துன்பததையளிககும இந்த வேள்வியைச் செய்தேன். தந்தை தனயனுக்கு உரைப்பது போன்று ததீசி முனிவர் உரைத்த உண்மை மொழிகளைச் சிறிதும நினைந்திலேன். அழைப்பு இல்லாது இருந்தும் அன்புடன் வந்த என் மகளையும் சீறினேன. அவளது அறிவுரையையும் செவிமடுத்தேனல்லன். எனக்கு மரணம் நெருங்கியது உணராது நெற்றிக் கண்ணனாகிய முதலவனை மிகவும் நிந்தனை செய்தேன். வீரபத்திரக் கடவுள் என முன் நின்று அவியைக் கொடுத்திடுவாய் என்று கேட்டபோதாவது கொடுத்திருக்கலாமே! அதுவும் செய்தேனில்லை. கடைசியில் பிரணவமும் வேதங்களும் கூறிய வார்த்தைகளையும் மதியாது எல்லாத் தேவர்களுக்கும் ஓர்

இறுதியைத் தேடிக் கொடுத்தேன்" என்று இன்னும் இவை போல்வனவற்றையும் சிந்தித்து, "இனி நான் தப்பியோடுவது என்பது அரிது. ஆகையால் வீரபத்திரர் முன் வலிமையுடையவன் போல நிற்பதே இனிச் செய்யத் தக்கது" என நிச்சயித்து அவர் முன் பயமில்லாதவனைப் போல நின்றான். அவனவ்வாறு நின்றதனைக் கண்ட வீரபத்திரர் கடுங்கோபங் கொண்டு, "ஏ தட்சனே! நீ ஈசனை இகழ்ந்தனை. ஆகையால் இதுவே உனக்குத் தண்டனை" என்று* கூறிக்கொண்டே வாளினால் அவன் தலையை வெட்டினார். வெட்டப்பட்ட தலை விழுவதற்கு முன்னே வீரபத்திரர் கையினாற்பிடிக்க அவ்விடத்தில் சுழன்று எரிகின்ற தீயைப் பார்த்து 'இதனைத் தின்னுவாயாக' எனக் கொடுத்தார். ஒரு கணத்துக்குள்ளே அந்த நெருப்பு அத்தலையை எரித்து அழித்தது. இதனைக் கண்ட தட்சனின் மனைவியர்களும் புதல்வியர்களும் புலம்பினவர்களாக நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது பத்திரகாளி தட்சனின் மனைவியான வேதவல்லியினெதிரில் சென்று வாளினால் அவளுடைய காதுகளை முன்னர் அறுத்துப் பின் மற்றவர்களின் தலைகளையும், தட்சனின் பெண்களான அசுவனி முதலியோரின் தலைகளையும் வெட்டிப் பந்தடிப்பது போல அடித்தனள். பகைவர் கூட்டத்துக்குச் சிங்கம் போன்ற வீரபத்திரரும் அவரது துணைவியான பத்ரகாளியும் மற்றைய தேவர்களையும் தட்சனுக்குச் சுற்றத்தினரான முனிவர்களையும் தங்கள் கால்களாலும் அட்டஹாசத்தாலும் கைகளாலும் ஆயுதங்களாலும் கொன்றனர். ஊழிக்காற்றும் ஊழித்தீயும் ஒன்றாகச் சேர்ந்து சென்றாற்போல அவ்விருவரும் தட்சனது யாகத்தைத் திரிந்து திரிந்து அழித்தார்கள். இவைகளெல்லாம் நிகழ்கின்ற சமயத்தில் வீரபத்திரருடைய ஆணையால் பூதசேனைகள் உயர்ந்த மதில்களை

---

* தட்சனின் தலையை வெட்டும் போது வீரபத்திரர் கூறியதாகத் திருக்குற்றாலத் தலபுராணம் தக்கன் வேள்வி அழிந்த சருக்கத்தில் உள்ளவற்றைப் பிற்சேர்க்கையில் காண்க.

உடைத்து உள்ளே புகுந்து எஞ்சியிருந்த தேவர்கள் நடுங்கும் வண்ணம் பேராரவாரஞ் செய்தனர். இதனுல் தேவர்களும் முனிவர்களும் தியக்க முற்றனர், அச்சமடைந்தனர், திடுக் கிட்டனர். கலக்கமெய்தினர், தொலேவடைந்தனர், மெலிந்து மயக்குற்றனர், மற்றும் மனதில் தடுமாற்றமடைந்தனர். அந்த யாகத்திலிருந்த பார்ப்பனரெல்லாம் தங்கள் பெற்ருேர் களேயும் மக்களேயும் மனேவியர்களேயும் மற்றும் சுற்றத்தினர் களேயும் கூவிக் கூவியழைத்துப் பதைக்கின்றவர்களாய்ப் பிணங்களினிடையே ஒளிந்து கொள்ள முயன்றனர். ஆனுல் பூதங்கள் இவர்களே விட்டு விடுமோ? துன்புறுந் தேவர்களே யும் முனிவர்களேயும் ஒளிய முயற்சிக்கும் மறையவர்களேயும் கலக்கிக் கைகளினுலடித்து உதிர்த்துக் கொசுகின் கூட்டத்தை அழிப்பதுபோல அழித்தனர். கொல்லும் திறமை வாய்ந்த பெருஞ்சிங்கங்கள் போன்று கர்ச்சித்துப் பூதசைனியங்கள் கலேமான்களேப் போலத் தேவர்களேப் பிடிக்கின்றனர், அடிக் கின்றனர், பற்களால் தலேகளேக் கடிக்கின்றனர், கழுத்தினே ஒடிக்கின்றனர். பெரிய தோள்களே ஓடிக்கின்றனர். எலும்பு களோடு சேர்த்து உடல்களே மெல்லுகின்றனர், நாக்குகளே அறுக்கின்றனர், கண்களேப் பறிக்கின்றனர், மிதிக்கின்றனர், கொல்லுகின்றனர், இரத்தவெள்ளங் குடிக்கின்றனர், வெற்றிச்சங்கு ஊதுகின்றனர்.

மேலும் வலிமைமிகுந்த பூத வீரர்கள் தேவர்களே எடுக் கின்ருர்கள். பிளக்கின்ருர்கள், எறிகின்ருர்கள், உதைக்கின் ருர்கள், கால்களால் மிதித்துக் கொல்லுகின்ருர்கள், தலேகளே அம்புகளால் அறுக்கின்ருர்கள், ஊனினேத் தங்களது பிளந்த வாய்களின் உள்ளே வாரியிடுகின்றனர். சில பூதர்கள் தேவர் களது தலேகளே நெரிக்கின்ருர்கள், சில பூதர்கள் சரீரங்களே உரிக்கின்றனர், சிலர் உடலே யாகத்தீயில் இட்டு எரிக்கின் ருர்கள். நெய்க்குடங்களிலிட்டுப் பொரிக்கின்ருர்கள். கரிக் கின்ருர்கள், புகைக்கின்ருர்கள். சிலரது மார்புகளேப் பிளக் கின்ருர்கள், அங்ஙனம் பிளக்கப்பட்டவர்களின் குடல்களே

மாலைகளாகச் சூடி மகிழ்கின்றூர்கள்; சிரிக்கின்றூர்கள்; இறுமாப்புறுகின்றூர்கள்; சிவபெருமானைப் புகழ்கின்றூர்கள். அப்பெருமானை இகழ்ந்தவனுடன் கூடியதால் இறக்கின்ற தேவர்களைப் பார்த்து இகழ்கின்றனர்; ஓடியொளிகின்ற முனிவர்களைத் தொடர்ந்தோடி விரட்டுகின்றனர்; பிடிக்கின் றூர்கள்; அவர்கள் துடிக்கும் வண்ணம் பூமியில் கால்களால் அரைக்கின்றூர்கள்; சில ஊன்களைத் தம்மை இரக்கும் கழுகு களுக்கு இடுகின்றனர்.

இவ்வேள்விச்சாலையை அடைந்து அழிந்தவர்களின் உயிரைக்கொண்டு அதனுல் அவர்களது வாழ்நாளையழித்த பூதர்கள் யாகசாலையிலிருந்த நெய்யை உண்டனர்; தயிரை யும், பாலையும் குடித்தனர். மிகுதியான உணவையும் தேவர்கள் கூட்டத்துக்குக் கொடுக்கவென இருந்த அவியை யும் உண்டனர். யாகத்தின் மூவகைத்தான வேதிகைகளி லிருந்த அக்கினியை அவித்தனர். கலசங்களையும் கும்பங்களை யும் உடைத்தனர். யாகத்துக்கென யூபஸ்தம்பங்களில் கட்டப்பட்டு வருந்திக்கொண்டிருந்த *பசு நிரைகளை அவிழ்த் துச் சிலர் கங்காநதியிற் செல்லுமாறு விடுத்தனர். சில வற்றை வானில் எறிந்தார்கள்; சிலவற்றை வாளால் வெட்டி ஞர்கள்.

பருந்தின் உருவமாக அமைந்துள்ள மேடைகளை இடித் தனர் சில பூதர்கள். அழகு வாய்ந்த மாதர்களின் அங்கங் களைக் கறிக்கின்றனர் சிலர். இன்னும் சிலர் அவ்வங்கங் களை அறுத்து எறிகின்றனர். இறந்தவர்கள் ஏறிவந்த வாஹனங்களையும் விமானங்களையும் தேர்களையும் சுடு கின்றனர். அவர்களது ஆயுதங்களையும், அவர்கள் தரித் துள்ள குண்டலங்கள், மகுடங்கள் முதலிவற்றையும் பூதர்கள்

---

* பசு என்பது யாகத்துக்குரிய ஆடுகளைக் குறிக்கும். யாகத்துக்குரிய குதிரை முதலியனவும் பசு என்னும் பெயரி ஞலேயே வழங்குதல் மரபாகும்.

தீயிலிட்டுப் பொடியாகச் செய்தனர். யாகசாலையினுப் பொருந்திய வேதிகைகளைப் பூதர்கள் கால்களால் இடித்தனர், பொடித்தனர்; பெரிய தோரணங்களை ஒடித்தனர்; பெருந் தீயினைக்கக்குகின்றனர்; களிப்பினுல் நடித்துப் பாடினர். தரும நெறியை அழிக்க முயன்ற தட்சனது மருமக்களைப் பிடித்து வாயால் உரைக்கக் கூடாத அளவுக்குத் துன்புறுத்தி கைகளால் அவர்கள் மார்பில் இடிவிழுந்தாலென்ன அடித்து அவர்கள் உண்டிருந்த அவிகளனைத்தையும் உமிழச் செய்தனர். கொலைபுரியும் வலிமை மிகுந்த பூதர்கள் யாகசாலையுள் எஞ்சியிருந்த மற்றத் தேவர்களை வெட்டுகின்றனர்; தலைமயிரைப் பறிக்கின்றனர்; சிலரைப் பாசங் கொண்டு கட்டுகின்றனர்; சிலரைத் தீயிலிட்டு வதக்கிக் கொறிக்கின்றனர். சிலரை நான்கு திக்குகளிலும் எறிகின்றனர்; சிலரை ஊன் சேற்றில் புதைக்கின்றனர்; சிலரை இரத்த வெள்ளத்தில் விடுகின்றனர்; சிலரை ஆகாயத்தில் உலாவும் பருந்துகளுக்கு இரையாக விடுகின்ருர்கள், விழுந்தவர்களையும், எதிரே வந்தவர்களையும், விலகியோடினவர்களையும், இருந்தவர்களையும், மகிழ்ந்தவர்களையும், ஆகாயத்திற் சென்றவர்களையும் பிடித்து அவர்களுக்கேற்றபடி தண்டனைகளைக் கொடுத்தனர்.

அக்களத்தில் 'எட்டு' 'குட்டு' 'பிள' 'கொல்' 'விரைந்து வெட்டு', 'குத்து', 'முரி', 'விரைவாகக்கட்டு', 'அடி' என்பன போன்ற வார்த்தைகளே பூதர்கள் எவராலும் உரைக்கப் படுவன ஆயின. கையற்றவர்களும், காலற்றவர்களும், செவியற்றவர்களும், உடலற்றவர்களும், நாவற்றவர்களும், கண்ணற்றவர்களும், கழுத்து அறுபட்டவர்களுமன்றிப் பிரம்மதேவன் மகனுன தட்சன் செய்த வேள்வியில் சிதைவில்லாதவர்கள் எவருமிலர். வெகு மகிழ்ச்சியுடன் தட்சன் ஆரம்பித்த வேள்வியானது இவ்வண்ணம் வீரபத்திரராலும், பத்திரகாளியாலும், அவர்களது சேனைகளாலும் தயிர்க் கடலில் பலமத்துக்கள் உற்ருற் போலக் கலக்கப்பட்டு அழிவு உற்றது.

சிவம்.

17. விஷ்ணுவை வென்ற வீரபத்திரர்

வீரபத்திரக் கடவுளால் வேள்வியழிந்து வேள்விச்சாலையில் அனைவரும் அழிந்ததைத் திருமால் மிகவும் துன்பத்துடன் இளைப்பாறி எழுந்து பார்த்தான். இந்த யாகத்தைக் கெடாத வண்ணம் காத்தது அழகாக இருக்கிறதென்று நினைத்து அந்த மாயோன் வெட்கமுற்று, மானமானது உள்ளத்தைப் பிளக்கக் கோபங்கொண்டான். சிவபெருமானை நிந்தை செய்த கொடிய பாவிகளுக்கு இவ்வண்ணம் தண்டம் வருவது முறையே என்ற தெளிந்த சிந்தனையற்றவனாய், 'மால்' என்ற தன்பெயருக்கேற்ப மால்கொண்டு வெற்றி வீரரான வீரபத்திரருடன் போர் செய்ய எண்ணித் தனது ஊர்தியாகிய கருடனை நினைத்தான். கருடன் வீரபத்திரருக்கு அஞ்சி ஓடிவிட்டதால் அது வரவில்லை. உடனே திருமால் தனது கோபத்தையே ஒரு கருடனாகமாற்றி அதன் மீது ஏறித் தனது *ஐந்து ஆயுதங்களையுமேந்தி யாகசாலையுள் இருந்த பூதர்கள் மீது கோபங் கொண்டு சென்றனன். சங்கத்தினை யெடுத்து வாயில் வைத்துப் பேரொலி உண்டாக்கித் தனது வில்லை வளைத்து வீரபத்திரருடைய வலிமை மிகுந்த சேனைகள் மீது கூர்மையான பல கணைகளை விடுத்தான். பூதப்படைகளும், காளிகளும் கூளிகளும் திருமாலைச் சூழ்ந்து போர்புரிய ஆரம்பித்தனர், இவ்வாறு திருமாலும் தமது சேனைகள் அனைத்தும் எதிர்த்து நின்று போர் புரிதலைப் பார்த்துப் பராக்கிரமசாலியான வீரபத்திரர் பெருங்கோபத்துடன் நகைத்துத் திருமாலோடு போர் செய்ய நினைத்தார்.

---

*சங்கு, சக்கரம், கதை, வாள், வில் இவை ஐந்தும் திருமாலின் பஞ்சாயுதங்களாம்,

அப்போது சிவபிரான் திருவருளால் ஓர் இரதம் அங்கு வந்து சேர்ந்தது. அந்த இரதம் வேதமாகிய ஆயிரங்குதிரைகளையும், கணக்கற்ற கொடிகளையும், பகைவர்களைக்கொல்லும் பெரிய ஆயுதங்களையும் கொண்டதாய் இருந்தது. அந்த சமயத்தில், முன் வீரபத்திரரால் தலையில் குட்டப்பட்டு மூர்ச்சையாகி விழுந்த நான்முகன் அரிய உயிர் பெற்றுன் போலச் சிறிது அறிவு பொருந்தப் பெற்று எழுந்து யாகம் அழிந்த செயலையும், தேவர்கள் முனிவர்கள் முதலியோர் இறந்துபட்டதையும், திருமால் போர் புரியும் தன்மையையும், வெற்றி வீரனை வீரபத்திரரது கோபத்தையும், ஆகாயத்தில் தேர் வந்ததையும் பார்த்தான். இதுவே தான் தப்பிப் பிழைக்கத் தக்கசமயம் என்று எண்ணி பிரம்மதேவன் ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த இரதத்தின் மீது சாரதியைப் போலச் சென்று இருந்து கைகளில் தேர்க்குதிரைகளை நடத்தும் முட்கோல் கொண்டு விரைவாக நடத்தி புண்ணியனுகிய வீரபத்திரர் முன் வந்து வணங்கி, "திருநீறணிந்த பவளம் போன்ற திருமேனியையுடைய நிமலனே! தங்களுக்காகச் சிவபிரானருளால் வந்திருக்கிற இந்த இரதத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அடியேனது பிழையைப் பொறுத்தருளி, இதில் தாங்கள் துணைவியோடு ஏறி அமர்ந்து யுத்தஞ் செய்ய வேண்டும்" என்று வேண்டினுன். இவ்வாறு வணங்கி வேண்டுதலும், பிரமதேவன் மீது கொண்டிருந்த கோபத்தில் ஒரு சிறிது நீங்கித் தன் துணைவியாகிய பத்திரகாளியுடன் அந்த இரதத்தின் மீது ஏறியமர்ந்தார்.

உடனே பிரம்மதேவன் தேரினைத் திருமால் எதிரே கொண்டு நிறுத்தவும், முன்னுளில் ஒப்பற்ற பூமியாகிய தேரின் மீது ஏறிச்சென்று திரிபுரதஹனஞ் செய்த புராரியான சிவபெருமானைப் போல விளங்கிய வீரபத்திரரைப் பார்த்துத் திருமால் "வீரனே! கங்கை நதி பொருந்திய சடைமுடியையுடைய சிவபிரானைப் பழித்த தட்சனைக் கொல்வதன்றி, அவனருகிலிருந்த குற்றமற்ற தேவர்களையும் மற்றவர்களையும்

கொன்றது ஏன்? கூறும்" என்று வினவினார். திருமால் இங்ஙனம் வினவியவுடனே பெருமை பொருந்திய வீரபத்திரர் இவ்வார்த்தைகளைக் கேட்டு இது நன்று என்று நகைத்துத் திருமாலை நோக்கி, "ஓ மாதவ! தேவேசனான பரமசிவனை எவர்கள் நிந்திக்கிறார்களோ அவர்கள் பாவிகள், எவர்கள் அந்தப் பாவிகளுடைய கூட்டத்தில் இருக்கிறார்களோ அவர் களும் பாவிகள். இவர்கள் எல்லோருக்குமே வேதம் தண்டனை விதித்துள்ளது. ஆகையால்தான் நாம் அவர்களனைவரை யும் அழித்தோம். இப்பொழுது உன்னையும் தொலைப்போம். உனக்குத் திறமை இருக்குமேல் உன்னைக் காத்துக் கொள் வாயாக" என்று விடையிறுத்தார். திருமால் இவ்வார்த்தை களைக் கேட்டுப் பெருங்கோபங் கொண்டவராகித் தனது வில்லை வளைத்து மழை பெய்தாற்போல அம்புகளை விடுத்துப் பூதர்களை மறைத்தான். மாலோன் பூதகணங்களின் மீது அம்புவிடுதலும் அதனைக்கண்டு வீரபத்திரர் மேருவினை யொத்ததான தனது பெரியவில்லினை வளைத்துச் சிறிதே நாணொலி செய்தனர். செய்தலும் கடல்கள் ஒடுங்கின; மலை கள் பிளந்தன; உலகங்கள் நடுங்கின. இதுவே முடிவுதின மென்று அனைவரும் மயங்கினர். அம்பறாத்தூணியில் நிறைந் திருந்த அம்புகளை எடுத்து வீரபத்திரர் திருமாலின் மீது விடுத்து அவனை மறைத்தார். திருமாலும் வீரபத்திரர் விடுத்த அம்புகளைப் போக்கி, ஓராயிரம் கணைகளை வீரபத்திரரின் தோள்களினெதிரே எய்தான். வீரர்களுக்கெல்லாம் தலைவனான வீரபத்திரர் அவ்வம்புகளைப் பொடியாக்கி மாயோனது நெற்றி யில் தாக்குமாறு ஒரு அம்பினை எய்தனர். வீரபத்திரர் விடுத்த கூரிய கணையானது நெற்றியில் புகுந்தவுடனே அத்திருமால் தளர்ச்சியடைதலும் அது கண்ட வீரபத்திரர் மாலின் தளர்வு நீங்குங்காறும் ஓரம்பும் *விடாதிருந்தனர்.

---

*இது தருமயுத்தம் எனப்படும். எதிர்த்தவனிடமும் இரக்கம் காட்டும் அரிய பண்புமாகும்.

தளர்ச்சி நீங்கித் திருமால் எதிர்த்தலும் புராரியின் மைந்தனை வீரபத்திரரும் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினர். மேன்மை வாய்ந்து உயர்ந்த மூன்று கண்களையுடைய வீரபத்திரர் கொடிய வடவைத் தீயின் அம்சம் பெற்ற ஒரு படைக்கலத்தை விடுத்தலும் அது மலையின் மீது செல்லும் கரியமேகம்போன்று திருமாலின் மார்பிற் சென்று தாக்கியது. அங்ஙனம் மார்பில் வந்து புகுந்தவுடனே உள்ளம் துடிக்கப் பெருமூச்சுடன் அறிவானது மயங்க மிகவும் மெலிந்து பின் மயக்கமொழிந்த மாலவனைப் பார்த்துச் சரபவுருவங்கொள்ளும் திறனுடைய வீரபத்திரர் மேலும் போர் செய்வாயாக என்று கூறினர். திருமால் எத்தகையோருக்கும் நாசத்தினை விரைவில் உண்டாக்கும் பல தெய்வப்படைக்கலங்களை விடுக்க, அவன் விடுத்த அந்தத் தெய்வப்படைகளைக் கொண்டே வீரபத்திரர் அவைகளை அகற்றி வீரட்டஹாஸஞ் செய்து நின்றனர். திருமால் நாராயண அஸ்திரத்தை விடுப்ப, வீரராகிய சிவகுமாரர் வீரம் என்னும் மிக்க சிறப்பினையுடைய அம்பினை எய்து அதன் ஆற்றலையழித்தார். பின்னர் திருமால் அளவற்ற கணைகளை ஏவ, வீரபத்திரர் அவைகளை உடனுக்குடன் மாற்றி, ஓரம்பு எய்து திருமாலின் சாரங்கம் என்னும் வில்லை இரு துண்டாகச் செய்தனர். பின்னரும் முதல்வன் தந்த வீரபத்திரனர் முறையே இரண்டம்புகளை ஏவி மாயோனுடைய ஊர்தியான கருடனது இரண்டு சிறகுகளையும் வெட்டிக் கீழே தள்ளினர். அப்பொழுது திருமால் மாயோன் என்ற தனது பெயருக்கேற்ப அளவற்ற மாயவர்களை உண்டாக்க, அவர்கள் அனைவரையும் சிவகுமாரனாகிய வீரபத்திரர் தமது *கண்களினின்றும் தோன்றிய தீயால் எரித்து நுண்ணிய புழுதியாகச் செய்தார்.

---

*தம் தந்தையாகிய சிவபிரான் மன்மதனை எரித்தது போலவும், திரிபுரத்தை தீயுண்ணச் செய்தது போலவும், மகனும் மாலோனது மாயத்தால் உண்டான திருமால்கள் அனைவரையும் எரித்துப் பொடியாக்கினர் எனக் கொள்க.

இச்செயலேக் கண்ட திருமால் தனக்குச் சிவபிரான் முன்னுளி லருளிய சக்கரப்படையை வீரபத்திரர் மேல் விடுத்தனன். மாயவன் விடுத்த சக்கரப்படையினை வீரபத்திரர் தமது அழகிய திருக்கரத்தால் பற்றி விழுங்கி விட்டார். மாயவன் தண்டு எனப்படும் கதாயுதத்தினை எறிய சிவகுமாரரும் அதனைத் தனது கையிலுள்ள பொன்மயமான தண்டத்தினுல் தடுத்தனர். தனது கதையென்னும் படைக்கலம் வீரர் விடுத்த தண்டத்தினுல் மழுங்கி வீழ்ந்ததைக் கண்ட திருமால் மிக்க கோபத்துடன் தனது வாட்படையை எடுத்து வெட்டவருதலும் தேவியின் மைந்தரான வீரர் தனக்கேயுரியதான பெருஞ் சீற்றத்துடன் ஒரு உங்காரஞ் செய்தனர். வீரபத்திரர் இங் ஙனம் உங்காரஞ் செய்தவுடனே திருமாலானவன் ஒரு செய லும் இன்றி சித்திரத்தைப் போல கையும் வாளுமாக [1]அசை வற்று நின்றனன். இங்ஙனம் அற்புதப்போர் புரிந்து திருமாலே அறிவழிந்து அசைவற்று நிற்கச் செய்த வீரபத்திரர் மேலும் சீற்றம் மூண்டவராய், "இந்தத் திருமாலேப் பிசைந்து விடலாமா? அடித்து விடலாமா? வேறு என்ன செய்யலாம்" என்று ஆலோசிக்கும் பொழுது சிவபிரானின் கட்டளேப்படி,

---

1. தேவர்களின் கூட்டத்தை வென்று, திருமாலே இங் ஙனம் ஓவியம் போல அசைவற்று நிற்கச் செய்த அற்புதத்தை "யோ தக்ஷயக்ஞே ஸுர ஸங்கான் விஜித்ய விஷ்ணும் பபந்தோரக பாசேன வீர: I தஸ்மை ருத்ராய நமோ அஸ்து" II என்று சரப உபநிஷதம் கூறுகிறது. (இதன் பொருள்) "எந்த வீரர் தட்சனது யாகத்தில் தேவர்களின் கூட்டத்தை வென்று, விஷ்ணுவை நாகபாசத்தால் பிணித்தாரோ அந்த உருத்திர ருக்கு நமஸ்காரம்" என்பதாம். இங்கு உருத்திரர் என்பது மஹாதேவராகிய ஆதி உருத்திர மூர்த்தியைக் குறிக்கும். திருமாலே அசைவற்று நிற்கச் செய்ததையே பாசத்தால் பிணித் தார் என்று கூறியதாகக் கொள்ளலாம். வீரபத்திரர் செயலே உருத்திர பரமேசுவரர் மீது ஏற்றியது அவர் சிவ மூர்த்தமாகை யால் என்க.

"மிக்க கோபத்தை உடையவனும் ஸகல பிரபஞ்சங்களையும் ஸம்ஹரிக்கும் வல்லமையுடையவனுமான வீரபத்திரனே! கோபத்தை விடுவாயாக", என்று வானிலிருந்து அசரீரி வாக்கு ஒன்று கேட்டது. வானிலெழுந்த அசரீரி மொழியினைக் கேட்ட வீரபத்திரக் கடவுள் இது சிவாக்ஞை என நிச்சயித்துத் தனது கோபத்தை அடக்கிக் கொண்டார்.

தேவேசனின் திருக்குமாரரும், மிகுந்த பராக்கிரமசாலியுமான வீரபத்திரர் கோபத்தினை விடுத்திருந்ததைக் கண்ட பிரமதேவன், அவரது திருவடித்தாமரைகளைப் பற்றிக்கொண்டு, "கருணாமூர்த்தியான வீரரே! தருமநெறியை விடுத்த அழிதகனாகிய தட்சனென்பான் உலகம் அனைத்தும் அழியும் வண்ணம் இங்குச் செய்த இந்த வேள்வியில் கலந்து கொண்டு அவியை உண்ட அறிவிலியான எனது குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று வணங்கிப் பிரார்த்தித்தான். திருவடிகளைப் பிடித்துக் கொண்டு வணங்கிய படைத்தல் தொழிலைச் செய்பவனான பிரமதேவனைப் பார்த்து வீரபத்திரர் இரக்கங் கொண்டு அவ்வாறே ஆகுக எனத் திருவருள் புரிந்தார். இந்த சமயத்தில் சிறிது அறிவு தெளியப்பெற்ற திருமால் வீரபத்திரரின் பெருங்கருணைத் திறத்தினைக்கண்டு தானும் உய்வதற்கு இதுவே தக்க சமயம் எனத்தெளிந்து வீரபத்திரக் கடவுளின் திருவடிகளில் தண்டம் போல விழுந்து வணங்கித் துதிக்கலாயினன்.

"மிகுந்த பலமுள்ள வீரபத்திரரே! சிவபெருமானின் கட்டளையை நிறைவேற்றுகின்றவரே! சிவநிந்தை செய்த பாவியான தட்சனின் யாகத்தில் அவனது பூஜையை விரும்பிப் புத்தியற்ற யான் வந்தேன். மாசற்ற புகழினையுடைய வீரனே! அதற்குத் தக்க பயனைத் தங்களால் அடைந்து விட்டேன். சிறந்த ஆலோசனையுடையவர்கள் ஈசனை இகழ்ந்தாரிடத்து இருப்பரோ? ஆதிநாயகனான சிவபெருமானைப் பகைத்தவர்களுக்கும் அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் மிகப் பெரிய தண்டனையை வேதமே கூறும். ஆகையால்

தாங்கள் என்னிடத்திலும் மற்றைய தேவர்களிடத்திலும் செய்தது நீதியேயாகும். குற்றம் எங்களுடையதேயன்றித் தங்களிடத்தில் உரைக்கவொண்ணுமோ? திருக்கண்களின் பார்வையாலும், புன்னகையாலும், பெருமூச்சாலும், வீர அட்டஹாஸத்தாலும் அனைத்து உலகங்களையும் அழிக்க வல்லோனே! தாங்களெங்கே, கொசுக்களை ஒத்த தேவர்களான நாங்களெங்கே? தங்கட்கு சேனையாலும் ஆயுதங்களாலும் ஆகவேண்டியது என்ன? ஆயினும் பலரையும் ஆயுதங்களால் அழித்ததும் ஒரு லீலையே யன்றோ? தன்னடியடைந்தார்க்கு அவர்களுடைய விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றும் முதல்வனான சிவபிரான் ஏவிய முறைமையை நினைத்துச் சிறிது காலவளவையுள் அழித்தீர்களேயன்றி, எந்தையே! தாங்கள் அழிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டக்கால் எவரே அதைத் தடுக்கவல்லவர்? அறிவு மயக்கத்தினால் தங்களை எதிர்க்கத் துணிந்த எனது பெரிய வில்லையொடித்துப் பலவகையான தெய்வப்படைக்கலங்களையுமழித்து, எனது வெற்றி வாய்ந்த சக்கராயுதத்தையும் விழுங்கிப் போரில என்னை வெற்றிகொண்டு கீர்த்திமாலை பூண்ட வீரரே! தங்களது தன்மையை எவரே முற்றிலுமுரைக்கவல்லவர்கள்? பரம்பொருளான சிவபிரானுக்குச் சங்கரித்தல், கோபங் கொள்ளுதல், இன்புறுதல், ஆண்மையுறுதல் ஆகிய [1]நானகு வகைச் சக்திகளுள் துர்கையும், காளியும், பவாநியும் முதல மூனறு சகதிகளையும் பெற்றவர்கள். மற்றைய நான்காவது சக்தி அடியவனாகும். இத்தன்மையை மறைகளும் கூறும்.

---

1. சிவபிரானின் நால்வகைச் சக்திகளுள் புருஷசக்தி நாராயணன் என்பதை "ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய பிந்நா சதுர்த்தா விநியோக காலே । போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு: கோபேது காளீ ஸமரேது துர்கா ॥" என்ற சிவாகம வசனமும், "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்ற அப்பரடிகளின் தேவாரம், 4-ம் திருமுறை, 40-வது திருப்பதிகம், 5-ம் பாடல் பகுதியும் விதந்து கூறுகின்றன.

இறுதிசெய்திடலே சீற்றம் இன்பமே ஆண்மை என்று
அறைதரு சக்தி நான்காம் அரன்தனக் கையை காளி
முறைதரு கவுரி இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைப்
பெறலருஞ் சக்தி யான்இப் பெற்றியும் மறைகள் பேசும்.

—கந்தபுராணம், யாகசங்காரப் படலம், 134.

சிவபெருமானுக்கு நானும் மிக அன்புடையவன். [1]அம்முதல்வனைப் பூசித்தே நான் சக்கரப்படையையும், விஷ்ணுவாகும் தன்மையையும் பெற்றேன். எனது வலிமையைக் காட்ட முயன்று இங்கு இழந்த சக்கரப்படையை சிவபிரானின் திருவடிகளை அருச்சித்து மீண்டும் பெற்றுக் கொள்கிறேன். கோபத்துடன் தாங்கள் என்னைத் தண்டஞ் செய்தமைக்குச் சிறிதும் வருத்தப்படேன். அதற்கு மாருகத் தங்களால் இந்த தண்டம் பெற்றதைப் புனிதமாகவே கொள்வேன். இப்பொழுது சரணமடைந்த எனது குற்றத்தினைப் பொறுத்தருளி அடியேனிடம் கருணை காட்டுவீராக'' என்று துதித்து வீரபத்திரக் கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி நின்ருர். வீரரருள் வீரரான வீரபத்திரர் திருமால் கூறிய வார்த்தைகளைக் கேட்டு இரக்கமுடையவராகி அத்திருமாலது பிழைகளைப் பொறுத்தருளினார்.

ப்ராப்தம் தஸ்மாத் புராசக்ரம் வரமன்யச்ச சங்கராத் ।
சிவபூஜா மஹிம்னைவ விஷ்ணுத்வம் ப்ராப்தவானஹம் ॥
மஹாபலமஹாஸத்வ க்ஷமஸ்வாகோ மமாதுன ।
இத்யுக்த்வா ப்ரணநாமாயம் வீரபத்ரம் புன: புன: ॥
க்ருபாம் சக்ரே ததாவீர: ப்ரஸன்னோ மாதவாய ஸ: ।

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத். 35, ச்லோ. 45-46½.

---

1. திருமால் சிவபிரானைப் பூசித்துச் சக்கராயுதம் பெற்றதை இந்நூல் பக்கம் 113-114-ல் காண்க. மேலும் சில பிரமாணங்களைப் பிற்சேர்க்கையிற் காண்க.

சிவம்

18. இறைவர் எழுந்தருளுதலும் இறந்தவர் பிழைத்தெழுதலும்

இந்த சமயத்தில் தேவதேவோத்தமனும் தேவதா ஸார்வபௌமனும் அகிலாண்டகோடிப் பிரம்மாண்ட நாயகனுமான மஹாதேவர் கல்யாணியான தமது இடம் பிரியாத் தேவியுடனும், நந்தி முதலிய கணங்களுடனும் வெள்ளிமலை போன்ற இடபத்தின் மீது ஏறி அங்கு எழுந்தருளினார். ஜகத்குருவான மஹாதேவர் அங்கு எழுந்தருளியது கண்ட வீரபத்திரர் பல துதிகளால் பக்தியுடன் துதித்து வணங்கி, அந்த மஹேச்வரரின் முன்னிலையில் கூப்பிய கைகளோடு நின்றார். அப்பொழுது பிரம்மதேவனும் திருமாலும் மிகவும் அச்சங்கொண்டவர்களாகிப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி விலகிச்சென்ற தாயையடைந்த குழந்தைகளின் தன்மையை அடைந்தவர்களானார்கள்.

அந்த வேள்விச்சாலை அழிந்து கிடப்பதையும், தட்சனும் தேவர்களும் முனிவர்களும், மற்றவர்களும் காலுங்கையும், நாசியும், தலையும், மார்பும், தோள்களும் துண்டிக்கப்பட்டு உயிரிழந்து கீழே கிடப்பதையும் தேவியார் கண்டார். கண்ட அவரது சினமகன்று உள்ளத்தில் கருணை குடிகொண்டது. அன்னைக்குத் தன் குழந்தைகளிடம் உண்டான சினமும் நீடித்திருக்குந் தன்மையதோ? எனவே உலகங்களுக்கெல்லாம் தாயான தேவியார், இறைவரைப் பார்த்து, "என் ஐயனே! பராபரனாகிய பெரியோனே! இந்த யாகத்தில் தட்சனுக்கும் மற்றையோர்க்கும் முடிவு என்னால் உண்டானது என்று இந்த உலகம் கூறும். அந்தத் தட்சன் முதலியோர்கள் தேவரீரது முழு முதலாந் தன்மையை ஒரு சிறிதுமுணராது பிழை செய்த காரணத்தினால் தேவரீரது வீரத்திருமகனால் இந்த நிலையை அடைந்தனர். இவர்களை அழிக்கவென முன்னர் அடியேன்

விரும்பியதை ஒப்பற்ற வீரனுல் செய்து முடித்தருளினீர். இனி அவர்கள் அனைவரும் உயிர் பெற்றெழும் வண்ணம், எனது தலைவரே, இந்த வரமும் எனக்கருள்வீராக'' என்று வணங்கிப் பரமேசுவரியானவர் வேண்டினுர்.

தமது நாயகியின் இம்மொழிகளைச் செவிமடுத்தருளிய பரமேசுவரர், ''நன்று உன் கருணை'' என்று நகைசெய்து தன் பக்கத்தில் கூப்பிய கரங்களோடு நின்றுகொண்டிருந்த வீர பத்திரரை நோக்கி உயிர்க்குயிராயுள்ள பெருமான், ''வீரனே! நீ இவ்விடத்தில் எம்மையிகழ்ந்து உனது கோபத்தால் இறந்துகிடக்கும் தேவர்களையும் மற்றும் அனைவரையும் உயிர் பெற்றெழச் செய்வாய்'' என்று கூறியருளினுர். இறைவரது மொழிகளைச் சிரமேற்ருங்கி வீரபத்திரர் ''நீவீர் யாவரும் முன் னுளிற்போல எழுவீராக'' எனக்கூறத் தேவர்களும் அசுரர் களும் முனிவர்களும் மற்றையவர்களும் தூக்கத்தினின்றும் எழுந்தவர்களைப்போல உயிர்பெற்றெழுந்தார்கள். ஒப்பற்ற தனி வீரரான வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டுச் சிதைந்த பிண்டம் முழுதுருவும் பெற்றவர்களாகிய அவர்கள் தட்சனது யாகத்தில் கலந்துகொண்டு இறந்ததும் மீண்டும் உயிர் பெற்றெழுந்ததும் இரவிலே கண்ட புதிய கனவு போல உணர்ந்தார்கள். இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர் களும், மற்றவர்களும், பயந்து சிந்தைமருண்டு ஆதிநாயக னுன சிவபிரானை இகழ்ந்தமையால் வந்த பழியினை நினைந்து வருந்திப் பெரிதும் வெட்கமடைந்தார்கள். வீரபத்திரர் கூப்பிய கைகளையுடையவராய் ஒரு பக்கத்திலே நிற்கத் தமது இடம்பிரியாத் தேவியுடன் எருதின்மேல் எழுந்தருளியிருந்த எமது புண்ணிய மூர்த்தியான கண்ணுதற்பெருமானை அனை வரும் கண்டார்கள். நஞ்சுண்ட நம்பனுகிய சிவபிரானைப் பார்த்துத் தேவர்களும் முனிவர்களும் அஞ்சி நடுங்கினுர்கள். இவ்வாறு அனைவரும் அஞ்சுவதைக் கண்ட அருட்கடலாகிய அண்ணல் ''எம்மையன்றி இவர்க்கு யாவர் தஞ்சமாக உள்ள வர்கள்'' என்று திருவுள்ளத்திற்கருதி, ''அஞ்சேல், அஞ்சேல்'' என்று அருளிச் செய்தார்.

இறைவரது இந்தப் பேரருளை நினைந்து மிகவும் மகிழ்ந்தவர்களாகி அவரது திருமுன்பு சென்று தொழுது, மால் அயன் முதலியவர்கள் பலநூற்றுக்கணக்கான தோத்திரங்களால் பெருமானைத் தொழுது வணங்கிக் கூறலாயினர். "கருணைக் கடலே! மஹாதேவரே! எந்தையே! மனமயங்கித் தட்சனது வேள்வியில் கலந்துகொண்டதைப் பொறுத்தருளி எங்கள் கண்ணெதிரிலும் தோன்றிக் கருணை செய்தருளினீரே! மைந்தர்க்குத் தந்தையேயல்லாது வேறு ஒரு சார்புமுளதோ? எங்கள் தலைவரே! குற்றமற்ற அன்பில்லாத அடியேங்களிடத்தில் தேவரீர் கோபங்கொண்டால் படைத்தல் முதலிய செயல்களைப் பற்றி நடக்கும் எங்கள் பதவிகள் நிலைக்குமோ? அஞ்சேல் என்று அபயமயளிக்க வேறு ஒரு புகலும் உள்ளதோ? நிலைபெற்ற உயிர்களும் இருக்குமோ? வேத நெறியைக் கடந்து செய்யப்பட்ட வேள்வியில் அவிகளையுண்ட அறிவற்றவர்களான சிறியேங்கள் வெகுகாலம் அனுபவிக்க வேண்டிய தீவினையால் வருந்தாமல் இமைப்பொழுதில் அத்தீவினையைத் தண்டித்துத் தொலைத்தருளிய ஆதிமூர்த்தியான தேவரீருக்கு அடியேங்கள் செய்யக்கூடியதான கைம்மாறும் உள்ளதோ? இவ்விடத்தில் தேவரீருக்குப் பிழை செய்த அனைவரும் வீரபத்திரர் என்ற சிங்கத்தின் கையினாற் சிதைவுபட்டவாறனைத்தும் குற்றங்கள் அன்றும். மிகுந்த புனிதமாய் அடியேங்களுடைய அங்கங்கள் அனைத்துக்கும் அணிந்த அணிகளாகவே கருதுகிறோம். எம்பெருமான் அடியேங்களுக்குச் செய்த உபகாரங்கள் ஒன்று இரண்டா? முன்னாளில் கங்கையைத் தரித்ததும், தீயை ஏந்தியதும், கொடிய விடத்தையருத்தியதும், நங்கையான உமாதேவியார் காணும்படி நடித்ததும் மற்றும் அனைத்துச் செயல்களும் செய்தது அடியேங்கள்பால் வைத்த அருளாலன்றோ? ஐயனே! அறிவிலிகளான நாங்கள் தேவரீருக்குச் செய்த பிழைகள் பலவுள. அவைகளைத் திருவுள்ளத்தில் வைக்காது அடியேங்கள் உய்யுமாறு பொறுத்தருள வேண்டும். ஆகையால் ஓ பரமேச்வரா! மிகவும் பயமடைந்துள்ள எங்களுக்குத்

தேவரீரே இரட்சகர். ஓ மஹாதேவ! தேவரீருக்கு வணக்கம். பக்தர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும் தேவரீருக்கு வணக்கம். மொட்டைத்தலையரான தேவரீருக்கு வணக்கம். சடைமுடியுடன் கூடிய தேவரீருக்கு வணக்கம். எல்லோரையும் காப்பதில் முனைந்த பெருமானே! வணக்கம்'' என்று பலமுறை வணங்கிப் பிரார்த்தித்தார்கள்.

> தஸ்மாத் த்வமேவ நஸ்த்ராதா பீதானும் பரமேச்வர |
> நமஸ்தே(அ)ஸ்து மஹாதேவ [1]நமோமீடுஷ்டமாயதே ||
> [2]முண்டினே ஜடினே துப்யம் ஸர்வ ரக்ஷாபராயண |
> ஏவமுக்த்வா ததா தேவா: ப்ரணேமுர் பக்தவத்ஸலம் ||
>
> —ஸ்காந்தம், தக்ஷகாண்டம், அத். 35, ச்லோ. 18-19.

இவ்வாறு பிரார்த்தித்த பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் அனைவரையும் கருணையோடு பார்த்து ''நீவிர் செய்த பிழைகளைப் பொறுத்தோம்'' என்று இறைவர் அருளிச் செய்தார். மஹேச்வரர் "ஆசுதோஷி" என்ற ஒரு திருநாமத்தையுடையவரன்றே? அறக்கடவுளை இடபவூர்தியாகக் கொண்ட தலைவர் அருளிச்செய்த திருவருளைத் துதித்துத் தொழுதுக் காலனை உதைத்தருளிய அவரது திருவடிகளை மீண்டும் மீண்டும் வணங்கி உள்ளத்தெளிவுடன் ஆடிப்பாடிக் களி கூர்ந்த அந்தத் தேவர்கள் மீது சிவபெருமான் மீண்டும் அருட்கண்ணோக்கம் செலுத்தி, "ஏ தேவர்காள்! உங்களது பதவிகளையெல்லாம் உங்கட்கே அளித்தோம். முன்போல அரசு செலுத்துங்கள்'' என்று அருளிச் செய்தனர். திருமால்,

---

1. ''நமோ மீடுஷ்டமாய ச'' என்பது ஸ்ரீருத்ரம்.
2, ''நம: கபர்த்தினே ச வ்யுப்தகேசாய ச'' என்பது ஸ்ரீருத்ரம். இதில் நம: கபர்த்தினே என்பது சடையையுடையவருக்கு வணக்கம் என்றும், வ்யுப்தகேசாயச என்பது மொட்டைத்தலையையுடையவருக்கும் வணக்கம் என்றும் பொருள்படும்.

நான்முகன் முதலிய தேவர்கள் அனைவரும் நீலகண்டத்தினை உடைய அண்ணலின் கருணைத்திறத்தைத் துதித்து மகிழும் வேளையில் செத்துப்பிழைத்தவர்களது கூட்டத்தில் தன் மகனுன தட்சனைப் பிரம்மதேவன் கண்டிலன். உடனே நமஸ்கரிப்பவர்களின் துன்பத்தைப் போக்குபவரான மஹா தேவரை வணங்கி, "ஸ்வதந்த்ரசக்தியுடையவரான மஹா தேவரே! முற்றறிவுடைய முழுமுதற் கடவுளே! வேத வசனங்களை மறுத்து இந்த யாகத்தைச் செய்த கீழோனுகிய தட்சனது அஹங்காரமொழியத் தண்டித்து இருள்மயமான நரகத்தில் துன்பப்படாதவாறு காத்தருளினீர். அந்தத் தட்சனும் எங்களைப் போல உயிர்பெற்றெழுமாறு திருவருள் புரிவீராக" என வேண்டிக்கொண்டான். அவ்வாறே தேவ தேவனும் அருள் செய்தனர். இறைவருடைய கருணைத் திறத்தினை அறிந்த வீரபத்திரரும் வீரக்கழலணிந்த திருவடிகளை வணங்கி, அப்பெருமானது கட்டளைப்படி கணங்களுக்கு அதிபனுன பானுகம்பனை அந்தத் தட்சனின் உடலைக்கொண்டு வருமாறு செய்தார். பானுகம்பன் அந்தத் தட்சனது குறை உடலைக் கொணர்ந்து வீரபத்திரர் திருமுன்பு இடலும், யாகத்துக்குணவான பசுக்களுள் ஒருசெத்த ஆட்டின் தலையைக் கொணர்ந்து அதைத் தட்சனது உடலிற்பொருத்தி வேதங்கள் துதிக்கும் சிவபிரானை இகழுபவர்கள் இவ்வாறே ஆவரென்று அனைவருமறியும் வண்ணம் "தட்சனே எழுக" எனக் கூறி, அவனை உயிர்பெற்றெழும்படிச் செய்தருளினுர். பிறகு தட்சன் தூக்கத்தினின்றும் எழுந்தவனைப்போல எழுந்து தன்னெதிரில் நின்ற வீரபத்திரக் கடவுளைப் பார்த்து நெஞ்சு திடுக்கிட்டுப் பயந்தவனுகித் தனது பெருமையை இழந்து புதிதாகப் பெற்ற ஆட்டுத்தலையைக்கொண்டு வணங்கி வெட்கத்துடன் அன்று செய்த நிலைமையை நினைத்துத் துக்கக் கடலுள் அழுந்தினுன். துன்பத்துடன் வருந்தும் ஆட்டு முகத்துத் தட்சன் அப்பொழுது இடபவாஹனத்தில் தேவியாருடன் எழுந்தருளியிருந்த தேவதேவனைக் கண்டு மிகவும் அச்சமடைந்தான். அப்பொழுது இறைவர் "தட்சனே! இனி அஞ்சற்க" என்று அருளிச்செய்தனர்.

இறைவர் இவ்வாறு "அஞ்சற்க" என்றருளிச் செய்தலும் ஆட்டுமுகத்தினையுடைய தட்சன், அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். "ஐயனே! கொடியனேன் செய்த தீமை மனத்தினாலும் அளத்தற்குக் கூடாதது. அதனை எண்ணுந்தோறும் சுடுகின்றது. அதனை நீக்கித் தேவரீர் அருளைச் செய்த காரணத்தால் நான் உய்ந்தேன். தேவாதி தேவனே! தங்களை விலக்கி நெடிய திருமாலைத் துணையென அண்டியதற்குத் தேவரீரது கட்டளையால் தக்க பயனை அடைந்தேன். ஓ தேவேசனே! தேவரீருக்குப் பல முறை வணக்கம் செலுத்துகிறேன். சம்புவே! அசைவதும் அசையாததுமான இருவகை உருவத்தைக் கொண்ட இந்த உலகம் முழுமையும் தங்களது உடைமையேயன்றோ? தங்களது ஆணையைமீற வல்லவர் எவரேனும் உளரோ? அடியேன் தவறு செய்த வண்ணம் எவர் செய்யினும் இங்ஙனம் தண்டனை அடைவது உண்மையே யன்றோ?" என்று தட்சன் பல முறை துதித்து வணங்கினான்.

இவ்வாறு தட்சன் துதித்து நிற்கத் தேவியார் பத்திரகாளியுடன் வணங்கி அருகில் நின்ற வீரபத்திரரை வருகவென்றழைத்து, அன்பினால் நனைந்த முகத்துடன், அவர்களது முதுகைத் தடவி, அவர்கட்குப் பொருந்துமாறு வரங்களை அளித்தனர். அப்பொழுது மஹாதேவர், திருமாலும் நான்முகனும், தட்சனும் மற்றத் தேவர்கள் முனிவர்கள் முதலானோரும் ஏத்தி நிற்க அவர்களைப் பார்த்து, "வாரீர், பிரம்மாதி தேவர்களே ! வேள்வி செய்யுங்காலத்து நம்மை இகழ்ந்த தன்மையால் நீவிரனைவரும் துன்புறக் கிடந்ததனைத்தும் முன்னுள்ள ஊழின் பயனேயாம். உங்கட்கிந்தத் தண்டனையைச் செய்ததும் இம்மையின் முறையேயாகும். ஆதலின் இதற்காக நீவிர் வெட்கமுற்று வருந்தவேண்டாம்" என்றருளிச் செய்தார். இவையனைத்தையும் அருள்புரிதலும் தேவர்கள், பகைவர்களுக்கும் அருள்புரியும் நிமலனான சிவபிரானது திருவடிகளை வணங்கி, வீரபத்திரரையும் தகுதி வாய்ந்த அன்பினால் வணங்கித் துதித்தனர்.

இவ்வாறு தேவர்களும் முனிவர்களும் மற்றவர்களும் துதித்து நிற்கச் சிவபெருமான் வீரருள் வீரரான வீரபத்திரரும் பத்திரகாளியும் அருகில் வர, நந்திதேவர் முன்னே செல்லப் பூதகணங்கள் புடைசூழ, அம்பிகையாருடன் இடபவாஹனத்தில் திருக்கயிலாயம் சென்றனர். அங்கு அம்பிகையுடன் பெரிய சபையில் எழுந்தருளி வெற்றி வாய்ந்த வீரபத்திரருக்கு வானவர் உலகத்துக்கும் மேலாகப் பொருந்திய ஒரு பதவியளித்து "அவ்விடத்திலிருத்தி" என்றருளிச் செய்தனர். வீரபத்திரரும் பத்திரகாளியும் அம்மையும் அப்பனுமாகிய இருவரையும் வணங்கி விடை பெற்றவர்களாகி, தட்சனுடைய யாகத்தை அழிப்பதற்காக உண்டான அளவற்ற பூத கணங்கள் பெருங்கடலைப் போலத் திசைகள் தோறும் நெருங்கி வரச் சிவபிரானார் முன்னரருளிய தேரில் ஏறித் தமக்களிக்கப் பட்ட உலகினைச் சென்றடைந்து அங்குச்சுகமாக வாழ்ந்தனர்.

இருவர்தந் தாளையும் இறைஞ்சி அன்னவர்
தருவிடை பெற்றன னாகித் தக்கன
துரியதோர் மகமடும் உலப்பில் பூதர்கள்
திரைகட லாமெனத் திசை தொறீண்டவே.

தந்தைமுன் விடுத்ததோர் தடம்பொற் றேரயல்
வந்ததங் கதன்மிசை வயங்கொள் ஆடலான்
பைந்தொடி யொடும் புகாப்பானு கம்பன
துந்திட அரனருள் உலகிற் போயினான்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், யாகசங்காரப்படலம்,
பாடல் 174, 175.



சிவம்.

19. அரியயன் காரணு அனற்பிழம்பு

சிவபெருமான் திருக்கயிலைக்கு எழுந்தருளியவுடனே பிரமதேவன் மிகவும் இழிவடைந்து துக்கத்துடன் கூடிய மகனாகிய தட்சனைப் பார்த்துக் கூறலானான். "தட்சனே! நீ மிகுந்த மோஹத்தினால் என்ன காரியஞ் செய்தனை? தேவர்களுக்கும், மஹாத்மாக்களாகிய மஹரிஷிகளுக்கும் பிராம்மணர்களுக்கும் மற்றவர்கட்கும் விரைவாகச் சென்று உயிருண்ணுமொரு கூற்றுவனாக ஆயினாய். நீ அடைந்திருந்த கீர்த்தியும், ஐச்வர்யமும் நீங்கி உன்னை அண்டினவர்களும் உன்னால் நாசமடைந்தனர். நீயும் துன்பமுற்றனை. உனது சுயவறிவையன்றி ஒப்பற்ற பெரியோர் உரைத்ததையும் கேட்டாயல்லை. பழைய ஊழ்வினையால் நீ இந்நிலையையடைந்தாய். முதல்வனான சிவபெருமானது உயர்ந்த நிலையை முழுதுமறிந்த நீ அப்பெருமானை இகழ்ந்தனை. அதனாலன்றோ இந்நிலையையடைந்தனை. ஒப்பற்ற செல்வத்தையடைந்தமையால் இத்தகைய அறிவுமயக்கத்தை அடைந்தனை. இந்த மயக்கம் உன்னளவில் மட்டுமன்று. ஒரு சமயம் எனக்கும் இந்த புத்தி மோஹம் ஏற்பட்டது. அச்சமயம் இறைவனே வந்து அவருக்கே உரிய கருணையால் அதனை நீக்கி என்னைக் காத்தருளினார். அதனால் பேரருளாளனாகிய அந்தக் கண்ணுதற் பெருமானைக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி பேரன்புடன் பூசிப்பாயாக. அங்ஙனஞ் செய்தியேல் துன்புறுகின்ற இந்தப் பாவத்தை நீக்கி, ஞானத்தினையும் நல்கி, இனிய அருளினையும் செய்வார்".

பிரம்மதேவன் இவ்வாறு கூறுதலும் ஆட்டுத்தலையையுடைய தட்சன் "தந்தையே! நான் உய்யுந்திறம் உணர்த்தினை. உன்னிடமும் முன்னர் உண்டாகிய மயக்கமும் எம்பிரான் அருள் செய்ததும் நான் தெளிவடைவதற்காக உரைத்தருள்வாயாக" என்றான். இதனைக்கேட்ட நான்முகன்,

"மைந்தனே! அவ்வரலாற்றினை உனக்கு முன்னரே உரைத்துள்ளேன். ஆயினும் நீ கேட்பதால் மீண்டும் கூறுகிறேன்," என்று முன்னாளில் திருமாலுடன் பலதினங்கள் போர்புரிந்து தானே மேலான பொருளென்று கூற, அச்சமயம் எழுந்தருளி நல்வழிப்படுத்தியவரும் பிறவிப்பிணிக்கு மருந்தானவருமாகிய அந்த மஹாதேவரைத் தனது உள்ளத்தாமரையில் தியானித்துக் கைகள் கூப்பி வணங்கியவாறு கூறலாயினன்.

"மைந்தனே! கேட்பாயாக. ஆயிரம் சதுர்யுகங்கள் கொண்டது எனக்கு ஒரு பகலாகும். இரவும் அதே அளவுள்ளதாகும். அந்த இரவில் நான் நித்திரை செய்வேன். அப்பொழுது ஒளியுள்ள அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரஹமண்டலங்கள் யாவும் ஒடுங்கும். இந்திரன் முதலிய தேவர்களும் அழிந்துபடுவர். இப்பூவுலக உயிர்கள் முதலியவும் அழியும். அப்பொழுது வானுலகிலுள்ள பதவிகளிலிருந்த பெரிய முனிவர்கள் யாவரும் விரைந்து பயத்துடன் சனலோகத்தினையடைவார்கள். நான்கு புறங்களிலும் கடல் விரைவாகப் பெருகி பூமி, ஆகாயம், பாதாளம் ஆகியவற்றை மூடிநிற்கும். அச்சமயம் எந்த இடத்தில் உமா தேவியார் முப்பத்திரண்டு அறங்களைச் செய்தருளினரோ, எந்த இடத்தில் காமாட்சி என்ற திருநாமத்துடன் பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றரோ, அந்தக் காஞ்சிபுரம் என்ற இடம் மட்டும், ஒரு குடம் சமுத்திரத்தில் கவிழ்க்கப்பட்டால் தண்ணீர் உள்ளே செல்லாது வெளியில் மட்டுமிருப்பதுபோல, தண்ணீரால் மூடப்படாது இருக்கும். அப்பொழுது மலைகளுக்கு அரசான திருக்கயிலாயமலை மிகவும் பெரிதாக வளர்ந்துவிடும். அந்த மலையிலுள்ள ஆலமரத்திலிருந்து ஓர் இலை பிரளய நீரில் விழும். அந்த இரவு முடியும் வரையில் அந்த ஆலிலையின் மீது சிவபெருமானுடைய மலரடிகளை உள்ளத்தில் அமைத்து, ஒரு தனிக்குழந்தையைப் போலத் திருமால் நித்திரை செய்வான். மாயோனாகிய திருமால் நித்திரை செய்வதைப் பார்த்துச் சனலோகத்து முனிவர்கள் அவனைத் துதிக்க, உடனே கண்விழித்து பூவுலகத்தைத் தேட,

அது பாதாளத்தில் இருப்பதை அறிந்தான். உடனே திருமால் ஒரு பெரிய பன்றியின் உருவத்தை எடுத்துக்கொண்டு நீரில் மூழ்கிய பூமியை எடுத்து வந்து, முன்போல் நிலைநிறுத்தி வைத்தான். இரவுப்பொழுதான ஆயிரம் சதுர்யுகங்களும் கழிந்த பின்னர், பகற்பொழுது உண்டாயிற்று. உடனே நான் உறக்கத்தினின்றும் எழுந்து உலகங்கள் அனைத்தை யும், அவற்றில் விளங்கும் உயிர்களையும் முன்போல் படைத் தேன். இது இவ்வாறாக, திருமால் பூமியை நிலைநாட்டின அஹங்காரத்துடன் பாற்கடலில் சென்று நித்திரை செய் தனன்.

அப்பொழுது அளவற்ற தேவர்களையும், அசுரர்களையும், மனிதர்களையும், விலங்குகளையும் மற்றைய உயிர்க்கூட்டங் களையும் படைத்து இந்திரன் முதலிய தேவர்களை அவரவர் பதங்களில் நிலை நிற்கச் செய்தேன். இங்ஙனம் செய்ததனை மிகவும் ஆலோசித்து, என்னையன்றிக் கடவுள் வேறு எவரும் இல்லை என்ற எண்ணங் கொண்டேன். நான் தூங்கினால் உலகமெல்லாம் தூங்குகிறது. விழித்தால் விழிக்கின்றது. இதனால் யானே உலகிற்கு முதல்வனாவேன். என்னையன்றி உயர்ந்த பொருள் யாருமில்லை. எவரினும் உயர்ந்தவன் நானே என்ற செருக்கடைந்தேன். என்னால் படைக்கப்பட்ட அனைத்தையும் மிகுந்த கர்வத்தோடு பார்த்து வந்தபோது, திருமால் உறங்கிக்கொண்டிருந்த பாற்கடலை அடைந்து, உறங்கிக் கொண்டிருப்பது திருமால் என்பதை நன்கறிந்தும் அவனது மார்பில் எனது வலிய கையினால் அடித்து, அவனை எழுப்பி, ''நீ யார்?'' எனக் கேட்டேன். உடனே திருமால் மிக்க கோபத்துடன் எழுந்து ''நான்கு தலைகளையுடைய புத்திரனே! நான் உனது தந்தை யென்பதை அறியாயோ? இந்த எல்லா உலகங்களுக்கும் தலைவன் நான் என்பதையும் அறியாயோ'' என்று கேட்டான். இவ்விதம் திருமால் கூற, ''என்னை உனது மகன் என்று கூறியது முறையல்ல. நானே உனது தந்தை. நானே பரப்பிரமம் என்பதை அறிந்து

கொள்வாய். நான் உனது நாபியின் வழி வெளிப்பட்ட உண்மை இன்னதென்று அறியாமல், என்னை உன் மகனென நினைத்தனை. விறகில் தீ பிறக்கும். ஆனால் தீக்கடவுளுக்கு விறகினைத் தந்தை என்று கூறலாமோ? அதுபோல எனது இச்சையினால் உம்மிடமிருந்து எனக்குப் பிறப்பு ஏற்பட்டது. அதனாலேயே உன்னை என் தந்தையெனக் கூறலாமோ? எனவே இந்த அறியாமையை விட்டுவிடு. நீயும் முன்னம் ஒரு தூணிடத்துப் பிறந்தனை. அதனால் உன்னை தூணின் பிள்ளை என்றுத் தடையின்றிக் கூறலாமன்றோ? தூய்மை வாய்ந்த எனது மகனான பிருகு முனிவர் இட்ட சாபத்தால் பத்துப் பிறப்பினை அடிக்கடி அடைந்தனை. அவ்வுடம்பனைத் தையும் படைத்துப் படைத்து என் கையானது சிவப்பேறி யிருப்பதைப்பார். எனவே என்னையே பரப்பிரமம் என அறிந்து சுகமாக இருப்பாயாக'' என்று கூறினேன்.

எனது சொற்களைக்கேட்ட திருமாலும் வாளாவிருப்பனோ? கோபத்தால் தனது இரு கரங்களையும் புடைத்து நகை செய்து கூறலாயினான். ''பிரம்மதேவனே! நீ என்னைப் படைத்த தாகக் கூறுவது மிக நன்று. அவ்வாறு செய்யவல்லையேல் விடமுண்ட கண்டனை சிவபிரான் முன்னுளில் கொய்த உனது ஒரு தலையை இப்போது என் முன்னே படைத்துக் கொள் வாயாக. ஆதலால் விருப்பத்துடன் முன்னுளில் உன்னைப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் நானேயாம். உனக்குக் கடவுளும் குருவும் நானே. மற்றும் சரம் அசரம் எனப்படும் இருவகையான உயிர்களும் நானே! நெற்றிக்கண்ணுடைய உருத்திரனும் நான். வானுலகத்தின் தலைவனும் வேதமும் நானே. ஆதி, உருவம், அருவம், இருள், ஒளி, மாயன், சங்கரன் ஆகிய அனைத்தும் நானே!'' இவ்வாறு நாராயணன் பற்பல கூறுதலும் நான் எதிரே சென்று கோபித்து, ''நாம் இருவரும் போர் செய்வோம். போரில் வெற்றி பெற்றவரே மேலானவர்'' எனக்கூறத் திருமாலும் அதற்கியைந்து போர் புரிய வந்தனன்.

திருமால் என் மீது பல தெய்வப்படைக்கலன்களை ஏவ, நானும் தருப்பையால் அந்தக் கொடிய படைகளை உண்டாக்கி அவைகளைத் தடுத்தேன். பின்னர் திருமால் தனது பெயரை யுடைய அம்பினையெடுத்து விடுத்தலும் நான் எனது பெயரால் அமைந்த பிரம்மாஸ்திரத்தை விடுத்து அதைப் பயனற்ற தாகச் செய்தேன். நாராயணாஸ்திரம் பயனற்றுத் திரும்பிய வுடனே திருமால், ஆதியாகிய சிவபிரானளித்தருளியதும், எல்லாப் படைகளுக்கும் 'மேலானதுமான பாசுபதம் என்ற கணையைப் பூசித்து என்மேல் விடுத்தனன். முன்னமே எனக் கும் அந்தக்கண்ணுதற் கடவுள் அந்தப் பாசுபதாஸ்திரத்தை அளித்திருந்தமையால் நானும் அதனையெடுத்து மனத்தினால் பூசை செய்து வணங்கி, ஒரு தீயின் மீது மற்றொரு தீ செல்வது போல விரைவாக விடுத்தேன். ஒரே விதமான வலிமை யுடைய இரு பாசுபதாஸ்திரங்களும் ஒன்றோடொன்று பொருது, எவ்விடத்திலும் தீயை உண்டாக்கித்திரிந்து, உலகனைத்தையும் அழித்தன. அதனால் எல்லா உயிர்களும் நடுங்கின. தேவர்கள் கலங்கினார்கள். மண்ணுலகமும் விண்ணுலகமும் எரிந்தன. தேவர்கள் பலர் நஞ்சுண்ட கண்டனாகிய சிவபிரான் திருவடிகளையடைந்து உய்வோம் என எண்ணியவர்களாய்த் திருக்கயிலையை நோக்கி ஓடினார்கள். இவ்வண்ணம் நாங்கள் கொடிய போரினைச் செய்து கொண் டிருந்த பொழுது எனது புத்திரனான நாரதன் அங்கு வந்து எங்களிருவரையும் பார்த்து, "ஏ பிரம்ம விஷ்ணுக்களே! உங்களுக்கு உயிரைக் கொடுத்தவர் அனைத்து உலகங்களுக் கும் நாதரான பரமேசுவரன் என்று அறியாமல் மூடர்களாய் மிகுந்த மோஹம் மேலிட்டு நீங்கள் இருவரும் "நாம் பிரமம்" என நினைந்துரைத்துச் சிலகாலமாகப் போர் செய்கின்றீர்கள். பிரமம் ஒன்றேயன்றி இரண்டு ஆமாறில்லை. உங்களுக்குள் எவர் அந்தப் பரப்பிரம்மம்? உலகினையழிப்பதற்குரிய அஞ்சத்தக்கப் படைக்கலங்களை விடுத்தீர்கள். அப்படைகளை உங்களுக்களித்தருளிய கடவுளை மறந்தீர்கள். அக்கடவுளை மறந்தீராயினும் அப்படைகளின் பெயர்களை உங்கள் மனதில்

தெளிந்து இப்போரினை விடுங்கள். இனியும் நீவீர் இருவரும் போர் புரிவீராயின் ஆதியும் அந்தமுமற்ற பரம்பொருளான பரமேசுவரர் உங்களது பலத்தைச் சோதிப்பதற்காகச் சோதி வடிவாய்த் தோன்றுவார்'', என்று கூறிச் சென்றார்.

இங்ஙனம் நாரதர் கூறிய நல்லுரைகளை நாங்கள் மனதுட்கொண்டிலோம். பின்னரும் போர் செய்கின்ற அஹங்காரம் ஒழிந்திலாது மிகப்பெரிய புவனமும் உயிர்களும் அழியும் வண்ணம் ஆயிரம் ஆண்டுகள் போர் புரிந்தோம். இவ்வாறு போர்புரியும்பொழுது ஜகத்குருவும், பகவானுமான சம்புவானவர் உலகத்துக்கு எங்களால் ஏற்பட்ட இன்னல்களைக் கேட்டு, மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசி திதியில் (மஹா சிவராத்திரியன்று) நடு இரவில் நிகரற்ற காந்தியைக் கொண்டவராகி, எங்களிருவரின் நடுவே அக்கினி மயமான ஒரு மலைபோலத் தோன்றினார்.

அபவத்துமுலம் கோரம் யுத்தமதயோர்ம்ருதம் ।
ததந்தே பகவான் சம்பு: ஆவிராஸீத் ஜகத்குரு: ॥

லோகோபத்ரவமாகர்ண்ய ஜ்யோதிர்லிங்கதயா சிவ: ।
மாகக்ருஷ்ண சதுர்தச்யாம் மத்யேராத்ரமதுல்யபா: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 36ம் அத்தியாயம்,
ச்லோ. 52-53.

ஆன்றதோ ரளவைதன்னில் அடைந்தது மாகந்தன்னில்
வான்றிகழ் பானுட்கங்குல் மதிபகல் தழுவுநென்னல்
ஞான்றது தனில்யாங்கண்டு நடுக்குற நடுவணகத்
தோன்றினன் கனற்குன்றேபோற் சொல்லரும் பரத்தின்சோதி.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், அடிமுடிதேடுபடலம்,
59ம் பாடல்

அங்ஙனமுண்டாகிய சோதிலிங்கமானது நாங்கள் விடுத்த இருவரின் ஆயுதங்களையும் தனக்குள் இழுத்துக்கொண்டது.

நாங்கள் இருவரும் போரினை விடுத்து அதனையடையாது விலகிச்சென்று அந்தச் சோதியையே பார்த்துக்கொண்டு நின்றோம். அப்பொழுது ஆகாயத்தின் நடுவிலிருந்து ஒரு சொல்லானது உண்டாயிற்று. "அடே அடே மஹாமோஹத்தையடைந்த பலமற்றவர்களான பிரம்ம விஷ்ணுக்களே! ஸ்ரீ மஹாதேவருடைய சிறந்த பலத்தைக் காட்டிலும் உங்களிருவரது பலம் என்ன பலம்? உங்களுக்கு பலமேயில்லையென்று, இப்பொழுது உண்மையாகச் சொல்கிறேன். இந்தச் சோதி லிங்கத்தின் முடியையும் அடியையும் உங்களிருவர்களில் எவர் காண்கின்றார்களோ அவரே பலவான்களுள் சிறந்தவர்" என்று அந்த அசரீரி வாக்கு கூறியது.

ஊர்த்வத்ருஷ்டீ ததா காசித் வாக்ஜிஜ்ரும்பே நபோऽந்தரே ।
ரே ரே தேவௌ ஹீனபலௌ மஹாமோஹபராயணௌ ॥

கிம்பலம் யுவயோர் முக்த்வா மஹாதேவ பலம் பரம் ।
நாஸ்தி நாஸ்தி பலம் ஸத்யம் உச்யதேऽத்ர மயாது ॥

ய: ப்ரபச்யதி லிங்கஸ்ய யுவயோர் பாஸ்வரூபிண: ।
ஊர்த்வபாகம் அதோபாகம் ஸவை பலவதாம் வர: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 36ம் அத்தியாயம்,
ச்லோ. 55-57.

இந்த வார்த்தைகளைக் கேட்டு இருவரும் கோபத்தை விட்டும் மறுபடியும் கர்வமுடையவர்களாக ஆனோம். பிறகு நாங்கள் இருவரும் அந்தச் சோதிமலையின் மேல்பாகத்தையும் அடிப்பாகத்தையும் காண இச்சை கொண்டு ஒருவருக்கொருவர் சபதம் செய்து கொண்டோம். நடத்தலைப் பழகுகின்ற மழலைச் சொல் நீங்காத இளைய சிறுவர்கள் வானிலுள்ள ஒளி மிக்க சுடரினைக் கையால் தொடுவதற்குத் துணிந்தாற் போல நான் முடியினைக்காண்பேன் என்று கூறினேன். திருமால் அடியினைத் தான் காண்பதாகக் கூறினான்.

பின்னர் திருமால் ஆயிரம் யோசனை உயரத்துடன் ஆயிரம் யோசனை பருமனுமுடையதொரு பெரிய பன்றியின்

உருவெடுத்துப் பூமியைப் பிளந்து கீழ்ச்சென்று தடவித்தேடி வரிசையாகவமைந்த புவனங்கள் அனைத்தையும் கடந்து சென்ருன். திருமால் பாதாளத்தில் தேடிச் செல்லலும், நான் அதே அளவு பெரிய அன்னப்பறவையாகி விரைந்தெழுந்து மேலே சென்று வானத்தின் மேலாகவுள்ள பெரிய புவனங் களில் தேடி மேற்செல்லுதலும் அச்சோதி எனக்கு முன்னே மேற்சென்றது. பன்றியுருக்கொண்டு பூமியைப் பிளந்து சென்று சோதிலிங்கத்தின் அடியினைக் காணச்சென்ற மாலோன் கீழே சென்று சென்று நெடுங்காலமாகியும் சோதியின் பாதத் தைக் கண்டிலன். பற்கள் நொந்து உடல் மெலிந்து, வலிமை யனைத்தும் சிந்தி, நாக்கு வறட்சியெய்தி, மேல்மூச்சுடன் துன்பமும் உண்டாகி, வஞ்சினமும் அகந்தையுமொழிந்து, பண்டைய நல்லறிவனைத்தும் மாலோனிடத்து வந்தன, பழைய அறிவு உண்டாகத் தெளிவடைந்த திருமால் இருளினை யொத்த மேகம் போன்ற பன்றியுருவினைத் தரிக்கவும் ஆற்ருது அதனையொழித்தற்கும் கூடாது, தான் புறப்பட்ட இடத்துக் குத் திரும்பி வருவதற்கும் ஆற்றலின்றி, சிவபிரானது திரு வடிகளைச் சிந்தித்தனன்.

''எந்நாளும் உணர்தற்கரிய எம்பெருமானே! எனக்குத் தேவரீரது திருவடிகளையன்றி வேறு புகலும் உளதோ? அத் திருவடிகளை அருச்சிப்பதற்கும் இயலாதவண்ணம் எனது வலிமை அழிந்து விட்டது. ஒன்றும் அறியாத அடியவனது குற்றத்தைப் பொறுத்தருள்வீராக'' என்று உளம் நொந்து துதித்தான்.

என்றும் உணர்வரிய எம்பெருமான் உன்றிருத்தாள்
அன்றி அரணில்லை அவற்றையருச் சித்திடமும்
பொன்றிய தென்வன்மை பொறுத்தி குறையடியேன்
ஒன்று முணரேனென் றுளம்நொந்து போற்றினனே.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், அடிமுடிதேடு
பட்லம், 73-ம் பாடல்.

அப்பொழுது கண்ணுதற்பெருமானின் திருவருளால் மாயோன் வலிமை பொருந்திய பன்றியுருவுடனெழுந்து நில உலகத்தையடைந்து வானளாவி நின்ற சோதிலிங்கத்தின் அருகாக வந்து வணங்கி நின்ருன். நானுேவெனில் திருமாலுக்குச் சற்றுமிளைக்காமல் பெருஞ்சூளுரைத்து, வானிற் பறந்து சென்று ஆயிரம் வருடகாலம் திரிந்து தேடியும், அச் சோதிலிங்கத்தின் முடியைக் காண இயலாதவனுயினேன். கொடிய வினையுடையவனுகிய நான் திரும்பிப் போகவும் எண்ணுது, எத்தனை காலமாயினும் இன்னமும் மேலே சென்று அழகிய முடியைக் கண்டல்லது மீளேன் என்று எண்ணி மேலும் சென்றேன். உடனே உள்ளம் வெதும்பி உயிரும் உலைந்தது போலாகி எனது வலிமையும் அழிந்தது. கண்கள் சுழன்றன, இறகுகளும் நொந்தன; கால்களும் ஓய்ந்தன, எனது நினைவும் மாறுபட்டது. அச்சமயத்தில் சித்தர்களைப் போலப் பலர் உருத்திராட்சங்களை ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டு அந்தச் சோதியின் இடது புறத்தினின்றும் புறப்பட்டார்கள். அப்பொழுது நானுேவெனில் மிகவும் துக்கமடைந்தவனுய் மேலே பறந்து செல்லச் சக்தியற்றவனுகிச் சோதிலிங்கத்தின் முடியைக் காணுதவனுகி அங்குமிங்கும் தத்தளித்துக்கொண்டு ஒரு க்ஷண நேரம் அங்கேயே இருந்து விட்டேன். அந்தச் சித்தர்கள் ஒருவருக்கொருவர் என் முன்னிலையில் பேசிக்கொண்டே சென்றதாவது: "இப்பொழுது அறியாமையால் சூழப்பட்ட இந்த அன்னமானது இனி ஓரடியாவது உயரப் பறந்தாலும் மரித்தேவிடும். விஷ்ணுவும் பராத்பரமான இந்த சிவசோதியின் மஹிமையை அறியாமலே அதன் அடிப்பாகத்தைக் காண்பேன் என்று கூறிச்சென்று, பின் காண இயலாது வருந்தி மிகவும் களைப்புடன் திரும்பிச் சென்று, மிகவும் அச்சத்துடன் வணங்கி நிற்கின்ருர். மிகுந்த மதிமயக்கங் கொண்ட இந்த அன்னப்பட்சி பரமேசுவரரது திருவருளிஞலேயே உயிருடன் உள்ளது. இல்லையேல் நிச்சயமாக இறந்திருக்கும்".

சித்தர்களது இந்த வார்த்தைகளைக் கேட்டு நானும் நல்லறிவு பெற்றவனாய் விரைந்து பூமிக்குத் திரும்பி வந்து, மிகுந்த அச்சத்துடன் ஸ்ரீ மஹாதேவரைப் பல தோத்திரங் களால் துதித்தேன். அப்பொழுது அங்கு என்னைப் போலவே பயத்துடன் கூப்பிய கரங்களோடு துதித்துக்கொண்டு நின் றிருந்த திருமாலைப்பார்த்துக் கூறினேன். "நாமே சிறந்த பரம்பொருளென்று பெரும்போர் புரிந்து, நாரதர் கூறிய மொழியையும் அறிந்தோமல்லோம். நமது தந்தையான சிவபிரானின் வருகையையறியாது அடியும் முடியும் தேட முயன்றோம். நாம் பூமியைப் பிளந்து சென்றும் வானிற் பறந்து சென்றும் அடியும் கண்டிலோம், முடியும் கண்டிலோம். சிவபிரானது திருவருளினால் வலிமைபெற்றுத் திரும்பிவந் தோம். இனி நாமிருவரும் உள்ளன்புடன் அப்பெருமானை வழிபட்டுத் தரிசனம் காண்போம்". இவ்வாறு நான் கூறி யதைத் திருமாலும் ஏற்றுக்கொண்டனன். அச்சிவபிரானது திருவுருவினை முறைப்படித் தாபித்து மணமிகுந்த மலர்கள், திருமஞ்சனம், சந்தனம், தூபம், தீபம் முதலிய உபசாரங் களோடு ஒப்பற்ற பூசையைச் செய்து வணங்குதலும் கருணை மூர்த்தியும், மாயா ஸம்பந்தமற்ற சரீரமுடையவரும், ஸ்ரீமானும், சந்திரகலையைத் தலையில் அலங்காரமாகத் தரித்த வரும், சுத்தமான ஸ்படிகத்துக்கு நிகரானவரும், முக் கண்ணரும், கருத்த கழுத்தையுடையவரும், வரம் அபயம் என்ற இரண்டு முத்திரைகளையுடைய திருக்கரங்களையுடைய வரும், பேரழகுடையவரும், கோடரி மான் இவைகளுடன் விளங்கும் கைகளையுடையவருமான சம்புவானவர் அந்தச் சோதிலிங்கத்தின் நடுவிலிருந்து உமாதேவியாரோடு தோன்றி எங்களுக்குக் காட்சியளித்தார்.

இத்யுக்த்வாவாம் ததான்யோன்யம் பூஜாயாம் க்ருதநிச்சயௌ ।
அபூஜயாவ தேவேசம் பக்த்யா பரமயா ஸுதா ॥

ஆவிராஸீத் ததச்சம்பு: ஜ்யோதிர் மத்யாத் உமாஸக: ।
அப்ராக்ருத தநுச்ச்ரீமான் சந்த்ரார்த்தக்ருத சேகர: ॥

சுத்தஸ்படிக சங்காச: த்ரிணேத்ரோ நீலகந்தர: ।
வராபயகரச்ச்ரீமான் பரச்வேண லஸத்கர: ॥

—ஸ்காந்தம், தக்ஷகாண்டம், 37ம் அத்தியாயம்,
ச்லோ. 19–20–21

மைக்களமும் மான்மழுவும் வரதமுடன் அபயமுறும்
மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே அருள்புரிந்தான்.

—கந்தபுராணம், தக்ஷகாண்டம், அடிமுடிதேடுபடலம்,
பாடல் 87.

அப்பொழுது நாங்களிருவரும் அமலமூர்த்தியாகிய சிவ பிரானது திருவடிகளை வணங்கி, அப்பெருமானது திருவருள் வெள்ளத்தில் மூழ்கி, வேதங்களும் இத்தகையதென்று அறி யாதே மயங்கும் பரம்பொருள் நாங்கள் காணுதற்கு எளிதாக வந்த பேரருளின் திறத்தினை எண்ணிப் பின்வருமாறு துதிக்கலானோம்.

"ஐயனே! நாங்கள் இருவரும் மதிமயங்கிப் போர் புரிந்த காலத்தில் எங்களது எதிரில் செந்தழலின் மேனி கொண்டுவந்து பண்டைய நல்லறிவினை எங்கட்கறிவித்து தேவரீரையுமறிவித்து எங்களது போரையும் நிறுத்தியருளி னீர். நாங்கள் இயந்திரங்கள். அவ்வியந்திரங்களை அசைத்து இயங்கச் செய்பவர் தேவரீரேயன்றோ? எம்பெருமானே! தேவரீரையறியத்தக்க அறிவளித்தாலன்றி நாங்கள் எங்ஙனம் அறியவல்லவர்களாவோம்? சிறியேங்கள் செய்த அற்பமான செயல்களனைத்தையும் பொறுத்தருள்வீர். தமது சிறுவர்களின் செய்கைகள் யாவும் பெற்றவர்களுக்கு இனியனவேயன்றோ? இரும்பினை வல்லானொருவன் பொன்னாக்கிய தன்மைபோல எமக்கருள்புரிந்து படைத்தல் காத்தல் தொழில்களுக்கு உரிய வர்களாக எங்களைச் செய்தருளினீர். அங்ஙனம் செய்த

பேரருளை மறந்தோம். தேவரீரால் அநாதியாகக் கட்டப்பட்ட பாசமகற்ற வலியில்லாத உயிர்களன்றோ நாங்கள்?'' இவ்வாறு துதித்த எங்களை மலைவில்லியாகிய அந்த ஒப்பற்ற இறைவர் கருணையுடன் நோக்கி, "நீவிர் செய்தவைகளைக் கருதி ஒன்றும் நினையாதீர்கள். நீவிர் செய்த பெரிய பூசையினாற் பெரிதும் மகிழ்ந்தோம். முன்னாளில் உங்களுக்களித்த பதவிகளை மீண்டும் உங்கட்கு அளித்தோம்''. சந்திரசேகரரும் திவ்ய மங்கள மூர்த்தியுமான பரமேசுவரர் இவ்வாறு எங்கட்கு அருள் புரிந்துவிட்டு, மேலும் வேண்டிய வரத்தினைக் கேட்பீராக என்றவுடன், நாங்கள் ''ஞானகாயத்தில் நடனம் புரியும் அறுகுண பரிபூரணனே! தேவரீரது திருவடிகளையே புகலிடமாகக் கொண்டு அனுபவிக்கும் தலையன்பினை அளித்தருள்வீர்'' என வேண்டினோம். நாங்கள் வேண்டியபடியே அளித்தருளிப் பின்னர் இறைவர் அந்தச் சோதி மலையுள் கணப்பொழுதிற் கலந்தனர்.

அங்ஙனம் சோதியுட்கலந்தவுடனே நாங்கள் இருவரும் அச்சோதியின் திருமுன்பு விழுந்து வணங்கியெழுந்தோம். நாங்கள் அடிமுடி காணவியலாது தழலாய் விரிந்த பேரொளியானது சுருங்கி உலகத்தார் எல்லோரும் வியப்புடன் கண்டு துதி புரியும்வண்ணம் ஒரு மலையாகியது. அவ்வாறான சிவலிங்கமூர்த்தியை அடைந்து மும்முறை வலம் வந்து முறைப்படி தொழுது துதித்து எமது பதவிகளைச் சென்றடைந்தோம். அதன்பின் எந்தையை மறவாது துதித்து வருகின்றோம். அந்தமலை அக்கினிமலை என்றும் * அனலகிரி யென்றும் பெயர்களைப் பெற்றது. மாசிமாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியாகிய அந்த மஹாசிவராத்திரியில் சோதிலிங்க வடிவினதும், அற்புதமுமான அந்த அனலகிரியை அடைந்து இறைவரைப் பூசித்துப் பலர் பாவங்கள் அனைத்தும் விலகிய

---

* திருவண்ணாமலை என்று வழங்கப்படும் மலை இதுவேயாகும். இதற்கு சோணாசலம், அருணாசலம், சோணசைலம், அருணகிரி என்ற பெயர்களும் உள்ளன.

வர்களாக ஆகின்றார்கள். மேலும் வேதங்களாலும் ஆகமங்களாலும் உண்டாகும் ஒப்பற்ற சிவஞானத்தைப் பெற்றுத் தெளிவடைந்த மனமுடையவர்களாகி அப்பெருமானிடம் நிலைத்த அன்புடையவர்களாகவும் ஆகின்றார்கள். அத்தகைய அன்பில்லாதவர்கள் எத்தனைக் கலைகளை உணர்ந்துதான் என்ன பயன்? வேத ஆகமங்களை ஆராய்ந்துதான் என்ன பயன்? சிவபிரானது உண்மையான பரத்துவ நிலை விளங்காதார் அறிவிலிகளே ஆவர்.

மதிமயக்கத்தால் தீயசெயல்களைச் செய்து மீண்டும் மீண்டும் பிறவியில் அழுந்தும் பாவிகட்கும், பசு புண்ணியங்களையே செய்து வாழ்பவர்களுக்கும் அச்சிவபிரானது திருவருள் கிட்டாது. பாவமும் புண்ணியமும் சம நிலையையடைதலாகிய இருவினையொப்பு உண்டாகும் சிவபுண்ணியச் சீலர்களுக்கே அவனருள் உண்டாகும். அவர்களே அவ்வருள் நிலைக்குரியராவர்.

புத்திரனாகிய தட்சனே! நீயும் இப்பொழுது பழைய இருவினையினின்றும் நீங்குதலால் எம்பெருமானுடைய உண்மை நிலையை ஆராயுங்குணம் உனக்குண்டாகியது. அச்சிவபிரானே தாயும், தந்தையும், குருவுங் கடவுளும், தவமும் செல்வமுமாவர். ஆதலின் அப்பெருமானையே அடைவாயாக". இவ்வாறு தன் மைந்தனாகிய தட்சனுக்குக் கூறிவிட்டு பிரம்மதேவன் தனதிருப்பிடத்தைச் சென்றடைந்தான்.

நீயுந் தொல்வினை நீங்கலின் எம்பிரான் நிலைமை
ஆயுந் தொல்லுணர் வின்றுவந் தெய்திய தவனே
தாயுந் தந்தையுங் குரவனுங் கடவுளுந் தவமும்
ஏயுஞ் செல்வமும் அனையவற் சார்தியா லென்றான்.

கந்தபுராணம், தக்ஷகாண்டம், அடிமுடிதேடு
படலம், 99-ம் பாடல்.

சிவம்.

20. தட்சன் பூசையும் தேவேசனருளும்.

இவ்வாறு பிரம்மதேவன் சிவபிரானது அளவற்ற பெருமை விளங்கும்படியாக உரைத்துச் சென்றதும், தட்சன் அவைகளைக் கேட்டு நன்கு சிந்தனை செய்து, சிவபெருமானை உள்ளன்போடு வழிபடும் உறுதியுடன் காசியாகிய அழகிய நகரத்துக்குச் சென்றான். நல்லறிவு வரப்பெற்ற தட்சன் காசியில் சிறந்த கங்கையாற்றின் கரையிலுள்ள மணிகர்ணிகை என்னுமிடத்தின் ஒருபுறத்தில் பொன்னார்மேனியனும் செஞ்சடையண்ணலுமான சிவபிரானுக்கு ஒரு திருக்கோயிலை உண்டாக்கினான். அருளே வடிவாகி அனைத்து உலகங்களையும் உயிர்களையும் படைப்பதும் அழித்தலுமாகித் தாணுவாய், உருவமும் அருவமுமாகிய ஒப்பற்ற பேரொளியினையுடையதுமாகிய ஒரு சிவலிங்கத் திருவுருவினை ஸ்தாபித்தான். சிவபிரானது திருவாக்காகிய சிவாகமங்களில் உரைக்கப்பட்டவைகளை நன்கு உணர்ந்து சிவதீட்சை என்னும் விரதத்தினை உடையவனாகி, கங்காதரனை அப்பெருமானது திருவடித் தாமரைகளை ஆயிரம் வருடங்கள் முறைப்படி பூசித்தான்.

பிரமன் மகனான தட்சன் இவ்வாறு அருச்சனை புரிதலும் அவனது உள்ளத்திற் பொருந்திய உண்மையன்பினை உணர்ந்து சிவபிரான் விரைந்து அவன் முன் தோன்றி அருளினார். தட்சன் பெருமானை மகிழ்ச்சியுடன் தரிசித்துப் பொன்மயமான அழகிய வீரக்கழலணிந்த திருவடிகளைப் பக்தியுடன் வணங்கினான். "ஓ தட்சனே! உன்னுடைய பூஜையினால் மகிழ்ந்து உன் முன் பிரசன்னமானேன் என்று அறிவாயாக. உனக்கு என்ன வேண்டும் என்பதைக் கூறுவாய்", என்று சிவபிரான் கூறியருளினார். இவ்வாறான பரமேசுவரரது அமுதமயமான மொழிகளைக் கேட்ட தட்சன், "ஐயனே!

அஹங்காரம் மிக்கவனாகித் தேவரீரை நிந்தனை செய்தேன். அதனால் என்னிடத்தில் வந்து பொருந்தின அளவற்ற பாவங்களைப் போக்கி என்றும் தேவரீரது திருவடித்தாமரைகளில் அன்பினை அளித்தருள்வீராக. மேலும் கருணைக் கடலான தேவேச! எனக்குக் காலத்தினால் அழிந்து போகக்கூடியதான பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலானோருடைய பதவிகளில் விருப்பமில்லை. ஆனால் மலைகளில் சிறந்ததான திருக்கயிலாய மலையில் தேவரீரது வாயிலில் எப்பொழுதும் கணங்களுக்குத் தலைவனாயிருக்கும் தன்மையை அளித்தருள வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். நிமலனான சிவபெருமான் தட்சன் வேண்டியபடியே அவனது பாவங்கள் அனைத்தையும் போக்கி, அவனுக்குத் தமது கணநாதப் பதவியையளித்து. விரைவில் மறைந்தருளினார். தட்சனும் புனிதனாகிச் சிறந்த திருக்கயிலை மலையை அடைந்து, சிவகணங்களுக்குத் தலைவனாகும் கணநாதப் பதவியையடைந்து, சுத்தமான சித்தத்துடன் சுகமாக இருந்து வந்தான்.

கங்காதரனாகிய சிவபிரானின் திருவடித் தாமரைகளைப் பூசிக்கத் தட்சன் காசிக்குச் சென்றவுடனே, பிரமனும் திருமாலும். இந்திரன் வருணன் முதலிய தேவர்களும், முனிவர்களும், அசுரர்களும், மற்றவர்களும் யாகசாலையினின்றும் நீங்கி, ஒப்பற்ற கீர்த்தியையுடைய வீரபத்திரக்கடவுளது வெற்றியைத் துதித்துத் தங்கட்கு விருப்பமான பழைய திருத்தலங்கள்தோறும் சென்று உமாதேவியாரை ஒரு பாகத்தில் வைத்த பரமேசுவரனைப் பூசை செய்தார்கள். இவ்வாறு அனைவரும் சிவபூசையை எல்லாத் தலங்களிலும் செய்த புண்ணியத்தால் தங்களுடைய உடலில் முன்னர் பொருந்திய நீங்காத வடுக்கள் அனைத்தும் நீங்கப்பெற்றுத் தங்கள் பதங்களையடைந்து வாழ்ந்தார்கள். நிலவுலகத்தைச் சேர்ந்த அறிவற்ற அந்தணர்கள் தட்சனது யாகத்தில் கலந்து கொண்டு, உணவருந்தி, அவனளித்த பொருளைத் தானமாகப் பெற்ற குற்றத்தால் பூதப்படைகளால் இறந்து, பின்னர்

உயிர்பெற்றெழுந்து தங்களது ஊர்கள்தோறும் திரும்பிச் சென்ருர்கள்.

“இந்திர குமாரனுகிய சயந்தனே! உனது தந்தையும் மற்றத் தேவர்களும் சூரனுல் துன்பத்தையடைந்ததற்குக் காரணமாயிருந்த தட்சனது வரலாறு இதுவேயாகும்” என்று தேவகுருவாகிய பிரஹஸ்பதியானவர் சயந்தனுக்குக் கூறி முடித்தார். இந்த வரலாற்றினைக் கேட்ட சயந்தனும் சிவ பிரானது திருவருளை மனதில் எண்ணியவனுய் யாதொரு கவலையுமின்றித் தேவருலகத்தை அரசு புரிந்தான்.


சிவம்

முடிவுரை

இவ்வாறு சூதபுராணிகர் ஸ்காந்த புராணத்தில் அடங்கிய தட்சனது வரலாற்றை நைமிசாரணியத்தில் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறிமுடித்தார். இந்த வரலாற்றில் சிவ பெருமானது பரத்துவம் நன்கு நிருபணம் செய்யப்பட்டு, அப்பெருமானுடைய பராக்கிரமங்களும் அனைத்து உலகங் களின் நன்மைக்காகச் செய்யப்பட்ட அருட்செயல்களும் மிக்க விரிவாகக் கூறப்பட்டுள்ளதை நன்கு அறியலாம்.

சிந்தனைக்கும் எட்டாச் சேய்மையனை செம்மேனி எம் மானின் புகழ் அடியேனுல் ஓரளவு இங்கு எடுத்துக்காட்டப் பட்டிருந்தால் அதுவும் அப்பெருமானது திருவருளால் அமைந்ததேயாகும்.

எங்கும் சிவநாமமே சூழ்க.
வையகம் துயர் தீர்க.



பிற்சேர்க்கை

1. பிரம்மம் என்ற சொல் சிவபிரானையே உணர்த்தும்

கடோபநிஷத்தில் ''தத் ப்ரஹ்ம தததேவ அம்ருதமுச்யதே'' என்று கூறப்பட்டுள்ளது. அம்ருதம் என்ற சொல் சிவபிரானின் திருநாமம் என்று பிரம்மசூத்திர சைவ பாஷ்யத்து அந்தராதி கரணத்திலும் (1-1-22), அந்தர்யாமியதிகரணத்திலும் (1-2-19), மற்றும் காரியாதிகரணத்திலும் (4-3-13) கூறப்படலால் மேலே காட்டப்பட்ட கடோபநிஷத் வாக்கியத்துக்கு அது பிரம்மம், அதுவே சிவம் என்ற பொருள் ஏற்படுகிறது.

''ப்ரஹ்மேதி சிவசக்த்யோஸ்து ஸர்வாத்மத்வமிதி ஸ்புடம்'' என்று கைலாச ஸம்ஹிதை (11-40) கூறுகிறது. இதன் பொருள் ''சிவபிரானதும் சக்தியுடையதுமான ஸர்வாத்மத்வமே பிரம்மம் என்பது தெளிவாகும்''.

''ஏகோஹி நாமபேதைஸ்து ஸ்திதஸ்ஸ பரமேச்வர: |
ப்ருஹத்வாத் ப்ரஹ்மணத்வாச்ச சிவோ ப்ரஹ்மைவ யோகத: ||''

என்று பராக்கியாகமம் கூறுகிறது. இதன் பொருள்:—''ஏகராகிய பரமேசுவரரே நாமபேதங்களினால் நிலைபெற்றுள்ளனர். மேன்மையினாலும் பெருமையினாலும் யோகப் பெயரால் பிரம்மம் எனப்படுவது சிவபெருமான்''.

''ஸச்சிதானந்தரூபீ யஸ்ஸதஸத் வ்யக்தி வர்ஜித: |
ஸ சிவ: ஸர்வகஸ்ஸத்பிர் ப்ரஹ்ம சப்தேன சப்தித: ||

என்று அஜிதாகமம் கூறுகிறது. இதன் பொருள்: ''சச்சிதானந்த ஸ்வரூபியாய் சேதனம் அசேதனம் எனப்படும் இருவகைப் பிரபஞ்சங்களுக்கும் வேறாய் எங்கும் வியாபித்திருக்கும் சிவபெருமான் பிரம்ம சப்தத்தினால் கூறப்படுகிறார்''.

சிவம் பராத்பரம் ப்ரஹ்மம் அப்ரமேயமனூபமம் ।
சுத்தத்வாச்ச சிவம் ப்ரோக்தம் ஸ்வயந்தச்ச பராத்பரம் ॥
ப்ருஹத்வாத் ப்ரஹ்மரூபாச்ச ப்ரஹ்மமித்யபி தீயதே ।''

என்று காரணுகமம், வாதுளாதி ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள்: ''அளக்கவொண்ணுததாய், தனக்கோர் உவமையில்லாததாய், பராத்பரமாயுள்ள பிரம்மமானது சிவம். அது ஸ்வயமே பராத்பரமாயும் சுத்தமாயுமிருத்தலால் சிவம் எனப்படும். மேன்மையினுலும் பேருருவமுடைமையினுலும் அது பிரம்மம் எனப்படும்''.

தேவாரம் திருவாசகம் முதலிய சைவத் திருமுறைகளில் பிரம்மமே சிவன் என்று கூறப்படுகிறது. எனவே வேதத்திலும், வேதாந்தத்திலும் வரும் ப்ரம்மம் என்ற சொல் சிவபிரானையே தெரிவிக்கும் என்பது தெளிவு.

2. மும்மூர்த்திகளுக்கும் மேலான தலைவர் சிவபெருமான்

''யோவை ருத்ரஸ்ஸபகவாந் யச்ச ப்ரஹ்மா
பூர்புவஸ்தஸ்மைவை நமோ நம: ।
யச்ச விஷ்ணுர் யச்ச மஹேச்வர: ॥

என்று அதர்வசிரோபநிஷதம் கூறுகிறது. இதன் பொருள்: எவர் பகவானுகிய உருத்திரரோ, எவர் பிரம்மாவோ, எவர் பூர்புவஸ்ஸுவரோ, அவருக்கு வணக்கம், வணக்கம். எவர் விஷ்ணுவோ மஹேச்வரரோ அவருக்கு வணக்கம்'' இந்த உபநிஷத மந்திரத்தினுல் பிரம்மா, விஷ்ணு உருத்திரர் ஆயினேர் எல்லாம் சிவபிரானது விபூதியராம் என்றும் இம்மூவருக்கும் மேற்பட்டவர் சிவபிரானே என்பதும் அறிந்து கொள்ளலாம். திராவிடவேதமாகிய தேவாரமும் இங்ஙனமே கூறுவதைக் கண்டுகொள்க.

திருச்சிற்றம்பலம்

தேவராயும் அசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயும் நண்ணுபாரும் விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசனென்னும்
மூவராய முதலொருவன் மேயதுமு துகுன்றே

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த மூர்த்திகள், திருமுதுகுன்றம்.

திருச்சிற்றம்பலம்

சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப்
புவனாகிப் புவனங்க ளனைத்து மாகிப்
பொன்னாகி மணியாகி முத்துமாகிப்
பவனாகிப் பவனங்க ளனைத்து மாகிப்
பசுவேறித் திரிவானோர் பவனாய்நின்ற
தவனாய தலையாலங் காடன்தன்னைச் சாராதே
சாலநாள் போக்கி னேனே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள், தலையாலங்காடு

இன்னும் பலவுள. விரிவஞ்சி இவ்விரண்டு திருப்பாடல்களை மட்டும் கொடுத்துள்ளோம்.

பரமேசுவரன் மூவர்க்கும் முதல்வர் என்பதைப் பின்வரும் சுவேதாசுவதர உபநிஷத் மந்திரமும் கூறுவது காண்க.

தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்
தம் தேவதானும் பரமம் ச தைவதம் ।
பதிம் பதீனும் பரமம் புரஸ்தாத்
விதாம தேவம் புவனேசமீட்யம் ॥

இதன் பொருள் : படைத்தல், காத்தல், அழித்தலாதி காரியங்களைச் செய்யும் பிரம்ம, விஷ்ணு ருத்ராதி ஈச்வரர் களுக்கு மேலானவராதலால் மஹேச்வரர் என்றும், இந்திராதி தேவர்களுக்கும் மேலானவராதலால் மஹாதேவரென்றும், தலைவர்கள் எனப்படும் அனைவருக்கும் தலைவராதலால் பரம பதியென்றும், அனைவராலும் போற்றத்தகுந்த மஹிமை வாய்ந்த ஸர்வலோகநாதராகத் தங்களை நாங்கள் அறி கின்றோம்.

3. சிவபிரான் ஒருவரே என்றும் அழியாது நித்தியமாய் இருப்பவர்

''மமாபி விஷ்ணோர் ஜனகம் தேவமீட்யம் யோ஽ந்தகாலே ஸர்வலோகான் ஸம்ஜஹார | ஸ ஏக: ச்ரேட்டச்ச ஸர்வசாஸ்தா ஸ ஏவ வரிஷ்டச்ச |'' என்று சரபோபநிஷத் கூறுகிறது. இதன் பொருள்: பிரமதேவனாகிய எனக்கும், விஷ்ணுவுக்கும் பிதாவாயும் வணக்கத்துக்குரிய தேவராயும், முடிவுகாலத் திலே அனைத்து உலகங்களையும் ஸம்ஹரிக்கின்றவராயும் எவர் உளரோ அவர் ஏகரும் சிரேஷ்டரும் வரிஷ்டருமாகிய (சிவபெருமானும்). இது பிரமதேவன் கூறுவதாக உள்ளது,

''ப்ரஹ்ம நாராயணேசாநாந்த்ரயணும் ப்ருக்ருதௌ லய: |
ஏகோஹி பகவானீச: கால: கவிரிதிஸ்ம்ருத: ||

என்று கூர்மபுராணங் கூறுகிறது. இதன் பொருள்: பிரம விஷ்ணுருத்திரர் என்னும் மூவருக்கும் லயம் பிரகிருதியிலே யாக, பகவானும் கவியுமாகிய சிவபெருமான் ஒருவரே எஞ்சி உளர்.

''அஸங்க்யாதாச்ச காலாக்யா அஸங்க்யாதா: பிதாமஹா: |
ஹரயச்சாப்யஸங்க்யாதா ஏகஏவ மஹேச்வர: |

என்று இலிங்கபுராணங் கூறுகிறது. இதன் பொருள்: எண் ணிறந்த காலர்களும், எண்ணிறந்த பிரம்மாக்களும்,

எண்ணிறந்த விஷ்ணுக்களும் (ஒழிந்துவிட) சிவபெருமான் ஒருவரே எஞ்சி உளரானார். திராவிட சுருதியாம் தேவாரமும் இவ்வாறே கூறுதல் காண்க.

திருச்சிற்றம்பலம்

நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள், ஆதிபுராணத் திருக்குறுந்தொகை - 3.

பின்வரும் மஹாபாரத வாக்கியமும் ஈண்டு கருதற்குரியது.

ஈசவர: சேதன: கர்த்தா புருஷ: காரணம் சிவ: ।
விஷ்ணு: ப்ரஹ்மா சசீ ஸூர்ய: சக்ரோ தேவச்ச ஸான்வயா: ॥
ஸ்ருஜதே க்ரஸதே சைதான் தமோபூத மிதம் யதா ॥

இதன் பொருள்:—சைதன்ய வடிவான பரமசிவனே இவ்வுலகத்தைப் படைப்பவன்; அவரே ஸர்வ ஸமர்த்தன். அவரே எங்கும் நிறைந்த பொருள், அவரே விஷ்ணு, பிரம்மா, உருத்திரன், சந்திரன், ஸூர்யன், இந்திரன் மற்றுமுள்ள தேவர்கள், அவர்களின் பரம்பரைகள் எல்லோரையும் அவரே தன்னிடத்திலிருந்து படைத்து தன்னிடத்தில் லயப்படுத்திக் கொண்டு பிரளயத்தில் தானொருவரே எஞ்சி நிற்கிறார்.

4. சிவபெருமான் பசுபதி

பதி பசு பாசம் என்ற மூன்றும் அநாதி என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாம். இவை முறையே இறை, உயிர்

தலை என வழங்கும். உயிரை அநாதியாகவே ஆணவமலம் பற்றியுள்ளது. இந்த ஆணவ மலத்தைப் பாசம் என்றும் கூறுவார்கள். எனவே ''பாசபத்தோ ஜீவ: பசு:''; என்னும் வாக்கியப்படி பாசத்தினுல் கட்டுண்ட உயிரே பசுவாகும். உயிர்களுக்கு அதாவது பசுக்களுக்குத் தலைவன் சிவபிரான். அப்பெருமானே பசுபதி என வேதங்களிலும் உபநிஷத்துக் களிலும், இதிஹாஸ புராணங்களிலும் போற்றப்பட்டுள்ளார். சிவபிரானின் திருநாமங்களைக் கூறும் பகுதியில் அமரசிம்மம் என்ற வடமொழி நிகண்டு ''சம்புரீச: பசுபதிச் சிவ:'' எனக் கூறுகின்றது. தமிழில் பிங்கல நிகண்டு சிவபெருமா னுடைய திருநாமங்களைக் கூறும்போது ''......காலகாலன் பசுபதி கண்ணுதல்...'' என்று கூறுகிறது. மற்றைய நிகண்டு களிலும் பசுபதி என்ற பெயர் சிவபிரானுடையதாகவே கூறப் பட்டுள்ளது.

''ய ஈசேஸ்ய த்விபத: சதுஷ்பத:'' என்று ருக்வேதம் (10-121-3) கூறுகிறது. இதன் பொருள் : எவர் இருகாலும் நான்கு கால்களையுமுடைய பசுக்களை ஆளுகின்ருரோ'' என்பதாம். ''அஹமேவ பசூனுமதிபதி :'' என்று யஜுர் வேதம் (6-2-3-2) கூறுகிறது. ''நானே பசுக்களுக்கு அதிபதி'' என்பது இதன் பொருள். இது சிவனுர்வாக்காக உள்ளது. மேலும் யஜுர் வேதம் (3-1-4-3) ''ஏஷாமீசே பசுபதி: பசூனுஞ்சதுஷ்பதாமுபச த்விபதாம்'' என்று கூறுகிறது. இதன் பொருள் : நான்கு கால்களும் இரண்டு கால்களு முடைய பசுக்களைப்பசுபதியானவர் ஆளுகின்ருர். ''உமாபதயே பசுபதயே நமோநம:'' என்று தைத்திரிய ஆரண்யகம் (10-22-40) கூறுகிறது. இதன் பொருள் : உமாபதியாருக்கு, பசுபதியாருக்கு நமஸ்காரம். திராவிட சுருதியும் சிவ பெருமானைப் ''பசுபதி'' என்று போற்றுதல் காண்க:-

திருச்சிற்றம்பலம்

கதிமலி களிறது பிளிறிட உரிசெய்த
அதிகுண னுயர்பசு

பதியதன் மிசைவரு பசுபதி பலகலை
அவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணனொடு
மிகுதவ முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவனம்
அமர்தரு பரமனே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த மூர்த்திகள், திருமறைக்காடு.

திருச்சிற்றம்பலம்.

எண்ணார்தங்கள் மும்மதிள்வேவ ஏவலங்காட்டிய எந்தை
விண்ணோர்சாரத் தன்னருள்செய்த வித்தகர்வேத முதல்வர்
பண்ணார்பாடல் ஆடல்அருத பசுபதியீசனோர் பாகம்
பெண்ணாண்ஆய வார்சடையண்ணல் பேணுபெருந்துறை
யாரே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த மூர்த்திகள், திருப்பேணு பெருந்துறை.

திருச்சிற்றம்பலம்

ஆகம்பத் தரவணையான் அயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள், திருக்கச்சியேகம்பம்.

திருக்கருவூரானிலை, திரு ஆவூர்ப்பசுபதீச்சரம், திருப்பந்தணைநல்லூர் முதலிய திருத்தலங்களில் இறைவர் பசுபதீச்சுவரர் என்ற திருநாமத்துடனேயே எழுந்தருளியிருத்தலும் கொள்க.

பசுபதி - ஜாபால்யுபநிஷத்தின் விளக்கம்.

இனி, உயிர்களைப் பசுக்கள் எனவும் சிவபிரானைப் பசுபதி எனவும் கூறுதற்குரிய காரணத்தை ஜாபால்யுபநிஷத் பின்வருமாறு விளக்குகிறது.

கதம் ஜீவா: பசவ இதி । ஸ கதம் தத்பதிரிதி ॥
ஸ தமுவாச யதா த்ருணசிநோ விவேக ஹீநா: பர
ப்ரேஷ்யா: க்ருஷ்யாதி கர்மஸு நியுக்தா: ஸகல துக்க
ஸஹா: ஸ்வஸ்வாமி பத்தமாநா கவாதய: பசவ: । யதா
தத்ஸ்வாமிந இவ ஸர்வக்ஞ: ஈச: பசுபதி: । தாநக்ஞாந
பாசேந பத்நாதி । தத் ஞாநான்மோசயதி । தத் ஞானம்
கேநோபாயேந இதி விபூதிதாரணதேவேதி ।''

இதன் பொருள்: ஜீவர்கள் எல்லோரும் பசுக்கள் என்பது எப்படிப் பொருந்தும்? இறைவர் அவர்களுக்குப் பதியாவது எங்ஙனம்? இதற்குப் பதில் கூறுகிருர். புல்லைத் (அல்லது வைக்கோலை) தின்பனவும், அறிவுக்குறைவு உடையனவும், விவசாயத் தொழிலில் உழவு முதலிய வேலைகளில் பிறரால் ஏவப்படுவனவும், துன்பப்படுவனவும் தம்முடைய இயமானர்களால் கட்டப்படுவனவுமாய் உள்ளன பசுக்கள். இங்ஙனமே உயிர்கள் பசுக்களும், ஸர்வக்ஞரும் ஈசருமாகிய சிவபிரான் பசுபதியும் ஆவர். அஞ்ஞானம் என்ற கயிற்ருல் உயிர்களைக் கட்டுகிருர். தனது ஸ்வரூப ஞானத்தால் விடுதலையளிக்கிருர். சிவஞானமாகிய அந்த ஞானத்தை எந்த உபாயத்தால் பெறலாம்? விபூதி தரித்தலினுலேயே அந்த ஞானம் உதிக்கும்'' என்பதாம்.

சிவபிரான் பசுபதியெனப்படுதற்குரிய விளக்கத்தைப் பின்வரும் மஹாபாரத வாக்கியமும் தெரிவிக்கிறது.

ஆத்மாந: பசவ: ப்ரோக்தா: ஸர்வே ஸம்ஸாரவர்த்தின: ।
தேஷாம் பதித்வாத் தேவேச: சிவ: பசுபதி: ஸ்ம்ருத: ॥

"உயிர்கள் எல்லாம் பசுக்கள் என்று கூறப்படுகின்றன. அவை அனைத்தும் ஸம்ஸாரம் என்ற ஜனன மரணச் சூழலில் கட்டுண்டவையாகும். அவைகளுக்குப் பதியாக (தலைவராக) இருப்பதால் தேவேசனாகிய சிவபெருமான் பசுபதி எனப்படு கின்றார்" என்பது இந்த சுலோகத்தின் கருத்தாகும்.

5. சிவபெருமான் யாகாதிபதி.

"மேதபதிம்" என்று இருக்குவேதம் (1-43-47) (சிவ பிரானை) யாகபதி என்று கூறுகிறது. "ஆவோராஜாநமத் வரஸ்ய ருத்ரம்... அவஸே க்ருணுத்வம்" என்ற இருக்குவேதம் (4-3-1) யக்ஞத்துக்கு அரசராக உங்களைக்காக்கும் பொருட்டு உருத்திரரை நாடுக என்றும் கூறுகிறது. மேலும். அதே இருக்குவேதம் (1-72-6) "த்ரிஸ்ஸப்தயத்குஹ்யாநி த்வே... நிஹிதா" அதாவது இருபத்தொரு யக்ஞமும் உம்மிடத்திலே வைக்கப்பட்டுள்ளன என்று கூறிற்று.

இந்த மந்திரத்தை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ ஹரதத்தா சார்ய ஸ்வாமிகள் தமது "சுருதி சூக்தி மாலை" என்னும் அரிய கிரந்தத்தில் 77வது சுலோகத்தில் சிவபிரானே வேள்விக்கரசர் என்று கூறியுள்ளார்கள்.

கவ்யேந ஸோமஹவிஷா சருபிச்ச பக்வைஸ்ஸாத்யான்
த்ரிஸப்தமுனயோ விபஜந்தி யக்ஞான் ।
ஸர்வேஷு தேஷ்வபி பவாநவிசேஷதஸ்த்வாம்
ராஜாநமத்வரவிதௌ வயமாமநாம: ॥

"கவ்வியத்தினாலும் ஸோம அவிசானும் பக்குவசரு வானும் செய்யப்படும் இருபத்தொரு யாகங்களுக்கும் சிவ பிரானே அரசர்" என்பது இந்த சுலோகம் நுதலும் பொருளா கும். (கவ்வியம் - பசுக்களிடமிருந்து பெறப்படும் பொருள் களான பால், தயிர், நெய், ஸோமஹவிஸ் - ஸோமலதை என்னும் கொடியின் சாறு; பக்வசரு - சமைக்கப்பட்ட அன்னம் போன்ற அவிசுக்கள்).

இராமாயணம் உத்தரகாண்டத்து 90-ம் அத்தியாயம்

"நான்யம் பச்யாமி பைஷஜ்யமந்தரா வ்ருஷபத்வஜம் ।
நாச்வமேதாத்பரோயக்ஞ: ப்ரியச்சைவமஹாத்மந: ॥"

என்று கூறுகிறது. இதன் பொருள்: இடபக் கொடியை உடையவராகிய சிவபிரானைத்தவிர ஔஷதமாக வேறு ஒருவரைக் காண்கிலேன். பரமாத்மாவாகிய சிவபிரானுக்குப் பிரீதியான வேள்வி அசுவமேத வேள்வியினும் வேறு ஒன்று இல்லை.

6. "ஆவோராஜாநம்" என்ற வேதமந்திரமும் அதன் பொருளும்

"ஆவோ ராஜாநமத்வரஸ்ய ருத்ரம் ஹோதாரம்
ஸத்யயஜம் ரோதஸ்யோ: ।
அக்நிம் புராதநயித்வோரசித்தாத்திரண்ய
ரூபமவஸே க்ருணுத்வம் ॥"

இந்த மந்திரம் இருக்கு வேதம், யஜுர்வேதம், ஸாம வேதம் ஆகிய மூன்று வேதங்களிலும் உள்ளது. மஹா மஹோபாத்தியாய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள் என்ற பெரியார் தாமியற்றிய ஸாமருத்ரபாஷ்யத்தில் இந்த மந்திரத்தின் பொருளைக் கூறியுள்ளார்கள். இவர்கள் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் வம்சத்தில் ஒன்பதாவது தலைமுறையாகத் தோன்றியவர்கள். இதேவம்சத்தில் பன்னிரண்டாவது தலைமுறையாகத் தோன்றிய வித்யாவாசஸ்பதி மாயூரம் ராமநாத தீக்ஷிதர் என்ற பெரியார் இந்த ஸாமருத்ர பாஷ்யத்தை ஸம்ஸ்க்ருத மூலத்துடனும் தமிழ் உரையுடனும் பிரசுரித்துள்ளார்கள். அதைத்தழுவி இந்த மந்திரத்தின் பொருள் பின்வருமாறு விளக்கப்படுகிறது.

"ஏ, பிள்ளைகளே ! நீங்கள் பரமேச்வரனை நம்மைக் காப்பதற்காக எதிர்முகமாய் இருக்கச் செய்யுங்கள். வியாதி, ஜனன மரணம், வறுமை முதலிய துன்பங்கள் இல்லாமல் சுகமாக

வாழ்வதற்கு பஜனம் செய்யுங்கள். அவர் ருத்திரன். ருத்திரன் என்ருல் துக்கத்தையும் அதன் காரணத்தையும் போக்குபவர் என்றும் பிரளய காலத்தில் எல்லோரையும் அழும்படிச் செய்பவர் என்றும் பொருள். மேலும் வேள்விகளுக்கு அரசர். யாகாதிபதியாகவிருந்து பலனைக் கொடுப்பவர். மேலும் வேள்விகளில் ஹவிர்ப்பாகங்களினுல் பூஜிக்கப்படுபவர். துன்பம் வரும் சமயம் அதை நீக்கக் கூப்பிடத் தகுந்தவர். மேல், கீழ் எனப்படும் இருவகை உலகங்களிலுமுள்ள தேவர் களுக்கும் மனிதர்களுக்கும் அன்னமளிப்பவர். ஸத்யத்தால் அடையத்தகுந்தவர். தன்னை வழிபடுவோர்க்குப் பயனை நிச்சயம் அளிப்பவர். மேலும் கீழும் எங்கும் நிறைந்தவர். தங்கம் போன்ற நிறமுடையவர். அக்கினியைச் சரீரமாகக் கொண்டவர். இவ்விதம் மஹிமை வாய்ந்த பரமேசுவரனை திடீரென்று இடிவிழுவதுபோல ஏற்படும் மரணத்தையடையு முன்பே பூஜை செய்யுங்கள். உடல் நல்ல நிலையில் இருக்கும் பொழுதே ஸுலபமாக ஆராதிக்கத் தகுந்த பரமேசுவரனைப் பூஜை செய்யுங்கள்.''

இந்த மந்திரத்தில் யாகத்திற்கு அரசர் எனப் பரமேசு வரன் கூறப்பட்டுள்ளதைக் காண்க. மேலும் இந்த மந்திரம் உடல் நிலை நன்ருக இருக்கும்பொழுதே சிவபூஜை செய்ய வேண்டும் என்பதற்கும் பிரமாணமாக அமைந்துள்ளது. ஸ்ரீ ஹரதத்த சிவாசாரிய ஸ்வாமிகள் தாமியற்றியருளிய சுருதி ஸூக்தி மாலை என்ற நூலிலும் இந்த மந்திரத்தைச் (சுலோகம்-82) சிவபூஜை செய்ய வேண்டிய அவசியம் பற்றிப் பிரமாண மாகக் கையாண்டுள்ளார்கள்.

7. சிவபிரானே பகவான் என்ற பெயருக்கு உரியவர்

''ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸஸ்ச்ரிய: ।
ஞானவைராக்யயோ:சைவ ஷண்ணும் பகஇதீரிணு ॥''

நிறைந்த ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஞானம், வைராக்கியம் எனப்படும் இவை ஆறும் 'பகம்' எனப்படும்.

இவ்வாறுகுணங்களையு முடையவர் பகவான் எனப்படுவர். சிவபெருமானே 'பகவான்' என்று வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள் கூறுகின்றன. அதர்வசிரோபநிஷத்தில் ''யோவை ருத்ர: ஸ பகவான்'' என்று 33முறை பரமேச்வரனுக்கு பகவான் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அதர்வசிரோபநிஷத்தில் பகவான் என்ற சொல்லுக்குக் கூறப்பட்டுள்ள பொருளாவது:

'ய: ஸர்வான் பாவாநீக்ஷத்யாத்மஞானம் நீரீக்ஷயதி

யோகம் கமயதி ஸ ஏவ தஸ்மாதுச்யதே பகவான்'' என்று

இந்த உபநிஷத் கூறுகிறது. இதன் பொருள் : எவர் எல்லா உலகங்களையும் சாட்சியாய்க் காண்கின்ருரோ, பரமாத்ம ஞானத்தை உயிர்களுக்கு அருள்கின்ருரோ, அதற்கு அங்கமாய் ராஜயோகத்தை உண்டாக்குகின்ருரோ, அவரே அதனுல் பகவான் எனப்படுகின்ருர்.

யஜுர் வேதத்து ஸ்ரீருத்ராத்யாயத்தில் 'ஓம் நமஸ்தே அஸ்து பகவன் விச்வேச்வராய மஹாதேவாய......'' என்று வருதலும் காண்க. கூர்மபுராணத்தில் பின்வருமாறு கூறப் பட்டுள்ளது.

ஹரஸ்ஸர்வஸ்யஹரணுத் விபுத்வாத் விஷ்ணுருச்யதே ।

பகவான் ஸர்வவிஜ்ஞாநாத் அவநாத் ஓமிதி ஸ்ம்ருத: ॥

இதன் பொருள் : அனைத்தையும் அழித்து ஒடுக்குதலால் ஹரன் என்றும், எங்கும் வியாபித்திருப்பதால் விஷ்ணு என்றும், அனைத்தையும் அறியும் முற்றறிவுடைமையால் பகவான் என்றும், காத்தலினுல் ஓம் என்றும் சிவபிரானுக்குப் பெயர்கள் உள்ளன.''

சுவேதாசுவதர உபநிஷத் கூறுவதாவது :

ஸர்வாநந சிரோக்ரீவ: ஸர்வபூதகுஹாசய: ।

ஸர்வ வ்யாபீ ஸ பகவான் தஸ்மாத் ஸர்வகதச்சிவ: ॥

(இதன் பொருள்) எங்கும் முகம் உடையவரும், தலை உடையவரும், கழுத்து உடையவரும், எல்லா உயிர்களின் இதய குஹைகளில் விளங்குபவரும், எங்கும் நிறைந்தவருமாய் உள்ளவர் அந்த பகவான் ஆவர். எனவே சிவபிரானே எங்கும் நிறைந்தவர்.

இறைவர் பகவான் எனப்படுவதற்கேற்ப இறைவியார் பகவதி எனப்படுதல் காண்க. ''பகவத்யுமா'' என்று உருத்திர இருதய உபநிடதங் கூறுகிறது.

8. சிவபிரான் எட்டு குணங்களையுடையவர்

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.''

—திருக்குறள், கடவுள் வாழ்த்து, 9.

''தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் பயன் படுதலுடையவையாக ஆகாதவை போலவே, எண் குணத்தானுடையானது தாள்களை வணங்காத தலைகளும் பயன் படுதலுடையனவாக ஆகா'' என்பது இக்குறளின் பொருளாகும். இத்திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர், ''எண் குணங்களாவன: - தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை, இவ்வாறு சைவ ஆகமத்துக் கூறப்பட்டது.'' என விளக்கினார். இங்ஙனம் எட்டு குணங்கள் சைவாகமத்துக் கூறப்பட்டது என்னும் உரையினால் அவைகளையுடையவன் சிவபிரானே என்பது தேற்றம். இவை ஸர்வஞ்ஞானோத்தராகமத்தில், ''ஸர்வஞ்ஞதை (முற்றறிவுடைமை), திருப்தி (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களினீங்குதல்), ஸ்வதந்த்ரதா (தன்வயமுடைமை) அலுப்த சக்தி: (பேருளுடைமை), அனந்த சக்தி: (முடிவில் ஆற்றலுடைமை), நிராமயான்மா

(இயற்கையுணர்வினனுதல்) விசுத்ததேகம் (தூயவுடம்பின னுதல்)'' என்று கூறப்பட்டுள்ளன.

சாந்தோக்கியோபநிடதம் (8. 1. 5) பின்வருமாறு எட்டு குணங்களைக் கூறுகிறது.

ஏஷ ஆத்மா அபகதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகிப்ஸோ஽பிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்ய ஸங்கல்ப: ।

இதன் பொருள்: இந்தப் பரமாத்மாவானவர் (சிவபிரான்) பாவமிலராய் ஜரையிலராய், மரணமிலராய், சோகமிலராய், பசியிலராய், தாகமிலராய், சத்தியகாமராய் சத்தியசங்கல்ப ராய் உள்ளார் என்பதாம்.

நீலகண்ட சிவாசாரியரது சைவபாஷ்ய சங்கல்பாதி கரணத்தில் (4. 4. 9) பாவமிலாமை (அபகதபாப்மத்வாதி) முதலிய எட்டு குணங்களும் ஸர்வஞ்ஞத்துவம் முதலிய எட்டுக் குணங்களையும் விட மேலானவை என்று நிரூபிக்கப்பட் டுள்ளன.

9. வைணவர் புராணத்தில் சிவநாம மஹிமை

திருமாலின் பெருமைகளைக் கூறும் புராணங்களுள் பாக வதம் என்பதும் ஒன்ருகும். பதினெட்டு மஹா புராணங் களுள் பாகவதம் என்பது இதுவல்லவென்றும் பகவதி எனப் படும் தேவியின் பெருமை கூறும் தேவீபாகவதமே மஹா புராணங்களுள் சேர்ந்ததாகும் என்றும் கூறுவாரும் உளர். வைணவபாகவதம் பொப்பதேவன் என்பவனுல் சுமார் 400 அல்லது 500 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நூல் என்ற ஒரு கருத்தும் நிலவி வருகிறது. அது தொன்மையான மஹா புராணமோ அல்லது பொப்பதேவன் எழுதிய நூதனபுரா ணமோ, யாதாயினும் ஆகுக. அந்த நூலில் சிவநாம மகிமை கூறப்பட்டுள்ளதைக் காட்டுவதே இப்பகுதியின் நோக்கம்.

தக்ஷன் மங்களவடிவினரான சிவபிரானை நிந்தித்து அவரை விலக்கி வேள்வி செய்கின்றபோது அவனைப்பார்த்து தாக்ஷாயணி தேவியார் கூறுவதாக அமைந்த சுலோகம்:-

யத் த்வ்யக்ஷரம் நாம கிரேரிதம் ந்ருணும்
ஸக்ருத் ப்ரஸங்காதக மாசுஹந்தி தத் ।
பவித்ரகீர்த்திம் தமலங்க்ய சாஸனம்
பவாநஹோ த்வேஷ்டி சிவம் சிவேதர: ॥

(இதன்பொருள்) இரண்டு எழுத்துக்களைக் கொண்ட "சிவ" என்னும் நாமத்தினை பிரயத்தனமில்லாமல் ஒருமுறை கூறினுலுங்கூட அப்படிக்கூறுபவனின் பாவத்தை அந்த நாமம் உடனே போக்கடிக்கிறது. பரிசுத்தமான கீர்த்தியை யுடையவரும் எவராலும் மீறமுடியாத கட்டளைகளையிடுபவரு மாகிய மங்கள மூர்த்தியான அந்தப் பரமனை நீ த்வேஷிக் கின்றுய். உனக்கு அமங்களம் வந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது.

இங்ஙனம் சிவநாமத்தின் பெருமை கூறும் வைணவ நூலாகிய பாகவதத்தைப் பிராமணர்கள் பல முறை கேட் கிருர்கள், படிக்கிருர்கள். ஆனுலும்கூட சிவநாம மஹிமை யைத் தெரிந்து கொள்ளாமல் வேறு ஏதோ நாமங்களை யெல்லாம் கோடிக்கணக்கில் எழுதிக் குவிக்கின்ருர்கள். இந்த நிலையை நினைக்கும் போது ஆதிசங்கர பகவத்பாதா சார்யாளின் சிவானந்தலஹரியின் பின்வரும் சுலோகம் நினை வுக்கு வருகின்றது.

"யதாபுத்தி: சுக்தௌ ரஜதமிதி காசாஸ்மநி மணி:
ஜலே பைஷ்டே க்ஷீரம்பவதி ம்ருகத்ருஷ்ணாஸு ஸலிலம் ॥
ததா தேவப்ராந்த்யா பஜதி பவதன்யம் ஜடஜன:
மஹாதேவேசம் த்வாம் மநஸிச நமத்வா பசுபதே ॥

—சிவானந்தலஹரீ, 8.

ஹே மஹாதேவனே! கிளிஞ்சலை வெள்ளியென்றும், கண்ணாடிச் சில்லை வைரமென்றும், மாவு கரைத்த நீரைப் பாலென்றும், கானல் நீரைத் தண்ணீர் என்றும் புத்தியில் (மயக்கத்தினால்) எவ்விதம் தோன்றுகிறதோ அவ்விதமே அறிவற்றமக்கள், உயிர்கட்கெல்லாம் தலைவனே! ஸர்வேச்வரனான உன்னை மனத்தினால் கூட நினைக்காமல் உனக்கு வேறானவர்களை ஈச்வரன் என்று அறிவு மயக்கத்தால் பஜிக்கின்றார்கள்.''

10. சிவபிரானை விடுத்து வேறு எவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம் எனக் கூறும் இருக்கு வேத மந்திரங்கள்

''ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே பூதஸ்ய ஜாத: பதிரேக ஆசீத்। ஸதாதார ப்ருதிவீம் த்யாமுதேமாம் கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥'' —10. 121. 1.

இதன் பொருள் :- இரணியகர்ப்பர் எனப்படும் பிரஜாபதி (பசுபதி) யாகிய சிவபெருமான் முதற்கண்ணே இருந்தார். அனைத்துப் பூதங்களுக்கும் ஒரே பதியாக இருந்தார். அவரே இந்த மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் தாங்குகின்றார். (அங்ஙனமிருக்க இந்தச் சிவபிரானை விடுத்து) வேறு எந்த தேவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம்?

''ய ஆத்மதா பலதா யஸ்ய விச்வ உபாஸதே
ப்ரசிஷம் யஸ்ய தேவா: । யஸ்யசாயாம்ருதம்
யஸ்ய ம்ருத்யு! கஸ்மை தேவாய ஹவிஷாவிதேம ॥ —10-121-2.

இதன் பொருள்:- எவர் ஆன்மாக்களுக்குப் பிதாவாயுள்ளாரோ, எவர் பலத்தையளிப்பவராக உள்ளரோ, எவருடைய உத்க்ருஷ்டமான ஆக்ஞாசக்தியை எல்லா உலகங்களும் உபாசிக்கின்றனவோ, தேவர்களும் எவருடைய ஆக்ஞையைப் பிரார்த்திக்கின்றார்களோ, எவருக்கு அம்ருதத்துவமும்

ம்ருத்யுவும் நிழல் போலப் பின்வருவனவோ (அப்படிப்பட்ட சிவபிரானை விடுத்து) வேறு எவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம்?

"ய: ப்ராணதோ நிமிஷதோ மஹித்வைக இத்ராஜா ஜகதோ பபூவ । ய ஈசே அஸ்ய த்விபதச்சதுஷ்பத: கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥" —10. 121. 3.

இதன் பொருள்:-எவர் விழிப்பனவும் உறங்குவனவுமாகிய பிரபஞ்சமனைத்துக்கும் தம்முடைய மஹிமையினால் அரசரா யினரோ, எவர் இருகாலும் நான்கு காலுமுடைய பசுக்களை ஆளுகின்றவராயுள்ளாரோ (அப்படிபட்ட சிவபிரானை விடுத்து) வேறு எவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடு வோம் ?

"யஸ்யே மே ஹிமவந்தோ மஹித்வா யஸ்ய ஸமுத்ரம் ரஸயா ஸஹாஹு: । யஸ்யேமா: ப்ரதிசோ யஸ்ய பாஹு கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥" —10. 121. 4.

இதன் பொருள்:—இந்த மலைகளெல்லாம் எவருடைய ஐச்வர்யம் என்று கூறுகிறார்களோ, நதிகளோடு கூடிய சமுத்திரமனைத்தும் எவருடையது என்று கூறுகின்றார்களோ திசையனைத்தும் எவருடைய கரங்கள் என்றும் கூறுகின்றார் களோ (அந்தப் பசுபதியாகிய சிவபிரானை விடுத்து) வேறு எந்தத் தேவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம் ?

"யேந த்யௌருக்ரா ப்ருதிவீச த்ருள்ஹா யேந ஸ்வ: ஸ்தபி-தம் யேந நாக: । யோ அந்தரிக்ஷே ரஜஸோ விமாந: கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥" —10. 121. 5.

எந்தப் பசுபதியினால் விண்ணுலகமானது இறுகி யுள்ளதோ மண்ணுலகமானது எவரால் திடமாக்கப்பட்டதோ எவரால் சுவர்க்கம் கீழேவிழாது ஸ்தம்பமாய் நிறுத்தப்

பட்டுள்ளதோ, எவரால் அந்தரிக்ஷம் ஸ்தம்பிக்கப்பட்டதோ, எவர் அந்தரிக்ஷத்திலுள்ள உலகத்தின்அளவை அறிந்தவரோ (அந்தப் பசுபதியை விடுத்து) எந்ததேவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம் ?

"ய: சிதாபோமஹிநா பர்யபச்யத் தக்ஷம் ததாநா ஜநயந்தீர்-யக்ஞம் । யோ தேவேஷ்வதி தேவ ஏக ஆஸீத் கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥" —10. 121. 8.

எவர் வலிமையைத் தாங்கினவராய் யக்ஞத்தைப் பிறப்பிப்பனவாயுள்ள அப்புக்களைக் கண்டாரோ, எவர் தேவர்களுக்குள்ளே மஹாதேவராக உள்ளாரோ (அப்படிபட்ட மஹா தேவரை விடுத்து) எந்தத் தேவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம்.

"மா நோ ஹிம்ஸீஜ்ஜநிதா ய: ப்ருதிவ்யா யோவா திவம் ஸத்யதர்மா ஜஜாந । ய: சாபச்சந்த்ரா ப்ருஹதீர் ஜஜாந கஸ்மை தேவாய ஹவிஷா விதேம ॥" —10. 121. 9.

எவர் ப்ருதிவிக்குத் தாதாவாய் உள்ளாரோ, எவர் ஸத்திய தருமராக இருக்கின்ருரோ, எவர் அந்தரிக்ஷலோகங்களை உண்டாக்கிஞரோ, எவர் அப்புக்களையும் பெரிய சந்திரனையும் உண்டாக்கிஞரோ எவர்நம்மை ஹிம்ஸிக்க மாட்டாரோ (அப்படிப்பட்ட சிவபிரானை விடுத்து) எந்த தேவர் பொருட்டு ஹவிஸ் கொண்டு வழிபடுவோம்.

இங்குப் பின்வரும் சுவேதாசுவதர உபநிஷத் மந்திரமும் (4. 13) கருதற்குரியது.

"யோ தேவஞமதிபோ யஸ்மின் லோகா அதிச்ரிதா: ।
ய ஈசேஸ்ய த்விபத: சதுஷ்பத: கஸ்மை தேவாயஹவிஷா
விதேம ॥"

இதன் பொருள்: எவர் (சிவபிரான்) தேவர்களுக்கு அதிபராயும் பிரபஞ்சமனைத்தும் தம்மிற்பற்றியிருக்கப் பெற்றவரா

யும், இருகால் நாற்கால் பசுக்களை ஆளுகின்றவராயும் உள்ளாரோ (அவரை விடுத்து) எவரை ஹவிஸ் கொண்டு வழிபடுவோம் ?

11. திருக்குற்ருலத் தலபுராணத்திலிருந்து சில தக்ஷயாகச் செய்திகள்.

மஹாகவி மேலகரம் திரிகூடராசப்ப கவிராயர் என்பவரால் இயற்றப்பட்ட திருக்குற்ருலத் தலபுராணத்தில் தக்கன் வேள்விச் சருக்கம், தக்கன் வேள்வி அழிந்த சருக்கம் என்ற இரண்டு சருக்கங்களில் தக்ஷயாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் கூறப்பட்ட செய்திகள் பெருபாலும் கந்தபுராணத்துத் தக்ஷகாண்டத்தை யொட்டியும், சிறுபான்மை மாறுபட்டுமுள்ளன. "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்து பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல்" என்னும் இலக்கணப்படி இந்த மாறுபாடு உள்ளது போலும் எனக்கருத வேண்டியுள்ளது. இப்புராணத்திலிருந்து இரண்டு இடங்களை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1. தக்கன் வேள்விச் சருக்கம்

தன்னைப் புறக்கணித்த தட்சனை நோக்கித் தேவியார் கூறியவை

கண்ணனை மலரு ளானைக் கற்பக வனத்துளானை
விண்ணவர் பிறரை வானில் வெண்மதிக் கடவுளாதி
எண்ணரு மருகர் தம்மை யாகத்தில் வரித்தாய் முக்கண்
அண்ணலெம் பரனை யெந்தா யயர்த்தனை போலு மென்ருள்.

—பாடல் 120.

"மாயோன், பிரமதேவன், இந்திரன், தேவர்கள், சந்திரன் மற்றும் நின் மருகர்கள் ஆகியோரை இவ்வேள்வியில் அழைத்து வருவித்துள்ளாய். முக்கண் உடைய சிவபிரானை மறந்தனையோ" என்று அம்மையார் வினவினர்.

அலைகட லமுதப் பாய லண்ணலு மமுத முண்ணும்
புலவரும் புலவர் கோனும் புலவருக் கமுத நல்கும்
கலைநிலா வொளிருந் திங்கட் கடவுளும் வளர் பொற்சாலை
நலமிலா விடத்தை யுண்டான் நண்ணுதற் குரித்தோவென்றான்.

—பாடல் 121.

அம்மையார் வினவுக்குத் தட்சன் கூறிய பதில்: "அமுதக் கடலையே படுக்கையாகவுடைய திருமாலும், அமுதம் உண்ணும் தேவர்களும், அவர்கள் தலைவனாகிய இந்திரனும், அமுதக் கலையுடைய சந்திரனும் கூடியுள்ள இவ்வேள்விச் சாலையில் நன்மையில்லாத விஷத்தினையுண்டவன் வருதற்குத் தகுதியுண்டோ?"

ஆரணன் வெருவி யோட அமரர்க ளோட வோடா
நாரணன் வெளிய மேனி கரியதாய் நடுங்கி யேங்கிப்
பூரண முறையோ வென்னப் புகறலும் விடத்தை யெங்கோன்
பாரணஞ் செயலா லன்றோ பருகின ரமுதம் என்றாள்.

—பாடல் 122.

தட்சன் வார்த்தைகளைக் கேட்டுத் தாட்சாயணியார் கூறியருளினார்: "பிரமதேவன் அஞ்சிஓட, மற்றைய தேவர்களும் ஓட, திருமால் ஓடாது எதிர்த்து நின்று தனது உடல் கறுத்துத் துன்பமடைந்து சிவபிரானிடம் சென்று முறையிடலும், அப்பெருமான் அந்தக் கொடிய விஷத்தை உண்டமையாலன்றோ மற்றவர் அமுதம் உண்டனர்."

மன்றிடை நிருத்தஞ் செய்து மனைதொறும் பலியேற் றுண்டு
குன்றுறை குலமி லானைக் கூட்டலன் வேள்விக் கென்றான்
உன்றனி மகவை யன்னாற் குதவினை குலமென் சொல்வாய்
என்றனள் அதனால் நீவிர் இருவருந் தவிர்க வென்றான்

—பாடல் 123.

“பலர் காணும் மன்றில் கூத்தாடி வீடுகள் தோறும் பிச்சையெடுத்துண்டு மலையில் வாழும் குலமில்லாதவனை வேள்விக்கு நான் அழையேன்” என்று தட்சன் கூறத் தேவியார், “உனது மகளைத் திருமணஞ் செய்து கொடுத்த பிறகு குலம் பேசுகிறாயே” என்று விடை கூறத் தட்சன் “அதனால் நீங்கள் இருவருமே வேள்விக்கு வருதல் வேண்டாம்” என்று கூறினான்.

இங்ஙனம் தட்சன் சிவபிரானை இகழ்ந்தமையால் தேவியார் தந்தை மீது வைத்திருந்த அன்பை மறந்தனர். மங்கையர்க்கு எந்நாளும் கணவனே தாயுந் தந்தையும் மற்ற உறவுமாவதன்றி உறவாவார் பிறருமுளரோ ? எனவே தட்சனைப் பார்த்துத் தேவியார் மேலுங்கூறலானார்.

மந்திர மறைகள் பாய்மா மகத்திலெண் டிசைகள் காக்கும்
இந்திரன் முதலோர் தூசர் இமையவர் முனிவர் தொண்டர்
சந்திரன் கதிரோன் அங்கி தம்பிரான் விழிதேர் பூமி
அந்தர மனைத்து மேனி அவனலா துலக முண்டோ.

—பாடல் 125.

சிவபிரானுக்கு மந்திரங்களாகிய வேதங்கள் பாய்ந்து செல்லும் குதிரைகள். வேள்வியில் எட்டுத்திக்குப் பாலகர்களான இந்திரன் முதலியோர் அவரது படையின் முன்னே செல்லும் பகுதியைச் சேர்ந்தவர்கள். தேவர்களும் முனிவரும் அவரது தொண்டர்கள். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றும் அவரது திருவிழிகள். இந்தப் பூமியே அவரது இரதமாகும். ஆகாயமே அவரது திருமேனி. ஆதலால் அப்பெருமானைத் தவிர வேறு உலகமென்பதும் ஒன்று உளதோ ?

சீர்மக முனக்கே தீண்டுச் செயுமிட மேது நீதான்
யார்மகன் தந்தை தாயர் யாவரென் றுணராய் போலும்

போர்மழ விடையார்க் கன்பு புரிந்தமெய்த் தவத்தா லன்றோ
தார்மக பதியே யாதி தலைவர்க்குந் தலைமை பூண்டாய்.

—பாடல் 126.

சிறப்புள்ள வேள்வியைச் செய்யும் திறல் உனக்கு எப்படி வந்தது? செய்யுமிடம் ஏது? நீ யார் மகன்? உன் தந்தை தாயார் யாவர் என்று நீ உணரவில்லை (சிவபிரானும் தேவியுமே யாவர்க்கும் தந்தை தாயார் ஆவர் என்பது குறிப்பு). சிவபிரானுக்கு அன்புடன் வழிபாடு செய்த அந்த உண்மையான தவத்தினாலன்றோ இந்திரன் முதலிய தேவர்களுக்கும் தலைவனாக நீ ஆயினை?

சிட்டரைப் பரிக்கும் தேவ தேவைநீ யிகழ்த லாலே
துட்டநிக் கிரகஞ் செய்யத் தோன்றலார் தோன்று நிற்பர்
இட்டமா முனிவர் சொல்லும் எம்மனோர் மொழியுங் கேளாய்
மட்டறு செல்வ மந்தோ மதத்தினா லழிக்கின் றாயால்.

—பாடல் 128.

நல்லவர்களைக் காக்கும் தேவதேவனை நீ இகழ்வதனால் தீயோரை ஒழிக்க அப்பெருமான் தோன்றுவார். ததீசி முனிவர் சொற்களையும். எம்போன்றார் நன்மொழிகளையும் நீ கேட்கவில்லை. அளவற்ற செல்வங்களை உன் செருக்கால் இழக்கின்றாய்.

யாவரே மழுவலானை இகழ்வரே லுடனே யந்தப்
பாவரை யடுதல் வேண்டும் படாதெனிற் பழிமேல் வைத்து
வீவதே வேண்டு மாவி வீந்திடா ரவ்வூர் விட்டுப்
போவதே வேண்டும் வேண்டார் பொருந்துவர் சிவத்து ரோகம்.

—பாடல் 129.

எவராவது சிவபிரானை நிந்தனை செய்வாராயின் அவரை அழிக்கவேண்டும். அது இயலாதாயின் அந்தப்பழியின் நிமித்தம் தான் உயிரை விடவேண்டும். உயிரை விடாதார் அவ்வூரைவிட்டு நீங்குதல் வேண்டும். அதுவும் செய்யாதார் சிவத்துரோகம் பொருந்துவர்.

இவ்வாறு தேவியார்கூறி தோழியர்களோடு கயிலைவந்து சேர்ந்து இறைவர் முன் வெட்கத்துடன் நின்றார் என்று கூறப் பட்டுள்ளது.

2. தக்கன் வேள்வி அழிந்த சருக்கம்

தட்சனின் தலையை வெட்டும்போது வீரபத்திரர் கூறியவை.

எத்திசையிலும் யாகத்தில் கலந்து கொண்ட அனைவரை யும் உரியபடி தண்டித்துப் பின்னர் யாககுண்டத்தின் எதிரில் இருந்த தட்சனைக் குடுமியைபிடித்து வாளையும் எடுத்தனர்.

மக்க டாரமு முலைகண்மூக் கிழந்தமை மதியாய்
திக்க டாமல்விட் டோடிய தேவரைத் திருப்பாய்
மிக்க டாவினை விடிந்ததோ முடிந்ததோ வேள்வி
அக்க டாவுனக் கெளியனோ மழுப்படை யமலன்.

—பாடல், 81.

"தட்சனே ! உன்மக்கள் மனைவியர் மூக்கும் கொங்கை களும் இழந்தமையைக் கருதாய்; உன்னை விட்டுத் திசைகள் தோறும் ஓடிய தேவர்களை உன்பக்கம் திரும்பிவரச் செய்யாய்; மிக்குப் பொருந்தாத செயல் பயன் தந்ததோ ? உன்வேள்வி முடிந்ததோ ? மழுவேந்திய சிவபிரான் உனக்கு அவ்வளவு எளியராகி விட்டாரோ ?

சிற்பரா பரைமகளாச் சிவபெருமான் மருகாக
முற்பராய் தவம்புரிந்த முறைமையா லுலகாண்டாய்

தற்பரா பரனை மறுத் திகழ்ந்துதனித் தாய்பாவி
அற்பரா னவர்முடிமேற் றங்குமோ அபிடேகம்.

உன்னையீன் றெடுத்தவனே உயர்மவுலி தேடவவன்
தன்னையீன் றெடுத்தவனே தாட்கமலந் தேடநின்ற
என்னையீன் றெடுத்தபிரான் தன்னைமதத் தாலிகழ்ந்து
சொன்னவாய் சிரத்திெனுடுந் துணிக்கின்றே
னெனத்துணித்தான்.

பா. 82, 83.

ஞானமே வடிவான தேவியார் உனக்கு மகளாகவும் சிவபிரான் மருகனுகவும் முன்னர் செய்த தவத்தின் பயனுல் உலகத்தை அரசுபுரிந்தாய். பராபரனுகிய சிவபெருமானை மறுத்து நிந்தனைசெய்து இப்பொழுது தனியனுக ஆனுய். பாவியான தட்சனே! அரசமுடி அற்பர்கள் தலையின் மேல் நிலைத்திருக்குமோ? உன்னைப்பெற்ற பிரமன் திருமுடியைத் தேடவும், அவனைப்பெற்ற திருமால் திருவடியைத்தேடவும் சோதிப்பிழம்பாய் நின்ற எந்தையை உனது அஹங்காரத் தால் இகழ்ந்து பேசிய உனது வாயைத் தலையொடுந் துணிக்கின்றேன்" எனக்கூறியபடியே அவனது தலையை வீரபத்திரர் வெட்டினுர்.

12. தக்கயாகப்பரணியிலிருந்து சில செய்திகள்

ஸர்வக்ஞகவி, கவிராக்ஷஸர், கவிச்சக்கரவர்த்தி, காளக்கவி ஆகிய விருதுகளைப் பெற்று புகழுடன் வாழ்ந்த புலவர் பேரரசர், பரமசிவபக்தர் ஒட்டக்கூத்தர் இயற்றியருளிய தக்கயாகப்பரணி என்னும் அரியநூலில் காளிக்குக் கூளி கூறியது என்ற பகுதியில் தட்சன் வேள்வி ஆரம்பத்திலிருந்து அதன் நாசம் வரை கூறப்பட்டுள்ளது. வேள்வி ஆரம்பிக்கும் முன் உள்ள தட்சனது வரலாறு அதில் இல்லை. இந்திரன், பிரமன், திருமால் ஆகியோர்கள் வீரபத்திரருடன் போர்

செய்து தோல்வியுற்று இறந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. திருமால் மூன்று முறை தனது தலையை இழந்தனன் என்றும் கூறப்பட்டுள்ளது.

புக்கா வுதிகள் பலவேற்றும் போரில்
ஏற்றுஞ் சிரமொருவர்
முக்கா லிழந்த கதைபாட மூரிக்
கபாடந் திறமினோ.

—கடைதிறப்பு, 37ம் தாழிசை

இதற்கு உரையாசிரியரின் நயமிக்க உரையாவது: "தக்கனது யக்கியத்தில் அக்கினிகோத்திர ஔபாசன யக்கியாகுதியை உண்கைக்கு யக்கியமூர்த்தியாய்ப் புகுந்தும், சகத்திரதாரையாய அவிர்ப்பாக அவிசை ஏற்றுக்கொண்டருளியும், ஈச்வரனெதிரே நின்று பொருதும் ஒருவரெனப்பட்ட விட்டுணுதேவர் தமது தலையை மூன்றுவிசை இழந்தருளிய புராணகதையைப்பாடப் பெரிய கதவுகளைத் திறமின். ஒருவர் ஒரு தலையை முக்காலிழந்தது விசேடமென உணர்க" (பதிப்பாசிரியர் குறிப்பு: திருமால் மேற்கண்டவாறு மூன்று குற்றங்கள் புரிந்தமையால் மும்முறை தலையிழத்தலாகிய தண்டனையைப் பெற்றார் என்பது இதன் கருத்து. ஒவ்வொரு முறையும் தலை இழந்து இறந்தபோது மீட்டும் வீரபத்திரர் உயிர் பெற்றெழச் செய்தார் என்பது பின்வரும் 511வது தாழிசையால் விளங்குகிறது).

வீரபத்திரர் இறந்தவர்களை உயிர்ப்பித்து மீட்டும் பொரச்செய்தல்

விழுந்த நார ணாதிகட்கு மீளவாழு நாள்கொடுத்து
எழுந்து போர் தொடங்குகென்று குன்றவில்லி யேவவே.

(உரையாசிரியர் உரை) "இதற்கு முன்பு விஷ்ணுக்களும் அவர் முதலான தேவர்களும் பூத பசாச யூதபதிகளால்

விழுந்து பட்டுப் போக, வீரபத்திரரான கணநாதர் விஷ்ணு முதலான தேவர்கள் எல்லோர்க்கும் வாழ்நாள் கொடுத்து இன்னும் யுத்தம் செய்யுமென்றருளிச் செய்து என்றவாறு.

இதன் கருத்து: *உயிர்பெய்து கூத்தாட்டுக் காண்டல். என்னைப் போன்றவர்களும் விஷ்ணுவாதிகளும் ஒப்பர் பூத கணநாதர்க்கெனவறிக; மத்தியான்ன ஆதித்தியன் எல்லாப் பிராணிகட்கும் ஒக்க நிற்குமாப் போல".

தன்னைப் புறக்கணித்த தட்சனை நோக்கித் தேவியார் கூறுவனவாக இந்த நூலில் உள்ளவை:

பின்னோர் பெருங்கண் பெறேஎன்
என்னோ இவன்பட்ட தின்றே. (தாழிசை - 295)

(உரை) என் தங்கைமார் இவனாற் பெற்ற அனுக்கிரகம் பெறேன். இவன் என்பட்டானோவெனத் தன் பிதாவைப் பரமேசுவரி நினைத்தனள். (கண் என்றது கண்ணோட்டத்தை) இவ்வாறு நினைத்துப் பின் வருமாறு கூறலானார்.

இழைப்பாய் இழைப்பாய் யினியாகம்
பிழைப்பாய் பிழைப்பாய் பிதாவே.

யாயுங் கொடியேற் கிரங்காய்
நீயுங் கெடவோ நினைப்பே.

எங்கை மீரே னென்கிலீர்
நங்கைமீ ரீதோ நலனே.

---

*இந்த அரிய வாக்கியம் "ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதாரே........." எனத் தொடங்கும் அப்பரடிகளின் தேவாரத்தை நினைவூட்டி இன்புறுத்துகின்றது என்று தக்கயாகப் பரணியைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

எம்படைப்புத் தானும் யாயுங்
கும்பிடப் போலுங் குறிப்பே.

தந்தையார் தாயார் தலைவருக்(கு)
எந்தையார் யாயா ரெமக்கே.

எனக்கு மெவற்கு மிறைவன்
தனக்கு மெவனோ தவறே.

இரையாசை யால்வந்த யஞ்ஞா
உரையா யுறுமோ நின் னூணே.

வான்வந்த மண்வந்த வேள்விக்(கு)
யான்வந்த வெளிவந்த வாறே.

தீக்குப் பிறந்தவில் லென்னும்
வேய்க்குச் சிறப்பென்கொல் வேறே. (தா. 296 - 304)

(இவற்றின் பொருள்) பிதாவே! இனி நீ யாகமும் செய்வாய், செய்து பிழைக்கவும் பிழைப்பாய். (இதன் கருத்து உனது யாகம் நிறைவுருது; நீயும் பிழைக்க மாட்டாய் என்பதாம்). தாயே, நீயும் என்னிடத்திலிரக்கங்காட்டாய். உனக்கும் அழிந்து போக வேண்டுமென்னும் எண்ணம் உண்டாகியதோ? (இதன் கருத்து: பெண்கள் தாய் மாராலே சினேகிக்கப்படுதல் நிச்சயமாயிருக்க இங்குத் தட்சனின் மனைவியும் தேவியிடம் (தட்சனுக்கஞ்சிப்) பாராமுக மாயிருத்தலைக் கண்டு இங்ஙனம் கூறினதாம்). என்னுடன் பிறந்த எனக்கு இளைய தங்கையீர் (என்னைப் புறக்கணிப்பது) உமக்கு நலம் இதுவோ? (இது தங்கையரை நோக்கிக் கூறியதாம்.)

எனக்குப் பிதாவான தட்சனும் எனக்குத் தாயான தட்சன் மனைவி வேதவல்லியும் எங்களுடைய படைப்பாயிருக்க நான் அவர்களைக் கும்பிட வேண்டுமோ? இறைவனுக்குத் தந்தை யார்? தாய் யார்? எனக்கும் தந்தை தாயார் யாவர்?

(ஈசுவரனல்லாத எல்லோரும் தகப்பனும் தாயுமுடையவர், நாம கோத்திரங்களையும் உடையவர். ஆனால் இறைவரோ ''தந்தையிலி தாயிலி'' என்பது இதன் கருத்து). எனக்கும் மற்றுமெவற்கும் இறைவனுக்குக் குற்றம்தான் யாதோ ? (இறைவர் பால் யாதும் குற்றமில்லை என்பது கருத்து) அவிஸ்ஸாகிய உணவினுசையால் வந்த அக்கினியே உனது உணவு நிலை பெறுமோ? (இது தீக்கடவுளை நோக்கிக் கூறியது) தேவர்களும் பூமியும் ஒக்கவந்த வேள்விக்கு யான் வர எளிவரவும் உடன் வந்தது என்னே! இப்படி இந்த யாகத்துக்கு யானும் நெருப்பு. வேய் இதற்கு உவமை. அவ் வேய்கள் (மூங்கில்கள்) தாமே தம்மில் தேய்த்துத் தீயை எழுப்புகையால் என்க.

இவ்வாறு உரைத்துத் தேவியார் சினத்துடன் திருக் கயிலை சென்றடைந்தார்.

இறந்த தேவர்கள் பேய்களாதல்

இந்தப் பரணி நூலில் களங்காட்டல் என்னும் பகுதியில் இறைவர் இறைவியோடு வேள்விச் சாலைக்கு எழுந்தருளி, பிரமன் முதலான தேவர்கள் இறந்து பேய்களாக ஆயின வற்றைத் தேவியாருக்குக் காட்டியருளினர் என்று கூறப்பட்டுள்ளது. அப்பகுதியிலிருந்து சிலதாழிசைகளைக் காண்போம்

1. நெடு நிலமளந்து கொள்ள வளர்ந்துதாணீட்டு நாளில்
இடுநிழல் போல நின்ற இப்பெரும் பேயைப் பாராய்.

2. பொன்முக மொன்று பண்டு போனது புகுத பொன்றித்
தன்முக மைந்தும் பெற்ற சதுமுகப் பேயைப் பாராய்.

3. அங்குநின் றேவல் செய்யு மமரரே யலகை யாக
இங்குநின் றரசு செய்யு மிந்திரப் பேயைப் பாராய்.

4. விடுபுகை யுயிரா தேங்கி வெங்கன லுயிர்ப்ப வென்றும்
படுபுகை வடிவங் கொண்ட பாவகப் பேயைப் பாராய்.

5. விசும்பினு நிலத்து முள்ள உயிர்பண்டு விழுங்கி யின்று
பசுந்தசை மிசையா நின்ற தென்றிசைப் பேயைப் பாராய்.

6. அணங்குநீ வணங்காயாக அன்றிகழ்ந் ததற்குத்தானே
வணங்கியே நன்று நிற்கு மாமடிப் பேயைப் பாராய்.

இவை முறையே திருமால், பிரமன், இந்திரன், அக்கினி, இயமன், தட்சன் ஆகியோர்களைக் குறித்தன. இடமின்மை கருதி மற்ற தேவர்கள் பேய்களான தாழிசைகள் விடப்பட்டன.

தட்சன் மோத்தைத் (ஆட்டின்) தலையைப் பெறுதல்

மிக்கன பேசித் தம்மை வேள்வியி லிகழ்ச்சி செய்த
தக்கனை முதிய மோத்தைத் தலைபெற வருளிச் செய்தே.

தேவர்கள் உயிர்பெற்று வாழ்த்திச் செல்லல்

ஒழிந்தவா னவர்கட் கெல்லாம் உயிருந்தம் முடம்பு நல்கி
அழிந்தவா னுலகுந் தங்கள் பதங்களு மளிப்பக் கொண்டே.

குலங்கொண்ட அமர ரெல்லாங் குனிசிலை வீரன் தன்னை
வலங் கொண்டு விடையுங் கொண்டு போயினர் வாழ்த்தி
வாழ்த்தி.

கவிச்சக்கரவர்த்திகளான ஒட்டக்கூத்தரருளிய தக்கயாகப்பரணி யென்னும் இந்நூலை சைவமெய்யன்பர்கள் முயன்று பெற்றுப் படித்து அதன் இலக்கியச் சுவையையும் சிவபக்திச் சுவையையும் ஒருங்கே நுகர்வார்களாக.

13. வேதத்தில் தக்ஷயக்ஞ பங்கம்

"பூஷா ப்ராச்ய ததோருணத் தஸ்மாத் பூஷா ப்ரபிஷ்டபாகோந்தகோஹிதம் தேவா அப்ருவந் । தேவா வை யஜ்ஞாத் ருத்ரமந்தராயந்த்ஸயஜ்ஞமவித்யத் ।। அவர்கள் பூஷன் உண்ணுமாறு அதனைக் (அவிர்பாகத்தை) கொடுத்தார்கள் (வீரபத்திர

வடிவாய் வந்த) உருத்திரர் அவன் பற்களை உடைத்தார். (தக்ஷன் முதலிய) தேவர்கள் சிவபிரானை யஞ்ஞத்தினின்றும் விலக்க (வீரபத்திர வடிவங் கொண்ட) சிவபிரான் (தக்ஷனுடைய) யாகத்தை அழித்தார்'' என்று யஜுர்வேத தைத்திரிய ஸம்ஹிதையும்,

''தத்பகாய தக்ஷிணதஃ ஆஸீனய பர்யா ஜஹ்ருஃ। தத்பகோ வீக்ஷாஞ்சக்ரே தஸ்யாக்ஷிணீ நிர்ததாஹ ॥'' வலப்பக்கத்தில் இருக்கும் பகனுக்கு அதனைக் கொடுத்தார்கள். அவன் அதனைப் பார்த்தான். அவர் (வீரபத்திரர்) அவன் கண்களைத் தகித்தார்'' என்று சதபதப்பிராஹ்மணமும் கூறுகின்றன.

திராவிட சுருதியிலும் தக்ஷயஞ்ஞபங்கம் பற்றிய செய்திகள் கூறும் சில திருப்பாடல்களைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

சுருதியான் தலையும் நாமகள் மூக்குஞ்
சுடரவன் கரமும் முன்னியங்கு
பரிதியான் பல்லும் இறுத்தவர்க் கருளும்
பரமனர் பயின்றினி திருக்கை
விருதினன் மறையும் அங்கமோருறும்
வேள்வியும் வேட்டவர் ஞானங்
கருதினர் உலகில் கருத்துடை யார்சேர்
கழுமல நகரென லாமே.

(திருஞானசம்பந்தர், திருக்கழுமலம்)

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரன்எச்சன் அருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்

கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குலைகொள்சோலே
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

(திருஞானசம்பந்தர், திருமுதுகுன்றம்)

உயர்தவ மிக்கதக்கன் உயர்வேள்வி தன்னில்
அவியுண்ண வந்தஇமையோர்
பயமுறு மெச்சனங்கி மதியோனு முற்ற
படிகண்டு நின்றுபயமாய்
அயனொடு மாலுமெங்கள் அறியாமை ஆதி
கமியென்று இறைஞ்சியகலச்
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ணன் எந்தை
கழல்கண்டு கொள்கைகடனே.

(திருநாவுக்கரசர், தசபுராணம்)

எச்சன்நிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார்
இரவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார்
மெச்சன் வியாத்திரன் தலையும் வேருக்கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்வி காத்து
உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை உதைத்தார்
உணர்விலாத் தக்கன்தன் வேள்வி யெல்லாம்
அச்சமெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார்
அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே.

(திருநாவுக்கரசர் தனித்திருத்தாண்டகம்)

பெற்றிமைஒன் றறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரந்தோள்பல் கரங்கண்பீடழியச்
செற்றுமதித் கலைசிதையத் திருவிரலால் தேய்வித்
தருள்பெருகு சிவபெருமான் சேர்தரும்ஊர் வினவில்

தெற்றுகொடி முல்லையொடு மல்லிகைசெண் பகமுந்
திரைபொருது வருபுனல்சேர் அரிசிலின்தென் கரைமேல்
கற்றினம்நன் கரும்பின்முளை கறிகற்கக் கறவை
கமழ்கழுநீர் கவர்கழனிக் கலயநல்லூர் காணே.

—(சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கலயநல்லூர்.)

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீ பற
உருத்திர நாதனுக் குந்தீபற.

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் றாதையென் றுந்தீபற.

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற.

புரந்தர னார்ஒரு பூங்குயி லாகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற.

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற.

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற.

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகம் நெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற.

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற.

சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

தக்கனு ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற.

(—மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்,
திருவுந்தியா,ர் பாடல் 5-16)

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி
அருள்கொடுத்தங்(கு)
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ.

—(திருவாசகம், திருச்சாழல், பா. 5)

அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலை வன்னிநல் லிந்திரன்

சிரம்முகம் நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே.

—(திருமூலர் திருமந்திரம்).

திக்கமர் தேவருந் திருந்தாச் செய்கை
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை

—(நக்கீரர், பெருந்தேவபாணி, அடிகள் 54-55)

திருச்சிற்றம்பலம்.

14. இருவர் தேடிய ஒருவர்

பிரமதேவனும் திருமாலும் இறைவரது திருமுடியையும் திருவடியையும் தேடிக்காணாது இளைத்த வரலாறு நூலில் 184-196 பக்கங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இச்செய்தியைக்கூறும் திருமுறைப்பாடல்கள் அனைத்தையும் தொகுத்துத் தருவதானால் அத்தொகுப்பே ஒரு தனி நூலாகிவிடும். எனவே ஒரு சில மேற்கோள்களே இங்குக் கொடுக்கின்றோம்.

தெய்வப்புலவர் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தில், திருஞானசம்பந்தர் புராணத்தில், அப்பெருமான் அம்மையாரளித்த ஞானப்பாலுண்டதும், அப்பாலூட்டியவர் யாரெனத் தந்தையார் கேட்ட வினவுக்கு விடையாகப் பாடியருளிய திருப்பதிக அமைப்பு விளக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்பதாந் திருப்பாடல் அமைப்பு பற்றிய விளக்கத்தைக் கூறும் பாடல் பின்வருமாறு:—

திருச்சிற்றம்பலம்.

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்.

திருச்சிற்றம்பலம்.

(பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், 78)

(இதன் பொருள்) "பக்தியுடன் பணிந்து தம்மைத் தொழுபவர்களுக்கே சிவபிரான் அருள் செய்வார் என்று அறிந்து அப்பெருமானைத் தொழாதவர்களாகிக் குற்றமுள்ள மனத்தினால் மயக்கமடைந்த திருமாலும் நான்முகனும் இழிவான பன்றியாயும், அன்னப்பறவையாயும் வடிவெடுத்துக் கீழும் மேலும் தேடியும் (அவரது திருவடியையும் முடியையும்) அடையாது சோர்ந்து விழுவார்களாகிப் பின்னர் திருவைந்தெழுத்தைத் துதித்து உய்தியடைந்த விவரத்தை (ஒன்பதாம் திருப்பாட்டில்) திருஞானசம்பந்தப் பிள்ளையார் விரித்துப் பாடியருளினர்" என்பதாம். திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் (ஒரு சில பதிகங்களில் தவிர) ஒன்பதாம் திருப்பாடல் இச்செய்தி பற்றியதேயாகும். பிள்ளையாரது முதல் திருப்பதிகத்து ஒன்பதாம் திருப்பாடலைக் கீழே காண்க.

திருச்சிற்றம்பலம்.

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பாடலில் முதலிரண்டு அடிகளில் மாலும் அயனும் அடிமுடி தேடிய செய்தி கூறப்பட்டிருத்தல் காண்க.

மற்றைய திருமுறை ஆசிரியர்களது அருளிச் செயல்களில் இவ்வாறு பதிகந்தோறும் கூறப்படாவிடினும், இச்செய்தி கூறும் திருப்பாடல்கள் பலவுள. அவற்றை இடமின்மையால் இங்குக் காட்டாது விடுத்தனம்.

பரம வைணவராகிய வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில் திருமால் ஏனமாகிச் சிவபிரானது திருவடிகளைத் தேடமுயன்று இயலாத செய்தியைப் பின்வரும் பாடலில் வெகு அருமையாகக் குறிப்பிட்டுள்ளது காண்க.

ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும்
　　இருபாதத் தொருவன் அந்தப்
போரேனம் தனைத்தேடிப் புறப்பட்டான்
　　கணங்களொடும் புனங்கள் எல்லாம்
சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாம்
　　குழவியைத்தன் செங்கை ஏந்திப்
பாரேனை உலகனைத்தும் பரிவுடனே
　　ஈன்றாள்தன் பதிபின் வந்தாள்.

—அருச்சுனன் தவநிலைச் சருக்கம்.

"ஒரு பன்றி (வடிவெடுத்த திருமால்) தனது திருவடியைத்தேட, அது காணமுடியாதபடி ஒளித்தருளும் இரண்டு திருவடிகளையுடைய ஒப்பற்றவனாகிய சிவபிரான் இன்று (அருச்சுனனைக் கொல்லுமாறு துரியோதனனால் ஏவப்பட்டு வந்த) அசுரனாகிய பன்றியைத் தேடித் தன் கணங்களோடு புறப்பட்டார்" என்பது இப்பாடலின் முற்பகுதியிற்போந்த பொருளாகும்.

சரபோபநிஷதம் பின்வருமாறு கூறுகிறது:—

யத்பாதாம்போருஹத்வந்த்வம் ம்ருக்யதே விஷ்ணுநா ஸஹ ।
ஸ்துத்வா ஸ்துத்யம் மஹேசானம் அவாங்மனஸகோசரம் ।
பக்த்யா நம்ரதநோர்விஷ்ணோ: ப்ரஸாதமகரோத் விபு: ॥

இதன் பொருள் :—"(சிவபெருமானது முடியைத் தேடப் போன பிரம்மாவோடு) கூட விஷ்ணுவினால் அவரது திருவடித் தாமரையும் தேடப்படுகின்றன. வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவரான சிவபிரானைத் துதித்துப் பக்தியுடன் வணங்கினவராகிய திருமாலுக்குச் சிவபிரான் அருள் பாலித்தார்" என்பதாம்,

15. திருமால் சிவபிரானைப் பூசித்துச் சக்கராயுதம் பெற்றது

யோ வாமபாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ் தஸ்மை ததௌ சக்ரமதீவ ஹ்ருஷ்ட: । தஸ்மை ருத்ராய நமோ஽ஸ்து । என்று சரபோபநிஷதம் சாற்றுகின்றது.

இதன் பொருள்:—எவர் அழகிய பாதத்திலே பூசிக்கப் பட்ட விஷ்ணுவின் நேத்திரத்தையுடையராய் (அதனால்) மிக மகிழ்வுற்று அந்த விஷ்ணுவுக்குச் சக்கராயுதத்தைக் கொடுத் தாரோ அப்படிப்பட்ட சிவபெருமானுக்கு நமஸ்காரம்.

திருமால் சிவபிரானை ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்து வருகையில் ஒரு மலர் குறையத் தன் கண்ணையே எடுத்து அம்மலர்க்கீடாகப் பூசிக்க, உடனே சிவபிரான் பிரஸன்னராகித் திருமாலுக்குச் சக்கராயுதத்தை அருளினார் என்னும் வரலாறு கூறும் சில திராவிட சுருதிப் பிரமாணங் களையும் காண்க.

திருச்சிற்றம்பலம்.

மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தான் உறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே.

—திருஞானசம்பந்தர், திருவீழிமிழலை.

தடமலர் ஆயிரங்கள் குறைவொன்ற தாக
நிறை வென்று தன்கணதனால்
உடன்வழி பாடுசெய்த திருமாலை எந்தை
பெருமான் உகந்து மிகவும்.

சுடரடி யான்முயன்று சுழல்வித் தரக்கன்
இதயம் பிளந்த கொடுமை
அடல்வலி ஆழியாழி அவனுக் களித்த
அவனும் நமக்கொர் சரணே.

—திருநாவுக்கரசர், தசபுராணம்.

திகழும் மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வானொரு நீள்மலர் குறையப்
புகழி னலவன் கண்ணிடந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன்
திகழும் நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவாவடுதுறை.

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவாறு
எங்கும் பரவிநாந் தோணோக்கம் ஆடாமோ.

—மாணிக்கவாசகர், திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

16. சிவபரத்துவம்

ஆலேபனம் பஸிதமாவஸதி: ச்மசானம்
அஸ்தீநி தே ஸததமாபரணாநி சந்து ।
நிஹ்நோதும் ஈச ஸகல ச்ருதிபாரஸித்தம்
ஐச்வர்யமம்புஜபவோபிச ந க்ஷமஸ்தே ॥

—ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதர், ஆத்மார்ப்பண ஸ்துதி, 43.

இதன் பொருள்:—ஈசனே! உமக்கு மேலே பூசிக் கொள்வது திருநீறு; நீர் வசிக்குமிடம் சுடுகாடு; எலும்புகளே எப்பொழுதும் ஆபரணங்கள். (இப்படியிருப்பினும்) எல்லா வேதாந்த நூல்களிலும் பிரஸித்தமான உம்முடைய பரமேசுவரத் தன்மையை மறைக்கத் திருமாலின் உந்தித்தாமரையில் உதித்த பிரமதேவனும் திறமையற்றவன்!

ஸ்தோத்ரேணாலமஹம் ப்ரவச்மி நம்ருஷா தேவாவிரிஞ்சாதய:
ஸ்துத்யாநாம் கணனாப்ரஸங்கஸமயே த்வாமக்ரகண்யம் விது: ।
மாஹாத்ம்யாக்ர விசாரணப்ரகரணே தாநாதுஷஸ்தோமவத்
தூதாஸ்த்வாம் விதுருத்தமோத்தமபலம் சம்போ
பவத்ஸேவகா: ॥

—ஆதிசங்கரர், சிவானந்தலஹரீ, 100

இதன் பொருள் :—"சம்புவே! (வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத உம்முடைய பாரம்யத்தை எவ்வளவு பேசினாலும் முடியாதாகையால்) துதித்தது போதும். நான் இல்லாததை எதையும் கூறவில்லை. உமது தொண்டர்களான பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்கள் போற்றுதற்குரியவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பேசும்போது உம்மையே முதலில் எண்ணத்தக்கவராக அறிகின்றார்கள். மேலும் உன்னத நிலைக்கு உரியவரைப்பற்றிய பெருமைகளைப் பேசி விசாரிக்கும் ஸமயத்தில் தானியத்துடன் கலந்த உமிக்கூட்டங்களைப் போல மற்ற தெய்வங்கள் யாவும் ஒதுக்கப்பட்டவர்களாகின்றார்கள். உம்மையே (அந்த தானியத்துக்குள்ளிருக்கும் அரிசி போன்று) சிறந்தவற்றுள் சிறந்த பலஸ்வரூபனாக அறிகின்றார்கள். (நெல்லைக்குத்தி அரிசியாக்கும் போது உமியும் அரிசியும் கலந்து இருக்க, அக்கலவையைப் பிரித்து சுத்தம் செய்யும் சமயம் உமிக்கூட்டம் தனியாகப் பிரித்து ஒதுக்கப்பட்டு, அரிசியையே மக்கள் கைக்கொள்ளுவது போல, மற்ற தேவர்கள் உமிக்கூட்டம் போல ஒதுக்கப்பட்டு சிவபெருமானே உத்தம பலவடிவினனாக அரிசி போன்று கைக்கொள்ளப்படுகிறார் என்பதாம்).

திருச்சிற்றம்பலம்

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.


—திருவாசகம், திருச்சதகம், 30.

முத்த னைமுதற் சோதியை முக்கண்
அப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவ லோக னைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காளிங்கே வம்மின் நீருங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கணம்
சென்னி மன்னித் திகழுமே.

திருச்சிற்றம்பலம்

—திருவாசகம், சென்னிப்பத்து, 10.

சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷகாண்டம்
நூலும், பிற்சேர்க்கையும் முற்றும்.



சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர் அருளியது

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்



யத்யத் கர்ம கரோமி
தத்தத்கிலம்
சம்போ தவாராதனம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பொழிப்புரை விளக்க உரை, தலவரலாறு, பதிக வரலாறு முதலியவற்றுடன் 108 தமிழ் மாலைகளாக வெளியிடும் முயற்சி, இதுவரை 22 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

சந்தா விவரம்

முதல் ஆறு தமிழ்மாலைகள் சேர்த்து	ரூ	10.00
ஏழாவது தமிழ் மாலை முதல் 18 வது தமிழ் மாலை வரை மொத்தம் 12 தமிழ் மாலைகள்	ரூ	30.00
19வது தமிழ் மாலை முதல் தனிப்பிரதி	ரூ	4.00
ஒவ்வொரு ஆறு மாலைகளும் சேர்த்து	ரூ	20.00
108 தமிழ் மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை	ரூ	225.00

முன் பண உதவிச் சலுகை விலை மொத்தமாகவும், தவணைகளில் ஒரு ஆண்டுக் காலத்திலும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்ததும் இதுவரை வெளிவந்துள்ள மாலைகள் உடனே அனுப்பப்பட்டுப் பிறகு ஒவ்வொன்றாக வெளியிடும்போது அனுப்பப்படும்.

பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத்தெரு,
மேலமாம்பலம், சென்னை 600 033.